# வடந்தை

## 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடந்தை

2021



வெளியீடு :
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**
**2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | **"வடந்தை - 2021"** |
| பதிப்புரிமை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| தொகுப்பாசிரியர்கள்: | | பேராசிரியர் கலாநிதி சி. சிவலிங்கராஜா<br>பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் |
| வெளியீடு | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| பக்கங்கள் | : | viii +156 |
| அளவு | : | B/5 |
| பிரதி | : | 300 |
| பதிப்பு | : | 2021 |
| அச்சுப்பதிப்பு | : | நியூ எவகிறீன் பிறின்டேர்ஸ் (Pvt) Ltd<br>கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே. இல: 021 222 9893 |
| ISBN: | : | 978 - 624 - 5911 - 134 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

**திரு. எஸ்.எம்.சமன் பந்துலசேன**
பிரதம செயலாளர்,
வடக்குமாகாணம்.

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் 'வடந்தை' இதழின் 2021 ஆம் ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது பண்பாடு சார்ந்த பணிகள், கலாசார செயற்றிட்டங்கள் மற்றும் கலைஞர்கள் தொடர்பான ஊக்குவிப்புத் திட்டங்களையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இத்தகைய பணிகளுடன், நூல் வெளியீடானது ஒரு வருடாந்த செயற்திட்டமாக அமைவதோடு வரலாற்றுப் பணியாகவும் காணப்படுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களாக இணைந்திருந்தபோது ஆரம்பிக்கப் பட்ட இந்த நூல் வெளியீட்டுப் பணியானது தற்பொழுது பல்வகைப்பட்ட கலாசார மேம்பாட் டுத் திட்டங்களை உள்ளடக்கியதொன்றாக செயற்பட்டு வருகின்றமையை என்னால் அறியக் கூடியதாக உள்ளது.

நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாட்டுப் பெருக்கத்தால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வரும் சூழ்நிலையில், வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்துவதோடு பல காலங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட கலைகள், பண்பாட்டு விழாக்கள் மற்றும் கலாசார முறைமைகள் பற்றிய அறிவினையும் அடுத்துள்ள சந்ததியினர் பெற்றுக் கொள்ளும்வகையில் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியன.

ஆய்வுச் செயற்பாடுகளில் ஈடுபடும் பல்கலைக்கழகம் சார்ந்த, சாராத புத்திஜீவிக ளுடன் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து செயற்படுவதன் மூலம் தேடலுள்ள மக்களுக்கும் மாணவர்களுக்கும் இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புகள் மிகுந்ததொரு வரப்பிரசாதமாக அமைகின்றது.

பலவகைப்பட்ட நெருக்கடிகள் மத்தியிலும் இந்த மலராக்கத்தின் வெளியீட்டிற்கு உழைத்த தொகுப்பாசிரியர்கள், கட்டுரையாளர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் மற்றும் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு இ. இளங்கோவன் அவர்களுக்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. இளங்கோவன்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்குமாகாணம்.

## வாழ்த்துச் செய்தி

எமது வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்றிறன் அடைவுகளின் குறிகாட்டியாக வெளியிடப்பட்டு வரும் 'வடந்தை –2021' இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய ஒரு முழுமைத்தொகுதி" என்பார் டெய்லர். இதன்படி பார்க்கின்றபோது மனித நடத்தை மற்றும் செயற்பாடுகள் யாவும் பண்பாட்டில் அங்கம் வகிக்கும் அல்லது செல்வாக்குச் செலுத்தும் என்பதும் அது கட்டற்ற, எல்லைகளற்ற தன்மையைக் கொண்டிருக்கும் என்பதும் தெளிவாகின்றது.

எனவே, பண்பாட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகள், கட்டுங்கடங்காத விடயப் பரப்புக்களுடன் தொடர்புற்றிருப்பதுடன், அவை ஏனைய துறைகளுடன் கொண்டிருக்கக் கூடிய பல்வேறுவிதமான உள்ளார்ந்தமான தொடர்புகளையும் கவனத்தில் எடுத்துச் செயற்படுத்தப்படவேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது.

பண்பாட்டலுவல்கள் திணைக்கள செயற்பாடுகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் அபரிமிதமான வளர்ச்சிப்போக்கைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடுகளில் எம்முடன் இணைந்திருக்கின்ற அனைவரையும் வாழ்த்தவும் பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன்.

எமது பண்பாட்டுச் செயற்பாடுகள் என்பது முதலில் வடக்குகிழக்காகவும் பின்னர் வடக்காகவும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதை பலரும் அறிவீர்கள். இந்தவகையில் எல்லைகளற்ற பண்பாட்டுப் பரப்புகள் தனித்துவம் மிக்க விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்தும் எல்லைகளை அகலித்தும் கொண்டு செல்லும் அதேவேளை, மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும் பல செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

எனவே, இதுவரை எம்முடன் இணைந்திருந்தவர்களுடன் புதியவர்களும், புதிய புதிய வேலைத்திட்டங்களுடன் இணைந்து 'வடந்தை –2021' தொடர்ந்து சிறப்புறமலர வாழ்த்துவதுடன் வடந்தை இதழ்பெறுவதற்கு ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும், தொகுப்பு பணியாற்றியவர்களுக்கும், பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், அச்சகத்தருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெளியீட்டுரை

**திருமதி. சுஜீவா சிவதாஸ்**
பிரதிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலைச் செயற்பாடுகளையும் பண்பாட்டம்சங்கள், மற்றும் மரபுகளையும் வருடாந்தம் ஆவணப்படுத்தும் நோக்குடன் மீள வெளிவரும் 'வடந்தை–3,2021' இதழுக்கு வெளியீட்டுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் கலை கலாசார விழுமியங்களே அச்சமூகத்தின் தனித்துவத்தை உலகிடை அடையாளப்படுத்தி நிற்கின்றன. அதாவது ஒரு இனத்தின் பண்பாட்டினை இவற்றின் ஊடாகவே இனங்காண முடிகின்றது. ஒரு சமூகம் காலத்திற்கு காலம் வாழ்ந்த வாழ்கின்ற வாழ்க்கை முறைகளைக் கலை நயத்தோடு எடுத்தாண்டபோதே கலைகள் தோற்றலாயின. பண்பாடும் நாகரிகமும் இணைந்தே ஒரு பிரதேசத்தின் பாரம்பரியத்தினை வெளிப்படுத்துவதாய் அமைகின்றன. கலை கலாசாரமற்ற வாழ்க்கைமுறை வெறுமையான முழுமையற்ற ஒரு வாழ்க்கையாகும்.

எமது கலைகள் இலக்கியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் போன்றவை தொன்மையானவை.அதேவேளையில் செழுமையும் வளமையும் நிறைந்தவை. இவைதான் எமது விலை மதிற்ற செல்வங்கள். இவற்றையிட்டு நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைய வேண்டும். இன்று தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவியலின் முன்னேற்றம் மற்றும் நாகரிகத்தின் விளைவாக எமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களில் மழுங்கடிப்புக்களும் மாறுதல்களும் ஏற்பட்டு வருகின்றது என்பதை மறுக்க முடியாது.

அறிவைக் கையளித்தல் மனிதனுடைய நீண்டகாலத் தேவையாகவும் தேடலாகவும் இருந்து வருகின்றது. சடங்குகள் மரபுகள், சமய நிறுவனங்கள் என்பனவற்றினூடாக அறிவுக் கையளிப்பு இடம்பெற்று வருகின்றது. இந்த அறிவுக் கையளிப்பின் வாயிலாக நமது மொழி, கலைகள், இலக்கியங்கள், பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாத்து வளர்க்கவும் இவற்றை அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்தவும் முடிகின்றது. இவ்வாறு எமது அடையாளங்களை உலகறிய செய்வதற்கு பெரிதும் உற்றுசக்தியாக அமைகின்ற கலை, பண்பாட்டு அம்சங்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளை நாம் பாதுகாத்து ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டிய தலையாய கடமை எம் ஒவ்வொருவருக்கும் காணப்படுகின்றது.

போற்றுதலும் போற்றப்படுதலும் தான் மனித சமூதாயத்தின் உயர்வுக்குக் காரணம். அறிஞரைப் போற்றாத நாட்டில் அறிஞர்கள் தோன்றுவதில்லை. கலைஞர்களைப் போற்றாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் கலைஞர்கள் தோன்றுவதில்லை. எனவே கலைஞர்கள், கவிஞர்கள் போற்றப்பட வேண்டும்.

இந்த வகையில் வடமாகாணப் பண்பாட்டு அம்சங்களும் அதன் போக்குகள், காலமாறுதலுடனான வளர்ச்சிகள், இவை சார்ந்த கருத்தியல்கள், எண்ணக்கருக்களையும் அதன் பிரயோகங்களையும் வெளிக்கொணரும் முயற்சிகளின் வெளிப்பாடாகவே எம் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற நூல்கள் அமைகின்றன. இவற்றை கடந்த காலங்களில் எமது திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நூல்கள் பறைசாற்றி நிற்கின்றன. இந்த தொடர்பயண வெளியில் தன்னையும் தகவமைத்துக் கொண்டதாகவே இவ் 'வடந்தை 2021' எனும் நூல் அமைகின்றது.

குறிப்பாக வடபுலத்து கலை, பண்பாட்டுச் செழுமைகளையும், கலை அம்சங்கள், தொல்லியல்கள், வரலாறுகள், மரபுகள், மொழி, சடங்குகள், பாரம்பரியங்கள் என கட்டுரைகள், கவிதைகள், பாடலாக்கங்கள், வாயிலாக பல படைப்பாளிகளின் ஆக்கங்களை உள்ளடக்கமாகக் கொண்டு சிறப்பிடம் பெற்று இவ் வடந்தை நூல் பண்பாட்டுப்பாதையில் வழுவாது பயணிக்கின்றது.

மேலும், நாட்டின் பெருந்தொற்று அசாதாரண சூழ்நிலையிலும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆண்டில் பல செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக பொங்கல் விழா, ஆடிப்பிறப்பு விழா, விஜயதசமி விழா, கலை மன்றங்களுக்காக இசைக்கருவிகள் வழங்கல், கலை பண்பாட்டுடன் தொடர்புடைய நூல்கள் மற்றும் இறுவட்டுக்கள் வெளியிட்டமை. நாடகப் பயிற்சிப்பட்டறை மற்றும் கிராமிய நடன பயிற்சிப்பட்டறை நடத்தியமை, மத வழிபாட்டுத் தலங்களில் கடமை புரிவோருக்கான இலவச மருத்துவ முகாம், மாவட்ட மற்றும் பிரதேச பிரிவுகளில் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுத்தமை, நூலகங்களுக்கு நூல்களை வழங்கியமை, 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற வள்ளுவர் விழாவினைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் வள்ளுவர் கோட்டம் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை போன்ற பல பணிகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், பின் இணைப்பாக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் 2021 ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது, இளங்கலைஞர் விருது, மற்றும் சிறந்த நூல் பரிசு ஆகிய விருது பெறும் கலைஞர்களின் விபரத்தொகுப்பு என்பன இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழா புகைப்படப்பதிவுகளும், 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நிகழ்வுகள், விழாக்களின் புகைப் படப் பதிவுகளும், திணைக்களத்தினால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களில் விபரம், கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், அட்டைப்படத்தினையும் தாங்கி வருவதாக இந் நூல் அமைகின்றது.

இவ் வடந்தை நூல் முயற்சிக்காக ஆலோசனை வழங்கிய எமது அமைச்சின் செயலாளர், திரு இளங்கோவன் அவர்களுக்கும், இந் நூலுக்கான ஆக்கங்களை வழங்கிய கலை ஆர்வலர்களுக்கும், இந்நூலைத் தொகுத்து வெளியிட உதவிய பேராசிரியர் சி சிவலிங்கராஜா, பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன் ஆகியோருக்கும் எனது நன்றிகள். மேலும் இந் நூல் வெளியீட்டிற்காக உழைத்த சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், அனைவருக்கும், மற்றும் இந்நூலினை அழகுற வடிவமைத்துதவிய எவகிறின் அச்சகத்தினருக்கும், எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. இலங்கையின் இசைவேளாளர்கள் - 01
02. இராவணீயம் - 10
03. மல்லிகைத்தீவுக் கிராமியப் பாடல்களில் மறந்தவையும் மறைந்தவையும் - 20
04. பண்பாட்டைச் சித்திரிக்கும் யாழ்ப்பாணத்துக் கிராமிய நடனங்கள் - 31
05. கிராமிய தெய்வ வழிபாட்டில் வைரவர் வழிபாடு - 45
06. மரபுரிமைச் சின்னங்களைப் பேணிக்காத்தல் பெருங்கடன் - 53
07. புதுக்குடியிருப்புப் பண்பாட்டில் பாரம்பரிய பண்பாட்டுப் பொருட்கள் - 61
08. மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் - 70
09. போதைப்பொருள் பாவனையும் பண்பாட்டு வீழ்ச்சியும் - 76
10. மின்சாரம் மற்றும் வெகுசனத்தொடர்புச் சாதனங்களின் வருகைக்குப் பின்னதான வடக்கு மாகாணத்தின் கலைகள் - 82
11. நிறத்தால் உடன்பாடு குணத்தால் முரண்பாடு! - 88
12. பண்பாட்டுக் கோலங்கள் - 90
13. கலாசார செயற்றிட்டம் - 2021 - 93
13. பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட நூல்கள் விபரம் - 96
14. பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட இறுவெட்டுக்கள் விபரம் - 98
15. பண்பாட்டு ஆலோசனைக்குழு - 99
16. கலைக்குரிசில் விருது
17. இளங்கலைஞர் விருது
18. சிறந்த நூற் பரிசு
19. புகைப்படங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் மேழிக்குமரன்
வவுனியா

# இலங்கையின் இசைவேளாளர்கள்



தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களில் இசையும் கலந்தே வந்துள்ளது. இசைவடிவம் என்பது பல பரிமாணங்களில் காணப்பட்டாலும் தவில், நாதஸ்வரம் என்ற இசைக்கு மிக முக்கியத்துவம் உண்டு. இணுவில், அளவெட்டி, மாவிட்டபுரம், கைதடி ஆகிய ஊர்கள் தவில், நாதஸ்வரத்துக்கு பெயர்பூத்த ஊர்களாக விளங்கின. அளவெட்டி அம்பாள் ஆலயத்திலிருந்து தெல்லிப்பழை நோக்கிப் போகும் சாலையில் காலையில் சென்றால் நாதஸ்வரமும், தவிலும் கலைஞர்கள் பயற்சி எடுப்பதைக் கேட்டுக்கொண்டு மெய்மறந்து சென்ற காலம் ஒன்றிருந்தது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபது, எழுபது, எண்பதுகளில் இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் கோயில்களில் திருவிழாக்கள் போட்டி போட்டுக் கொண்டு சிறப்பாக நடைபெற்றன. எங்கெல்லாம் திருவிழாக்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் மேடைக்கச்சேரிகளில் நாதஸ்வரக் கச்சேரிகள் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி மெய்மறந்து இரசித்த காலமது. அன்றைய நாட்களில் திருவிழாக்களில் நாதஸ்வர தவில் கச்சேரிகளைச் சிறந்த பொழுது போக்காகவும், மனதுக்கு அமைதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருபவையாகவும் மக்கள் அனுபவித்தார்கள். கச்சேரிகளில் பிரபல்ய நாதஸ்வர வித்து வான்கள் அமர்ந்திருந்து நாதஸ்வரம் வாசிக்கும்போது அவர்களின் நாதஸ்வரத்தில் தொங்கும் தங்கப்பதக்கங்கள் ஆடுவது கண்கொள்ளாக் காட்சி.

சில வேளைகளில் கச்சேரி களைகட்டி பல மணித்தியாலங்களைக் கடந்த நாட்களும் உண்டு. சுளிபுரம் பண்ணாகம் அம்மன் கோவிலில் என்.கே.பத்மநாதனும் , கானமூர்த்தியும் நாதஸ்வரம் வாசித்த கச்சேரி இரவு பத்து மணிக்கு தொடங்கி ஆறு மணித்தியாலங்கள் நீடித்தது. குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான இரசிகர்கள் கூடிய நிகழ்வு அது.

அக்காலத்தில் திருவிழாக்கள் பெரும்பாலும் போட்டித் திருவிழாக்களாகவே அமையும். ஒரு திருவிழாவிலேயே பல நாதஸ்வர, தவில் வித்துவான்கள் மேடைக் கச்சேரி செய்வார்கள். திருவிழா முடிந்து அலங்கார வாகனங்களில் அழகான சாத்துப்படிகளுடன் சாமி சுற்றி வரும்போது அத்தனை வித்துவான்களும் சேர்ந்து வாசிப்பார்கள். அதுவும் வடக்கு வீதியில் விசேட கச்சேரி நடக்கும். அதில் அனைத்து வித்துவான்களும் விசேடமாக அன்றைய நாட்களில் பிரபல்யமான சினிமாப் பாடல்களை வாசிப்பார்கள். அது பெரும்பாலும் காலையில் நான்கு, ஐந்து மணிக்குத்தான் இடம்பெறும். அதனை இரசிப்பதற்காகவே மக்கள் கூட்டம் கூட்டமாக குழுமி நிற்பது கண்கொள்ளாக் காட்சி.

கல்யாண வீடுகளில் பிரபலங்களின் நாதஸ்வரக் கச்சேரிகள் இடம் பெறும். திருமணம் முடிந்த பின்பு புதுமணத் தம்பதியினரை ஊர்வலமாக அழைத்துச் செல்லும் நிகழ்வு நடக்கும். அப்படி அழைத்துப் போகும்போது உறவினர்களும், நண்பர்களும் தமது வீடுகளின் முன்னால் பூரணகும்பம் வைத்து மணமக்களை வரவேற்று மலர் மாலைகள் போட்டு வரவேற்பார்கள். அவ்வேளையில் நாதஸ்வரம் தவில் வாசித்து வருபவர்கள் பிரபல்யமான வித்துவான்களாக இருப்பார்கள். மணமக்களுக்கு மாலை அணிவிக்கும் உறவுகள் வித்துவான்களுக்கு நிதி அன்பளிப்பு செய்து கௌரவம் செய்வார்கள்.

தமிழர் இல்லங்களிலும், தமிழர் சமூக வழிபாட்டிலும், கோயில் தெய்வ வழிபாடுகளிலும் நாதஸ்வரம் தவில் இசை முக்கியப் பங்கு பெறுகின்றது. மங்கலகரமான செயற்பாடுகளில் முக்கியப் பங்கு பெறுவதால் இவ்விசை மங்கல இசை என அழைக்கப்படுகின்றது. தமிழர் குடும்பங்களில் நடைபெறும் திருமணம், காதணி விழா, புகுமனை புகுதல் போன்ற இல்லற நிகழ்ச்சிகளின் பொழுதும், சமுதாய விழாக்களில் தொடக்க நிகழ்ச்சியாகவும், கோயில் வழி பாடுகளிலும் இவ்விசை விளங்குவதால் இதனை மங்கல இசை என்று அழைக்கின்றனர்.


மங்கலம் என்ற சொல் ஆக்கம், பொலிவு, நற்செயல், திருமணம், அறம், வாழ்த்து, சுபம் போன்ற பொருள்களில் கையாளப்படுகிறது.

வடமாகாணத்தில் பிரபல்யமான கலைஞர்களாக என்.கே.பத்மநாதன், கேதீஸ்வரன், இராசா, உருத்திராபதி, வீ.கே.கானமூர்த்தி, வீ.கே.பஞ்சமூர்த்தி, பஞ்சாபிகேசன், சுந்தரமூர்த்தி, சுதந்திரன் போன்றவர்கள் நாதஸ்வரத்தில் புகழ் பெற்று விளங்ககினர். தெட்சணாமூர்த்தி, குமரகுரு, கைதடிப்பழனி, புண்ணியமூர்த்தி, பெரியகணேசன், சின்னக்கணேசன் போன்றவர்கள் தவில் வாசிப்பதில் வித்துவான்களாக சிறந்து விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதஸ்வரம்



நாதஸ்வரம் ஒரு பண்டைத் தமிழ் இசைக்கருவியாகத் தெரியவில்லை. சங்ககாலத் தமிழ் இலக்கியங்களோ அல்லது இடைக்கால இலக்கியங்களோ இந்த இசைக்கருவி தொடர்பான தகவல் எதையும் தரவில்லை .

17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாதசங்கிரகம் என்னும் இசை நூல் துளைக் கருவிகள் பற்றிக் கூறுகின்ற போது இக் கருவியையும் நாகசுரம் என்ற பெயரில் பட்டியல் இடுகின்றது. இதுவே தற்போதைய நிலையில், கிடைக்கின்ற முதல் வரலாற்றுக் குறிப்பாகும்.

நாகத்தின் உருவத்தைப் போன்று நீண்டிருந்ததின் காரணமாகவும் நாகசுவரம் என்னும் பெயர் ஏற்பட்டது. இதனுடைய இனிமையான நாதம் காரணமாக பிற்காலத்தில் இது நாதஸ்வரம் எனப்பட்டது.

நாதஸ்வரம் ஆச்சாமரம் என்னும் மரத்தால் செய்யப்படுகின்றது. இக்கருவியின் மேல் பகுதியை உளவு என்றும், கீழ்ப்பகுதியை அணசு என்றும் கூறுவர். உளவுப் பகுதியில் 12 துளைகள் அமைக்கப்படும். இக்கருவியின் அளவிற்கேற்ப, முகவீணை, திமிரி நாயனம், பாரி நாயனம், இடைப்பாரி நாயனம், மத்திம சுருதி நாயனம் என்ற பெயர்களுடன் வழங்கி வருகின்றனர்.

இதன் பாகங்கள் வருமாறு: வட்டவடிவமாக விரிந்து காணப்படும் அணசு. உள் கூடான நீண்ட மரக்குழலால் ஆன உடல் உடலின் மேற் பொருத்தப்படும் கெண்டை (செப்புத் தகடு) அவ்வப்போது வைத்து இசைக்கப்படும் சீவாளி. உடலின் மேற்பாகத்தில் 12 துளைகள் உள்ளன. மேலிருந்து வரும் 7 துளைகளும் இசைப்பதற்கு ஏற்றவை. மற்றைய ஐந்தையும் அவ்வப்போது மெழுகால் அடைத்தும் திறந்தும் கொள்வார்கள். நாதஸ்வரத்தின் நீளம் சுமார் 2.5 அடி.

நாதஸ்வரத்திற்கு சுருதி கருவியாக விளங்குவது ஒத்து என்ற நாதசுவரத்தைப் போன்ற வடிவமுள்ள ஒரு கருவி. இதிலிருந்து ஆதார சுருதி மட்டும்தான் வெளிவரும். இதனை ஒருவர் வாயில் வைத்து, தொடர்ச்சியான ஒலியை எழுப்பி வருவார். இன்று இந்தக்கருவிக்குப் பதிலாக சுருதிப்பெட்டி பயன்படுத்தப்படுகின்றது.

நாதஸ்வரத்தில் இரண்டு வகைகள் உண்டு: திமிரி, பாரி. திமிரி நாதசுவரம் உயரம் குறைவாகவும், ஆதார சுருதி அதிகமாகவும் இருக்கும். பாரி நாதசுவரம் உயரம் அதிகமாகவும், ஆதார சுருதி குறைவாகவும் இருக்கும்.

நாதஸ்வரத்தின் மேல் பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படும். ஜீவ வளி என்பதுதான் சீவாளியாகியிருக்கிறது என்கிறார்கள். ஜீவன் என்றால் உயிர். வளி என்றால் காற்று. உடலாகிய நாதஸ்வரத்திற்கு காற்றின் மூலம் சீவாளி உயிர் கொடுக்கிறது. இது ஒரு வகை நாணல் என்ற புல் வகையால் செய்யப்படும். இந்த நாணலைக் "கொறுக்கைத் தட்டை"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். இதனை ஆற்றங்கரையிலிருந்து கொண்டு வந்து காயப்போட்டு ஒரு வருடம் ஆனதும் நெல் வேகவைக்கும் போது கூட வேக வைத்து, நீராகாரத்தில் ஊறவைத்து மிருதுவாக்கி சுதிக்கு ஏற்ப அதை வெட்டி சீவாளி தயாரிக்கிப்படுகிறது.

**தவில்**

தவில் என்பது நாதஸ்வரத்திற்குத் துணையாக வாசிக்கப்படும் தாள இசைக் கருவியாகும். இது தோம்பு உருவத்தில் மரத்தால் செய்யப்பட்டிருக்கும். விலங்கின் தோலால் இழுக்கப்பட்டு வளையத்தைக் கொண்டு ஒட்டில் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கருவியில், ஒரு பக்கம் மறு பக்கத்தைவிடச் சற்று பெரியதாக இருக்கும். தவில் வாசிப்பவர் ஒரு தோல் கயிற றால் தனது தோளின் மீது தவில் கருவியை மாட்டி முழக்குவார். சிறிய பக்கத்தில் குச்சியினா லும் பெரிய பக்கத்தை விரல்களாலும் முழக்குவர். விரல்களில் கவசங்கள் அணிந்திருப் பார்கள். பெரும்பாலான தவில் கலைஞர்கள் சிறிய பக்கத்தை வலது கையால் குச்சி கொண்டும் பெரிய பக்கத்தை இடது கையால் கவசம் அணிந்த விரல்களைக் கொண்டும் முழக்குவர்.



தவிலின் உருளை வடிவிலான பகுதி பலா மரத்தினால் செய்யப்படுகிறது. இதன் சிறிய பக்கத்தில் இருக்கும் தோல் வளந்தலை என்று கூறப்படும். இது எருமைக்கன்றின் தோலால் செய்யப்படுகிறது. இதன் பெரிய பக்கத்தில் உள்ள தோல் தொப்பி என்று வழங்கப்படுகிறது. இது ஆட்டின் தோலினால் செய்யப்படுகிறது. இந்த தோலை தாங்கிப் பிடிக்கும் வளையங்கள் இரு பக்கமும் உண்டு. அவை மூங்கிலால் செய்யப்பட்டது.தவிலின் உருளை வடிவின் வெளிப் புறத்தில் உருக்கு உலோகத்தால் செய்யப்பட்ட வளையங்கள் இரண்டு பொருத்தப்படுகிறது. அவற்றில் 22 துளைகள் உள்ளன.

ஒவ்வொன்றிலும் 11 துளைகள் இருக்கும். ஒன்று சிறிய பக்க தோலைத் தாங்கிப் பிடித்து இருக்கும். மற்றொன்று பெரிய பக்கத் தோலைப் பிடித்து இருக்கும். இதனால் அவற்றில் எதாவது ஒரு பக்கம் கிழிந்து விட்டால் எளிதில் மாற்ற முடியும். தவில் வாத்தியம் எப்போது உருவானது, எப்போது பாவனைக்கு வந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை . ஆனால் 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் 12 இடங்களில் தவில் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது என இசை வித்தகர்கள் குறிப்பிடுகின்றனர். கர்நாடக இசைக் கச்சேரிகளில் பிரதான பாடகர்தான் முதலில் தொடங்குவார். பக்கவாத்தியம் பின்தொடரும். வயலின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங்குழல், வீணை போன்ற வாத்தியங்களின் தனிக் கச்சேரியிலும் அந்தந்த வாத்தியங்கள்தான் தொடங்கும். நாதசுவரக் கச்சேரிகளில் நாதஸ்வரம்தான் பிரதான வாத்தியம், தவில் பக்கவாத்தியம். ஆனால் நாதஸ்வரக் கச்சேரி தொடங்கும்போது தவில் வாசிப்போடுதான் தொடங்கும். இது தவில் வாத்தியத்தின் தனிச் சிறப்பு.


தமிழிசையின் ஒரு மிக முக்கிய அங்கமாக உள்ள ஆலாபனையின் தாய் என்று மங்கல வாத்தியங்களான நாகஸ்வரம் மற்றும் தவில் இசை கருதப்படுகிறது. நாதஸ்வரம் மற்றும் தவில் இசைக்கென தனியான இலக்கணங்களும் வாசிப்பு முறைகளும் உள்ளன. ரக்தி வாசிப்பு, மல்லாரி வாசிப்பு போன்றவை நாதஸ்வர இசைக்கு மட்டுமே உரியவை என தமிழிசை அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் கலைக்கு ஒரு ஏற்றம் கொடுக்க வேண்டும் எனும் நோக்கில், மங்கல இசையையும் அதை வாசிக்கும் கலைஞர்களின் பாத்திரங்களையும் மையப்படுத்தி திரைப் படங்களும் எடுக்கப்பட்டன. ஆனால் அவற்றில் "தில்லானா மோகனாம்பாள் படம் பெற்ற வெற்றியை வேறு எந்தப் படமும் பெறவில்லை. அதற்கு காரணம் மதுரை எம்.பி.என். சேதுராமன், பொன்னுசாமி சகோதரர்கள் வாசித்த நாதஸ்வரமேயாகும். அது போல கொஞ்சும் சலங்கை படத்தில் "சிங்காரவேலனே தேவா" என்ற பாடலைப் பின்னணிப்பாடகி எஸ்.ஜானகி பாட காரைக்குறிச்சி அருணாசலம் நாதஸ்வரம் வாசித்திருப்பார். அது இன்றுவரை புகழ்பெற்று விளங்குகிறது.

## இலங்கையின் தலைசிறந்த நாதஸ்வர, தவில் வித்துவான்கள்

### என். கே. பத்மநாதன்

என். கே. பத்மநாதன் (1931 - ஜூலை 15, 2003, அளவெட்டி) ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக ஈழத்தின் நாதஸ்வர இசைச்சக்கரவர்த்தியாக கோலோச்சியவர்.



பத்மநாதனின் தந்தையார் நா. கந்தசாமி அக்காலத்தில் புகழ் பெற்ற நாதஸ்வரக் கலைஞர். தனது ஏழாவது வயதிலேயே தனது தந்தையைக் குருவாக ஏற்று இசைப் பயிற்சியில் ஈடுபட்டார். இவர் முதலில் இவரது தகப்பனார் தொடக்கம் அக்காலத்தில் பிரபல தவில் வித்துவானாக விளங்கிய வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை, முல்லைவாசல் முத்துவேற் பிள்ளை முதலானோருக்கும், ஈழத்தில் எஸ். எஸ். அப்புலிங்கம்பிள்ளை, பி. எஸ்.ஆறுமுகம்பிள்ளை முதலான வித்துவான்களுக்கும் தாளக்காரனாக இருந்து தமது லயவளத்தையும் இசை அறிவையும் பெருக்கிக் கொண்டார். தமது தகப்பனாரிடம் 14 வயது வரை நாதஸ்வரம் பயின்ற பின்னர் பி. எஸ்.கந்தசுவாமிப்பிள்ளையிடம் நாதஸ்வரம் பயின்றார். தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தைச் சேர்ந்த நாதஸ்வர மேதைகளான சீர்காழி பி. எம். திருநாவுக்கரசு பிள்ளையிடமும் திருச்சேரி கிருஷ்ணமூர்த்தி பிள்ளையிடமும் நாதஸ்வரக் கலையின் நுட்பங்களையும் நுணுக்கங்களையும் கற்றுத் தேர்ந்தார். இவர் தமது பதினெட்டாவது வயதில் தனது மாமனாரான அளவெட்டி கே. கணேசபிள்ளையின் குழுவில் இணைந்து கொண்டார். இக்குழுவில் கணேசபிள்ளையும் வி. தெட்சணாமூர்த்தியும் தவில் வாசித்தனர். பத்மநாதன் தனது குருவான திருநாவுக்கரசுவுடன் இணைந்து நாதசுவரம் வாசித்தார். அக்காலத்தில் பிரபல நாதஸ்வர வித்துவான் அம்பல் இராமச்சந்திரனுடன் இணைந்து நாதஸ்வரம் வாசித்தார்.

தமது இருபத்தைந்தாவது வயதில் தனியாக ஒரு குழுவை உருவாக்கிக் கொண்டார். அக்குழுவில் தெட்சணாமூர்த்தியும், பத்மநாதனின் மைத்துனரான பி. எஸ்.சாரங்கபாணியும் தவில் வாசித்தார்கள். பத்மநாதனுடன் பி. எஸ். பாலகிருஷ்ணன் நாதஸ்வரம் வாசித்தார். பத்மநாதனுடன் சுமார் பத்து வருடங்கள் இணைந்து நாதஸ்வரம் வாசித்தவர் எம். பி. பாலகிருஷ்ணன். அதேபோன்று ஆர். கேதீஸ்வரனும் சுமார் 20 வருடங்கள் இவருடன் நாதஸ்வரம் வாசித்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஏறத்தாழ 40 வருடங்களாக ஆஸ்தான வித்துவானாக இருந்திருக்கிறார். திருவிழாக்கள் நடை பெறுகின்ற 25 நாளும் அவரது நாதஸ்வரக் கச்சேரியினைப் பார்ப்பதற்கென்று பெருங்கூட்டம் கூடும்.

1964 இல் பன்னாலையில் நடைபெற்ற சேக்கிழார் மாநாட்டில் முன்னாள் அமைச்சரும் சைவப் பெரியாருமான சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களால் "நாதஸ்வரக் கலாநிதி" பட்டம் சூட்டப்பட்டார்.

1979 இல் மதுரையில் நாதஸ்வர மேதை பொன்னுச்சாமிப் பிள்ளையின் நூற்றாண்டு விழாவில் இவரது நாதஸ்வர இசைக் கச்சேரியில் எம்.பி.எம்.சேதுராமனால் கௌரவிக்கப்பட்டார்.

1982 இல் “கலாசூரி விருது” இலங்கையின் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களால் வழங்கப்பட்டது.

1999 இல் வட-கிழக்கு ‘மாகாண ஆளுனரின்’ விருது வழங்கப்பட்டது. 2003 இல் இவரது மறைவின் பின்பு” யாழ். பல்கலைக்கழகம் “கலாநிதி” பட்டம் வழங்கிக் கௌரவித்தது.


**வி. தெட்சணாமூர்த்தி**

வி. தெட்சணாமூர்த்தி ஈழத்தின் மிகச்சிறந்த தவில் இசைக் கலைஞராவார். யாழ்ப்பாணத்து இணுவில் என்னும் ஊரில் புகழ்பெற்ற தவில் மேதை ச. விசுவலிங்கம், இரத்தினம்மாள் ஆகியோருக்கு மூன்றாவது மகனாக 1933 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் தனது ஆறாவது வயதில் தந்தையாரிடம் தவில் பயிற்சியை ஆரம்பித்து, தவில்மேதை இணுவில் சின்னத்தம்பி, யாழ்ப்பாணம் வண்ணை காமாட்சி சுந்தரம் ஆகியோரிடம் விரிவாகவும் நுணுக்கமாகவும் பயின்று, குறுகிய காலத்தில் அரங்குகளில் வாசித்து வந்தார். இவரது தவில் வாசிப்பு, யாவரும் வியக்கும் வண்ணமும், நாத சுகமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாகவும்,லய வேலைப்பாடுகள் நிறைந்த தாகவும் இருந்து வந்தது. மறைந்த நாதஸ்வர மேதை செம்பனார்கோவில் வைத்தியநாதன், "நாங்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது, ஒரு சிறுவன் வாசிக்கிறான் என்று சொன்னார்கள். காவேரிக் கரையில் நாம் பார்க்காத கலைஞர்களா என்று சற்று இளக்காரமாய்த்தான் நினைத்தோம். அந்தச் சிறுவன் வாசித்ததைக் கேட்டதும் புல்லரித்துப் போனோம்" என்று மெச்சியுள்ளார்

இந்தியப் பெருங் கலைஞரான நாச்சியார்கோயில் என்.பி.இராகவப்பிள்ளையிடம் மேலும் லய சம்பந்தமான நுணுக்கங்களைப் பயின்று அவருடன் தவில் வாசிக்கும் பேற்றைப் பெற்றார். தொடர்ந்து இந்திய நாதசுர மேதைகளாகிய காருக்குறிச்சி அருணாசலம்- சேக் சின்ன மௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், டி. என். ராஜரத்தினம்பிள்ளை, போன்றவர்களுக்குப் பெரும்பாலான-இசை விழாக்களில் வாசித்து, பாராட்டுக்களையும் தங்கப்பதக்கங்களையும் பெற்றார். ஈழத்திலும் பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, என்.கே.பத்ம நாதன், கே. எம்.பஞ்சாபிகேசன், திருநாவுக்கரசு ஆகியோருக்கும் தவில் வாசித்தார். தெட்சணாமூர்த்தி தவில் வாத்தியத்தில் முதன் முறையாக பதினொரு எண்ணிக்கை கொண்ட கதி ஒன்றை அமைத்து அதற்கு உத்தரகதி எனப் பெயர் வைத்தார்.

கிருட்டின கான சபையில் இவர் வாசிப்பைக் கேட்ட பாலக்காடு மணி அய்யர், இவரை உலகின் "எட்டாவது அதிசயம்" என்று சொன்னார். ஒரு அட்சரத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது மாத்திரைகள் வரும் நடைகளே நடைமுறையில் இருக்க, ஒரு அட்சரத்தில் 11, 13 மாத்திரைகள் வரும் வகையில் நடை அமர்த்தி, முதன்முதலில் வாசித்தவர் தெட்சிணாமூர்த்திதான். எவ்வளவு நேரம், எவ்வளவு வேகமாக வாசித்தபோதும் ஒவ்வொரு சொல்லும் அதற்கு உரிய கனமுடன், தெள்ளத் தெளிவாய் வாசிக்கும் திறன், அவர் தனிச் சிறப்பு.

தெட்சணாமூர்த்தி பற்றிய ஆவணத் திரைப்படம் 2015 ஏப்ரலில் வெளியானது. இதனை சித்தார்த்த புரொடக்சன்ஸ் சார்பில் அம்சன் குமார் இயக்கியிருந்தார். இப்படத்திற்கு 2015 ஆம் ஆண்டுக்கான இந்திய அரசின் தேசிய விருது (வெள்ளித் தாமரை (ரஜத் கமல்) விருதுடன் 50,000 இந்திய ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

அவர் முகத்திற் தோன்றும் பிரகாசமும், ஆழ்ந்த அமைதியும், தவில் வாசிக்கும் அழகும் கச்சேரி கேட்பவர்களை மெய் மயங்கவைக்கும். அவர் இணுவிலிற் செய்த ஒவ்வொரு கச்சேரியும் தவிற் கலையின் ஒவ்வொரு அற்புதம் ! என்கிறார்கள் இசை வல்லுநர்கள். இந்த மாதிரி இசையுடன், இறையுடன் இரண்டறக் கலத்தல் என்பது மனம் பக்குவப்பட்ட அருளாளர்களுக்கும், ஞானிகளுக்குமே கிடைக்கக் கூடிய பெரும் பேறு. திரு. தட்சணாமூர்த்தி அவர்களுக்கு மிகச் சிறிய வயதிலிருந்தே இந்த நிலை கைகூடி வந்துள்ளது. நீண்ட நேரம் தனித் தவில் வாசிக்கும் முறையைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவரும், நடைமுறைப்படுத்தியவரும் திரு தட்சணாமூர்த்தி அவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திற் திரு.தட்சணாமூர்த்தி - அவர்கள் தனது ஒன்று விட்ட சகோதரர் தவில் மேதை இணுவில் என்.ஆர்.சின்னராசா அவர்களுடனேயே மிக அதிகமான கச்சேரிகளைச் செய்துள்ளார். அதனாற் திரு.தட்சணாமூர்த்தியின் மேதைமைத் தன்மையைத் திரு.சின்னராசா அவர்கள் புரிந்து கொண்டதோடு அவர் வாசிப்பு முறையையே பெருமுயற்சி யோடு தானும் பின்பற்றி வந்துள்ளார்.

இணுவிற் கந்தசுவாமி கோயில், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில் மஞ்சத்தடி கந்தசுவாமி கோயில் , இணுவிற் சிவகாமி அம்மன் கோயில், இணுவில் காரைக்காற் சிவன் கோயில், இணுவில் மருதனார்மடம் பல்லப்பவைரவர் கோயில், அனலைதீவு ஐயனார் கோயில், நெல்லியடி மூத்த நயினார் கோயில் ஆகிய இடங்களிலும் இன்னும் யாழ்ப்பாணத்திலுள்ள பல கோயில்களிலும் திரு.தட்சணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து இணுவில் திரு.கே.ஆர். புண்ணியமூர்த்தி, அவர்களும், இணுவில் திரு. ஆர்.சின்னராசா அவர்களும் கச்சேரி செய்துள்ளனர். இணுவில் ஆலயங்களில் நடைபெறும் கச்சேரிகள் எல்லாமே நள்ளிரவு தாண்டிய பின்னரும் நடைபெறுபவையாகும்.

சென்னை அண்ணாமலை மன்றத்தில் தமிழிசைசங்கம் நடத்திய விழா ஒன்றில் காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை நாதஸ்வரக் கச்சேரி இடம்பெற்றது. இதற்கு தன்னுடன் சேர்ந்து தவில் வாசிக்கும்படி நீடாமங்கலம் சண்முகவடிவேல், தட்சணாமூர்த்திக்கு அழைப்பு விடுத்தார். அதில் தட்சணாமூர்த்தி கலந்து கொண்டபோது கச்சேரியை ஆரம்பித்து வைக்கும்படி சைகையால் பணித்தார். தட்சணாமூர்த்தி வாசிக்கத் தொடங்கியதும் இசை வல்லுநர்களால் நிரம்பியிருந்த அரங்கு நிசப்தமானது. இரவு பதினொரு மணிக்கு தனது சேவையை நிறுத்திக் கொள்ளும் இந்திய வானொலி இவர்களின் விறுவிறுப்பான கச்சேரியால் கவரப்பட்டு கச்சேரி முடியும்வரை தனது சேவையைத் தொடர்ந்தது.

கச்சேரி முடிந்ததும் முன்வரிசையில் அமர்ந்திருந்த இசைவித்தகி கே.பி.சுந்தராம்பாள் மேடைக்கு வந்து தட்சணாமூர்த்திக்கு திருநீறு அணிவித்து வாழ்த்தியமை மிகப்பெரிய கௌரவமாகும். தட்சணாமூர்த்தி இந்தியாவிலிருந்து திரும்பியதும் யாழ்.இசையாளர் சங்கம் பெருவிழா எடுத்து "லயஞானகுபேரபூபதி" என்ற பட்டத்தினையும் வழங்கினர். இப்பட்டத் தினை அக்காலத்தில் தேர்ந்தெடுத்தவர்கள் உமாமகேஸ்வரன் மற்றும் கதிரேசபிள்ளை ஆசிரியர் ஆகியோராகும்.

சென்னை கிருஷ்ணகானசபாவில் இடம்பெற்ற இசைவிழாவில் கலாநிதி சேக் சின்னமௌலானாவின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. அதில் தட்சணாமூர்த்தி தவில் வாசித்திருந்தார். அங்கு வந்திருந்த கர்நாடக இசை விமர்சகர் சுப்புடு இந்தியன் எக்ஸ்பிரஸ் "பத்திரிகையில் (31.12.1969) எழுதிய கட்டுரையில் "தவில் நாதஸ்வரத்துக்கு பக்கவாத்தியம் என்ற மரபை உடைத்து நாதஸ்வரம் தவிலுக்கு பக்கவாத்தியம் என்ற புதிய மரபைத் தனது அசுரவேகத்தால் தட்சணாமூர்த்தி நிறுவியுள்ளார்" என எழுதிக் கௌரவப்படுத்தினார்."

நாதஸ்வரக் கலைஞர் கலாசூரி.என். கே.பத்மநாதன் வீரகேசரியின் செவ்வி ஒன்றில் "நான் பலதரப்பட்ட தவில் வாத்தியக் கலைஞர்களுடன் வாசித்திருக்கின்றேன். ஆனால் தட்சணாமூர்த்தியை போன்ற ஒரு சிறந்த கலைஞனை நான் சந்தித்ததில்லை. கணக்கு சம்பந்தமான கணிப்பீட்டில் இன்றைய கணனிகள் கூட அவரிடம் தோற்றுப்போகும்" என்று தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை நீர் விழும் ஓசை, மணிக்கூட்டில் முள் அசையும் ஓசை, இப்படி அவன் காது கிரகிக்கும் ஓசைகளில் எல்லாம் அவனுக்கு லயத்தின் கணக்கே தெரியும். அந்த லயங்களுக்கு ஏற்ப அவன் தவில் வாசிக்கும் அழகு மிக மிக அற்புதம். கண்ணை மூடியபடி கேட்டால் மிக மென்மையாகக் கேட்கும் என அவரின் மூத்த சகோதரர் உருத்திராபதி அந்தக்காலத்தில் தெரிவித்துள்ளார்.

1945 ஆம் ஆண்டு, ஒரு நாள் பன்னிரண்டு வயதே நிரம்பியிருந்த சிறுவனா யிருந்த இணுவில் தட்சணாமூர்த்திக்கும், வயதில் மிகப் பெரியவரான வடபாதி மங்கலம் தட்சணாமூர்த்திக்கும் இடையில் நடைபெற்ற தவில் தனி ஆவர்த்தனம், போட்டி யாகவே மாறிவிட்டது. இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்ற அந்த லயவின்னியாசத்திற் சிறுவனாகிய தட்சினாமூர்த்தி இறுதிவரை சளைக்காமல் வாசித்த வாசிப்பை, "ஆகா அற்புதம்! இதைப் போல ஒரு தவில் வாசிப்பை, கச்சேரியை நாம் வாழ்க்கையில் என்றைக்கும் பார்த்ததில்லை", என்று அன்றைய தினம் அங்கு குழுமியிருந்த வித்துவான்கள் அனைவரும் கூறினார்கள்" என்று மிருதங்கம் ஏ. சந்தானகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளார்கள்.

"1970 ஆம் ஆண்டு இணுவில் மருதனார்மடம் பல்லப்பவைரவர் ஆலயத்தில் நடை பெற்ற கச்சேரிதான் ஈழத்தில் நடைபெற்ற திரு.தட்சணாமூர்த்தி அவர்களின் இறுதிக் கச்சேரியாகும். அன்று அவருடன் நான் தவில் வாசித்தேன். திரு.பி.எஸ்.ஆறுமுகம் அவர்க ளும் எனது மைத்துனர் செ. கந்தசாமி அவர்களும் நாதஸ்வரம் வாசித்தார்கள்" என்று திரு.தட்சணாமூர்த்தியின் மருமகன் இணுவில் தவில் வித்துவான் திரு.புண்ணியமூர்த்தி அவர்கள் தனது தாய் மாமனை நினைவு கூர்ந்துள்ளார்.

இயற்கையாகவே இறையருளாற் கவி புனையும் ஆற்றல் உள்ளவர்களை "வரகவி" என்று கூறுவார்கள். இத்தகைய வரகவிகளின் வரலாறுகள் பலவற்றை நாம் அறிந்திருக் கின்றோம். திரு.தட்சணாமூர்த்தியும் வரகவிகள் போலவே இயற்கையாகவே இறையருளாற் தவில் வாசிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்.

தெட்சணாமூர்த்திக்கு சென்னையின் "தங்கக் கோபுரம்" விருது கிடைத்தது. திருவாவடு துறை ராஜரத்தினம்பிள்ளை அவர்களின் நினைவு விழாவில் தங்கத்தாலான தவிற்கேடயம் வழங்கப்பெற்றது. 1968 இல் வாழ்நாளின் பிற்பகுதியை இந்தியாவிலே செலவிட்டார். 1970களில் இலங்கை வந்து 13. மே 1978 இல் காலமானார்.

இன்று ஆலயங்களில் திருவிழாக்கள் குறைந்து விட்டன. கச்சேரிகளும் குறைந்து விட்டன. திருமணவிழாக்கள், பொது விழாக்களிலும் நாதஸ்வர தவில் கச்சேரிகள் நடப்பது குறைந்து வருகின்றன. சந்ததி மாற்றத்தில் மேல் நாட்டு இசை மோகத்தால் இரசிகர்களும் குறைந்து வருகின்றனர். இசை வேளாளர்கள் வருமானமின்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர். மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் போன்றவை இவர்களுக்கு ஆவன செய்ய வேண டும். இல்லையேல் எமது மங்கல இசை நம்முன்னாலேயே மறைந்து போகும். இது தொடருமாயின், நாதஸ்வரத்தையும் தவிலையும் நாம் அருங்காட்சியகத்தில் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

உசாத்துணை


- மறைந்துவரும் மங்கல இசை - சிவராமகிருஷ்ணன்
- "தாய்வீடு" சஞ்சிகை ஒக்டோபர் 2009
- விக்கிபீடியா
- தட்சணாமூர்த்தி சொல்லாத செய்திகள் - கார்த்தியாயினி கதிர்காமநாதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரசிங்கம் பிரதீபன்**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
வவுனியா.



# இராவணியம்

இலங்கையில் எழுதப்பட்டவரலாறு, மகாவம்சத்துடன் ஆரம்பமாகின்றது என்றே கருதப்படுகின்றது. எனினும் எழுதப்படாத வரலாறு பல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டது என்று இன்றைய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மகாவம்சத்துக்கு முன்னரான இலங்கை வரலாற்றை ஆய்வோர் இராவணனின் வரலாற்றையே பேசமுயல்கின்றனர். பல ஊடகங்களிலும், வரலாற்று ஆய்வாளர்களின் நூல்களிலும், மேடைப் பேச்சுக்களிலும் இராவண வரலாறு பேசப்பட்டுவருகின்றது. இவர்கள் இலங்கை யின் முதல் மன்னராக இராவணனையே காட்டி நிற்கின்றனர்.

இலங்கை வரலாற்றிலே விஜயனின் வருகை மிகச் சிறப்பாகப் பேசப்பட்டாலும் அவன் வருகையின் முன் இலங்கையில் வாழ்ந்த ஆதிக் குடிகள் யார்? என்கின்ற பாரிய வினா முன்னிற்கின்றது. இவ் விடயம் சிந்தனைக்கு உரியதாகி பல வரலாற்று ஆய்வாளர்களால் இதற்குரிய விடை ஆராயப்பட்டுவரும் இவ் வேளை சகல ஆராய்ச்சிகளும் இராவணனைச் சுற்றியே வருவதை நோக்கலாம். மகாவம்சத்திற்கு முன்பு எழுந்த பல இலக்கியங்கள் இராவணன் பற்றிய பல்வேறு குறிப்புகளையும் தரத் தவறியதில்லை.

இலங்கை வேந்தனான இராவணனும் ,அகத்தியமா முனிவரும் சமகாலத்தவர்கள் என்ற கருத்தினைத் தமிழில் தோன்றிய ஆதி இலக்கியங்களில் ஒன்றான மதுரைக்காஞ்சி எனும் இலக்கியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


" தென்னவர் பெயரிய துன்னரும் துப்பிற்
தென் முது கடவுட் பின்னர் மேய
வரைத்தாழ் அருவிப் பொருப்பிற் பொருந..."

எனக் கூறிக் காட்டுகின்றது. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "இராவணனை தமிழ் நாட்டை ஆளாதபடி போக்கினைக் கிட்டுதற்குரிய வலியுடைய பழைமை மிகுந்த அகத்தியன்" எனவிளக்கம் தருகின்றார்.

இதன் பின்னர் கி.பி 7ஆம் நூற்றாண்டின் பின் ஞானசம்பந்தராலும், நாவுக்கரசராலும் இராவணன் புஜபலசாலியாக சுட்டப்படுகின்றான். அவன் பெருமைகளை

"ஏழ் கடல் சூழ் இலங்கைஅரசன்"
"எரியார் சூழ் கடற்றனை இலங்கைவேந்தன்"
"இலங்கைக்கு இறைவன்..."
"இலங்கைமன்றுவாள் அவுனர் கோன்."
"இலங்கையின் மன்னராகிஎழில் பெற்ற இராவணன்"
"தேசுகுன்றாதென்னீர் இலங்கைக்குக் கோமான் ...."
"பரக்கும் தொல்சீர் தேவர் சேனைபௌவத்தை"
"துரக்கும் செந்தீபோல் அமர் செய்வோன்"

என்றவாறெல்லாம் கூறுகின்றனர். இங்கு இராவணன் அரசன், வேந்தன், இறைவன், கோன், இலங்கை மன்னன் எனச் சுட்டப்படுவதில் இருந்து இலங்கையை செங்கோல் ஆட்சி செலுத்தியவன் என்பது புலனாகின்றது.




வடமொழியில் இராமாயணம் செய்த வான்மீகியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாமன்னன் இராவணன். வான்மீகியின் கால ஆராய்ச்சி இன்றுவரை தொடரும் ஒன்றாகவே இருக்கின்றது. அவன் காலத்திலேயே இராவணன் பாடுபொருளான மன்னன் எனின், வான்மீகியின் காலத்தின் முன்பே இராவணன் இராட்சியம் பொலிவுற்று இருக்கின்றது என்பது வெளிப்படை.

வரலாற்றை ஆராய்ந்த இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் குமரிக்கண்டத்துடன் இராவணனின் வரலாற்றை தொடர்பு படுத்துகின்றனர். ஆதி வரலாற்று ரீதியிலே பிரமதேவனின் வழிவந்தவராக இராணவன் குறிப்பிடப்படுகின்றார். பிரமனின் மகனான மனு என்பவருக்கு இருவர் மக்களாவார். அதில் ஆண்மகன் சமன், எனவும் பெண் மகவு ஈழம் எனவும் அழைக்கப்பட்டனர், ஈழம் என்கின்ற பெண்மகள் அரசாண்ட இடமே குமரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டத்தின் தென்திசை ஆகும். தெற்கே கன்னியாக்குமரியில் அவளது அரசமையம் இருந்ததாக குமரிக்கண்டம் பற்றிய ஆராய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈழம் என்பவரின் பின் அவரது மகனான பரதன் அத்தேசத்திற்கு அரசனானான். இத னால் அப்பகுதி பரதகண்டம் என வழங்கலா யிற்று. இவனது ஆட்சியிலே பரதகண்டத்தில் பரதர், இயக்கர்,நாகர் மற்றும் அசுரர் போன்ற பல் இன சமூகத்தினர் வாழ்ந்து வந்தார் கள். பரதனின் ஆட்சியின் பின் சயம்பன், யாழிமுகன், யாதி, வித்துகேசன், சுகேசன், மாலியவான், சுமாலி ஆகியோரால் இத்தேசம் ஆட்சி செய்யப்பட்டுவந்தது. சுமாலியின் பின் அவ னது தங்கையான கைகசியிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. கைகசி தனது கணவன் விச்ரவசு முனிவருடன் சேர்ந்து இராட்சிய பரிபாலனம் செய்தாள். இக் காலம் பாரிய கடல்கோளினால் குமரிக் கண்டத்தைக் கடல் கொள்ள பரதகண்டத்தில் இருந்து இலங்கை பிரிக்கப்பட்டது. இதனை

"பெருவளமொடுதென் பாலி
பெயல் வளமருதத்தோடு
பெருங்கடல் விழுங்கிக் கொண்டு
போயபின் தனித்துநின்ற
திருவிடம் அதன் தென்பாங்கில்
சிதறியதீவுக் கெல்லாம்
ஒருபெரும் தலைமைதாங்கி
ஒளிர்ந்தது அவ் இலங்கை நாடு"


என இராவண காவியம் கூறுகின்றது. இவ்வகையில் பிரிந்த இலங்கை நாட்டின் மன்னனாக விச்ரவசு முனிவரின் முதல் மனைவியான வாரவர்ணியின் மகன் குபேரன் மன்னனானான்.

விச்ரவசு, கைகசி தம்பதியினருக்கு நான்கு மக்கள் பிறக்கின்றனர். அவர்களில் மூத்தவரே சிவதாசன் என்கின்ற இராவணன். அடுத்தவர் பரமன் என்கின்ற கும்பகர்ணன். மூன்றாமவர் பசுபதி என்கின்ற வீடணன். இறுதியாக மகளாக அவதரித்தவர் உமையம்மை என்கின்ற சூர்ப்பனகை.

இராவணனன் சிறுவயது முதல் சிவபக்தி நிறைந்தவராகவும், வீரச் செயல்களில் வல்லவ ராகவும் ஆய கலைகளிலும் துறை சேர்ந்தவராகவும் விளங்கினார். தனது தமையனின் இலங்காபுரியின் வனப்பிலே தன்னைப் பறிகொடுத்த இராவணன் குபேரனிடம் இருந்து இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றார். சிவபூமியாகிய திரிகோணமலையில் தன்னுடைய இராசதானியை அமைத்து செங்கோலாட்சி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைத் திருநாட்டின் கீழ்ப் பகுதியில் அமைந்த இடமே திரிகோணமலை. திரிகோணமலையின் வரலாறுபற்றித் தட்சிணகைலாச புராணம் பின்வருமாறு கூறுகின்றது. ஆதியில் வாயுபகவானுக்கும், ஆதிசேடனுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினால் ஆதிசேடன் தனது ஆயிரம் தலைகளினாலும் கைலாயமலையை மறைத்துவிட்டனாம். இதனால் சினம் கொண்ட வாயுபகவான் கைலைமலையின் மூன்று சிகரங்களைப் பெயர்த்துச் செல்லும் வேளை சிவபிரானின் கட்டளைப்படி நடுச்சிகரத்தை திரிகோணமலையில் வைத்தாராம். அன்றுதொட்டு திரிகோணமலை சிவபூமியாக மிளிர்ந்தது. இந்த சிவபூமியே இராவணேசனின் தலைநகராகும்.

இராவணேசன் பற்றிய பல்வேறு செய்திகள் திரிகோணமலையில் நிகழ்ந்ததாக பல்வேறு இலக்கியங்கள் சான்று தருகின்றன. தனது தாயாரின் மேல் மட்டற்ற பாசம் கொண்ட இராவணன் தன் தாய் நோய்வாய்ப்பட்ட வேளை கோணேஸ்வரநாதரை வழிபட முடியவில்லையே என ஆதங்கப்பட கோணநாதர் இருக்கும் மலையையே வெட்டிஎடுக்க முனைந்தாராம். இன்றும் இராவணனால் வெட்டப்பட்ட மலையின் பகுதி "இராவணன் வெட்டு" என்றே வழங்கப்படுகிறது.

தனது தாயாரின் அந்திமக் கிரியைகளைச் செய்வதற்காக கன்னியாய் எனும் இடத்தில் ஏழு வெந்நீர்க் கிணறுகளை இராவணன் அமைத்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இதனைப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தனது கவிதையிலே,

"அன்னை தனக்காய் இராவணனார்
அந்தியேட்டி செய்ய வென்றே
உன்னை அமைத்தது உண்மையதோ
உரைப்பாய் கன்னியாயத் திருவே..."

என்று கூறுகின்றார்.


இத்தகைய பெருமையுடைய இராவணன் இயக்கர் குலத்திலே பிறந்தவர். இவர் மன்னாரை இராசதானியாகக் கொண்டிருந்த மயனின் மகளான வண்டமர் ஓதியை (மண்டோதரி) திருமணம் செய்கின்றார். மயன் கட்டிட சிற்ப நிர்மாணப் பணிகளிலே கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தவர். இதனால் 'தேவசிற்பி' எனப் புகழ்ப்பட்டவர். நாககுலத்தவரான இவர் நாகதெய்வ மான திருக்கேதீஸ்வர நாதனை குலதெய்வமாகக் கொண்டவர். இயக்கர் குலத்தவரான இராவணனும் நாகர் குலத்தில் உதித்த மண்டோதரியும் திருமண பந்தத்தில் இணைந்த தனால் இயக்கர், நாகர் சங்கமம் இலங்கையிலே ஏற்படுகின்றது. மண்டோதரி நாகவழிபாட்டிலே தலைசிறந்த பெண். அத்துடன், பெண்களுக்கே உரிய சகல லட்சணங் களும் நிறைந்தவர். பின் நாளில் பஞ்ச கன்னியர்களில் ஒருவராகப் போற்றப்பட்டவர்.

தேவதச்சனான மயன் தன் மருமகனுக்காக இலங்கா நகரியின் பல்வேறு அழகிய கட்டிடங்களைப் பரிசாக வழங்கினான். சீயகிரி. குருந்தனூர், எல்லகுகை போன்றவை இராவணனுக்காக அமைக்கப்பட்டன. அத்தோடு மாதோட்ட துறைமுகமும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. சீயகிரிமலை அழகிய ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டது. தமிழரின் பண்பாடு கூறும் ஓவியங்களாக இவை மிளிர்ந்தன. சிறிய விமானதளமும் இம்மலையில் அமைக்கப்பட்டது. எல்ல குகை பிரமிப்பூட்டும் வகையிலே அமைந்தது. இருவகையான நீர்த் தேக்கங்களையும், நாற்பதிற்கும் மேற்பட்ட நீர் ஊற்றுக்களையும் கொண்ட நிலவறைக் கிணறுகள் இங்கே காணப்படுகின்றன.



திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய தலங்களும் மய னால் அமைக்கப்பட்டவை என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள், இவ்வாலயங்களை இராவணேசன் தர்மபரிபாலனம் செய்ததாகவும் "இலங்கையின் புராதனசரித்திரம்" என்ற நூல் குறிப்பிடுகின்றது.

தனக்கு ஒப்பாகும் மிக்காரும் இல்லாத இராவணேசனின் பெருமைகளைக் கூறமுயலும் கம்பர்.

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன்
முன்னாள் எக் கோடியாராலும் வெல்லப்படா எனக் கொடுத்தவரமும்
திக்கொடும் உலகனைத்தும் பெருக்கடந்த புஜவலியும்."

என வியந்து கூறுகின்றான்;

மேலும் இலங்கா நகரியில் கால்பதித்த அனுமன் இராவணனைக் கண்டு வியந்தமையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிகரவண் குடுமி நெடுவரை எவையும்
ஒருவழித் திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டலம் அலம்பும்
திண் திறல் தோள் புடைவயங்க
சரசுநீர் வேலை தழுவிய கதிரின்
தலைதொறும் தலைதொறும் தயங்கும்
வகையநல் மகுடம் இளவெயில் எறிப்ப
கங்குலும் பகல் பட வந்தான்.

என்றெல்லாம் பாராட்டுகின்றான்.

இவ்வகை சிறப்புடைய இராவண தேசமான இலங்கா நகரியின் அழகும் வளமும் சொல்லுதற்கு அருமை. இதனையும் கம்பன் கூறத் தறவில்லை.

"பொன் கொண் டிழைத்தமணியைக் கொடுபொதித்த
மின் கொண் டமைந்தவெயிலைக் கொடுசமைத்த
என் கொண் டியற்றியஎனத் தெரிவு இல்லாத
வன் கொண்டல் விட்டுமதிமுட்டு வன் மாடம்"

இதுதான் கம்பன் கண்ட இலங்கை. இவ்வளவு அழகாக இலங்கையை ஆண்ட பெருமை மூதாதை இராவணேசனையே சேரும்,

ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் தேர்ச்சி பெற்றவர் இராவணேசன் என்று ஏலவே கண்டோம். எனினும் இசை, வானசாஸ்திரம், மருத்துவம், சோதிடம். விஞ்ஞானம், இலக்கியம், தந்திரம் முதலிய பத்துக் கலைகளிலும் மீத்திறமை கொண்டவன். இதனால் "தசக்கிரவன்" எனும் சிறப்புப் பெயரும் பெற்றவர். ஆனால் இக்கருத்து இன்று தவறாக விளக்கம் கொள்ளப்பட்டு இராவணன் பத்துத் தலைகளுடன் பிறந்தவன் எனும் கருத்துநிலை வழங்கி வருகின்றது. மேற்சொன்ன பத்துத் துறைகளுமே இராவணனின் பத்துத் தலைகளுக்கும் உருவகமாகின்றன.

இசைத் துறையின் தந்தையாக தமிழ் உலகு இராவணனையே காண்கின்றது. இராவணனின் இசையால் சிவபிரானே வயப்பட்டவர். தமது சாமகானத்தால் இறைவனை ஆட்படுத்தியவர். அதுமட்டுமன்றி வீணை வாசிப்பதிலே பலநுட்பங்களை அறிந்தவர். இசைக் கருவிகளை ஆக்கும் திறனும் பெற்றவர். "இராவணாகசுரம்" "இராவணாந்தகம்" வீணை வகைகள் இராவணனால் படைக்கப்பட்டவை. வீணை வாசிப்பதில் அகத்திய முனிவருக்கு நிகரான சாதனை படைத்தவர். "அசுரசாதகம்" எனும் இசை நுணுக்கம் அறிந்தவர் "சிவதாண்டவ தோத்திரம்" எனும் இசை நூலையும் யாத்தவர்,


ஆயுர்வேதம், சித்த மருத்துவம் ஆகியவற்றின் பிதாமகனாகவும் இராவணேசன் காணப்படுகின்றார். இவரிடம் இருந்தே உலகு ஆயர்வேத தகவல்களைப் பெற்றது. சகல வகையான உடல் உபாதைகளுக்கும் மருந்து கண்டறிந்ததோடு மனோதத்துவ நிபுணனாகவும் இராவணன் செயற்பட்டிருக்கின்றார். வைத்தியம் சார்பாக பல்வேறு நூல்கள் இவரால் ஆக்கித் தரப்பட்டவை. அவ்வகையில் இராவணன் எழுதிய மருத்துவ நூல்களாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இராவண குமார தந்திரம்
- அர்த்தப் பிரக்க்ஷசா
- நாடிப் பரீக்ஷசா
- நாடி விக்ஷனா
- அர்த்த சாஸ்திரம்
- வைத்திய சிந்தாமணி

ஆகிய நூல்கள் கூறப்படுகின்றன.




இந் நூல்களில் இராவண குமார தந்திரம் குழந்தை மருத்துவ நூலாகும். அர்த்தப் பிரக்ஷா மனிதனின் தோலில் ஏற் படும் சொறி, சிரங்கு போன்ற வியாதிகளுக் கான மருத்துவம் பற்றியது. நாடிப் பரீக்ஷசா மற்றும் நாடி விக்ஷனா என்பன மனித உடலில் உள்ளநாடி, நரம்புகளில் ஏற்படும் வியாதிக ளுக்கான நிவாரணம் கூறுகின்றது. அர்க சாஸ்திரம், வைத்திய சிந்தாமணி எனும் இரு நூல்களும் மூலிகைகள் பற்றியும் அவற்றால் உடல் பெறும் நன்மைகள் பற்றியும் விபரிக் கின்றன.

இராவணன் பேணிய மருத்துவ தத்துவம் அகமருத்துவம், புறமருத்துவம் என இரு வகைகளில் அமைவதாக ஆய்வாளர்கள் கூறுவர். அகமருத்துவத்தில் 50 பகுதிகளும் புறமருத்துவத்தில் 60 பகுதிகளுமாக மொத்தம் 110 மருத்துவ முறைகள் இராவணேசனால் அறிமுகப்படுத்தப்பட்டவை. சிறந்த மனோதத்துவ நிபுணராக விளக்கியவர் இராவணன். அகத்திலே ஏற்பட்ட நோய் புறத்தையும் அழித்துவிடும் எனவே அகம் சார்ந்த நல் உணர்வினை வளர்ப்பதே முதல் வைத்தியம் என்றவகையில் 50 வகையான மனோதத்துவ முறைகளை அறிமுகப்படுத்தினார்.


புறத்தே உள்ள மூலிகைகளின் மூலம் மனித உடலில் தோன்றும் ரோகங்களுக்கான சிகிச்சை புறமருத்துவமாகும். 60 வகையான புறமருத்துவ முறைகளை இலங்கேஸ்வரன் அறிந்திருந்தார். இஞ்சி, மிளகு, பூண்டு ஆகிய மூலிகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளும் முறையினை "திரிகடுககாயகல்ப்பம்" என்ற வகையில் மருத்துவ முறையாகக் கையாண்டார். அவற்றோடு மிக முக்கியமாக பாவிக்க வேண்டிய பத்து வகையான வேர்களை பற்றியும் இவற்றின் மூலம் உடற்பிணிதீரும் வகைகள் பற்றியும் அறிந்திருந்தார்.

1) சிறு விழுதுவேர்
2) நெருஞ்சிவேர்
3) சிறுமல்லிவேர்
4) பெருமல்லிவேர்
5) கண்டங் கத்தரிவேர்

ஆகிய சிறுவேர்கள் பற்றியும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1) வில்வம் வேர்
2) பெருங்குமிழி வேர்
3) தழுதளை வேர்
4) பாதிரி வேர்
5) வாகை வேர்

ஆகிய பெருவேர்கள் பற்றியும் அவற்றால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும் முதன் முதலில் சித்த மருத்துவமுறை மூலம் உலகுக்கு அறிவித்த பெருமை இராவணேசனையே சாரும். தமிழனின் மருத்துவக் கலையின் தந்தையாக இராவணனே விளங்குகின்றார்.

விஞ்ஞானத்தில் துறைபோய அறிவுபெற்ற இராவணனே முதன் முதலில் ஆகாய வழி மார்க்கங்களை அறிந்து வைத்திருந்தார். உலகின் முதல் விமானியாகவும், விமான நிலையங்களை அமைத்தவராகவும் சொந்தமாக விமானம் வைத்திருந்தவராகவும் இவரை இலக்கியங்கள் காட்டுகின்றன. அவரது விமானம் "புட்பகவிமானம்" என்ற பெயருடன் வானிலே பறந்து திரிந்திருக்கின்றது. மாயன்களோடு நெருங்கிய தொடர்புகளைப் பேணி அவர்களின் நாடுகளுக்கெல்லாம் தனது விமானம் மூலம் பயணித்து வந்திருக்கின்றார்.

இராவணனின் மாமன் மயனே மாயன்களின் பிரமிட்டை வடிவமைத்ததாக இன்றைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏலியன்களின் தேசம் என்று வர்ணிக்கப்படும் தென் அமெரிக் காவில் பெருநாட்டின் உள்ள நாஸ்கா பாலைவனத்தில் சிகிரியாவை ஒத்த பெருமலைக் குன்று ஒன்று உள்ளது. இக்குன்று 500kmதூரம் வரை சமப்படுத்தப்பட்டு 24km வரை விமான ஓடுபாதையும் கொண்டுள்ளதாக அந்நாட்டு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அம்மலையில் பற வைகள், விலங்குகளின் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. பெருநாட்டவர்கள் இவ்விடத்தை தங்களின் புனித தலமாக வழிபட்டு வருகின்றனர். இதில் இருந்து இராவணனுக்கும், ஏலியன்களுக்குமிடையே விமானத் தொடர்புகள் இருந்திருக்கின்றன என ஊகிக்க முடிகின்றது.

சோதிடக் கலையின் தோற்று வாய்க்கும் வித்திட்டவராக இராவணனையே சோதிட வரலாறு குறித்துக் காட்டுகின்றது. வானிலே உலாவுகின்ற கோள்களை அவதானித்து இராவணனால் தரப்பட்ட சோதிட நூலே "இராவணசம்கிதை" எனும் சோதிட நூலாகும். இராகு, கேது தவிர்ந்த முதல் ஏழு கோள்களையும் முதலில் கண்டறிந்தவர் இவரே. இதனை இவரது சோதிட நூலான இராவணசம்கிதை விரிவாக விளக்குகின்றது. இராவணன் சோதிட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விற்பனர் என்பதற்கு அவரது பெயரே சிறந்த உதாரணம் ஆகும். இரா+வணன் இராவணன். அதாவது, இரவினை அவதானிக்கும் வான்மை (அறிவு) பெற்றவர். என்பது அவர் பெயரில் பொதிந்துள்ள கருத்தாகும்.

உலகெங்கும் இலிங்க வனத்தை ஸ்தாபித்த வீர சைவனாக இராவணனையே இலக்கியங்கள் சுட்டி நிற்கின்றன. ஆந்திரா தேசத்திலே காக்கி நாடாவில் உள்ள சிவன் ஆலயம் இராவணனால் அமைக்கப்பட்டது. இராமேஸ்வர ஆலயம் உருவாவதற்குக் காரணமானவரும் இராவணனே. சிவபிரானிடம் ஆன்மலிங்கத்தைப் பரிசாகப் பெற்றவர் என்பது வரலாறு. அது தவிர இன்று பல இடங்களில் இராவணேஸ்வரன் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றார். இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இராவணனை வழிபடுகின்ற மரபு இன்றும் தொடர்கின்றது. இங்கு இராவணேஸ்வரனுக்குத் தனியான ஆலயமே அமைக்கப்பட்டுள்ளது. மகாராஸ்ரா மக்கள் இராவண வழிபாடு உடையோராவார். நாசிப் பழங்குடியினர் திருமணத்திற்கு முதல் நாள் இராவணனை வழிபட்டு ஆசிபெறுவது வழக்கமாகும். இச்சடங்குகளை "இராவணசித்தம்" என அழைத்து வருகின்றனர். இவ்வகையில் உலகமெங்கும் தெய்வமாக வழிபட்டுவரும் இராவணனுக்கு அவர் செங்கோலாட்சி செய்த இலங்கா நகரில் ஒரு ஆலயம் இல்லையே என்பது வருந்தத்தக்கது.

உலக மொழிகளிலே முதல் மொழியாகிய தமிழின் மேல் அளவற்ற பற்றுதல் உடையவர் இலங்கேஸ்வரன். அவர் படைத்த நூல்கள் எல்லாம் தமிழிலேயே அமைந்ததாகவும் ஆரிய அலை தமிழை ஆட்கொள்ள ஆரியம் தளைத்தது. ஆனால் இராவணேசன் தமிழ் மேற்கொண்ட பற்றுக்குப் பின்வரும் செய்யுள் ஒன்றே சான்றாகும்.


"சங்கம் தருதமிழ் உண்டது தவறென்று தெளிந்தேன்
இங்கொன்றிய இறையே இனிஎங்கும் தலைவையேன்
அங்கன்றது கொண்டது பொறுத்தருள் என்று ஒலிகடலும்
சங்கம் தருமுத்தம் தரும் திரை ஆயிரம் மடங்கு"

இராவணன் கடற்கரையிலே நடந்து செல்கின்ற போது கடல் நன் அலைக் கரங்களால் இராவணேசனின் பாதங்களைத் தொட்டு மன்னிப்பு கேட்கின்றதாம். ஏனெனில் கடல்கோளினால் அருமையான தமிழில் உள்ள பல்வகை இலக்கியங்களையும் கடலினுட் கொண்டுவிட்டேன். தமிழின் மேல் இவ்வளவு பற்றுடைய நீ பிறப்பாய் என்று தெரிந்திருந்தால் நான் அவ்வளவு செய்திருக்க மாட்டேன். இராவணேசனே இனிமேல் நான் நீ இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திசைக்கு வரவும் மாட்டேன். இனியதமிழ் மொழியை அழியவிடவும் மாட்டேன். நான் செய்த தவறினை மன்னித்து அருள்வாய். அத்தவறுக்குப் பிராயச்சித்தமாக எனது முத்துக்களை உனக்குத் தருகிறேன் என்று கரை எங்கும் பலகோடி முத்துக்களை குவித்து வணங்கி நிற்கின்றதாம்.

இத்தகைய சிறப்பையும், புஜபல பராக்கிரமத்தையும், ஆயகலைத் தேர்ச்சியையும், தமிழ் அன்னை மீது மட்டற்ற பற்றுதலையும் கொண்ட இராவணேசன் அன்றோ எமது மூதாதை இலங்கா நகரியை செங்கோல் செலுத்தி ஆட்சிசெய்து குபேரனின் அழகாபுரியை விஞ்சிய சிறப்புடன் காத்த எம் முதல் மன்னன் இராவணனே. ஆனால் ஆரியக் கம்பனின் நேரற்ற சிந்தனையால் அவர் இலக்கியத்தில் எதிர் நாயகனாக படைக்கப்படுகின்றார்.

இராவணனின் உண்மையான வரலாறு தேடுவோர் புலவர் குழந்தையின் "இராவணகாவியம்" கற்கவேண்டும். இராமனை கம்பன் எவ்வாறு படைத்தானோ அவனை விட சிறந்த குணாம்சங்களுடன் இராவணனைப் படைத்துக் காட்டியிருக்கிறார் புலவர். இப்படிப்பட்ட இராவணேசனின் வழித்தோன்றல்கள் என்ற வகையிலே நாமும் பெருமை அடையவேண்டும்.

**உசாத்துணை நூல்கள்:**


1. பன்னிரு திருமுறை தோத்திரத் திரட்டு -தொகுப்பாசிரியர் நா. முருகையா, ஆத்மஜோதி தியான மணிமண்டப வெளியீடு - ஏழாலை.
2. கம்பராமாயணம் மூலமும் உரையும் (சுந்தரகாண்டம்)-ச.வே.சு, மணிவாசகர் பதிப்பகம் - சென்னை.
3. தட்சிண கைலாய புராணம் - மொழிபெயர்ப்பு. வித்துவான் சி. நாகலிங்கப்பிள்ளை, பதிப்பாசிரியர். பத்மஶ்ரீ. நா. பத்மநாபன், முன்னேஸ்வர தேவஸ்தான வெளியீடு, 2018.
4. புராதன இலங்கை சரித்திரம் - தி. ப. கணபதிப்பிள்ளை, மறுபிரசுரம் 1988, அரியாலை அன்பர் வெளியீடு, தாசன் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
5. இராவண காவியம் - மூலமும் உரையும் (புலவர் குழந்தை)-பேராசிரியர் ந. வெற்றியழகன், சாரதா பதிப்பகம், சென்னை.
6. இலங்கை வேந்தன் இராவணன் - கட்டுரை, பேராசிரியர் ஆ. சதாசிவம், மருதநிலா, 1995.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜெயம் ஜெகன்**
ஊடகவியலாளர்
(யோகா, வர்மக்கலை,கராத்தே ஆசிரியர்)

## மல்லிகைத்தீவுக் கிராமியப் பாடல்களில்

# மறந்தவையும் மறைந்தவையும்

கிராமியத்தின் பாரம்பரிய மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதில் கிராமியப்பாடல்கள் பெரிதும் துணை நிற்கின்றன. கிராமியப் பாடல்கள் மூலம் ஒரு கிராமத்தின் பண்பாடு, மரபு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் அறிந்துகொள்ள முடிகின்றது. மல்லிகைத்தீவுக் கிராமத்தில் கலை, பண்பாடு, ஆன்மீகம், விளையாட்டு இயற்கையான வாழ்வியற் கோலங் கள் என்பன நிறைந்துள்ளன. இவற்றைப் பிரதிபலிக்கும் வகையிலும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு மரபு சார்ந்த அடையாளங்களைக் கையளிக்க வேண்டும் என்ற நோக்கோடு எமது கிராமத்திற்குரிய பாடல்களை நாட்டார் இலக்கியத்தினூடாகப் படைக்கின்றேன். கிராமங்களில் வாழும் மக்களையும் அவர்களின்

- மரபு
- மொழிநடை
- பழக்க வழக்கம்
- பண்பாடு, பாரம்பரியம்
- நம்பிக்கை
- சமய, கலாசாரங்கள்
- தொழில்
- வேடிக்கை விநோதம்

ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பிம்பங்களாகக் கிராமியப் பாடல்கள் உள்ளன.

மல்லிகைத்தீவுக் கிராமியப் பாடல்களில்

- எதுகை
- மோனை
- அடுக்குமொழி
- உவமை
- சொற்சுவை
- பொருட்சுவை

பொதிந்துள்ள பாடல்களாகவுள்ளன. பதினாறு வகையான கிராமியப் பாடல்களை குறிப்பிட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல்
2. தாலாட்டுப் பாடல்
3. குழந்தைப் பாடல்
4. பிள்ளைப் பாடல்
5. காதல் தூது விடுதல் பாடல்
6. மனைவி பாடல்
7. தத்துவப் பாடல்
8. நகைச்சுவைப் பாடல்
9. தொழிற் பாடல்
10. குச்சியாட்டப் பாடல்
11. விளையாட்டுப் பாடல்
12. பீட்டன் பீட்டி மரபுப் பாடல்
13. கோலாட்டப் பாடல்
14. விழாக்காலப் பாடல்
15. பிரார்த்தனைப் பாடல்
16. ஒப்பாரிப்பாடல்

இப்பாடல்கள் இம்மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப் பிணைந்துள்ளன. இப்பாடல்களைக் கேட்போரிடம்

1. நகை
2. அழுகை
3. இளிவரல்
4. மருட்சி
5. அச்சம்
6. பெருமிதம்
7. வெகுளி
8. உவகை
9. நடுநிலை

எனும் ஒன்பது இரசங்களையும் உண்டாக்கும் திறன்படைத்தது.

இந்தப் பதினாறு வகையான நாட்டார் பாடல்களிலும்

- வாய்வழியாகப் பரவி, செவிவழி இன்பம் சேரல்.
- தலைமுறை தலைமுறையாக வருதல்.
- எளிமையாகப் பொருள் விளக்கி நிற்றல்.
- மண்வளச் சொற்களைக் கொண்டிருத்தல்.
- பொருட்சுவை, சொற்சுவை புலப்படல்.
- நவரசங்களை உள்ளத்தில் ஊட்டுதல்.
- எதுகை மோனை அடுக்குமொழியினைக் கொண்டிருத்தல்.
- உவமை அழகு ததும்பல்.
- மரபு பண்பாடு பாரம்பரியத்தைப் பேணல்.
- இசையால் பொருளால் இதயங்களை ஈர்த்தல்.

ஆகிய பண்புகள் செறிந்துள்ளன

**மருத்துவிச்சி வாழ்த்துப் பாடலில்**

வயிற்றிலே பத்துமாதம் நெளிந்தபிள்ளை - தனத்திலே
வாயை வைக்குதே!
பொல்லாப்பு இல்லாமல்
பொன்னான மேனி வந்ததே!
பயன்கொண்டு விளைந்த - இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரே எந்நாளும் அது உயிரே!

அங்கங்கள் எல்லாம்
அழகாய் உண்டு
கண்ணும் கருத்துமாய்
காவல் செய்வீரே!
சுகமாய் பிறந்த குழந்தை
சூடான சொல் கேளாதே!

பார்வையும் சரியாக இருக்குது
பயந்திட வேண்டாமே!
காதும் சரியாகக் கேட்குது
கத்திக் கதறிட வேண்டாமே
பேரனென்றும் பேர்த்தியென்றும்
பேர்சூட்டி மகிழ்ந்திடுவீரே!

சுத்தமாக வளர்த்தெடுத்து
சூழலில் காத்திடுவீரே!
பத்தியம் தாய்க்குச் செய்து - இழந்த
பலம் இனியும் காண்பீரே!
இருபத்தொரு சரக்குகளையோ
இருபத்தேழு சரக்குகளையோ எடுப்பீரே!

உயிருள்ள இயற்கை உணவுகளை
உண்டு நலம் காண்பீரே!
தாய் தந்தை பேற்றாலே
தவப்பயனது வாழ்கவே...

(தகவல்: பொ.ஜெயம், 2000.04.21)

**பின்பு தாயின் தாலாட்டுப் பாடல் தொடரும்**

தரணி காட்டி
தாய்மை நான் தாலாட்டுவேன்.

மூக்குக் காது
முகம்பிடித்துத் தாலாட்டுவேன்.

மடியில் வைத்து
மாணிக்கத்தைத் தாலாட்டுவேன்.

ஏணைகட்டி, தொட்டில் கட்டி
எறும்பு நுழையாமல் தாலாட்டுவேன்.

பஞ்ச பூதங்களின் வரம் கேட்டு
பாலகனைத் தாலாட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா அக்கா
அடையாளம் காட்டித் தாலாட்டுவேன்.

பழமொழிகள் சொல்லிப்
பக்குவமாய்த் தாலாட்டுவேன்.

உறவுமுறை சொல்லி
உள்ளமுருகித் தாலாட்டுவேன்.

விளையாட்டுச் சொல்லி
விருப்புடன் தாலாட்டுவேன்.

விடுகதைகள் சொல்லி
விடையும் தந்து தாலாட்டுவேன்.

தந்தை காட்டித்
தங்கத்தைத் தாலாட்டுவேன்.

மல்லிகைப் பூசூடி
மனமகிழ்ந்து தாலாட்டுவேன்.

(தகவல்: ஜெ.மணியம்மா, 2000.02.10)

தாயின் தாலாட்டுப் பாடலினைக் கேட்டு அழுத குழந்தையும் கண்ணயர்ந்து களிப்புடன் தூங்கும் இந்தத் தாலாட்டுப் பாடலில் காணப்படும் பண்புகளாக.

- உலகத்தை முதலில் அறிமுகப்படுத்துபவள் தாயாகும்.
- உடலில் உள்ள உறுப்புக்கள் நேர்த்தியாக்கப்படுகின்றன.
- தாயின் மடியின் சுகம் உணர்த்தப்படுகின்றன.
- சேலையில் பிள்ளை வளர்த்துகின்ற முறைமை சொல்லப்படுகின்றது.
- நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகியவற்றின் அருள் வேண்டப்படுகின்றது.
- சகோதரர்கள் அறிமுகம் செய்யப்படுகின்றனர்.
- பழமொழிகள் சொல்லப்படுகின்றன.
- உறவுமுறைகள் சொல்லப்படுகின்றன.
- விளையாட்டுக்களும் விடுகதைகளும் சொல்லப்படுகின்றன.
- தந்தை அடையாளப்படுத்தப்படுகின்றார்.
- மல்லிகைப்பூவின் இயல்பு சொல்லப்படுகின்றது.

**பின்பு குழந்தைப் பாடல் தொடரும்**

உடும்பு பிடித்து
உருண்ட குழந்தை
எழுந்து இருந்து
எல்லோரையும் நோக்குதே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து நடந்து
நளினம் கொள்ளுதே...
ஓடியாடி விளையாடி
ஓலகம் காணுதே....

குறும்பு செய்து
குதூகலம் போடுதே....
தூக்கித் தோளில்
போட தூரம் சொல்லுதே...

(தகவல் : தணிகாசலம் 2013.07.09)

இந்தக் குழந்தைப் பாடலிலே ஒரு குழந்தையின் வளர்ச்சி நிலைகள் சொல்லப்படுகின்றன. அதுவும் படிப்படியான வளர்ச்சி நிலைகள் பற்றிப் பாடப்பட்டுள்ளன.

தூக்கித் தோளில் போட
தூரம் சொல்லுதே.......

குழந்தைகள் வார்த்தைகளில் பேசுவதைவிட கைகளைக் காட்டிப் பேசுவார்கள். தந்தையார் தோளிலே குழந்தையைப் போட்டவுடன் குழந்தை கைகளால் அங்க இங்க என்று காட்ட அவரும் அத்தூரங்கள் வரை குழந்தையைக் காவிச் செல்வார்.

பிள்ளை தனது தாயின் அருமைகளைப் பெருமைகளைச் சொல்லிப் பாடுகின்ற பாடலாகப் பிள்ளைப் பாடலுள்ளது. அவற்றை நோக்குவோம்.

அண்டம் முழுவதும் அவதரித்தாயே!
கண்டம் தாண்டியும் கருணை கொண்டாயே!
நிதமும் நினைச்சனே
நெஞ்சுக்குள்ள புதைச்சனே - என்
உயிர் உள்ளவரை உன்னைப் பற்றிக் கதைச்சனே!

எனக்கேதும் ஆனதென்றால்
என் அண்ணன் உனக்குண்டு
உனக்கேதும் ஆனதென்றால்
உலகத்தில் எனக்கேது தாயுண்டு....

கந்தல் சேலைகட்டி நடந்து வருவாயே
கூந்தல் முடிச்சுக்கட்டி விறகு சுமப்பாயே - உன்
காலில் வைத்துக் குளிப்பாட்டுவாயே - என்னைத்
தோளில் சுமந்து செல்வாயே!

நெஞ்சில் சுமந்து நெருப்பும் சுமந்து
நெடுநாளும் நேசமுடன் வளர்த்தாயே!
ஒற்றைக் குறையேனும்
இற்றைவரை விட்டதில்லையே தாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தா என்றும் அம்மா என்றும்
காத்துக் கொள்ளும் தெய்வம்
விலகாம நீயிருந்து எங்கும்
நிலவாக நிமிரும் தெய்வம்

(தகவல்: தணிகாசலம் 2013.07.09)

தாயின் அருமைகளைப் பாடி மகிழ்ந்த பிள்ளை பின்னர் உறவுமுறைகளைச் சொல்லி ஒரு நீண்ட பாடலைப் பாடுகின்றது. அப்பு ஆச்சியில் தொடங்கும் இப்பாடல் ஏழாந்தலை முறையான வேந்துருவுடன் நிறைவுறுகின்றது.

அப்பு ஆச்சி சொல்கேட்டு
அன்புடன் வளர்ந்திடுவோம்.

ஆசையம்மா ஆசையப்பா சொல்கேட்டு
ஆனந்தமாய் வாழ்ந்திடுவோம்.

இளையாச்சி சொல்கேட்டு
இனவழியில் சென்றிடுவோம்.

ஈன்றார் சொல்கேட்டு
ஈரெழு ஜென்மம் வாழ்ந்திடுவோம்.

உற்றார் உறவினர் சொல்லை
உளமார ஏற்றிடுவோம்.

எலுவல் எலுவை சொல்கேட்டு
என்றுமே வாழ்ந்திடுவோம்.

ஐயன் ஐயா சொல்கேட்டு
ஐயமின்றி வாழ்ந்திடுவோம்.

ஓட்டன் ஓட்டி சொல்கேட்டு
ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்.

கண்ணாட்டி, கண்ணாளன் சொல்கேட்டு
காலமென்றும் வாழ்ந்திடுவோம்.

குஞ்சியாச்சி குஞ்சியப்பு சொல்கேட்டு
குழந்தையில் வளர்ந்திடுவோம்.

கொப்பாட்டன் கொப்பாட்டி சொல்கேட்டு
கொடுத்துதவி வாழ்ந்திடுவோம்.

கோந்துரு சொல்கேட்டு
கோடித்தரிசனம் செய்திடுவோம்.

சின்னையா சின்னம்மா சொல்கேட்டு
சிந்தையில் ஏற்றி வாழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீயான் சீயாள் சொல்கேட்டு
சீவியத்தில் நடந்திடுவோம்.

தாத்தாவின் சொல்கேட்டு
தடுமாறாது வாழந்திடுவோம்.

தொட்டம்மா தொட்டப்பா சொல் கேட்டு
தொன்மையைப் பேணிடுவோம்.

பாட்டன் பாட்டி சொல்கேட்டு
பாரம்பரியம் வளர்த்திடுவோம்.

பீட்டன் பீட்டி சொல்கேட்டு
பிள்ளைகள் நாம் வளர்ந்திடுவோம்.

பெத்தம்மா பெத்தப்பா சொல்கேட்டு
பெரியவராய் உயர்ந்திடுவோம்.

முப்பாட்டன் முப்பாட்டி சொல்கேட்டு
முப்பொழுதும் நடந்திடுவோம்.

மூதாதை வேந்துரு சொல்கேட்டு
முன்னேற்றம் வாழ்வில் கண்டிடுவோம்.

(தகவல்:ஜெயம் ஜெகன் (2018) 'புழுங்கலரிசியும் புழுக்கொடியலும்')

**காதற் பாட்டை நோக்கினால்**

தூதுவிட்டு அனுப்பமாட்டேன் - உன்
தூக்கம் கலைந்துவிடும் மயிலே...

கடிதம் எழுதி அனுப்பமாட்டேன்
காகிதக்காரன் வந்திடுவான் குயிலே....

ஒடியல் பிட்டும் குரக்கன் பிட்டும்
ஒருத்தியுனக்குச் செய்து வந்தேன்...
பனங்கிழங்கும் பினாட்டும் தயிரும்
பாவையுனக்கு படைக்க வந்தேன்....

காடு சென்று தேனெடுத்து
காரிகை உன் உயிர்வளர்த்தேன் ....
காதல் நிலையால் வளர்ந்தகாலம் - நாம்
காலமானாலும் நிலைக்கும. கோமளமே....

சுறுக்கச் சுறுக்கச் சுள்ளி பொறுக்கி
சும்மாடில் வைத்து வருவாய்....
சுமைதாங்கி நீ நடந்து வருவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையென்று நீ சொல்லாமலே
தேடிவந்து தேவை போக்குவேன்...
மாட்டு வண்டிலில் வந்து
மாலைசூடி மணங்கொள்வேன் உன்னை...

(பொ.ஜெயம் 2000.04.21)

காதல் பாடல் எதுகை, மோனை, நிரம்பி வழிகின்றன. உண்மையான காதலிக்காக எவ்வளவு உழைக்கின்றார் என்பது புலனாகின்றது.

இங்கு ஆரம்பகாலத்தில் முன்னோர்களின் உணவுகளாக ஒடியல் பிட்டு, குரக்கன் பிட்டு, பனங்கிழங்கு, பினாட்டு, தேன் , தயிர், மோர் ஆகியவை இப்பாடலில் குறிப்பிடப்படுகின்றன.

பழைமைக்குச் சான்றாக மாட்டுவண்டில் பயணம், சுள்ளி பொறுக்குதல், காடு செல்லுதல் , கடிதம் எழுதுதல் இவற்றை இப்பாடலில் காண்கின்றோம்.

காதலியைக் காதலன் ஒருத்தி, பாவை, காரிகை கோமளமே, சுந்தரி, ஆகிய பெயர்களால் அழைக்கின்றான்.

அடுத்து மனைவி பாடல் மிக நீண்ட பாடல் பயன்பாட்டுப் பொருள்களை மையப்படுத்தி இப்பாடல் அமைந்துள்ளது. கணவரும் மனைவியும் வீட்டில் கூடிக் கதைத்துக்கொண்டு இருக்கும் போது கணவருக்கு மனைவி ஆலோசனை கூறுவதுபோல இப்பாடல் அமைந்திருக்கிறது.

மர உரல் கல்லுரலில்
மாவிடிப்போம் மச்சானே!

அம்மியும் ஆட்டுக்கல்லிலும்
அரைத்திடுவோம் மச்சானே!

கலப்பையிலே காளை பூட்டி
உழுதிடுவோம் மச்சானே!

அரிவாளாலே அறுத்துமே
அறுவடை காண்போம் மச்சானே!

அறுவடை செய்து நெல்லினை
அதன் கொம்பறையில் வைப்போம் மச்சானே!

சுளகாலே நெல்லைத் தூற்றி
சுறுசுறுப்பாய் கடகத்தாலே அள்ளிடுவோம் மச்சானே!

மரக்காலாலும் புசலாலும்
மறக்காமல் அளந்திடுவோம் மச்சானே!

பரணும் பட்டறையும் அமைத்து
பயன்கொள்வோம் மச்சானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தளைச் செம்பு பித்தளைத் தட்டில்
பிள்ளைகளுக்கு உணவு கொடுப்போம் மச்சானே!

பித்தளைக் குடத்திலே நீரை
பிரயோசனப்படுத்துவோம் மச்சானே!
சத்தகமும் அரிவாளும் எங்கள்
சரித்திரம் சொல்லும் மச்சானே!

(தகவல்:ஜெயம் ஜெகன் (2018) 'புழுங்கலரிசியும் புழுக்கொடியலும்')

உணவுகளைப் பாதுகாக்க
உறியிலே வைப்போம் மச்சானே!

மத்திலே தயிர் கடைந்து மக்களுக்குக்
கொடுத்திடுவோம் மச்சானே!

காலத்தட்டம்
காரியங்களுக்கு முக்கியம் மச்சானே!

பணிக்கமும் இறங்குப் பெட்டியும்
பணிக்குதவும் மச்சானே!

மூக்குப்பேணி பிளா சிரட்டை
மூன்றும் வேணும் மச்சானே!

பனையோலைப் பாயும் தடுக்கும்
பக்குவமாய் இழைக்கணும் மச்சானே!

குட்டானும் தட்டுவமும்
கொட்டுப்பெட்டி அடுக்குப்பெட்டி இழைக்கணும் மச்சானே!

சோற்றுப்பெட்டி கொண்டு
சொந்தங்கள் வரும் மச்சானே!

மான் தோல் கங்கில் மட்டை
மரைத்தோலில் மிதியடி செய்திடு மச்சானே!

சுண்டுப்பேணி கொத்து
சுத்தமாக இருக்கணும் மச்சானே!

அரமுடியும்
அரைஞான் கயிறு கட்டணும் மச்சானே!

காதுக்குடுவை
காதைக்காக்கும் மச்சானே!

குண்டான்
குலத்திற்குத் தேவை மச்சானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரக்குடுவையில் இறைச்சியும்
சுத்தத்தேனும் வைப்போம் மச்சானே!

மாட்டு வண்டியில் ஏறினால் - எங்கள்
மண்வாசனை தெரியும் மச்சானே!

கிணற்றிலே நீர் அள்ளி
கீரைகளுக்கு ஊற்றுவோம் மச்சானே!

பட்டைகளிலே நீர் கொண்டு
பயிர்களுக்கு ஊற்றுவோம் மச்சானே!

மருந்துச் செம்பும் தைலாப் பெட்டியும்
மடியில் வைச்சிரு மச்சானே!

உடுக்கு மத்தளம் சல்லாரி
உதவும் கூத்துக்கு மச்சானே!

ஏரும் எழுத்தாணியும் என்றும் சொல்லும்
எங்கள் வாழ்வை மச்சானே!

கோடரி ஈட்டி வேட்டைக்கு
கொண்டுபோகணும் மச்சானே!

தூண்டாமணி விளக்கு பித்தளை விளக்கை
தூங்கும்போது குறைத்துவிடு மச்சானே!

மான் கொம்பும் புலித்தோலும்
மாட்ட வேண்டும் குடிலில் மச்சானே!

**(தகவல்: ஜெயம் ஜெகன் (2018) 'புழுங்கலரிசியும் புழுக்கொடியலும்'.**

இவ்வாறு கூறிய பின்னர் கணவர் உணவு பற்றி மனைவியாரிடம் கேட்பார் அதற்கு மனைவியார் பாடும் பாடல்.

ஓடியல் பிட்டுச் சாப்பிட்டால்
ஓலகத்தில் நோயின்றி வாழலாம் மச்சானே!

பனங்காய் சுட்டுச் சூப்பினால்
பாடையில் போவது பிந்தும் மச்சானே!

குரக்கன் பிட்டுச் சாப்பிட்டால் - எங்கள்
குலம் நீளவாழும் மச்சானே!

பினாட்டுச் சாப்பிட்டால்
பித்தம் நீங்கும் மச்சானே!

சாமி, அவரை, எள்ளு, கொள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடவேணும் மச்சானே!
துளசியின் மகிமையை
துளியளவும் மறந்திடாதே மச்சானே!

காலையில் இஞ்சியும் மதியம் சுக்கும்
கண்தூங்கும் வேளை கடுக்காயும் சேர்க்கணும் மச்சானே!

சலம்மலம் ஆகிய பதினான்கும் அடக்கினால்
சஞ்சலம் கூடும் மச்சானே!

நீர் நிதமும்
நிறைவாகப் பருகுதல் வேண்டும் மச்சானே!


பச்சைக் காய்கறிகளை உண்ண
பழக்கமாக்கிக் கொள் மச்சானே!

சாணம் பூசிய தரையில் தடுக்கில்
சப்பணமிட்டு உண் மச்சானே!

உள்ளத்திலும் இல்லத்திலும் சுமையின்றி
உகந்தவழி காணவேண்டும் மச்சானே!

ஒரு மனிதன் எவ்வகையான உணவுகளை உண்டால் ஆரோக்கியமாக இருப்பான் என்றும், ஆயுள் நீள எவ்வாறான உணவுகளை உண்ணவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

(தகவல்: ஜெயம் ஜெகன் (2018) 'புழுங்கலரிசியும் புழுக்கொடியலும்'.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சத்தியப்பிரியா கஜேந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
நடனத்துறை,
யாழ். பல்லைக்கழகம்.

# பண்பாட்டைச் சித்திரிக்கும் யாழ்ப்பாணத்துக் கிராமிய நடனங்கள்

**முன்னுரை**

பண்பாட்டைச் சித்திரிக்கும் யாழ்ப்பாணத்துக் கிராமிய நடனங்கள் எனும் தலைப்பிலமைந்த கட்டுரை யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டைப் பறைசாற்றி நிற்கும் கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் போன்றவற்றின் சிறப்புக்களைக் கண்டறிய விழைகின்றது. கிராமக் கலைகள் மக்களின் வாழ்விய லோடு நெருங்கிய தொடர்பு கொண் டவை. இக்கலை வடிவங்களைப் பேணிப்பாதுகாத்து அடுத்த தலை முறையினருக்குக் கையளிக்க வேண்டும் என்பதோடு, இக்கலையின் சிறப்பினை அறிந்து இளம் தலைமுறையினர் இக்கலைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். இக் கலைகளைக் கற்றுக் கொண்டால் எமது பண்பாட்டை மட்டுமல்லாது சமூக நல்லொழுக் கங்களை யும் கொண்டுவர முடியும். கிராமியக் கலைஞர்களை ஊக்குவித்துக் கிராமியக்கலைகளைப் புத்துயிர் பெறச் செய்து அதனைச் சமூகத்திற்கு கையளிப்பதனூடாக எமது பண்பாட் டையும், கலையையும் பாதுகாத்துக் கொள்ளலாம். அந்த வகையில் இக்கலையைப் பாதுகாத்துக் கையளிப்பது அனைவருக்குமுரிய கட்டாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறவுச் சொற்கள் :- பண்பாடு, கிராமியக்கலைகள், நடனம், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம்.

**பண்பாடு**

பண்பாடு என்பது ஓரினத்தின் வாழ்க்கை முறை, மொழி, கலைகள், வரலாறு, வாழ்விடம், பொருண்மியம் போன்றவற்றைச் சுட்டி நிற்கின்றது. பண்பாடு என்ற சொல்லின் விளக்கம் பண்படுவது என்பதாகும். பண்பாட்டில் சீர்படுதல், திருத்துதல் என்பன உள்ளடங்குகின்றன. "பண்பட்ட செந்தமிழ்" (தனிப்பாடல்) என்பது பண்பட்ட உள்ளத்தைக் குறிக்கின்றது.பண்படுதல் என்பதற்குப் பல அர்த்தங்கள் காணப்படினும், நிலமக்கள் பற்றியே இங்கு அதிகம் பேசப்படுகின்றது. ஆங்கிலத்தில் Culture எனும் சொல் நிலப்பண் பாட்டையும், உளப்பண்பாட்டையும் குறித்து நிற்கின்றது. பண்பு என்பது பண்படுத் தப்பட்ட நல்ல தன்மையைக் குறித்து நிற்கின்றது. பண்பாட்டில் மக்களை விஞ்சியவை பறவைகளும், விலங்குகளுமே என்பதைத் தொல்காப்பியம் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.



மக்கள் தாமே ஆறு அறிவு உயிரே
பிறவும் உளவே அகக்கிளைப் பிறப்பே *2

மேலும் பண்பாடு என்பதற்கு தனி நாயக அடிகள் கூறும் விளக்கம் மனம் கொள்ளத்தக்கது. "பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கை, கோட்பாடு, நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயச் சடங்குகள், வழிபாட்டுமுறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணைமரபுகள், இலக்கிய மரபுகள், அரசியல் அமைப்புக்கள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள் போன்றவற்றைக் குறிக்கும்" *2 என்கிறார்.

பண்பாடு காலத்திற்கேற்பவும், வாழும் புறச்சூழல்களிற்கேற்பவும் மாற்றமடையக் கூடியது. புராதன மனிதன் தனது வாழ்க்கையை இயற்கையோடு அமைத்துக் கொண்டான். இயற்கைக் காரணிகளுக்கேற்ப தனது உள, உடல்சார் அம்சங்களைப் பேணிக்கொண்டதன் பயன் அவனின் செயற்பாடுகளிலிருந்து இசை, நடனம் என்பன தோற்றம் பெற்றன. மனிதன் தனது மகிழ்ச்சியை அல்லது துன்பத்தை வெளிப்படுத்த விலங்குகள் போலக் கத்தி அரற்றவும், கை, கால்களை பலவாறு தட்டி, பல்வேறு ஒலிகளை எழுப்ப எத்தனித்தான். இத்தகைய ஒலிகள் சிறிது சிறிதாக இசை தோன்ற வழிசமைத்தது. மனிதனின் பல்வேறு செயல் வடிவங்கள் (குதித்தல், பாய்தல், தாவுதல், கைகளில் பலவித அசைவுகள்) நடனம் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தது எனலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராமிய கலைகள்**

மனிதன் மந்தைப் பழக்கத்தினையுடைய விலங்கினமாகக் காணப்பட்ட போதும் அவனிடம் பல சமூகப் பண்பாடுகள் அமைந்திருந்தன. ஒருவருடன் ஒருவர் தொடர்பாடல் களை ஏற்படுத்திக் கொள்ள முற்பட்டபோது கையசைத்தும், மெய்யசைத்தும் காட்டிய குறியீடுகள் ஆடலாகப் பரிணமித்தது. வேட்டு வாழ்க்கையில் செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்து பார்த்தபோது கூத்து அல்லது ஆட்டம் தோற்றம் பெற்றது.

இவ்வாறு உள்ளார்ந்த அனுபவங்களையும், உணர்வுகளையும் அசைவுகள் மூலம் வெளிப்படுத்திய மனிதன் காலப்போக்கில் பிறரை மகிழ்விக்கும் கருவியாக இதனைப் பயன்படுத்திக் கொண்டான். கிராமங்கள் தோன்றி வளர்நிலை கண்டபோது ஆடல், பாடல்கள் ஓரளவு சீர்படுத்தப்பட்டுக் கிராமியக் கலைகளாகப் பரிணமித்தன. மனிதனின் உள்ளக் கருத்திற்கு அழகையும், இன்பத்தையும் தரும் ஆற்றல் கிராமியக் கலைகளுக்குரியது. இந்தக்கலைகள் இயற்கையோடு ஒட்டி பல கருத்துக்களை எமக்கு உணர்த்துகின்றன.

கிராமியக் கலைகளில் கிராமிய நடனங்கள் மக்கள் வாழ்வில் முக்கியம் பெறுகின்றன. அன்றுமுதல் இன்றுவரை கிராமங்களில் வாழும் பாமர மக்களால் ஆடப்பட்டுவரும் நடனங் களாகக் கிராமிய நடனங்கள் விளங்குகின்றன. இவை கிராம மக்களின் பண்பாட்டைச் சித் ரிக்கும் வகையில் அவர்களின் நடையுடை பாவனைகளையும், தொழில் முறைகளையும், சூழ்நிலைகளையும் பிரதிபலிக்குமாறு அமைந்திருக்கின்றன. கிராமிய மக்களின் வாழ்க்கை யில் ஆடல் இடம்பெறாத சந்தர்ப்பங்கள் இல்லை என்று சொல்லுமளவிற்கு கிராமிய நடனங்கள் மக்கள் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து நிகழ்வுகளிலும் இந்த நடனங்கள் இடம்பெறத் தவறவில்லை . பிறப்பு, பூப்புனித நீராட்டுவிழா, திருமணம், சீமந்தம் போன்ற நிகழ்வுகளிலும், பேயோட்டல் நேர்த்திக்கடன், மழைவர வேண்டுதல், குறி சொல்லுதல், அறுவடை, வேட்டையாடல், வசந்த காலங்களின் வருகை, மீன்பிடித்தல், கொழுந்தெடுத்தல் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் கிராமிய நடனங்கள் பங்காற்றி வருவதைக் காணலாம். மிகவும் எளிமையாகப் பாமர மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் இந்தக் கிராமிய நடனங்கள் ஆடப்படுகின்றன. கிராமியக்



கலைகள் யாழ்ப்பாணக் கிராமிய மக்க ளிடம் ஆழமாக வேரூன்றியமையை 1939ஆம் ஆண்டு வெளிவந்த ஈழ கேசரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "கண்டறியாத கலைகள்" என்ற பகுதியில் இடம்பெற்ற செய்தி உணர்த்தி நிற்கின்றது.

"மழைவெள்ளம் வற்றிய காலத்தில் வரண்டு போன குளங்களின் சேற்றிடை யில் தாமரையானது அடங்கி ஒடுங்கிக் கிடப்பதுபோல நமது யாழ்ப்பாணத்திலும் இத்தகைய கலாவிநோதங்களும், கலை உணர்ச்சியாளர்களும் மறைந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கின்றனரேயன்றிக் கலை செத்துப்போய் விடவில்லை. இந்த உண்மையை அறிய வேண்டுமானால் ஒரு தரம் கிராமங்களைச் சுற்றிப் பாருங்கள். நாகரிகம் பிடித்த பகிரங்க மேடையில்தான் கலைகள் இருக்கின்றன என்னும் கொள்கையை விட்டு நாட்டுப் புறங்களில் போய்ச் சாதாரண மக்களிடம் தங்கிநிற்கும் கலைகளை நோக்குங்கள்" என வரையப்பட்ட கட்டுரை கிராமியக்கலை யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டுடன் எவ்வாறு இணைந்திருந்தது என்பதை எமக்கு ணர்த்துகின்றது. இன்னாரால் ஆக்கப்பட்டது என வரையறுக்க முடியாதவை கிராமியக் கலைகள். இதனைப் பேராசிரியர் பி. சாம்ப மூர்த்தி அழகாகப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார். "கிராமிய நடனங்கள் புராதன வழக்காக அல்லது இன்னாரால் ஆக்கப்பட்டவை என உணரமுடியாத வகையில் நமக்கு வந்துள்ளன. சாஸ்திரிய நடனம் போலல்லாது அவற்றின் வளர்ச்சிக்கு இலக்கணம் வகுக்க சங்கீத இலட்சணகாரர்கள் ஒருவரும் இல்லை" எனக் குறிப்பிட்டிருக்கும் கருத்து மக்கள் தமது பண்பாட்டுக்கேற்ற வகையில் இந்தக் கிராமிய நடனங்களை ஆடியிருக்கின்றனர் என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது.

நாள் முழுவதும் உடலை வருத்தி உழைத்துவரும் கிராம மக்களின் களைப் பைப் போக்கவும், உழைக்கும்போது உடல் களைப்புத் தெரியாதிருக்கவும், உற்சாகத்தை அளிப்பதற்காக கிராமிய நடனங்கள் ஆடப் பட்டன. மேலும் பொழுது போக்கிற்காகவும், கிராமத்து மக்களின் மூடநம்பிக்கைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பக்திக்காகவும் இந்த நடனங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இன்று கிராமியக் கலைகள் கிராமிய மக்களால் மாத்திரமன்றி அனைத்து மனித சமூகத்தினரும் விரும்பி ரசிக்கின்ற கவர்ச்சி மிக்க கலையாகப் பரிணமித்துள்ளது. உலக நாடுகள் அனைத்திலும் கிராமிய நடனங் களை விரும்பி ரசிக்கின்ற நிலைமை ஏற்பட் டுள்ளது. புராதன காலத்தில் எழுத்துருவில் எழுதி வைக்காமையால் இதன்மேன்மையை யாரும் அறிந்திருக்கவில்லை. எனினும் நாகரிக வளர்ச்சி இக் கலைவடிவங்களை அடையாளப்படுத்தியிருக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், கூத்து, அரிவு வெட்டும் நடனம், சிலம்பாட்டம், குதிரையாட்டம், தெருக்கூத்து, மீனவநடனம், குறத்தி நடனம், சுளகு நடனம், சிரட்டைக்கும்மி, ஒயிலாட்டம், வாள் நடனம், பொம்மலாட்டம் போன்றன இடம்பெற்று வருகின்றன. இதனைவிடக் காத்தவராயன் கூத்து, பப்பவராயன் கூத்து, வசந்தன் கூத்து என்பவையும் யாழ்ப்பாணக் கிராமிய நடனங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. கிராமிய பொருளாதார கோலங்கள், கிராமியக் கட்டமைப்பு, சமூக உறவு முறைகள், சடங்குகள், தொன்மங்கள், குலதெய்வ வழிபாடுகளோடு நெருங்கிய தொடர்புடைய கிராமிய நடனங்கள் பக்தியோடும், கலையோடும் நேர்த்திக்காகவும் ஆடப்பட்டு வந்தன. மேலும் பாடசாலை நிகழ்வுகள், ஆலய விழாக்களிலும் இதன் புலமை வெளிப்பட ஆடப்பட்டு வருகின்றன.

பாமரக்கலையின் சிறப்புப்பற்றி டாக்டர் பத்மா சுப்பிரமணியம் பின்வருமாறு குறிப்பிடு கின்றார். "நடனம் ஒரு சமுதாய கூட்டு அனுபவமாகவே திகழ்கின்றது. இங்கு அநேகமாக ஆடுபவர் என்றும் பார்ப்பவர் என்றும் பாகுபாடு இருப்பதில்லை. இது பாமரக்கலையின் சிறப்பம்சமாகும்" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் இவர் கிராம மக்களின் கைகளில் கூத்துப் போன்ற கலைவடிவங்கள் இருந்தமையால்தான் அவை இன்றுவரை பாதுகாக்கப்பட்டி ருக்கின்றன என்பதை, அண்மையில் நடைபெற்ற நடனத்துறையின் சிரேஷ்ட விரிவுரை யாளர் திருமதி. அருட்செல்வி கிருபைராஜா அவர்களின் கலாநிதிப்பட்டத் திற்கான வாய் மொழிப் பரீட்சையின்போது தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் கிராமிய நடனங்கள் கோவிற்கலைகளாகப் பண்பாட்டைப் பிரதி பலிக்கும் வகையில் வளர்ச்சி கண்டுள்ளன. பக்தியின் பெருமையைப் புனிதமாய்க் காட்டுகின்ற இக்கலைகள் ஆலயங்களினூடாகவே வளர்ச்சியடைந்ததென்பதற்கு மாற்றுக் கருத்தில்லை. ஆலய முன்றல்களிலும், சுவாமி வீதி உலாவரும் சந்தர்ப்பங்களிலும், சிவராத்திரி, ஏகாதசி, நவராத்திரி விழாக்களில் இன்றியமையாததும், தவிர்க்க முடியாததுமாக இக் கலைகள் இடம்பெற்று வருகின்றன. கோவில் சார்ந்து வளர்ச்சியடைந்த இக்கலைகள் காலப்போக்கில் பாடசாலைகளினூடாக வளர்ச்சியடையத் துவங்கின. கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் பாடசாலையில் இக் கலைகளைப் போதிக்கும் வாய்ப்பினை அமைத்துக் கொடுத்தது. பாடசாலைப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகளில் இக் கலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட 1935, 1936ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் பாடசாலையில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. கிராமிய நடனங்களில் காவடி, கரகம், வாள் நடனம், அரிவுவெட்டும் நடனம், கும்மி போன்றன தேசியரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. நெடுந்தீவிலுள்ள அரசினர் கனிஷ்ட பாடசாலை மாணவர்களின் அரிவு வெட்டும் நடனத்தின் வெற்றி பற்றி 1955ஆம் ஆண்டு ஈழகேசரிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. *[7]மேலும் அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வாள் நடனம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று அனைவரினதும் பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

கிராமிய நடனங்களின் வளர்ச்சிப்படியின் முதற்கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறையில் ஒரு பாட அலகாக 4ஆம் வருட மாணவர்கள் இக்கலையைக் கற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு வளர்ச்சியடைந்து வருகின்றன. கிராமியக் கலைக ளான கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் போன்றவற்றின் வளர்ச்சியை நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரகம்**

புராதன மக்களின் தனித்துவத்தையும், பண்பாட்டையும் நிலைநாட்டும் நடனமாக கரகம், நடனம் திகழ்கின்றது. இந்த ஆடலின் இசையும் நடனமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. கிராமமக்களின் நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவை இக் கலையின் ஊற்றுக்களாகவும், உயிர் மூச்சாகவும் மட்டுமன்றி உளமேம்பாட்டிற்கு உரியதாகவும் விளங்குகின்றன? யாழ்ப்பாணக் கிராமங்களில் இந்தக் கலையின் உயிரோட்டத்தைக் காண முடியும்.

கரக நடனம் அம்மன் ஆலயங்களில் காணிக்கையாக நிகழ்த்தப்படுகின்றது. இக்கலை பயபக்தியுடன் அம்மனைத் தரிசித்து நிகழ்த்தப்படுவதால் தூய்மையும், பக்தியும் நிரம்பிய கலையாக மதிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் நெல்லண்டைப் பத்திரகாளி ஆலயம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம், இணுவில் சிவகாமியம்மன் ஆலயம், சங்கரத்தைப் பத்திரகாளியம்மன் ஆலயம் போன்ற ஆலயங் களில் கரக நடனம் ஆடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. தெய்வ வழிபாட்டுடன் கரகம் இணைந்திருப்பதால் இது "சக்திக்கரகம்" எனவும் அழைக்கப்படுகின்றது. ஆண்கள் தனியாக வும், பெண்கள் தனியாகவும், இருவரும் இணைந்து குழுவாகவும் ஆடப்படும். இந்தக் கரகாட் டத்தைக் "கும்பாட்டம்" என அழைக்கும் மரபும் காணப்படுகின்றது. குழுவாக ஆடும்போது மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற எண்ணிக்கையில் கலைஞர் பங்கு பெறுவர். அம்மனாகத் தம்மை அலங்கரித்துக்கொண்டு வேப்பிலையால் அலங் கரிக்கப்பட்ட நிறை கும்பத்தை தலையில் வைத்து இந்த ஆடல் இடம்பெறுகிறது. கிராம மக்களின் பண் பாட்டை பண்புகளாகக் கொண்டு நிகழ்த்தப்படும் இந்த நடனத்தில் ஆடலும், ஆக்கமும் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றன.



கரகநடனத்தின் தோற்றத்தை மனதில் நினைத்த மாத்திரத்திலேயே அதன் கிராமியச்சூழல் மனதில் விரி கின்றது. கிராமத் தேவதையான மாரியம் மனுக்கு கோபம் ஏற்பட்டால் ஊரிலே நோய்நொடிகள் பெருகிவிடும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்ட கிராம மக்கள் அம்மையின் சினம் தணிக்க இந்தக் கரகம் ஆடும் மரபு இன்றும் காணப்படுகின்றது. சில கிராமங் களில் அம்மை, பொக்கிளிப்பான் போன்ற நோய்கள் ஏற்பட்டால் நோய்குள்ளான வர்களின் வீடுகளிற்குச் சென்று கரகம் ஆடும் வழக்கமும் நடைமுறையிலுள் ளது. இந்தக் கரகத்தை ஆடுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதமிருந்து பெண் தெய்வம்போல உடை உடுத்து கும்பத்தை தலையில் வைத்து அம்மனின் அருளை வேண்டி ஆடுவர். இந்தக் கரகம் "அம்மன் கரகம்" என அழைக்கப் படுகின்றது. கரகப் பாடல்கள் அம்மனைப் பற்றியே அதிகமாகப் பாடப்படுகின்றது. கரக நடனம் ஆடலும் பாடலும் கருத்தும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன என்பதைப் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

"கரகம் கரகம் அம்மா முத்துமாரி - நான்
காததூரம் ஆடிவாறன் முத்துமாரி
கரகம் கரகம் அம்மா முத்துமாரி - நான்
கல்லும் முள்ளும் துள்ளிவாறன் முத்துமாரி
கரகம் கரகம் அம்மா முத்துமாரி - நீ
கண்திறந்து படியளப்பாய் முத்துமாரி" *[10]

கரகத்திற்குள் பால், மஞ்சள், நீர், அரிசி போன்றன நிரப்பப்பட்டிருக்கும். குடத்தின் வாய்ப்பகுதியில் தேங்காய் ஒன்று வைத்து, அதனைச் சுற்றிப் பூவால் அல்லது வேப்பிலையால் அலங்கரிப்பர். உச்சிப்பகுதியில் எலுமிச்சம்பழம் வைக்கப்பட்டிருக்கும். தற்காலத்தில் அழகுக்காக கிளி போன்ற வடிவுக்குரிய பொருட்களையும் வைத்து ஆடிவருகின்றனர்.

கரகக் குடத்தை நிரப்பும் நீர் கடல், புனித ஆறுகளிலிருந்து எடுக்கப்படும். கரகம் ஆடும் போது உடலில் சிந்தும் ஒவ்வொரு துளியும் தலைமுறை தலைமுறையாக புனிய நீராடிய பயனைக் கொடுக்கும் என்பது கிராம மக்களின் ஐதீகம். நீர் சிந்தும்போது "துன்பங்கள் நீர் வழியாகவே வந்து நீர் வழியாகவே போய்விடும் என்பது சடங்குகளின் வழியாக முன்னெடுக் கப்பட்ட நம்பிக்கையாக இருந்தது. *[11] கரகம் ஆடும் கலைஞர்கள் நீராடி, விபூதிக் குறியிட்டு, சந்தண குங்குமத்திலகமிட்டு மிகக் கவனமாகக் கரகத்தைத் தலையில் வைத்து ஆடத் தொடங்குவர். ஆடும்போது கரகம் விலகி மண்ணில் விழுந்தால் அந்த கிராமத்திற்கு அல்லது தேவஸ்தானத்திற்கு அல்லது கரகம் ஆடும் கலைஞருக்கு துன்பம் ஏற்படப் போவதற்கான அறிகுறிதான் இது என்பது கிராம மக்களின் நம்பிக்கையாகும்.

கரக நடனத்தில் உடுக்கு பிரதான வாத்தியமாகக் கருதப்படுகின்றது. எனினும் தவில், நாதஸ்வர இசைக்கும், பறைமேள இசைக்கும் ஆடும் மரபுகள் காணப்படுகின்றன. பக்தியை வெளிப்படுத்தும் வகையில் ஆடப்பட்ட கரகம் அரங்க நிகழ்ச்சியாகவும், ஆடப்பட்டு வரு கின்றது. அரங்கக் கரகாட்டத்தை நிகழ்த்திய கலைஞர்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்க ளிலும் வசித்திருக்கிறார்கள். இந்தக் கலைஞர்கள் கரகாட்டத்தின்போது பல சாகசங்களை நிகழ்த்திப் பார்வையாளர்களைப் பிரமிக்கவைத்து மகிழ்ச்சிப்படுத்துகின்றனர். உரல், தாம்பாளத்தில் நின்று ஆடுதல், பொய்கால்களை மிக உயரமாகக் கட்டி ஆடுதல், கைகளில் சில பொருட்களைத் தாங்கிப்பிடித்து அவற்றைச் சுழற்றி ஆடுதல், கத்திநுனி , வாள்களில் நின்று ஆடுதல், நெற்றியிலே எலுமிச்சம்பழத்தை வைத்து ஆடிடுதல் போன்ற கடின கட்டங்கள் மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் ஆடப்பட்டு வருகின்றன.

கிராமியக் கலையான கரகநடனத்தைச் சிறப்பாக வளர்த்தவர்களில் அளவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை குறிப்பிடத்தக்கவர். 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் வாழ்ந்த இவர் தமது மூதாதையரின் வழியே முத்துமாரியம்மனைப் பக்தியோடு பாடித்துதித்து கரகாட்டத்தை நிகழ்த்தி வந்திருக்கின்றார். ஐயாத்துரையின் கரகாட்டம் பற்றி நீர்வையூர் திரு. வைத்தி லிங்கம் குறிப்பிட்ட விடயம் அவரின் திறமையை எமக்குணர்த்துகின்றது. "ஐயாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கரகநடனத்தில் பல நுட்பமான விடயங்கள் உட்புகுந்திருக்கும் சாதனை நிரம்பிய கரகாட்டத்தை நிகழ்த்தி மக்களின் கரகோஷத்தையும், பாராட்டையும் பெற்றுக் கொண்டவர். பல தாளக்கட்டுக்களோடு ஜதிக்கேற்ப நான்கு ஐந்து கத்திகளின் மேல் நின்று ஆடும் இவர் கைகளிலே வாளேந்தி மிக வேகமாக ஆடும்போது பயமாகவும், பிரமிப்பாகவும், மெய்சிலிர்க்க வைப்பதாகவும் இருக்கும். *[12] இவரைவிட பெருமாள் கோயிலடி சண்முகம் மற்றும் வையாபுரி போன்றோரும் இக்காலப்பகுதியில் சிறந்த கரகாட்டக் கலைஞர்களாகத் திகழ்ந்திருக்கின் றனர். இவர்கள் தமது கலையைப் பிறருக்குக் கையளித்து பல கரகாட்டக் கலைஞர்களை உருவாக்கியிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கரக நடனத்தை ஆடும்போது தற்பெருமை, அகங்காரம், பொறாமை முதலியன ஒடுங்கி விடுவதாக ஆடுவோர் கூறுகின்றனர். கரக நடனத்தில் சமநிலை பேணல் இன்றியமையாத தாகும். மிகையான உடலாற்றல் பண்புகள் நிறைந்த இந்த ஆடலால் ஆற்றலை அதிகரிக்க முடியும். கரகம் அசைந்து செல்லும்போது ஆடுபவரின் காலசைவை "கரகநடை"அல்லது "குடைநடை"என்று சொல்லும் வழக்குண்டு, அரைமண்டி நிலைகளில் அசைந்து செல்வதை மண்டி என்று சொல்லாது "தண்டு", "மானம்" என்று சொல்வதும் மரபாகவுள்ளது. மேலும் "ரஸம்", "சுவை" என அழைக்கப்படும் உணர்வுகளை "கட்டு" அழைக்கும் முறை யாழ்ப்பாணக் கரக நடனத்தில் உண்டு. கரக நடனத்தின் ஒரு வகையாக "ஆட்டக் கரகம்" காணப்படுகின்றது. இது வருவாய்க்காக நிகழ்த்தப்படுவதாகக் கூறுகின்றனர். இதனை எங்கு வேண்டுமானாலும் ஆடலாம். இதில் பக்தியைக் காட்டிலும் வியப்பூட்டும் செயல்களே அதிக மாகக் காணப்படுகின்றன. கரகநடனத்தின் வளர்ச்சிப்போக்கை எடுத்துக்காட்டும் வகையில் "எடுப்பாட்டம்" அமைந்திருக்கின்றது. அதாவது தலைக்கு மேல் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு குத்துக்காலை வைத்து, அதன்மேல் கரகத்தை வைத்து, சமநிலையைக் கவனமாகப் பேணியவண்ணம் ஆடுவது எடுப்பாட்டம். இக்கலை வடிவம் அளவெட்டிக் கிராமத்தில் குறிப்பிட்ட சில காலங்களிற்கு முன் ஆடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சடங்குகளில் வழியாகப் பக்தியோடு ஆடப்பட்டு வந்த கரக நடனம் தற்காலத்தில் சமூகத்தில் ஆர்வம் குறைந்ததன் காரணமாக மறைந்து போகும் நிலையிலேயே காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திற்கு கலையின்பத்தினையும், பக்தியையும் அளித்த இந்தக் கரகாட்டத்தைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. காவடி நடனத்தைப்போல கரகநடனத்தில் மக்களுக்கு ஆர்வம் குறைந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

**காவடி**

தமிழ் மக்களின் கிராமிய நடனங்களில் இன்றும் பெருவழக்காக ஆடப்பட்டு வருவது காவடி நடனமாகும். காவடி நடனத்தின் தோற்றம் பூர்விகமான சுமைதூக்கும் செயற்பாட் டுடன் தொடர்புடையது. தமிழ் மக்கள் அன்றிலிருந்து இன்றுவரை குறிஞ்சி நிலத்தெய்வமான முருகனை வணங்கி வருகின்றமையை சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றன. முருகனுக்குரிய வணக்கமுறையில் காவடி நடனம் சிறப்புப் பெறுகின்றது. காவடி நடனத்தின் தோற்றம்பற்றி அறிந்த அறிஞர்கள் "காவுதடி" என்பதிலிருந்தே "காவடி" என்ற சொல் தோன்றியதாகக் கூறுகின்றனர். காவுதடி இறைவனுக்கு பொருட்களைக் கொடுப்பதற்காக கொண்டு செல்லப் பயன்பட்ட காவுதடியையே குறிக்கிறது. முருகன் கோயில்களை மையப்படுத்தி முருகனை நினைத்தே பெரும்பாலும் இந்த காவடி நடனம் ஆடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"காவடிக் கந்தன்" என அழைக்கப்படும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் காவடி நடனம் சிறப்படைந்திருந்தது. யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற முருகன் கோவில்களினூடாக பக்திசிரத்தையோடு, பரவசமூட்டும் கலையாக இக்கலை வளர்த்தெடுக்கப்பட்டது. ஆட்டக்காவடி, தாளக்காவடி போன்றன யாழ்ப்பாணக் கலாசார மேம்பாட்டிற்கு மாத்திரமன்றி சமூக ஒற்றுமை, உயர்வு, தாழ்வற்ற நோக்கு என்பன பிரகாசிக்கத் துணைநின்றன. "கிராமியக் கலைகளைக் கற்பித்த அண்ணாவிமார்கள் உயர்சாதி, தாழ்சாதியில் இருந்தனர். உயர்சாதி இளைஞர்களுக்கு உயர்சாதி அண்ணாவிமார் தாளக்காவடியைப் பழக்கும் போது, தாழ்சாதி அண்ணாவிமார் அந்த இடத்திற்கு வருவதும், நயப்பதும், தமக்குக் கைவந்த பல நுட்பங்களை, புதிய தாளக்கட்டுக்களை ஆடிக்காட்டி உதவுவதும் உறவு நிலைக்கு உதவின"*[13] எனத் தாளக் காவடிக்கலைஞர் ஏ. ரி. பொன்னுத்துரை கூறியுள்ளார்.

தாளக்காவடி பற்றி வீரகேசரியில் வெளிவந்த செய்தி 'கிராமங்களிடையே அன்று வேற்றுமைகள் நிலவின. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற போக்கு ஆழ வேரோடவில்லை.




ஆனால் தாளக்காவடியாம், நாட்டார் கலைநிகழ்வாம் என்றதும் புளகிப்புடன் கூடி வரவேற்கக் கிராம மக்கள் கிளர்ந்தெழுந்தனர். எந்தவூர் தாளக்காவடி என்றாலும் அதனை ஊக்க , உந்த, இரசிக்க வித்தியாசப் போக்கைப் புறக்கணித்துக் கிராமங்கள் முன்வந்தன. பரந்த நோக்குச் சுடர்விட, மக்கள் கண்ணோட்டம் விசாலமடையத் தாளக் காவடிக்கலை காத்திரமான அளவு உதவியதெனலாம்.*[14] இச்செய்தி சாதிப்பாகுபாடின்றி மக்கள் இக்கலையை ரசிக்கவும், கற்கவும் முன்வந்திருக்கின்றனர் என்பதைக் காட்டி நிற்கின்றது. இந்த விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியக் கலைகளைப் பெரும்பாலும் கிராமத்தில் வாழும் நலிவடைந்த சாதி மக்களிடையே கையாளப்பட்டு வந்திருக்கின்றது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பிட்ட ஒரு காலத்தில் நலிவடைந்த சாதியினரால் இக்கலை பாதுகாக்கப்பட்டமையால்தான் இக்கலையை இன்றும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. இக்கருத்தைப் பின்வரும் கூற்று உறுதி செய்கின்றது. "இப்போது யாழ்ப்பாணத்தில் காவடியாட்டம் ஒரு சில வகுப்பினரிடம்தான் விட்டுவைக்கப்பட்டது, மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். எனினும் அந்த மக்கள் அதை அழியவிடாது காப் பாற்றி வைத்ததற்காக நாம் என்றும் கடமைப்பட்டிருக்க வேண்டும்" என்ற பத்திரிகைச் செய்தி இதனை உறுதிப்படுத்துகின்றது.

காவடிகள் பால்காவடி, பன்னீர்க்காவடி, தூக்குக் காவடி, புஸ்பக்காவடி என எப்பொருட்களை வைத்து ஆடுகின்றனரோ அப் பெயர்களைச் சூடிக் கொள்கின்றனர். காவடி ஆட்டம் பல்வேறு வகைகளில் இடம்பெறுகின்றன. பக்தியோடு நேர்த்திக்காக ஆடப்படும் காவடிகள் எவ்வித பயிற்சியுமின்றி ஆடுபவரின் கற்பனைக்கேற்ப ஆடப்படுகின்றன. சிறிய வேல்களை கை, கால், முதுகு, நெஞ்சுப் பகுதிகளிலும், அலகுகளிலும் குத்தி முதுகின் பின்பக்கம் சிறிய கொலுக்கிகள் ஏற்றி அவற்றை ஒன்றாகச் சேர்த்துப் பிடித்து ஆடும்போது காவடி ஆடுபவரை விட கொலுக்கி பிடிப்பவர் சிறப்பாக ஆடும் சந்தர்ப்பங்களும் உண்டு. நட்டுவமேளம், நாதஸ்வரம், ஹார்மோனிய தாளம், உடுக்கு போன்ற வாத்திய இசையோடு இக்காவடி இடம் பெறும். தாளக்காவடி ஆடுபவர்கள் இயல்பாக ஆடமுடியாது. அதற்கெனத் தனியாக அண்ணாவிமாரிடம் நன்கு பயிற்சி பெற்று கால்களில் சலங்கை அணிந்து ஆடுதல் வேண்டும். தாளத்திற்கும், மிருதங்க இசைக்கும் ஏற்றவாறு ஆடப்படும். இக்காவடி பாவங்களற்ற தாளலயத்துடன் ஆடப்படுவதால் இதில் பரதநாட்டியக்காரர் குறிப்பிடும் நிருத்த நிழலைக் காணமுடியும்" *[16] என ஏ.ரி. பொன்னுத்துரை குறிப்பிடுகின்றார்.

இணுவில் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக ஆடப்பட்டு வரும் மரக்காவடி குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு மஞ்சம் செய்தபோது இந்தக் காவடி அந்தச் சிற்பக் கலைஞர்களால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய இக்காவடி இன்றும் அதே அழகுடன் நாவலா சிரியர் கே. எஸ். ஆனந்தனின் வீட்டுப்பூசை அறையில் வைக்கப்பட்டிருக்கின்றது. மூன்று பக்கமும் மரவேலைப்பாடுகள் கொண்ட இதன் அகல நீளங்கள் அதிகமாக உள்ளது. முன் பக்கத்திலுள்ள திருவாசியில் முருகனின் இலச்சினை பொறிக்கப்பட்டு இருப்பதால் அதனைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். மிகுந்த கனதியுடைய இக்காவடி புனிதமாகப் பேணப்பட்டு அண்மைக் காலத்திலும் திரு. ஆர். சிவானந்தம் என்பவரால் ஆடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். விரதமிருந்து பக்தியோடு கோயிலுக்குச் செல்லும்போது காவடியின் கனதி தெரிவதில்லை. மீண்டும் வீட்டிற்குச் செல்லும்போது அதன் கனதியை நன்குணரலாம் என இவர் தெரிவித்திருப்பது காவடியின் பக்குவத்தை எடுத்தக் காட்டுகின்றது.

காவடிகள் மயில் இறகு கொண்டும், பூக்கள் கொண்டும் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். காலம் மாறக் காவடியில் பல அழகுக் கோலங்கள் சேர்ந்து கொண்டன. பலபுதிய காவடிகளும் உருவாகின. செண்டுக்காவடி, கூத்துக்காவடி, கற்பகக் காவடி, செடில் காவடி, பூசைக் காவடி, மணிக் காவடி, பழக் காவடி, துலாக் காவடி, நந்திக் காவடி, தீர்த்தக் காவடி, மஞ்சள் காவடி, பிரதிஷ்டைக் காவடி, தூக்குக் காவடி போன்றன யாழ்ப்பாண மரபிலே ஆடப்பட்டு, தமிழர்தம் பண்பாட்டைப் பறைசாற்றி நின்றன. காவடியாட்டத்தில் பல கலைஞர்கள், ஈடுபட்டிருந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், குரும்பசிட்டி சின்னத்துரை, முருகன், தம்பன், கிருஷ்ணன், நெல்லியடி கந்தர் கதிரேசு, நற்குணம், அளவெட்டி இளையதம்பி, நவக்கிரி நாகலிங்கம் போன்றோரே காவடி நடனத்தைப் பயிற்றுவிக்கும் அண்ணாவிமார்களாகத் திகழ்ந்தனர். பல்வேறு பெயர்களுடன் கூடிய வித்தியாசமான ஆட்டங்களை இவர்கள் கற்றுக் கொடுத்தனர். மேலும் தென்மராட்சி, வடமராட்சி, காரைநகர் அண்ணாவிமாரும் இக்கலை வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பினை ஆற்றியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்து மரபுவழி கிராமிய நடனங்களில் காவடியாட்டம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இன்று பாடசாலை நிகழ்வுகள், கோயில் திருவிழாக்களிலும், இதர நிகழ்வுகளிலும் அரங்க நிகழ்வாகவும் இது இடம்பெற்று வருகின்றது. காவடி நடனத்தின் அடிப்படை அசைவுகள் அடி, அடிகள், அடியளவு போன்ற எண்ணக்கருக்களால் அழைக்கப்படுகின்றன. நேரடி, பக்க அடி, குதித்தடி, சறுக்கல் அடி, கிறுங்கள் நிலையடி, சாய்வு அடி, பிறை அடி, ஈரடி, நான்கடி, எட்டடி, மண்டியடி என்ற அசைவுகள் காவடிநடனத்தில் காணப்படுகின்றன. இந்த நடனத்தில் பல்வேறு சொற்கோவைகளும்,சொற்கட்டுக்களும் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக தெய்யா தெய், தா தெய் தெய்தா, தத் தெய் தாதா, தத்தெய்தாம், கிடதகதரிகிட தொம் போன்றவற்றைக் காட்டலாம்.

இந்தக் காவடி நடனத்தைச் சிறார்கள், நடுத்தர வயதினர், முதியோர் என்ற முத் திறத்தாரும் ஆடும் மரபு யாழ்ப்பாணத்தில் காணப் பட்டது. சிறுவர் ஆடலில் கெந்தி யாடும் ஆட்டங்கள் மிகையாகக் காணப் பட்டன. நடுத்தர வயதினரின் ஆடலில் சுழன்றாடலும், முதியோர் ஆடலில் மெல்லசைவு அபிநயங்களும் மிகையாக இடம்பெற்றன.



"கந்தன் அருள் சுரக்கக் கெந்தியாடு
காந்தன் அருள் சுரக்கக் கெந்தியாடு
விந்தன் அருள் சுரக்கக் கெந்தியாடு
வேலன் அருள் சுரக்கக் கெந்தியாடு"

என்ற உடுக்படிப்பாடல் சிறார்களின் கெந்தியாடலைப் புலப்படுத்துகின்றது.

யாழ்ப்பாண மரபில் ஒவ்வோர் பண்பாட்டு நிகழ்ச்சிக்குரிய உணவு அந்தந்த நிகழ்ச்சிக் கேற்றவாறு அழைக்கப்படும். பூசை, அவியல், குளிர்த்தி, வழுந்து, பாழையம், மடை, சுளகுமடை, வெளிமடை போன்ற பல பெயர்கள் வழக்கிலிருந்தன. இன்று அவற்றின் தனித்துவங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளமுடியாதிருப்பினும், மேற்குறித்த ஒவ்வோர் வகையான சடங்குநிலை உணவுடனும், காவடி நடனம் தொடர்பு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இணுவில் ஏரம்பு அண்ணாவியார் காவடியாட்டத்தில் சிறந்து விளங்கினர். தத் தித் தாகத ஜொம் என அவர் தாளம் தட்டும்போது அவரின் உடலசைவும், காலசைவும் தத் தித் தாகத ஜெம்தரி என்றே ஒலித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாறு பல திறமைமிக்க கலைஞர்களின் (அண்ணாவிமார்) முயற்சியினால் இந்தக் காவடி நடனம் சமூகத்தில் சிறப்பாக விரிவடைந்தது. யாழ்ப்பாணத்தில் பரந்துபட்ட வாழ்க்கை முறைகளோடும், பன்முகப்பட்ட பண்பாட்டுக் கோலங்களோடும் காவடி நடனம் இணைந்திருந்தமை புலப்படுகின்றது. தொடர்ந்து வரும் காலங்களிலும் இக்கலையை நலிவடையாது பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு கையளிப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**கும்மி**

பயிர்ச்செய்கைப் பண்பாட்டுடன் தொடர்புடைய கும்மி நடனம் விதைத்தல், நடுதல், களையெடுத்தல், பயிர்காத்தல், புள்விரட்டுதல், பயிர் வெட்டுதல், தூற்றுதல், புடைத்தல், அளத்தல், பொங்குதல் போன்ற செயற்பாடுகளோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. "கும்மி என்பது ஒரு குழு ஆட்டமாகும். பலர் ஒன்றாகச் சேர்ந்து தமது கைகளையும், அருகிலுள்ளவரோடு தமது கைகளைத் தட்டியும் ஆடும் ஆடலாகும். இந்தக்கும்மி வயல்வெளிகளில் ஆடப்பட்டமைக்கு செவிவழிச்சான்றுண்டு. அராலி, துணைவி, பறாளை, யாக்கரை, இமையாணன், அரியாலை, சரசாலை போன்ற இடங்களில் வயல்வெளிகளில் ஆடப்பட்ட தாகச் சொல்லப்படுகின்றது. இந்தக் கும்மி கருவளப்பெருக்கோடும், இனப்பெருக்கோடும் தொடர்புடையது என்பதைப் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

"கொத்து நிறைய முத்திருக்கு
கோயில் வயலும் வெளிச்சிருக்கு
சித்திரைக் கஞ்சிக்குப் படியளக்க
சிங்காரப் பெண்ணே கும்மியடி"

கும்மி கிராம மக்களால் காலங் காலமாக ஆலயங்களில் ஆடப்பட்டு வந்த ஆடல் வடிவமாகும். தற்காலத்தில் இவ்வாடல் வகைகள் ஆலயங்களில் ஆடப்படுவது அருகி வருகின்றது. எனினும் பாடசாலைகளில் இவ்வாடல் வகைகள் பிரபல்யம் அடைந்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கும்மி பாடசாலைகளில் பெற்றோர் தின விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் தமிழ்த்தினப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகள் என்பனவற்றில் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

கும்மி நடனமானது, குழுவாக ஆடப்படும். வண்ண வண்ணப் பாவாடைகள் அணிந்தவாறு கைகளைக் கொட்டி ஓசை எழுப்பிய வண்ணம் ஆடும் நடனம் இதுவாகும். இவ்வாடல் பெரும்பாலும் பாடசாலைச் சிறுமியரே ஆடுவார்கள். வயதுக்கேற்றவாறு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஆடும் முறைமையும் காணப்படுகின்றது. தற்கால நாட்டிய நாடகங்களிலும் இக் கும்மி நடனம் இடம்பெற்று வருகின்றது. 1930 ஆம் ஆண்டளவில் உரும்பிராய், நீர்வேலி, குரும்பசிட்டி, தெல்லிப்பளை, நெடுந்தீவு, புலோலி போன்ற இடங்களில் கும்மி பரவலாக இடம்பெற்றதனை பத்திரிகைகளின் வாயிலாக அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மி ஆடும் வேளையில் கைகளைப் பலவிதமாகக் கொட்டி ஆடுவார்கள். மார்புக்கு முன்புறமாகவும், தலைக்கு மேலாகவும், கைகளைப் பின்நோக்கித் திரும்பியும். கைகளினால் கொட்டி ஆடுவார்கள். இவை முறையே முன்கொட்டி ஆடுதல், தலைக்கொட்டி ஆடுதல். பின் கொட்டி ஆடுதல். என்று சொல்லப்படும். இதனைவிட தம்முன்னே ஆடுபவர்களுடன் கை களைக் கொட்டியும் பக்கவாட்டிலுள்ளவர்களுடன் கைகளைக் கொட்டியும் ஒருவருடன் ஒருவர் பிணைந்து கைகளைக் கொட்டியும் ஆடும் முறைமை உண்டு. இதனை இணைக்கொட்டி ஆடுதல், துணைக்கொட்டி ஆடுதல் பிணைக்கொட்டி ஆடுதல் என்றும் சொல்லப்படுகின்றது. காலப்போக்கில் கைகளைக் கொட்டுவதற்குப்பதிலாக வண்ணக்கோல்கள் கொட்டி ஆடும் மரபும் வளர்ச்சியடைந்தது.

யாழ்ப்பாணத்தில் "விளாம்பழக்கும்மி" என்ற ஆடலும் இடம்பெற்றதாகக் கூறுகின்றனர். இது விளாம்பழங்களைக் கையிலேந்தி ஆடும் ஆடலாக இடம்பெற்றிருக்கின்றது. இன்றும் இந்தக்கும்மி சிறப்பாக ஆடப்பட்டு வருகின்றது. பாடசாலை நிகழ்வுகள், கோயில் திருவிழாக்கள் போன்றவற்றில் அரங்க நிகழ்வாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணப் பண்பாட்டில் கோயில் தேர்த்திருவிழாவின் போதும் "தேங்காய்கும்மி" இடம்பெற்று வருவதை இன்றும் நாம் காணக்கூடியதாக உள்ளது. தேங்காய் குவியலை உடைக்கும்போது தேங்காய் கும்மியின் சில வடிவங்களைக் காணமுடியும். தமிழர் தம் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டும் கிராமிய நடனமாக கும்மி நடனம் இடம்பெற்று வருகின்றது.

**கோலாட்டம்**

கைகளிலே சிறிய கோல்களை வைத்துப் பெண்களால் ஆடப்படும் நடனம் கோலாட்ட மாகும். மென்மையான அசைவுகளைக் கொண்ட இந்த நடனம் கவர்ச்சிமிக்கதாகப் பார்ப்பதற்கு அழகாக இருக்கும், தமது கோல்களைத் தாமே தட்டி சத்தமுண்டாக்கி ஆடும் ஆடலை "சரவை" என்றும், தமது கோல்களை மற்றப் பெண்களின் கோல்களுடன் தட்டி ஆடுதல் "எதிர்ச்சரவை" என்றும் கைகளை மேலே தூக்கித் தட்டுதலை "மேற்சரவை"என்றும் அழைக்கின்றனர். கோலாட்டத்தின் பிறிதொரு வளர்ச்சியாகச் சொல்லப்படுவது பின்னல் கோலாட்டமாகும். மரக்கிளைக்களில் கயிற்றைக்கட்டி கயிற்றின் நுனியில் கோல்களைக் கட்டி அதனைப் பிடித்தபடி சுற்றிச் சுழன்று ஆடிவரும்போது அழகிய பின்னல் வடிவங்கள் உரு வாக்கப்படும். அந்தப் பின்னலைக் குலைக்கும் போது ஆடும் ஆடலைப் பின்னல் குலைப்பு என்கின்றனர். இதனைப் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

"வன்னவன்ன கையில் கோலங்கள் குலுங்கிட
சின்னச் சின்ன இழை சுற்றி சுற்றிவர
பின்னல் குலைப்பெடி பின்னல் குலைப்பெடி
சின்னச் சின்னப் பெண்ணே பின்னல் குலைப்பெடி" *[19]

அரங்க நிகழ்வின்போது உயரமாக மேடையின் மையத்தில் வண்ணக் கயிறுகள் (சீலைகள்) ஒன்றாகக் கட்டி தொங்கவிட்டு, கயிறுகளின் மறுமுனைகளை ஆடுபவர்கள் கையில் பிடித்துக் கொண்டு பாடலிசைக்கு ஏற்ப ஆடுவர். இவ்வாடல் குழுவாக ஆடப்படும் ஆடலாகும்.

கும்மிப்பாடல் என்ற நூல் ஓர் ஆடல் இன்னோர் ஆடல் மீது செல்வாக்குச் செலுத்துவதை எடுத்துக்காட்டியுள்ளது. இது "கோலாட்டக்கும்மி" என்ற வகையைச் சார்ந்ததுதென ஏ. என். பெருமாள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாட்டத்துடன் ஒத்துப்போகின்ற மற்றோர் ஆடல் வளர்ச்சியடைந்ததாகச் சொல்லப்படு கின்றது. அது "கொம்பாட்டம்" அல்லது "மழுவாட்டம்" என்று அழைக்கப்பட்டது. கொம்புகளைக் கையிலேந்தி ஆடுவதால் இப்பெயர் சூட்டப்பட்டது. ஒருவர் வாள்வீச மற்றையவர் மழுவினால் அதனைத் தடுத்து ஆடும் வீரமிகு ஆடலாகவும் இது இடம்பெற்றிருக்கின்றது. இவ்வாறு கோலாட்டம் பல பெயர்களில் ஆடப்பட்டு தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றி நிற்கின்றன.

## நிறைவுரை

மனிதனின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த கிராமிய கலைவடிவங்களில் கிராமிய நடனங்கள் மக்களின் பண்பாட்டைக் காக்கும் வகையில் இடம்பெற்று வருகின்றன. பக்திபூர்வ மாக ஆடப்பட்டுவந்த கரகம், காவடி ஆட்டங்களில் தற்காலத்தில் கரக நடனம் வழக் கொழிந்து வருகின்றது. இக்கலை வடிவத்தை மீட்டெடுத்து எதிர்காலத் தலைமுறையினருக்கு கைய ளிக்கும் பணியை நாம் அனைவரும் முனைப்போடு முன்னெடுக்க வேண்டும். காவடி, கும்மி, கோலாட்டம் என்பன பாடசாலைப் போட்டிகள், நிகழ்வுகளில் பங்கெடுத்து தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றன எனினும் பழைய உத்வேகத்துடன் சமயத்தோடி ணைந்து பண்பாட்டை நிலைநாட்டும் வகையில் இக்கலைகளையும் பேணி வளர்க்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர், தமிழ்மண் பதிப்பகம், 1966, அணிந்துரை.
2. தொல்காப்பியம்-மரபியல், எஸ். ராஜம், 5 தம்புச் செட்டித் தெரு,சென்னை,1960,பா - 30.
3. பண்டைத்தமிழர் பண்பாடு, பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, சுவாமி விபுலானந்தர் ஆய்வு மையம், ரொறன்ரோ - கனடா, 2015, பக். - 184.
4. "கண்டறியாத கலைகள்" வசந்தா, ஈழகேசரி, 1939 ப. 10.
5. சடகோபன், தென்னிந்தியக் கிராமிய நடனங்கள், சாம்ராஜ் பிரசுரம், 1960, ப. 08.
6. பரதக்கலை கோட்பாடு, பத்மா சுப்பிரமணியம், வானதி பதிப்பகம், 1985, ப. 145.
7. ஈழகேசரி, 1955 ப. 08.
8. நேர்காணல் பிரியதர்சினி வாகீசன், 2020.
9. ஆடல் அழகியல், சபா. ஜெயராசா, பொஸ்கோ பதிப்பகம், 1999, ப. 71.
10. ஈழத்தமிழர் கிராமிய நடனங்கள், சபா. ஜெயராசா, பொஸ்கோ பதிப்பகம், 2000, ப. 21.
11. ஆடல் அழகியல், சபா. ஜெயராசா, பொஸ்கோ பதிப்பகம், 1999, ப. 71.
12. நேர்காணல் நீர்வையூர் வைத்திலிங்கம் (சின்னமேள வைத்தி) 2010. சபை
13. தாளக்காவடி, ஏ. ரி. பொன்னுத்துரை, குரும்பசிட்டி சன்மார்க்கசபை வெளியீடு, 1988, ப. 07.
14. வீரகேசரி, 14.08.1990, ப. 5.
15. "கண்டறியாத கலைகள்", வசந்தா ஈழகேசரி, 1939, ப. 07.
16. தாளக்காவடி ஏ. ரி. பொன்னுத்துரை, குரும்பசிட்டி சன்மார்க்கசபை வெளியீடு, 1988, ப. 07.
17. ஈழத்தமிழர் கிராமிய நடனங்கள், சபா. ஜெயராசா, பொஸ்கோ பதிப்பகம், 2000,ப. 33.
18. ஈழத்தமிழர் கிராமிய நடனங்கள், சபா. ஜெயராசா, பொஸ்கோ பதிப்பகம், 2000,ப. 38.
19. மேலது, ப. 51.15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துண்ணையூர் த.தயாபரன்**
கோவிற் கடவை,
துன்னாலை, மத்தி கரவெட்டி.



## கிராமிய தெய்வ வழிபாட்டில்

# வைரவர் வழிபாடு

ஆலயங்கள் சிறு தெய்வங்களுக்காகவும், பெரும் தெய்வங்களுக்காகவும் அமைக்கப்பட்டன. அவை ஆகமஞ் சார்ந்த முறையாலும், ஆகமஞ் சாராத முறையிலும் அமைக்கப்பெற்று கிரியைகள் இடம் பெற்றன. சில ஆலயங்கள் ஆகமஞ் சார்ந்த முறையில் அமைக்கப்பட்டு ஆகமஞ்சாராத முறையில் கிரியை மரபுகள் இடம்பெற்றன.

கிராமியத் தெய்வங்களுள் ஒன்றாகத் திகழும் வைரவ வழிபாட்டினை ஈழத்திலே எவ்வாறு ஆகமஞ்சாராத முறையில் கிரியைகள் ஆற்றப்படுகின்றன என்பதனை ஆராயும் முகமாக ஞானவைரவர் ஆலயம் எடுத்து நோக்கப்படுகின்றது. அதாவது, ஆலய அமைப்பு முறை, கிரியை முறைகள், மகோற்சவ கிரியைகள், சடங்கு என்பன எவ்வாறு இங்கு ஆகம மரபு சாராது இடம்பெறுகின்றது என்று ஆழமாக ஆராய்வதே இதன் நோக்கமாகும். வழிபாடு என்ற சொல்லானது வழிப்படுத்தல் என்னும் பொருளையும் தருகின்றது. அதாவது ஆன்மாக்களை இறையருளைப் பெற்றுக் கொள்ளுமாறு இறைவனை நோக்கி வழிபடுதலே ஆகும். இவ் வழிபாட்டு முறையானது இரண்டு வகையாகக் கொள்ளப்படும்.

i. ஆகமஞ் சார்ந்த வழிபாடு

ii. ஆகமஞ் சாராத வழிபாடு

கிராமியச் சிறுதெய்வ ஆலயங்களில் வழிபாடுகள் யாவும் ஆகமஞ் சாராத முறையிலே மேற்கொள்ளப்படுவதைக் காண முடிகின்றது. இவ்வகையான வழிபாடுகளை யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமானாலும் எந்நேரத்திலும் மேற்கொள்ளலாம். இதற்கு இப்படித்தான் வழிபாடு செய்ய வேண்டும் என்ற தன்மையில்லை.

ஆயினும் ஆகமஞ்சார்ந்த முறையில் வழிபாடுகள் இயற்றப்படும் ஆலயங்களில் ஆகமப் பிராமணங்கள் எவ்வாறு ஒரு பூசை செய்யும் சிவாசாரியாரிடம் இருக்க வேண்டும் என்பது தொடக்கம் மந்திரங்கள், படையல் செய்ய உகந்த பொருட்கள் கிரியை முறைகள் என்பன யாவும் ஆகமம் கூறுகின்ற மரபுகளுக்கேற்பவே மேற்கொள்ளுதலே ஆகமஞ் சார்ந்த வழிபாட்டு முறைகள்.

இவ்வாறு வழிபாட்டு முறைகளை இருவகைப்படுத்தி உள்ள வேளையில் பக்தர்கள் தமக்கு எவ்வழிபாட்டு முறைமை இலகுவாக அமைகின்றதோ அவ்வழிபாட்டினை மேற் கொள்ள முடியும். ஆகம் சிற்ப, சாஸ்திர விதிகளுக்கு அமைந்து சிவன், பிள்ளையார், முருகன், அம்பாள் முதலான தெய்வங்கள் வழிபாடு இயற்றப்படும். ஆகம சிற்ப சாஸ்திரங்களின் விதிக ளுக்கு அமையாது வழிபடப்படுபவை நாட்டார் தெய்வங்கள். இங்கு பொங்கலும், படையலும் ஏனைய கிராமியஞ் சார் வழிபாடுகளும் இடம்பெறும் நாட்டார் தெய்வங்கள், சிறுதெய்வம், குலதெய்வம், ஊர்த்தெய்வம்,காவல் தெய்வம், கிராமியத் தெய்வம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

சைவத் தமிழ் மக்களிடையே, தொன்றுதொட்டு இருந்து வருகின்ற தெய்வ வழிபாட்டு முறைமையினை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவையாவன:

1. ஆகம முறை சார்ந்த பூசை வழிபாடு
2. ஆகம முறைசாராப் பூசை வழிபாடு

**ஆகம முறை சார்ந்த பூசை வழிபாடு:**

ஆகம விதிமுறைகளை அனுசரித்து ஆலய அமைப்பு பூசை வழிபாடுகள் என்பன இடம்பெறுகின்றன. ஆலயங்களை அமைத்தல், விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தல் தெய்வ சாந்நித்தியம் உருவாக்கப்படுதல் நித்திய, நைமித்திய கிரியைகள், பூசை ஆராதனை களை நடத்துதல் மற்றும் ஆலய வழிபாடு செய்தல் என்பன சிவாகமங்களில் விதிக்கப்பட்டபடி ஆகம - முறை சார்ந்த பூசை வழிபாட்டு அங்கங்களாகும்.

சிவாச்சாரியார்கள், பூசகர்கள் ஆகியோர் ஆகம விதிப்படி பூசை, ஆராதனைகள் உள்ளிட்ட நித்திய, நைமித்தியக் கிரியைகளை ஆலங்களில் நடத்தி வைப்பார்கள். ஆகம முறை சார்ந்த ஆலயங்களில், மூலஸ்தானத்தில் மூலவரும், சுற்றுப்பிரகாரங்களில் பரிவார மூர்த்திகளும் விதிப்படி பூசை, ஆராதனைகள் இடம்பெறும். ஆண்டுக்கொருமுறை மகோற் சவம் அல்லது அலங்கார உற்சவம் ஆகம விதிகளுக்கமைய நடாத்தப்படும். வேத மந்திரங்கள், திருமுறைப் பாடல்கள் ஓதுதல் என்பன பூசை ஆராதனைகளின் போது, ஆலயங் களில் இடம்பெறுகின்றன. ஆலய வழிபாட்டு முறைகளும், ஆகமங்கள் விதித்த முறைப் படியே, வழிபடுவோர்களினால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இவ் ஆலயங்களில் இடம்பெறும் தெய்வங்களைப் பெருந் தெய்வங்கள் என அழைக்கப் படும் மரபு உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களையும் இவ்வாலயங்கள் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிகச் சமயங்களின் எழுச்சிக்கு பின்னர், தமிழ்நாட்டில், ஆகம முறை சார்ந்த ஆலயங் களும் பூசைகள், கிரியைகள் என்பனவும் இடம்பெறத் தொடங்கின. இதற்கு முன்னர் சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் இயற்கையோடிணைந்த தெய்வ வழிபாட்டு முறை களைப் பின்பற்றி வந்துள்ளமை பற்றிச் சங்கத்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

**ஆகம முறைசாராப் பூசைவழிபாடு**

இதனைக் கிராமியத் தெய்வ வழிபாடு என்றும் அழைக்கப்படுகின்றனர். சிவாகமங்க ளில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆலய அமைப்பிலோ பூசை ஆராதனைகளிலோ வழிபாட்டு முறைகளிலோ, சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகள் என்பன பண்டு தொட்டு மாற்றமேதுமின்றி இற்றை வரை இடம்பெற்று வருவது முக்கிய அம்சமாகும். மாற்றங் களை ஏற்படுத்தினால் தெய்வ நிந்தனைக்கு ஆளாக வேண்டி வரும் என்பது மக்களின் நம்பிக்கை. “நம்பினார் கெடுவதில்லை” என்றும் “நம்பிக்கையே பலம்” என்றும் கூறப்படு கிறது, இதில் உண்மை இருப்பதாலேயே இற்றைவரை நிலைத்துள்ளது.

“நம்பிக்கையே வாழ்வின் ஆதாரம்” என்னும் கூற்று உளவியல் ரீதியாகவும் கருத்து நிறைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சிறு தெய்வங்கள் என்று குறிப்பிடப்படுவதும் அத்துணை பொருத்தமாகத் தோன்றவில்லை. சிறு தெய்வங்கள் என்னும்போது ஏதோ குறைந்த அந்தஸ்துடைய தெய்வங்கள் என்ற கருத்து தொனிப்பது போலத் தோன்றுகின்றது. ஆகமமுறை சாராத் தெய்வவழிபாடு என அழைப்பது மிகப்பொருத்தமாகும். பயபக்தி, பரவசம், நம்பிக்கை, ஆவேசம், தன்வயமிழுத்தல், ஆடல், பாடல், கூத்து உள்ளிட்ட வழிபாட்டில் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

மக்கள் தாமாகத் தெய்வங்களுக்குப் பொங்கல், பூசைசெய்தல், மடைபரவுதல், வழிபடு தல் என்பன அத்தகைய வழிபாட்டின் மற்றோர் அம்சமாகும். பயம், பக்தி இவ்விரண்டும் வழிபாட்டு முறையின் அணிகலங்கள் என்றால் மிகையாகாதது. பூசைவழிபாடுகளில் தவறு நேர்ந்தால் தெய்வ தண்டனைக்கு உள்ளாக வேண்டிவரும் என்பதில் பூரண நம்பிக்கை மக்களுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘பூசாரியார்’ என அழைக்கப்படுபவர் இத்தகைய பூசை வழிபாடுகளில் ஒருங்கிணைப்பாள ராகச் செயற்படுவார். பெரும்பாலும் பூசாரிமார்கள் பரம்பரையாக வந்தவர்களாகவே காணப்படு வர். கட்டிடங்கள், கோயில்கள், விக்கிரங்கள் அமைத்து தெய்வப் பிரதிட்டை, கும்பாபிஷேகம், நித்திய, நைமித்தியங்கள் என்பன செய்யும் வழக்கம், மரபு என்பன பெரும்பாலும் இத்தகைய பூசை வழிபாட்டு முறைகளில் இடம்பெறுவதில்லை. மரங்களின் அடியில் அல்லது சிறிய கொட்டில்கள், பந்தல்கள் அமைத்துத் தெய்வங்களுக்குரிய சின்னங்களையோ உருவங் களையோ நிறுவி வழிபாடு செய்யும் வழக்கத்தையே காணமுடிகிறது.

பெரும்பாலான கோயில்களில் நித்திய பூசை , ஆராதனைகள் நிகழ்த்தப்படுவதில்லை. வாரத்தில் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் அல்லது வேறொரு வாரநாளில் பொழுது சாயுங்காலவேளையில் விளக்கேற்றி மலர் தூவிப் பக்தியுடன் வழிபாடு செய்யும் முறை இக் கோயில்களில் இருந்து வருகிறது. அவ்வாறே வருடத்தில் வருகின்ற விஷேட தினங்களிலும் இவ்வாறாக விளகேற்றி வழிபாடு செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டு பொங்கல், மடைவழிபாடு**

ஆண்டுக்கொருமுறை பெரும்பாலும் சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் பெரும் பொங்கல் மடை என்பன இக்கோயில்களில் இடம்பெறும் அன்றையதினம் அக்கிராமத்து மக்கள் அனைவரும் கோயிலுக்கு வந்து தனித்தனி பொங்கல் செய்து படைத்து, மடைபரவி பயபக்தியுடன் வழிபாடு செய்யும் வழக்கம் இருந்து வருகின்றது. அக்கிராமத்து மக்கள் நாட்டின் எப்பகுதிக்குச் சென்றிருந்தாலும் பெரும் பொங்கல் தினத்தில் பொங்கி படைத்து வழிபாடு செய்ய கிராமத்திற்கு வந்துவிடுவார்கள். ஆண்டுப் பொங்கலின் போது பூசை ஆராதனைகள் தொடர்பாக ஒருசில மரபுகள் சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவையாவன:

**மடைப்பண்டம் எடுத்தல் :**

பழங்கள், பலகாரங்கள், மலர்கள் என்பன மடைப்பண்டங்களில் அடங்குவன.

**மடைபரவுதல் :**

பழமடை, பூமடை , பலகாரமடை

**வளர்ந்துப் பானை வைத்தல் :**

மூன்று பெரிய பானைகளில் முறைப்படி பொங்குதல் முதலில் இடம்பெறும்.

**பரிகலம் அழைத்தல் :**

வேறு தெய்வங்கள் பொங்கலுக்கு இடையூறுகள் செய்யவிடாமல் அவற்றை மந்திரம், வேண்டுதல் மூலம் பிரார்த்தித்தல்.

**வழிவெட்டுதல்:** பொங்கல் முடிவில் நிகழ்த்தப்படும்

**எட்டா மடை :**

ஆண்டுப்பொங்கல் நடைபெற்ற தினத்திலிருந்து எட்டாவது நாள் இந்நிகழ்வு இடம் பெறும். ஆண்டுப்பொங்கல் உரிய முறைப்படி நடத்தப்படாவிட்டாலோ, நடத்த தவறினாலோ அக்கிராமத்து மக்கள் பெரும் கேடுகளையும் இழப்புகளையும் கொடிய நோய்களையும் சந்திக்க நேரிடும் என்னும் நம்பிக்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது.

தொழில் விருத்தி, காரியசித்தி , மழை, வரட்சி என்பவற்றால் பாதிப்பு ஏற்படாமை தொற்று நோய்கள், கொள்ளை நோய்கள் பரவாமை, அகாலமரணம் சம்பவிக்காமை, பஞ்சம் ஏற்படாமை, வேறு துன்பங்கள் துயர்கள், இழப்புக்கள் நிகழாமை இயற்கை அழிவுகள் ஏற்படாமை என்பன பொங்கல் நல்ல முறையில் நடந்தேறுவதால் அக்கிராம மக்களுக்குக் கிடைக்கப்பெறும் வரப்பிரசாதங்கள்.

மருத்துவ வசதிகள், சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், பொருளாதார விருத்திகள், பின்னடைவாக இருந்த பண்டைய காலங்களில் வாழ்ந்த மக்கள் நலமாகவும், சுபீட்சமாகவும், ஆரோக்கியமாகவும், மனத்திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்த மைக்கு அவர்கள் தங்கள் குலதெய்வங்களில் கொண்டிருந்த அதீத பக்தியும் பயமும், அசைக்க முடியாத நம்பிக்கை என்பவையேதான் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தீயன, தீமை பயப்பனவற்றைச் செய்யாமலும் தீய செயல்களில் ஈடுபடாமலும் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தமைக்கு அக்கால மக்கள் தெய்வ தண்டனைக்குப் பயந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தமையே காரணம். செயலுக்கேற்ற விளைவை இறைநிலை வழங்கியே தீரும். தெய்வங்களின் மீதும் பயமும் பக்தியும் மக்கள் வைத்திருந்தனர். அதனால் மக்கள் மனித விழுமியங்களை வாழ்வில் பேணிவந்தனர். நற்குடி மக்களாக வாழ்ந்தனர். தற்காலத்தில் பெரும்பாலான மக்கள் தெய்வத்தையும் நம்புவதில்லை. மனிதவிழுமியப்பண்புகளை ஓம்பி வருவதும் இல்லை. அதனாலேயே துன்பங்களை அனுபவிக்க வேண்டி நேரிடுகிறது.

முன்னைய காலங்களில் தொற்றுநோய்கள் வந்தால் அம்மன் வழிபாடு செய்வர். மஞ்சள், வேப்பிலை பயன்படுத்துவர். பசுவின் சாணத்தைக் கரைத்து வீட்டைச் சுற்றி தெளிப்பார்கள். குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின்னர் நோய் நீங்கி விடும்.

கிராமிய தெய்வங்கள் வைரவர், வீரபத்திரர் நாகதம்பிரான், பெரியதம்பிரான், ஐயனார், விறுமர் முனியப்பர், மாடசாமி, பூதவராயர், நரசிங்கர், காத்தவராயன், கறுப்புசாமி, ஐயப்பன், சித்திரபுத்திரன் ஆகியோர் ஆண்தெய்வங்கள்.

காளி, கண்ணகி, மாரியம்மன், முத்துமாரி , சீதை, திரௌபதி, பேச்சியம்மன், நாகம்பாள், நாகபூஷணி, கொற்றவை, நாச்சிமார், துர்க்கை, பிடாரி, கௌந்தி என்போர் பெண்தெய்வங்கள்.

தற்காலத்தில் கிராமியத்தெய்வங்கள் சில குடமுழுக்குப் பெற்று ஆகம வழிபாட்டிற்கு உரியனவாக மாற்றம் பெற்று வருவதைச் சில இடங்களில் காணக்கூடியதாக உள்ளது.

**நேர்த்திக்கடன்**

தொற்றுநோய்களைப் போக்கவும் கொடிய நோய்கள், பஞ்சம் என்பவற்றை நீக்கவும் இயற்கைப் பாதிப்புக்களிலிருந்து விடுபடவும், மழை வேண்டியும், குடும்ப சுகம் வேண்டியும், திருமணம் நிறைவேற்றிக் கொள்ளவும், செய்காரியங்கள் சித்திக்கவும், இழந்த பொருள்களை மீளப்பெறவும், வியாபார விருத்தி மற்றும் தொழில் விருத்தி சித்திக்கவும், நினைத்த காரியம் கைகூடவும், தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றும் வழக்கம் மக்களிடையே இருந்து வருகிறது. நேர்த்தி வைத்துவிட்டு நிறைவேற்றத் தவறினால் அதனால் பெருந்தீங்குகள் ஏற்படும் என்ற பயமும் மக்களிடம் வலுப்பெற்றமை குறிப்பிடத் தக்கது. உண்மை, நேர்மை, சொன்ன சொல் தவறாமை ஆகிய விழுமியப்பண்புகளைக் கடைப்பிடிப்பதற்கு தெய்வபயம், பக்தி பெரிதும் உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது என்று கூறுவர். கிராமியத் தெய்வங்களைப் பொறுத்தமட்டில் இது உண்மையான கூற்று. ஆகம வழிபாட்டில் கிரியைகள் பெறும் இடம் போன்று கிராமியத் தெய்வ வழிபாட்டில் சடங்குகள் சம்பிரதாயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**மனித விழுமியங்கள்**

மக்களிடையே மனித விழுமியப்பண்புகள் நிலைபெற்று வளர்ச்சி பெற கிராமியத் தெய்வவழிபாடு ஏதுவாகின்றது. பழிபாவங்களைச் செய்யப்பயன்படுத்தல், பகைமையை ஒழித்துக் குடும்ப ஒற்றுமை, சமூக ஒற்றுமை பேணுதல், உண்மை, தர்மம், அமைதி, நல்லொழுக்கம் பேணுதல், தூய்மை, காத்தல் என்பன தெய்வதண்டனைக்குப் பயந்து மேற் கொள்ளப்படுகின்றன. அரச தண்டனைக்கு தப்பினாலும் தெய்வதண்டனைக்குத் தப்பவே முடியாது என்பதில் மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளமை நோக்கக் கூடியது. மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாங்கு வாழவும் நல்லவண்ணம் வாழவும் கிராமியத் தெய்வ வழிபாடு களம் அமைத்துத் தருகிறது.

**கிராமியத்தெய்வ வழிபாட்டில் இடம்பெறுபவை**

தெய்வம் ஆடுதல், உருவந்து தன்னிலை மறத்தல், கட்டுச் சொல்லுதல், தெய்வவாக்கு உரைத்தல். இவற்றின் மூலம் திருட்டுக்குற்றங்கள் அம்பலப்படுத்தப்படுகின்றன. செய்வினை, சூழ்ச்சி, சதி முயற்சிகள், மாந்திரிகம் என்பவற்றைச் செய்தவர் யார் என்பதை அறிய முடிகின்றது. அவற்றின் பாதிப்புக்களை எவ்வாறு நீக்கிக்கொள்ளலாம், பரிகாரம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவும் வழியேற்படுகின்றது. நூல் கட்டுதல், பார்வை பார்த்தல், அழிகட்டுதல், திருஷ்டி கழித்தல் இவற்றைவிட பூசாரிமார் நடத்தி வைப்பர்.

**நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல்**

மக்களின் சகலவித பாதுகாப்புக்கும் தெய்வங்களே பொறுப்பாக விளங்கின. இன்றும் இருந்துவருகின்றன. தெய்வநிந்தனை தண்டனைக்குரிய குற்றமாகும். மிக எளிமையான வழிபாடுகள் தாமே நிவேதனம் செய்து தமது குறைகள், துன்பங்கள் துயரங்கள், வேண்டுதல்கள் ஆகியவற்றைத் தெய்வத்திற்கு எடுத்துக்கூறி தெய்வத்துடன் உறவாடி நிவாரணம் பெற்று வாழ்ந்தார்கள். இன்றும் சிலர் நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள். "நம்பினார் கெடுவதில்லை" இது நான்கு மறைத்தீர்ப்பு" என்பது அனுபவ பூர்வமான உண்மையுமாகும். இறையுணர்வு, அறநெறி வாழ்வு இரண்டையும் மக்களிடையே நிலைபெறச் செய்வதற்குக் கிராமியத் தெய்வ வழிபாடு பெருந்துணையாக அமைந்துள்ளமை பெரும்பேறு ஆகும்.

கிராமிய சமயநெறி அல்லது நாட்டுப்புறச் சமயம் எனவும் கூறலாம். இதனைச் சிறு தெய்வ வழிபாடு என்றும் அழைப்பர். நாட்டுப் புறச்சமயநெறி சங்ககாலம் முதலாக இருந்து வரும் நெறியாகும். இந்தநாட்டுபுறத் தெய்வங்களைக் கிராமியத் தெய்வம், குலதெய்வம், ஊர்த்தெய் வம், கிராமத்தேவதை, சிற்றுயிர் வணக்கம், காவல் தெய்வம், எல்லைத் தெய்வம் எனப்பல வாறாக அழைப்பர். கிராமிய வழிபாட்டில் பொதுப்பண்புகளாக மடைப்பண்டம் எடுத்தல், மடைபரவுதல், தூளிபிடித்தல், பரிகலம் அழைத்தல், வழிவிடுதல் (வெட்டுதல்) ஆகும்.

**கிராமிய வழிபாட்டின் சிறப்புப்பண்புகள்**

**மடைப்பண்டம்**

குறித்த ஒரு பிரதேசத்தில் மக்கள் குறிக்கப்பட்ட தெய்வம் ஒன்றுக்கு எடுக்கும் ஆண்டுப் பொங்கலுக்கான முற்படி நிகழ்ச்சியே மடைப்பண்டம் எடுத்தலாகும். இந்த மடைப்பண்டம் எடுத்தல் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபட்ட சொற்களால் அழைக்கப்பட்டாலும் அடிப்படையில் மாற்றமில்லை. இந்தப்பண்டம் எடுத்தல் கோயில் அமைந்திருக்கின்ற இடத்துக்கு கோயில் பூசாரியின் வீட்டிலிருந்தோ அல்லது உரிமைக்காரர் வீட்டிலிருந்தோ பல வகை பொங்கல் பொருள்கள் ஊர்வலமாக எடுத்து செல்வதைக் குறிக்கும். இந்த நிகழ்வு பூநகரிப்பிர தேசத்தி லும், முல்லைத்தீவுப் பிராந்தியத்திலும் இன்றும் காணலாம் (மட்டக்களப்பு, திருமலை)

**மடைபரவுதல்**

கோயிலுக்கு கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் யாவும் அவற்றுக்குரிய இடங்களில் வைத்துப் பரவுவதை மடைபரவுதல் என்பர். மடைப்பொருட்கள் உள்மடை, வெளிமடை,எனப் பாகுபடுத்தப்பட்டு வைக்கப்படும். இதனைப் பூசாரியாரும் உறவுக்காரர்களுமே படைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூளிபிடித்தல்**

கோயில் பூசாரியால் பொங்கல் வளந்தை (பறை) ஒலிக்கேற்ப மேலே எறிந்து ஏந்துவதைக் குறிக்கும் ஒன்றுக்கு மேற்பட்டவற்றையும் இவ்வாறு செய்யும் போது பார்த்துக்கொண்டிருப் போரை பக்திப் பரவசத்தில் ஆழ்த்துவதாக அமையும்.

**பரிகலம் அமைத்தல்**

ஒரு பிரதேசத்தின் ஆண்டுப்பொங்கல் எந்தவித இடையூறும் இன்றி நடந்து முடியப் பூசாரியால் மேற்கொள்ளப்படும் முயற்சியே பரிகலம் அழைத்தலாகும் அதாவது ஏனைய சிறுதெய்வங்கள் இடையூறு செய்யாமல் இருக்க அவற்றைப் பூசாரி மந்திர உச்சாடனம் மூலம் வரவழைத்து கட்டுப்படுத்தலாம்.

**வழிவிடுதல் (வெட்டுதல்)**

கோயிலின் பொங்கல் இனிதே முடிந்த பின் பொங்கலுடன் ஏனைய மடைப்பொருட்களை இளநீர், தேசிக்காய், கோயிலில் வைக்கப்பட்ட வகைகளைப் பூசாரியும் உறவுக்காரரும் எடுத் துக் கொண்டு சிலதூரம் சென்று அவற்றைப் படைத்துவிட்டு கோயிலுக்கு திரும்புவதைக் குறிக்கும் சடங்குகளாகும். கிராமிய வழிபாட்டின் பொதுப்பண்புகள் சிறப்புப் பெறுகின்றதோ அவ்வாறே சிறப்புப் பண்புகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. சிறப்புப் பண்புகளாக உள்ளவற்றை நோக்குகின்றபோது கலை ஆடுதல் (தேகம் மாறுதல்), கட்டுச்சொல்லுதல், நூல் முடிதல், பேய்க்குப் பார்த்தல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், தீப்பள்ளம் ஏறுதல் என்பனவாகும்.

**கலை ஆடுதல்**

கலைஆடுதல் கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சியாகும். இந்த ஆட்டம் இன்றும் பல பகுதிகளில் இடம்பெற்று வருகின்றது. கிராமிய ஆண்டுப் பொங்கலின் போது இந்த ஆட்டம் இடம்பெற்றுவருகின்றது. இதனை உருவாடுதல், கலை வருதல், சாமிவருதல் என்னும் பெயர்களால் அழைக்கும் வழக்கமுண்டு. பொங்கலின்போது பூசாரியோ அல்லது குறித்த கோயிலின் தெய்வத்தின் உரிமைக்காறரோ அல்லது இருவருமோ அல்லது இவர்களைத் தவிர்ந்த ஏனைய உரிமைக்காரர்களோ ஆடுகின்ற ஆட்டம் பயம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்த ஆட்டம் பறை அல்லது உடுக்கு போன்ற இசைக்கருவிகளின் அடிக்கேற்பவே ஆடப்படும்.

**கட்டுச்சொல்லுதல்**

கலை ஆடுகின்ற போதே கட்டுச் சொல்லுதல் இடம்பெறும். ஆடுகின்றவர் பறை ஒலிகேற்ப ஆடுவார். கிராமியமக்கள் தமக்கேற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யக் கலை ஆடுவோரை அணுகுவர். கலை ஆடுவோருக்குப் பக்கத்தில் ஆடுவோரின் மிக நெருங்கிய உறவினர் நிற்பர். ஆடுகின்ற வேகத்தில் குறைகளைக் கேட்பர். முன்நிற்கின்றபோது ஆடுவார் ஏதோ விளங்காத முறைகளில் சொல்லுவார். அவர் சொல்வதை அருகிலுள் ளோரே விளக்கிக் கூறுவர்.

**நூல் முடிதல்**

கோயிலின் ஆண்டுப் பொங்கலின் போது பூசாரியாரால் அல்லது அவரைச் சார்ந்த ஒருவரால் நூல் முடிதல் இடம்பெறும். நூல்முடிதல் ஏதாவது நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நோய்களுக்கான மருந்துகள் உட்கொண்டும் சுகம் பெறாததையடுத்து இறுதியில் மேற்கொள்ளப்படுவதே இதுவாகும். நோயாளியானவர் பூசாரி பிரசாதம் வழங்கும் போது அவரி டம் சென்று முறையிட அவர் வெள்ளைநூல் அல்லது வெள்ளைச் சேலைத்துண்டை எடுத்து மந்திர உச்சாடனம் செய்து மூன்று முடிச்சோ அல்லது ஐந்து முடிச்சோ போட்டபின் நோயாளியின் கையில் கட்டுவார்.

### பேய்க்குப் பார்த்தல்

கிராம மக்களிடம் உள்ள நம்பிக்கைகளில் பேய்பிடித்தல் என்பதும் ஒன்றாகும். இந்த நம்பிக்கை காரணமாக ஆண்டுப்பொங்கலின்போது இந்த நோயைத் தீர்த்துக்கொள்வர். பேய் பிடித்த ஒருவர் பூசாரியை அணுகும்போது அவர் வேப்பிலை கொண்டு மந்திர உச்சாடனம் மூலம் குறித்த பேயை விரட்டும் வழக்கம் உண்டு. பேய்க்கு பார்க்கும்போது கெட்டபேய் பிடித்திருந்தால் பீடிக்கப்பட்டவர் துன்புறாமல் இருக்க கலை ஆட்டத்தின் மூலம் பேயை விரட்டுகின்ற வழக்கமும் உண்டு.

### தண்ணீர் ஓதிக்கொடுத்தல்

தீராத நோய் பிடித்த ஒருவருக்குக் கோயிலின் ஆண்டுப் பொங்கலின் போது பூசாரியால் செய்யப்படும் ஒருசிகிச்சை முறையே இதுவாகும். தண்ணீரில் மந்திர உச்சாடனம் செய்து அதனை ஒருதரமோ அல்லது மூன்றுதரமோ குடிக்குமாறு பூசாரி கொடுப்பார்.

### தீப்பள்ளம் ஏறுதல்

தீப்பள்ளம் ஏறதல் என்னும் (தீக்குளித்தல் - பூமிமிதித்தல், அக்கினி வலம்வரல்) சடங்கு பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஆண்டுப் பொங்கலின் போது தமது நேர்த்திக் கடன்களைத் தீர்க்கும் ஒன்றைக் கருதி இதனை மேற்கொள்வர்.

ஈழத்து ஆலயங்கள் என்னும் தொகுப்பிலே யாழ்.மாவட்ட திருத்தலங்கள் பாகம் - 01 தொகுப்பாசிரியர் வை.சோமசேகரன் தொகுத்து வெளியீடு செய்யப்பட்ட அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வெளியீடு 2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. வடமாகாணத்தில் ஐந்து மாவட் டத்தில் 277 வைரவர் ஆலயங்கள் உள்ளன என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அவற்றிலும் யாழ்ப்பாணத்தில் 59 வைரவர் ஆலயத்தின் வரலாறுகளை ஆவணப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உசாத்துணை நூல்:

01. மார்கழி - தை (2014 -2015)
மன்னார் ஞான வைரவர் வேதஸ்தான மகாகும்பாபிஷேக சிறப்பிதழ்.
அகில இலங்கை இந்துமா மன்ற ஆன்மீக இதழ் வெளியீடு.

02. திருச்செல்வம் தவரத்தினம், வைரவர் வழிபாடு - (2014) சர்வசக்தி வெளியீடு.

03. வடமராட்சி தென் புலோலி மாவடி ஞான வைரவர் தேவஸ்தானம் மாவடி ஞான வைரவர் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு (2020)

04. ச. ஆனந்தன் (நேர்காணல்)
காரைக் கூடல் ஞானவைரவர் (2011)

05. கணபதிப்பிள்ளை கந்தையா (நேர்காணல்)
தட்டச்சறிக்கை ஞானவைரவர் கப்புதூ கரவெட்டி 21.10.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி தக்சாயினி செல்வகுமார்**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்.
வலி.தென் மேற்கு, சண்டிலிப்பாய்.

# மரபுரிமைச் சின்னங்களைப் பேணிக்காத்தல் பெருங்கடன்




இன்று உலக நாடெங்கினும் பண்பாட்டு வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு அதிகம் ஏற்பட்டுள்ளமையினைக் காணமுடிகின்றது. அதாவது மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாத்தல் என்பது எமது அடையாளங்களைப் பாதுகாப்பதாகவே அமைகின்றது. இங்கு அடையாளங்களைப் பாதுகாப்பதென்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டம்சங்களைப் பாதுகாப்பதைக் குறித்து நிற்கின்றது.

இந்த வகையிற் பண்பாட்டு வளங்கள் எனும் பொழுது ஒவ்வொரு இனக்குழுமத்தினதும் தனித்துவத்தை அடையாளப்படுத்திக் காட்டும் விலை மதிக்க முடியாத சொத்து. இது கடந்த காலச் சமூகத்திற்கும், நிகழ்காலச் சமூகத்திற்கும் இடையிலான உரையாடலின் ஊடகமாகச் செயற்பட்டு, எதிர்காலத்தைத் தீர்மானிக்கவும் வழிநடத்தவும் உதவுகின்றது. அதாவது ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் பண்பாடு இன்னொரு இனப் பண்பாட்டுடன் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அப்பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கிக் கொண்ட இனம் தொடர்ந்து பேணி வருமானால் அவற்றையும் அவ்வினத்திற்குரிய மரபுரிமைகளாகக் கொள்ளலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்த பண்பாட்டு வளங்கள் ஒரு நாட்டினை அல்லது ஒரு வட்டாரத்தினை அல்லது ஒரு இனத்தினைத் தனித்து அடையாளப் படுத்திக் காட்டும் வரலாற்றுப் பொக்கிசங்களாகும். இம் மரபுரிமைச் சொத்துக்கள் மீண்டும் பொருத்திப் பார்க்க முடியாத அம்சங்களாகவும் திகழ்கின்றன. மரபுரிமை அல்லது கலாசார சின்னங்கள் என்பன சமுதாயத்தின் விலைமதிக்க முடியாத சொத்து மட்டுமல்ல. மீண்டும் பொருத்திப் பார்க்க முடியாத. சொத்துக்களிலும் ஒன்றாகும்.

மரபுரிமை அம்சங்கள் ஒரு இனக்குழுமம் எங்கிருந்து வந்தது, எங்கே போகிறது, எங்கே போக வேண்டும் முதலானவற்றைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டிகளாகக் காணப்படுகின்றன. மரபுரிமை என்பது கடந்த காலச் சமூகத்திடம் இருந்து பெறப்பட்டதும், தொடர்ந்து பின்பற்றப்படுவதும், எதிர்காலச் சந்ததியினருக்கு அவற்றைப் பாதுகாத்து வழங்கப்பட வேண்டியதையும் குறிப்பதாகும்.

இப் பாரம்பரிய மரபுரிமை அம்சங்கள் ஓர் இடத்திற்குக் கலாசாரப் பெறுமதியைக் கொடுக்கிறது. இதன் மூலம் அங்கு வாழ்ந்து வரும் மக்கள் தமது கடந்தகால வரலாறு குறித்துப் பெருமை கொள்ளச்செய்கிறது. ஒரு இனத்தின் அல்லது நாட்டின் மரபுரிமைகள் அந்த இனத்தின் அல்லது நாட்டின் பூர்வீக வரலாற்றை, பண்பாட்டை அடையாளம் காண உதவுகின்றன.

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதான மக்களின் தொழில்நுட்ப அறிவு, அரசியல், சமயம், பொருளாதாரம், அவர்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, மொழி, உணவுப் பழக்க வழக்கங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடை, அணிகலன்கள், பாவனைப்பொருட்கள், உறவுமுறைகள், கருவிப்பயன்பாடு, போன்றவற்றை அறிய மரபுரிமைச் சின்னங்கள் உதவுகின்றன. மரபுரிமைச் சின்னங்கள் வெவ்வேறு இனங்கள், சமூகங்கள், சாதிகள் என்பவற்றின் வெளிப் பாடாகவே இத்தகைய மரபுரிமை சின்னங்களில் இருந்து வரலாற்றின் பல்வேறு பண்புகள் அடையாளப் படுத்தப்படுகின்றன. வெவ்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறான விழுமி யங்களை வழங்குகின்றனர். இத்தகைய சொத்துக்களின் விழுமியங்களானவை அடை யாளப்படுத்துதல், ஆன்மீகம் போன்ற உணர்வு ரீதியானது. ஆவண ரீதியானது என்ற தன்மைகளையும் இனங்காட்டுவன.

இப் பண்பாட்டுச் சின்னங்கள் எமது முன்னோர்களால் வைத்திருக்கப்பட்ட உருவமற்ற சொத்து அல்லது கலைகள் அல்லது சம்பிரதாயங்களால் கொண்டுவரப்படும் நடைமுறைகள் கட்டிடங்கள், சமூகம், கலாசாரம் போன்றவற்றிற்கு முக்கியமானதாக கருதப்படும் வரலாற்று நம்பிக்கைகள் போன்றவற்றையும் குறிக்கும்.

அதாவது ஒரு மக்கள் குழுமம் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை, அவர்களின் வாழ்வியல் கோலங்கள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், தொழில்கள், தொழில்நுட்பங்கள், கலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள் முதலான அம்சங்களைக் குறித்து நிற்கின்றன.

வரலாறு, தொல்லியல், கட்டிடக் கலை, தரைத்தோற்றம், நகரக்கட்டுமானம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகள், அரசியல், பொருளாதார, சமூக ரீதியிலான அம்சங்களை மரபுரிமையாகக் காணலாம். அத்தோடு, பழங்கால மனிதன் பயன்படுத்திய மண், கல், உலோகமாகியவற்றிலான கருவிகள், உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், வழிப்பட்ட கோயில்கள், சிலைகள், செதுக்கிய சிற்பங்கள், தீட்டிய ஓவியங்கள், எழுதிவைத்த சாசனங்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் கட்டடங்கள் இறந்த மனிதனின் எலும்புக் கூடுகள் ஆகியனவும் உள்ளடங்கும். மற்றும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சில பொருட்கள், சடங்குகள் என்பவற்றின் தொடர்ச்சியை வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இருந்து காணமுடிகிறது.

இவ்வாறான பண்பாட்டு வளங்களைப் பல வகைகளில் பிரித்துப் பார்க்கவும் முடியும். இவை இயற்கை மரபுரிமை, கலாசார மரபுரிமை, தொட்டுணரக் கூடிய மரபுரிமை, தொட்டுணர முடியாத மரபுரிமை, அசையும் மரபுரிமை, அசையா மரபுரிமை எனப் பல வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இயற்கை மூல வளங்கள் என்பது இயற்கையான மூலப்பொருட்களால் இறைவனால் படைக்கப்பட்டவையாகக் கருதப்படுகின்றது. மேலும் இவை மனிதனின் தலையீடு இன்றி தன் இயல்பு நிலையில் காணப்படும் ஓர் அம்சமாக விளங்குகின்றது. இயற்கை மூலவளங்களை உயிருள்ளவை, உயிரற்றவை, புதுப்பிக்க கூடியவை, புதுப்பிக்க முடியாதவை எனவும் வகைப் படுத்த முடியும். உயிருள்ள வளங்கள் எனும்போது பறவைகள், விலங்குகள் போன்றவற் றையும் உயிரற்றவை எனும் போது நிலம், நீர், மண், வளம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இயற்கை மரபுரிமைகள் வெவ்வேறு பிரதேசத்திற்கும் தனித்துவமானவையாகக் காணப்படு கின்றன. இலங்கையில் பெருக்குமரம், நெடுந்தீவிலும் மன்னாரிலும் சிறப்பாகக் காணப்படு கின்றன. யாழ்ப்பாணத்தில் சுண்ணாம்புக் கற்களும், ஹிக்கடுவவில் முருகைக் "கற்பாறைகளும் பிரசித்தி பெற்றவை.

இயற்கை மூல வளங்களில் முக்கியமானவையாக பறவைகள், விலங்குகள் சரணாலயங்கள் போன்றவற்றையும் நிலத்தோற்ற அமைப்புக்கள் சார்ந்த கடற்கரைகள், ஆறுகள், குளங்கள், நீர்வீழ்ச்சிகள், காலநிலைகள், இயற்கைத் துறைமுகங்கள், நதிகள், மலைகள் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

அவ்வாறே கலாசார மரபுரிமைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப் படுகின்றன. கலாசார மரபுரிமை என்பது தொட்டுணரக் கூடியவை, தொட்டுணர முடியாதவை என இரண்டாகப் பிரித்து நோக்க முடியும். தொட்டுணரக் கூடிய மரபுரிமையிலும் அசையக் கூடிய மரபுரிமைகள், அசையமுடியாத மரபுரிமைகள் என்று நோக்க முடியும். அசையக்கூடிய மரபுரிமைகளாக நாணயங்கள், தொல்லியல் எச்சங்களைக் குறிப்பிடலாம். அசையமுடியாத மரபுரிமைகளாக புராதன கட்டடங்கள், தொல்லியல் மையங்களைக் குறிப்பிட முடியும். அவ்வாறே தொட்டுணர முடியாத மரபுரிமைகளாக பிரயோக கலைகள், (ஓவியம், சிற்பம்) செயன்முறைக்கலை, (இசை, நடனம்) வரி வடிவம், நாட்டார் இலக்கியம், கல்வெட்டு போன்றவற்றையும் குறிப்பிட முடியும்.

இவ்வாறான நிலையில் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கின்ற முயற்சிகள் அண்மைக் காலத்தில் தீவிரமடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. அதாவது சமகாலத்தில் பல காரணங்களினால் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் தீவிரமடைந்து வருகின்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அதாவது, இன்று உலகமயமாக்கல் என்ற போர்வையில் நாடுகளின் எல்லைகள், விரிக்கப்பட்டு தேசியங்கள், தேசங்கள் என்பதனைத் தாண்டி எல்லாம் ஒரே தேசம் எனும் எடுகோளின் கீழ் வருவதனால் மரபுரிமைச் சின்னங்கள் என்பவை ஒரு தேசத்தின் அடையாளம் சமூகத்தின் பண் பாட்டு அடையாளம் என்பதனால் அவற்றின் முக்கியத்துவம் உணரப்பட்டு சமகாலத்தில் இவை பாதுகாக்கப்படுகிறது.

இன்றைய காலகட்டமானது தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் உச்சத்தை எட்டி விட்டது. உலக நாடுகள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட செக்கனில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடியதாகவும், மண்ணில் இருந்து விண் வரை உடனடியாகச் சென்று வரக் கூடியதாகவும் உள்ள நிலையில் எமது அடை யாளம் என்ன என்பதை உணரவைப்பதாக வும் சமூகங்கள் தாம் யார் என்பதும் தமது மொழி, மத, இனம் போன்ற பண்பாட்டுக் கூறுகளை கண்டறிவதாகவும் இவற்றை அடுத்த சமூகத்திற்கு எடுத்துச் செல்வதற்கு மான தேடலாகவே பண்பாட்டுச் சின்னங் களின் தேவை அவசியம் எனும் கருத்து வெளிப்பாடாகவே இன்று இவற்றினைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

அவ்வாறே இன்று உலகில் மக்கள் அனைவரும் தமது பண்பாடுகளுடன் வேற்று நாட்டு பண்பாடுகளையும் மதித்தும், அவற்றினைப் பழகியும் வாழ்கின்றனர். அதாவது தனிப்பட்ட சமூகங்கள் தமது பண்பாட்டினை மட்டுமல்லாது ஏனையோரது பண்பாட்டம்சங்களையும் உள்வாங்கியே வாழ்கின்றனர். அதாவது இடப்பெயர்வுகள், யுத்தம், படையெடுப்புக்கள், திருமணங்கள், நோய்கள் காவு கொள்ளுதல், இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல காரணி களால் பண்பாட்டுக் கலப்புக்கள் ஏற்பட்டு பல்லினப் பண்பாடு கொண்ட சமூகமாக மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறு வாழ்ந்து வரும்போது சுயதேடலாக, சுய அடையாள மீட்டெடுப் பாகவே பண்பாட்டுச் சின்னங்களின் பாதுகாப்பு இன்று தீவிரமடைந்து வருகின்றது.

மேலும் இன்று பண்பாடு என்றால் என்ன என்று புதிய எடுகோள்கள் உருவாகும் போது எமது பாரம்பரியம் எது? குறிப்பிட்ட சமூகம் எப்படி வந்தது?, எப்படி வாழ்ந்தது?, அவர்களது மூதாதையர் யார்? அவர்களது பண்பாட்டம்சங்கள் எவை?, அவர்களது புழங்கு பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எவை? அவர்களது இனம், மதம், மொழி போன்ற பண்பாட்டுக் கூறுகளை ஆராயுமிடத்து அங்கே முக்கியம் பெறுவது மரபுரிமைகளின் பேணுகையே ஆகும். அதாவது, தொல்பொருட்கள், ஆவணங்களை, எச்சங்களை ஆராய்ந்தால் மட்டுமே குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டுத் தடங்களை அறியமுடியும். எனவே, இங்குதான் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு அவசியம் என உணரப்பட்டு அவற்றினைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு, அண்மையில் ஏற்பட்டுள்ளது.

மேலும் இன்று உலக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் சுற்றுலாத்துறையை அதிகம் விரும்புபவர்களாகக் காணப்படுகின்றனர். அதாவது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மக்கள் சுற்றுலாவை மையமாக வைத்து வரும்போது குறிப்பிட்ட ஒரு நாடானது தனது நாட்டினது முக்கியமான விடயங்களைத் தெரியப்படுத்த வேண்டி ஏற்படுகின்றது. அதாவது, ஒரு நாட்டில் உள்ள சமூகத்தின் மரபுரிமைச் சின்னங்களைத் தெரியப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும் போதும் அதாவது சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு இதன் முக்கியத்துவம் உணரப்பட்டபோதும் மரபுரிமை சின்னங்களின் தேவை உணரப்பட்டது.

அவ்வாறே ஒரு நாட்டிற்குள்ளும் மேலாதிக்கத்தினால் அல்லது ஆக்கிரமிப்புக்களினால் ஏற்படும் விளைவுகளினாலும் மக்கள் தம் தனித்துவங்கள், தேசியங்களை வெளிக்கொணர்வதற்காகவும் பண்பாட்டுச் சின்னங்களின் பாதுகாப்பின் தேவையை இன்று உணர்ந்து கொள்கின்றனர். உதாரணமாக குறிப்பிட்ட சமூகம் வரலாறுகள் ஊடாகத் தம்மை இனங்காட்ட முடியாது போயினும் ஐதீகங்கள் ஊடாகவும் தம்மை முன்னிறுத்துவர். உதாரணமாக இஸ்ரேல் சமூகத்தினர் தம்மை பைபிள் என்ற புனித நூல் ஊடாக தமது அடையாளத்தை வெளிப்படுத்தினர். அவ்வாறே யூத இனத்தவர்களும் தொல்லியல் நடவடிக்கைகள் மூலமும் தம்மை ஆதாரப்படுத்தியமையைக் கண்டுகொள்ள முடிகின்றது.

மேலும் பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாப்பது என்பது இன்று உலக நாடெங்கிலும் ஓர் அரசியல் தனம் கொண்ட விடயமாக (அரசியல்) மாறி விட்டது. அதாவது அரசியலில் மேலோங்க வேண்டுமாயின் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு அவசியம் என்பதுடன், தொடர்ந்து பண்பாட்டுச் சின்னங்களை பேணுபவர்கள் அல்லது வைத்திருப்பவர்கள் (பாதுகாப்பவர்கள்) பெருமைப்படக் கூடியவர்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் மேலோங்கி காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு குறிப்பிட்ட நாட்டில் சட்டங்கள் உருவாக்கியும் அதனை விட சர்வதேச சட்டங்களாலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இன்று மரபுரிமைச் சின்னங்கள் மீது யுத்தம், காலநிலை, அழிவடைதல், முக்கியத்துவம் அறியாமை, கடத்தப்படல், பாதுகாப்பின்மை, ஏற்றுமதி பாவனைக்குறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போன்ற விடயங்களாலும் மரபுரிமைச் சின்னங்கள் மீது அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இவற்றினைக் கருத்திற்கொண்டு சமகாலத்தில் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்கள் மத்தியில் அதிகம் ஏற்பட்டுள்ளமையை காணமுடிகின்றது.

மற்றும் பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு சட்டங்கள் மட்டுமல்லாது ஒவ்வொரு நாட்டின் அரசாங்கத்தினாலும் அருங்காட்சியகங்களை உருவாக்குதல், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளல், இன்று இவற்றைப் பாடசாலை மட்டங்களுக்கு எடுத்துச் செல்லுதல், பாதுகாப்பிற்காக அதிக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல் அரச மற்றும் தனியார் அமைப்புக்களின் ஊடாக வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுதல், கண்காட்சிகளை நடாத்துதல், நடமாடும் அருங்காட்சியகங்களைச் செயற்படுத்துதல், நூல்கள் வெளியிடல், கற்லொக் வெளியிடல் போன்ற பல விடயங்கள் சமகாலத்தில் பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாத்தல் தொடர்பாக சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.


இவ்வாறான பல காரணங்களால் சமகாலத்தில் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாத்தலின் முக்கியத்துவம் அதிகம் உணரப்பட்டமையைக் காணமுடிகின்றது. அதிலும் இன்று இவை தீவிரமடைந்திருப்பினும் பண்பாட்டுப் பொருட்களைச் சின்னங்களைப்பேணிப் பாதுகாப்பதென்பது எமது புராதன வரலாற்றுக் காலம் தொட்டு எமது நாகரிகத்தின் ஒரு பகுதியாக அமைந்து விட்டன. அதாவது, இற்றைக்கு 2000 வருட காலத்திற்கு முன்னரே எம் எச்சங்களைப் பாதுகாத்தல் என்பது தொடங்கப்பட்டு விட்டது. இவ் மரபுரிமைச் சொத்துக்கள் எமது இனத்தின் அடையாளங்கள். எமது சொத்து. இவை எமது வாழ்வோடு பிரிக்க முடியாத அம்சங்கள். இவ் மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாக்காதுவிடின் அவை ஒரு சமூகத்தின் இனத்தின் உரிமை இழப்பாகும். இவை பேணப்பட வேண்டும், ஆவணப்படுத்தப்பட வேண்டும். இவற்றினை நாம் நூறுவீதம் முழுமையாக பாதுகாக்காது விடினும், இயன்றளவு தற்போதய நிலையிலாவது எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாத்துக் கையளிக்க வேண்டும். இவற்றினைத் தாண்டியும் நாம் எமது மரபினைப் பேணுதல் என்பது நமது கடமையாகவும் கருதுவது சாலச் சிறந்த ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாவல்கள்**


- Pushparatnam. P, 2014. Tourism and monuments of Archaeological Heritage in Northern Sri Lanka: Department Of History, University Of Jaffna.
- அகிலன். பா, 2015. காலத்தின் விளிம்பு யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளும் அவற்றை பாதுகாத்தலும்: பேறு வெளியீடு, 71/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
- கண்ணன். ரா, 2001. பண்பாட்டு செல்வங்களைப் பாதுகாப்பதில் நமது கடமை: அருங்காட்சியம் சென்னை.
- குணராசா. க, 2008. சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு: கமலம் பதிப்பகம் , யாழ்ப்பாணம்
- தங்கமணி. ம, 2007. தொல்லியல்: கொங்கு பதிப்பகம், பண்டியர் நகர், கரூர்
- பத்மநாதன். சி, 2013. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- சத்தியசீலன். ச, 2006. மலாயக் குடிபெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்: அயோத்தி நூலக சேவை, ஐக்கிய இராச்சியம், குமரன் அச்சகம் கொழும்பு.
- புஸ்பரட்ணம். ப, 2008. தொல்லியல் நோக்கி இலங்கைத் தமிழர் பண்பாடு: குமரன் புத்தக இல்லம், சென்னை.
- கிருஸ்ணராஜா. செ, 1998. தொல்லியலும் யாழ்ப்பாண தமிழ்ப் பண்பாட்டுத் தொன்மையும்: குமரன் பதிப்பகம் கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி சுந்தரலிங்கம் சுதர்ஜினி**
இணைப்பாளர்,
இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரி.



# புதுக்குடியிருப்புப் பண்பாட்டில் பாரம்பரிய பண்பாட்டுப் பொருட்கள்

மக்கள் அன்றாட வாழ்க்கையில் தமது தேவைகளுக்கு ஏற்ப பாரம்பரிய பயன்பாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தினர். தானியங்களை மாவாக்குவதற்கு திரிகையைப் பயன்படுத் தினர். தானியங்களைக் குற்றவும் மாவாக்கவும் மர உரல், கல்லுரல், ஆட்டுக்கல் ஆகியவை உதவின. அரைப்பதற்கு அம்மியைப் பயன்படுத்தினர்.



தானியங்களைச் சேமித்து வைப்ப தற்குக் குறிப்பாக நெல்லினைச் சேமித்து வைப்பதற்கு கொம்பறைகளைப் பயன்படுத் தினர். கொம்பறை என்பது வெப்பில் கொடி யால் செய்யப்பட்டு வட்ட வடிவில் அமைந் திருக்கும். அறுவடைசெய்ய அரிவாளும் நெல்லை அள்ளுவதற்குக் கடகமும் நெல் லைத் தூற்றச் சுளகும் நெல்லை அளந்தெடுப் பதற்கு புசல். மரக்கானும் பயன்பட்டன. இவற்றோடு அளவு கருவியாகச் சுண்டுப் பேணியையும் பயன்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடை செய்ய அரிவாள் பயன்பட்டுள்ளது. சூடடிக்கும் போது நெல்லிலிருந்து வைக் கோலை வெளியே தள்ள மரத்தால் ஆன வேலைக்காரன் தடியைப் பயன்படுத்தியுள்ளனர். வயலை உழுது பண்படுத்த மரத்தால் ஆன கலப்பை - ஏர் பயன்படுத்தி அதில் காளை மாட்டைப் பூட்டி வயல் நிலங்களை உழுதனர். கலப்பையால் உழும்போது மிகவும் அவதானத்துடன் உழுவார்கள்.

பொருட்களை வைப்பதற்கு வீட்டில் பொருத்தமான ஓர் இடத்தில் பரண் அமைத்தார்கள். வைக்கோல் புரியால் ஆக்கப்பட்ட பட்டறையை உபயோகித்தார்கள். உணவுப் பொருட்களை மரத்தால் செய்யப்பட்ட பெட்டகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளனர். சமைத்த உணவுகளையும், காய்ச்சிய கறிகளையும் பனை நாரினால் செய்யப்பட்ட உறியில் வைத்துப் பாதுகாத்தனர். மர அலுமாரியைப் பயன்படுத்தினர். பித்தளைச் செம்பு, பித்தளைத் தட்டங்கள், குடம் என்பவற் றையும் தமது அன்றாட வாழ்வில் வீட்டுப் பாவனைப் பொருட்களாக உபயோகித்துள்ளார்கள். காய்கறிகளை வெட்டுவதற்குச் சத்தகத்தையும் மீன் வெட்டுவதற்கு அரிவாளையும் பயன்படுத்தி வந்துள்ளார்கள். மத்துச் சாதனம் மூலம் தயிர் கடையப்பட்டு நெய், மோர் பெறப்பட்டுள்ளன.

நன்மையான காரியங்களை உறவுகளுக்குத் தெரியப்படுத்தும் போதும் வீட்டுக்கு வருபவர்களுக்கு வெற்றிலை கொடுக்கும் போதும் கால் தட்டம் பயன்பாட்டில் இருந்துள்ளது. வெற்றிலைத் தட்டத்தோடு பணிக்கமும் பயன்பாட்டில் இருந்துள்ளது. நீண்ட நேரம் ஓர் இடத்தில் இருந்து வேலை செய்வோர் வெற்றிலை துப்புவதற்கு பித்தளையால் ஆன இப் பணிக்கங் களை உபயோகித்தனர்.

பருகுவதற்கு பனையோலையால் செய்யப்பட்ட பிளா, மூக்குப் பேணி, சிரட்டைகள் என்பவற்றைப் பயன்படுத்தினர். பனையிலிருந்து பல்வகையான பொருட்களைச் செய்து பயன்படுத்தினர். படுத்துறங்க பனையோலைப் பாயைப் பயன்படுத்தினர். சிறு குழந்தைகளை வளர்த்த தடுக்குகளும் பயன்பட்டன. வடலியோலையைப் பயன்படுத்தி காற்று விசிறியையும் செய்து பயன்படுத்தினர். குட்டான் மூலம் பொருட்களைப் பாதுகாத்து வைத்துள்ளனர். பனையோலையால் செய்யப்பட்ட தட்டுவம் மூலம் உணவுகளை உட்கொண்டனர். இதுதான் உணவுக் கோப்பையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அடுக்குப் பெட்டி இதனைக் காசுப்பெட்டி என்றும் அழைப்பர். இதன் மூலம் பண வைப்பு நடைமுறைகளை மேற்கொண்டனர். வட்ட வடிவிலமைந்த அடுக்குப் பெட்டிகளை சந்தை, வியாபார நிலையங்களுக்குப் பணப்புழக்கங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர். கைக்கு அளவான பனையோலையால் செய்யப்பட்ட கொட்டுப்பெட்டிகள் பயன்பாட்டிலிருந்தன. இவற்றில்தான் பணம் பத்திரப்படுத்தப்பட்டது. பனையோலை, பனையோலை மட்டை நார், கொண்டு வடிவமைக்கப்பட்ட உமல் அதாவது அலுவலகப் பை போன்றது.

பனையோலைகளுக்குச் சாயம் பூசி வர்ண ஓலைகளால் சோற்றுப் பெட்டிகள் செய்து அவற்றுள் உணவுகளைக் கொண்டு வயல்களுக்குச் சென்றனர்.

உணவைச் சேமிக்கும் பாத்திரங்களாகச் சரக்குடுவை. சீனச்சாடி போன்றவை பயன் பாட்டிலிருந்தன. நன்கு முற்றிய சுரைக்காயை எடுத்து அதன் குடுவையைச் சுத்தம் செய்து அக்குடுவையினுள் தேன், இறைச்சி போன்ற பொருட்களையிட்டு பல நாட்களுக்குப் பழுதடையாது பாதுகாத்து வைத்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மான்தோல், மரைத்தோல், கங்கில் மட்டை போன்றவற்றில் காலணிகள் செய்து பயன்படுத்தினர். இதைவிட மரத்தால் செய்யப்பட்ட மிதியடிகள் பயன்படுத்தினர். பணத்தைச் சேமித்து வைக்க தேங்காய்ச் சிரட்டையிலான உண்டியலைப் பயன்படுத்தினர்.

மண் பாத்திரங்களைப் பாவனைக்காக வைத்திருந்தனர். நீரைக் குளிர்மையாக வைத்திருக்க களிமண்ணாலான பல்வகை வடிவங்களில் அமைந்த கூசாக்கள் பயன்பட்டன. கறி சமைப்பதற்கு மண்சட்டியையும் மண் பானைகளையும் பயன்படுத்தினர். பிட்டு, இடியப்பம், இவைகளை மூடி அவிப்பதற்கு மண்ணால் செய்யப்பட்ட குண்டான் எனும் மூடி பயன்படுத்தப்பட்டது

ஆண்கள் வெள்ளியிலான சங்கிலி அணியும் வழக்கம் காணப்பட்டுள்ளது. சிறு குழந்தைகளின் உயிர் உறுப்புப் பாதுகாப்பிற்காக அரமூடி எனப்படும் அணிகலன் அவர்களது இடுப்பிலே அணியப்பட்டுள்ளது. இவற்றோடு ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் வெள்ளியிலான அரைநாண் கயிற்றை இடுப்பிலே கட்டிக்கொண்டனர்.

மாட்டு வண்டில் பயன்பாடு காணப்பட்டது. திருமண ஊர்வலங்களில் திருக்கல் வண்டி எனும் ஒற்றை மாட்டு வண்டி பாவனையிலிருந்தது. நடப்பட்ட பயிர் செடிகளுக்கு பனை யோலையால் செய்யப்பட்ட பட்டைகள் கொண்டு நீர் ஊற்றினர். வயல் வெளிகளில் மிருகங்களிலிருந்து பாதுகாப்புப் பெற ஈட்டி, கோடரி என்பவற்றைப் பயன்படுத்தினர்.

கடற்றொழில் தொடர்பான பாரம்பரியப் பயன்பாட்டு பொருட்களாகத் தோணி, கட்டுமரம் இவற்றைப் பயன்படுத்தினர். இவற்றின் மூலம் நந்திக்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ளார்கள். பனையோலையால் செய்யப்பட்ட பறி மீன்களைப் பிடித்துப் போட உதவியுள்ளது. பீசலாந்திக் கம் கொண்டு ஆக்கப்பட்ட கரப்பையையும் மீன்பிடிக்கப் பயன்படுத்தியுள்ளனர். பனையோலை நாரினால் செய்யப்பட்ட தலைவாரை - தொப்பி கடற்றொழிலில் ஈடுபடும்போது அணிந்து சென்றனர்.

தச்சுத் தொழிலின்போது பாரம்பரிய தச்சுத் தொழில் கருவிகளைப் பயன்படுத்தினர். விறுமா எனப்படும் துளையிடும் கருவி, ஆவுகார் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை யாவும் மரத்தால் ஆக்கப்பட்டவையாகும். பலகை, தடிகளில் வேலைப்பாடுகள் செய்வதற்குக் கம்பிக் கூடு, சீவுவதற்குச் சீவுளிக் கூட்டையும் கதவு பீலி இழுப்பதற்குக் கான்கூடு என்பவற்றையும் நிலைக்குத் தட்டு இழுப்பதற்குத் தட்டுக் கூட்டையும் துப்புரவு செய்வதற்குக் கட்டமட்டக் கூடையும் கனங்களை அழுத்திச் சீவுவதற்குத் திரட்டக் கூட்டையும் ஒழுங்காகச் சீவி எடுப்பதற்கு மட்டக் கூட்டினையும் தச்சுத் தொழில் செய்த எமது முன்னோர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

மருந்துகளை இட்டு வைப்பதற்கு தைலாப்பெட்டி பயன்படுத்தப்பட்டது. குறிப்புக்களை எழுதுவதற்கு ஏடும் எழுத்தாணியும் பயன்படுத்தினர். இந்த ஏடும் எழுத்தாணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் போர்க் கலைகளில் ஒன்றான சிலம்பாட்டக் கலைகளுக்காக கம்பு-சிலம்பத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

பலாக்கொட்டு, உடும்புத்தோல் கொண்டு ஆக்கப்பட்ட மத்தளம். உடுக்கு செப்பிலான சல்லாரி, அறிவிக்கப் பயன்படும் கொம்பு, நடிப்பின்போது அணியும் தட்டுடுப்பு என்பன கலை கலாசாரங்களோடு தொடர்புடைய பாரம்பரிய பயன்பாட்டுப் பொருட்களாகும்.

தூண்டாமணி விளக்கு, சால்டு (விழுதமடல்) பொற்பிரம்பு, வெள்ளிப்பிரம்பு, கருங்காலிப் பொல், இரும்பிலான சிலுவை, சேமக்கலம், பித்தளைப் பாத்திரங்கள் என்பன சமயம் சார்ந்த பாரம்பரிய பயன்பாட்டுப் பொருட்களாகும்.

இறந்தவர்களின் சடலத்தைக் கொண்டு செல்லப் பாடையைப் பயன்படுத்தினர். இதற்கு கமுகு மரம் பயன்படுத்தினர்.

ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் பனம் பழம் பழுத்து விழும் காலம். பனம் பழங்களைப் பொறுக்கிச் சேர்த்துப் பனாட்டுச் செய்வார்கள். விழுகின்ற பனம் பழங்களை ஆடு, மாடுகள் பிய்த்துச் சாப்பிடும். இதனால் பனம் பழத்திற்குக் காவல் காப்பார்கள். பனம் பழத்தின் மேற்தோலுரித்து தண்ணீரூற்றிப் பிசைந்து தும்பு எடுத்து துணியில் வடித்துப் பிழிந்தெடுத்த சுத்தமான பனங்களியைப் பன்னிரெண்டு அல்லது பதினான்கு முழம் நீளமான பனை ஓலைப் பாயில் தினம் ஊற்றிப் பரவிக் காயவிட்டு கணக்கான தடிப்பு வந்ததும் புரட்டி எடுத்து புறப்பக்கமாகவும் காய வைத்து எடுப்பார்கள். பனாட்டுத் தட்டுக்கள் காயப்போடும் பாய்களைத் தென்னோலை பரவி தென்னோலையால் பந்தலமைத்துக் காயவிடுவார்கள். இரவு வேளை தூசு பிடியாமல் பாயை மடித்துவிழுவர்.

பனங்காய் பிசைந்து களி எடுத்த பனங்கொட்டைகளையும் ஏனைய பனங்கொட்டை களையும் புரட்டாதி மாதம் மழை பெய்த கையோடு சற்று உயரமான நிலத்தில் பாத்தி வெட்டி அடுக்கி மூடப்படும். பின் தை, மாசி மாதங்களில் கிழங்குகள் பிடுங்கி, ஒடியல் சீவல் சீவிக்காயப் போடுவார்கள். ஒடியல் மாவிடித்துப் பிட்டு அவித்தும் கூழ் காய்ச்சியும் உணவாக உண்பார்கள்.

உழவுக்கும் வண்டிக்கும் எருத்து மாடுகளும் பாலுக்கு உள்ளூர் பசுமாடுகளும் வேறுசில பட்டி மாடுகள் எருவுக்காகவும் வளர்த்தனர். பட்டி மாடுகள் புல்வெளிகளிலும் குளக்கரையோரத்திலும அருவி வெட்டியபின் வயல்களிலும் போய் மேயும். மாலையில் எல்லா மாடுகளும் வீடு வந்து வழமையாய் வளவில் படுக்கும். நெல் வயல்களில் அறுவடை முடிந்ததும் வைக்கோலை வீட்டிற்கு ஏற்றி வந்து மாடுகளின் தீனிக்காகக் குவித்து வைத்திருப் போம். வைக்கோல்கள் ஆண்டு முழுவதும் மாடுகளுக்கு போதுமானதாகவிருக்கும் மாடுகளுக்கென்று குடியிருக்கும் வளவிற்குள் மாட்டுமால் இரண்டு அல்லது மூன்று இருக்கும். மழைக்காலங்களில் மாடுகள் மாட்டு மால்களில்தான் படுக்கும்.

எருதுகளுக்குத் தீனி போடுவதற்கு தீவனத் தொட்டிலுண்டு. இதில் வைக்கோல், கிழித்த பனையோலை ஆகியவைகளை உணவாக வைப்போம் பசுமாடுகளுக்கு வேறாக மாட்டுமாலுண்டு. அவைகளுக்கு செருக்கிய புல், வைக்கோல், எருதுகள் கழித்த - கிழித்த பச்சைப் பனையோலைகளையும் சேர்த்துப் போடுவோம். பாற் பசுக்களுக்கு அரிசிக்கஞ்சி, தவிடு, புண்ணாக்கு என்பனவும் உணவாகக் கொடுக்கப்படும். வீட்டில் தயிரும் மோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குறையாதிருக்கும். வீட்டில் தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பார். தயிர் கடைவதற்கு மத்தைப் பயன்படுத்துவர். அழுத்தமாகச் சீவிய தடியின் அடியில் பல பற்கள் போன்ற அமைப்பில் உருவானதுதான் மத்து. மத்தால் கடைய வரும் வெண்ணெய்யை உருக்கிப் போத்தலில் நெய்யாக விட்டு வைப்பர்.

மாடுகள் போடும் சாணகத்தை கடகத்தில் அள்ளி குவிக்கப்படும். சேரும் குப்பைகளையும் ஓரிடத்தில் குவித்து சேமிப்பர். பின் எல்லாம் வண்டியில் ஏற்றி வயல்களுக்குப் பசளையாகப் பயன்படுத்துவர்.

எங்கள் கிராமம் கால்நடை வளர்க்க வசதியானது. கோடைக்காலத்தில் சில நீர் நிலைகள் வற்றி புல் முளைத்திருக்கும். அறுவடைக்குப் பின் வயல்வெளிகளிலும் கால்நடை புல்மேயும். இவற்றைவிட மேய்ச்சல் தரைகள் இருந்தன.

எரு, குப்பைகளை ஏற்றிப் பறித்தல், வரம்பு கட்டுதல், பசளைகளைப் பரப்பி உழுதல், விதைத்தல் ஆகிய வேலைகள் வயலில் நிகழும். விதைப்பன்று அப்பு, ஆச்சியும் வருவர். வண்டிலில் விதைநெல், சுளகு, விதைப்பெட்டி, மண் வெட்டி, கலப்பைகளைக் கொண்டு செல்வர். அப்பு அல்லது ஆச்சிதான் முதலில் சம்பிரதாயத்திற்கு விதைப்பார்கள். விதைத்த வயல்களை உழுவார்கள். வயலில் மூலைகள். குடாக்கரைகள் உழுபடாது. அதை ஒரு விவசாயி மண்வெட்டியால் கொத்திப் பரவுவார். விதைத்த வயல்களை அன்று அல்லது மூன்றாவது நாள் மறுத்து உழ வேண்டும். புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் விதைத்தால் தை, மாசி, மாதங்களில் அறுவடை நிகழும். அரிவாள் கொண்டு ஆண்களும், பெண்களும் அரிவு வெட்டுவார்கள். வெட்டியவற்றைப் பிடிபிடியாய் வைப்பார்கள். வெட்டி முடிய பிடிகளைக் கட்டி ஒன்று சேர்த்து வரம்புகள் சந்திக்கும் உயரமான இடத்தில் சூடு வைப்பதற்காக எடுத்து வருவார்கள். அடியில் சூடு அகலமாகவும் நுனி படிப்படியாகக் குவிந்து போகும் வகையிலும் சூடு வைப்பார்கள். அனைத்து வயல்களிலும் சூடுகள் அடுக்கடுக்காய் இருக்கும். பார்க்க மனம் நெகிழ்ச்சியடையும்.

இரட்டைப்பட வார்ந்து தடிப்பான குருத்தோலையினால் இருபது முழம் வரை நீளமாக இழைக்கப்பட்ட பாய்களைக் களப்பாய்களாகப் பயன்படுத்தினர். அவ்வாறான களப்பாய்களைத் தேவையான அளவு வரப்புக்கு விரித்து அதன் மேல் சூடுகளைக் குழப்பி பரவி ஏழு அல்லது எட்டு எருதுகளைக் கந்து போட்டு பிணைத்து பரப்பிய சூட்டின் மத்தியலிருந்து கரைச்சூடுவரை நிலையாய் மாடுகளை நிறுத்தி வட்டமாகச் சுற்றிவரத் துரத்தி சூடு மிதிக்கப்படும். பரப்பிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டின் மத்தியில் நிற்கும் மாடு பொலிநடையன், இடையில் நிற்கும். மாடுகள் நடையன்கள், கடைசியாக நிற்கும் மாடு சாடுவாயன் என்றும் அழைப்பர். நெல்லைப் பொலி என்றும், சூடு மிதிக்கும் மாடுகள் போடும் சாணத்தை போர் என்றும் சுளகைமுறம் என்றும், நெல் மிதிக்கும் இடம் களம் என்றும் களத்தில் போடும் பாயைக் களப் பாயென்றும் அழைத்தனர்.

சூடு மிதித்தல் வேலைகள் மாலையில்தான் தொடங்கும். இரவுதான் சூடு மிதிக்க ஏற்ற காலம். சூடு மிதிக்கும் மாடுகளைத் துரத்தும் வேலைக்கென தனிய ஒருவர் நிறுத்தப்படுவார். நடையன்கள் சுற்றிச் சுழன்று பலமுறைகள் சூடு மிதிபடும். சூடு மிதிப்பின் பின் நடையன் களை வெளியில் விட்டுச் சூட்டைக் கிளற வேண்டும். இப்படிப் பலமுறை படிப்படியாகக் கிளறிவிட நெல் மணிகள் கொட்டுப்படும். அதன் மேல் வைக்கோலைப் பாய்க்கு வெளியே கடத்திவிட்டு சுத்தம் செய்து சாக்குகளில் சேர்ப்பார்கள். வைக்கோலைக் கட்டி அல்லது சொரிய லாக வண்டியில் ஏற்றி எல்லாவற்றையும் வீட்டுக்குக் கொண்டு செல்வோம். வீட்டில் நெல்லைக் காயவைத்து கொம்பறைகளில் போட்டு வைப்போம்.

திருமணத்தின் அடுத்த கட்டம் தாய்மை அடைவதாகும். கணவனுடன் உடலுறவு கொள்ளவும் கருத்தரிக்கவும் கருவைத் தாங்கவும் ஏற்ற வகையில் திருமணமான பெண்கள் உணவுகளை உண்பர். உழுந்து, நல்லெண்ணெய், எள்ளுப்பாகு, பசும்பால், சிவத்தை பச்சையரிசிச் சோறு, பேரீச்சம்பழம், பாதாம் பருப்பு, முந்திரிகைப் பழம், செவ்வாழைப் பழம் என்பன இக்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும்.

கருவுற்ற நிலையில் தனக்காக மட்டுமன்றி தனது வயிற்றில் வளரும் சிசுவிற்காகவும் உண்ண வேண்டியிருப்பதால் மிகவும் அக்கறையுடன் கவனிப்பார்கள். உழுந்து, நல்லெண்ணெய் சேர்ந்த உணவுகள் அதிகம் கொடுக்கப்படும். தினமும் 1-2 தேக்கரண்டி நல்லெண்ணெய் குடிக்கக் கொடுப்பர். ஆறாம் மாதத்தின் பின்னர் எள்ளு, பனங்கட்டி, உழுத்தம்மா என்பவற்றைச் சேர்த்திடித்த எள்ளுப்பாகு உண்ணக் கொடுப்பர். கர்ப்பிணியை ஊர் வழக்கில் "பிள்ளைத்தாச்சி" என்று அழைப்பர். மூன்றாம் மாதத்தில் உழுத்தம்மா, கடலைமா, பயிற்றம்மா, அரிசிமா முதலியவற்றைக் கொண்டு பல்வகையான பலகாரங்க ளைத் தாயார் - மாமியார் தேடிக்கொடுப்பர். பப்பாப்பழத்தை இக்காலத்தில் உண்ணக் கொடுக்க மாட்டார்கள். கர்ப்பிணிகள் புளிப்பான மாங்காய், குடைக்காய், புளி, சுண்டைங்காய் ஆகியவற்றை விரும்பி உண்பர். முருங்கையிலை, பொன்னாங்காணி, வல்லாரை, முல்லை, முசுட்டை, பயிரி, வள்ளல் கீரை, தவசிமுருங்கையிலை, தூதுவளை, ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வர். சில கர்ப்பிணிப் பெண்களுக்குப் பாலுடன் குங்குமப்பூ சேர்த்துப் பருகக் கொடுப்பர்.

பிரசவத்தின்போது மருத்துவிச்சி உடனிருப்பாள். தாயினதும் குழந்தையினதும் உடல் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டவளாக மருத்துவிச்சிக் காணப்படுவாள். பொதுவாகச் சுகப்பிரசவமாகத்தான் இருக்கும். குழந்தைப் பேற்றிக்காகப் பிள்ளைத்தாச்சியை வைத்திய சாலைக்குக் கொண்டு போகமாட்டார்கள். கிராமத்தில் அனுபவம் வாய்ந்த மருத்துவிச்சியால் குழந்தைப்பேறு பார்க்கப்படும். இவளுக்கு உபகாரமாக நெல்லும் புதுப்புடவையும் வழங்கிக் கௌரவப்படுத்துவர். தாயானவள் குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர் மருத்துவிச்சி தாயினை ஏறெடுத்து நோக்கிப் பாடும் பாடலே மருத்துவிச்சிப் பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துமாதம் வயிற்றிலே இருந்து நிறைமாதப் பிரசவம் கண்ட குழந்தையை நன்றாகத் தாய்ப்பால் ஊட்டி வளர்க்க வேண்டும். எந்தவிதக் கெடுதலுமின்றி பெற்றோரின் புண்ணியத்தால் கிடைத்த இந்தக் குழந்தையின் உடல் உறுப்புக்களில் எந்தவிதக் குறைபாடும் இல்லை. இதுபோல தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். அறுவைச் சிகிச்சையின்றி சுகப்பிரசவத்தில் பிறந்த குழந்தையை அன்பு, பாசம் காட்டி வளர்க்க வேண்டும். குழந்தை காண்பதிலோ, கேட்பதிலோ எவ்விதக் குறைபாடுமில்லை. தகுந்த பெயரொன்று இட்டு நாள்தோறும் சுத்தம் பேணி சமூகத்தில் வளர்த்திட வேண்டும் என்று மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல் விளங்கி நிற்கின்றது.

"பத்தியம் தாய்க்குச் செய்து - இழந்த
பலம் இனியம் காண்பீரே!
இருபத்தொரு சரக்குகளையோ
இருபத்தேழு சரக்குகளையோ எடுப்பீரே!

என்ற பாடல் வரியானது, பிரசவத்தின்போது ஏற்படும் இரத்த இழப்பு. அதனால் ஏற்படும் பலவீனத்தை பத்திய உணவு முறைகளால் நீக்க முடியும் என்பதைச் செப்புகின்றது.

பிரசவத்தின்போது இழந்த சக்தியையும் இரத்தத்தையும் திரும்பப் பெறுவதற்காகவும் பாலூட்ட வேண்டிய நிலையில் இருப்பதாலும் பிரசவித்த பெண்களுக்குச் சரக்கு அரைத்துக் கொடுப்பார்கள்.

கொத்தமல்லி, நற்சீரகம், மிளகு, தேங்காய்ச்சொட்டு, மஞ்சள் ஆகியவற்றை அம்மியில் பட்டுப்போல அரைத்து எடுத்து, தாச்சியில் போதியளவு நல்லெண்ணெய் விட்டுச் சூடாக்கி, நறுக்கிய பிஞ்சுக் கத்தரிக்காயை இட்டு, நன்கு வதக்கி வெந்துவரும் வேளையில் அரைத்த சரக்கையும் சேர்த்துக் கொள்வர். இஞ்சித் துண்டு, வெங்காயம், உள்ளி என்பவற்றையும் தட்டிப் போட்டு, இறக்கிய பின்னர் குடிக்கக் கொடுப்பர். மீதியைச் சோற்றுடன் உண்ணக் கொடுப்பர். தினமும் ஒரு வேளையாக முப்பத்தொரு நாட்கள் வரை கொடுப்பர். பிரசவித்த பெண்களுக்குக் காயம் கொடுப்பார்கள். மஞ்சள், நற்சீரகம், வேர்க்கொம்பு எடுத்து நல்லெண் ணெயில் கலந்து பட்டாக அரைத்துப் பனங்கட்டியுடன் தினமும் இருவேளை ஐந்தாறு நாட்களுக்குக் கொடுப்பார். விறாத்துக் குஞ்சுகளை அரைத்த கறிக்கு இறைச்சியாகப் பயன்படுத்துவர்.

இவற்றோடு பத்தியக் கறியில் முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, வாழைப் பிஞ்சு, வெள்ளைப் பூடு, பெருங்காயம், வெந்தயம் ஆகியன சேர்ந்திருக்கும். கைக்குத்தல் புழுங்கலரிசிச் சோறே கொடுப்பார்கள். சாராய ஊறல் பருகக் கொடுக்கும் மரபும் உண்டு. சாராய ஊறலில் இருபத்தொரு சரக்குகள் அல்லது இருபத்தேழு சரக்குகளை உள்ளடக்குவர்.

| | | |
|---|---|---|
| 1) வெந்தயம் | 2) சீரகம் | 3) மல்லி |
| 4) சாதிக்காய் | 5) கராம்பு | 6) ஏலம் |
| 7) வசுவாசி | 8) கறுவா | 9)திப்பலி |
| 10) இலவங்கம் | 11) உள்ளி | 12) கோட்டம் |
| 13) மதுரம் | 14) சிறுநாகம்பூ | 15) குங்குமப்பூ |
| 16) வால்மிளகு | 17) கற்கடச்சிங்கி | 18) சிறுதேக்கு |
| 19) மிளகு | 20) ஓமம் | 21) வாய்விடங்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவாகும். ஆகிய சரக்குகள் ஒவ்வொன்றிலும் ஐந்து கிராம் அளவு எடுத்து இடித்து நன்றாக அரித்து இரண்டு போத்தல் சாராயத்தில் ஊறப்போட்டு நெல்லினுள் இரண்டுமாதம் வரை புதைத்து வைப்பார்கள். குழந்தை பிறந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் தினமும் ஒரு வேளையில் ஒரு தேக்கரண்டி வீதம் முப்பத்தொரு நாள்வரைக்கும் கொடுப்பர்.

இருபத்தேழு சரக்குகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1) மிளகு | 2) சுக்கு | 3) நற்சீரகம் |
| 4) திப்பிலி | 5) கடுக்காய் | 6) நெல்லிக்காய் |
| 7) தான்றிக்காய் | 8) பெருஞ்சீரகம் | 9) வாய்விடங்கம் |
| 10) கடுகுரோகினி | 11) வெண்கோட்டம் | 12) அக்கராகாரம் |
| 13) கறுவா | 14) ஏலம் | 15) கராம்பு |
| 16) இலவங்கப்பட்டை | 17) சாதிக்காய் | 18) வசுவாசி |
| 19) திப்பிலி மூலம் | 20) குரோசாணி ஓமம் | 21) குளவிந்த மஞ்சள் |
| 22) வால்மிளகு | 23) மாயாக்காய் | 24) அதிவிடயம் |
| 25) சித்தசித்தரத்தை | 26) மல்லி | 27) அதிமதுரம் |

ஆகியனவாகும். இருபத்தொரு சரக்குகளில் குறிப்பிட்ட மாதிரியே இச்சரக்குகளையும் பயன்படுத்துவர். இந்த உணவு முறைகளை;

மருத்துவிச்சி வாழ்த்துப்பாடலில் வருகின்ற,

"உயிருள்ள இயற்கை உணவுகளை
உண்டு நலம் காண்பீரே!"

என்ற வாழ்த்து வரி இன்றைய சமுதாயத்தின் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமான வரியாகவுள்ளது.

இயந்திர உலகினில் எல்லாவற்றையும் இருந்து கொண்டு எதிர்பார்க்கப் பழகிவிட்டோம். அதனால் உடல் தகுந்த பயிற்சியின்றி கள்ளப்பட்டுபோய்விட்டது. நோய், மருந்து, மாத்திரை. ஊசி தொடர்கதையாக நீளுகிறது. சாதாரண நோய்களுக்கு அசாதாரணமான சிகிச்சை முறைகளும் சிறு நோய்களுக்கு அறுவைச் சிகிச்சைகளும் பெருகிவிட்டன.

உதாரணமாக ஒரு தாயினால் தனது குழந்தையைப் பிறரின் உதவியின்றி பெற முடியாத அவல நிலையைக் காண்கின்றோம். வைத்தியரின் உதவியுடன் சீசர் செய்து (அறுவைச் சிகிச்சை) குழந்தை பிறப்பிக்கப்படுகிறது. எம் முன்னோர்கள் பத்துப், பன்னிரெண்டு பிள்ளைகளையும் சுகப்பிரசவமாக வீட்டிலேயே பெற்றெடுத்தார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

நோயாளின் நோயை அறிந்து, அது வந்த காரணத்தை அறிந்து, அதைப் போக்கும் முறையை அறிந்து, அவன் உடலுக்கு ஏற்ற வகையில் மருத்துவம் செய்ய வேண்டும் என்பது வள்ளுவரின் குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைக்காத உணவுகளில் மனிதனுக்குத் தேவையான எல்லா உயிர்ச் சத்துக்களும், விற்றமின்களும் இயற்கையாகவே அமைந்துள்ளன. சமைத்த செத்த உணவுகளைக் கொண்டு வயிற்றை நிரப்புகின்றோம். அதிகமாகச் சாப்பிட்டால்தான் ஆரோக்கியமாக வாழ முடியும் என்ற நினைப்பில் அதிகமாக உண்டு. அதிக நோய்களை இலவசமாகப் பெற்றுக்கொள்கின்றார்கள். மரக்கறி வகைகளை நெருப்பின் உதவி கொண்டு சூடு ஏற்றி, வாட்டி வதைத்து, உயிர்ச்சத்தற்ற உணவாக ஆக்கிக் கொண்டு உயிர்ப்புச் சக்தியோ, ஊட்டச் சக்தியோ அளிக்காத சக்கை உணவை மட்டுமே உண்டு வயிற்றை நிரப்பி வருகிறார்கள்.

சாப்பிட்ட உணவை இரத்தமாக மாற்றத் தெரிந்த இந்த மனித உடலுக்கு எல்லாவிதமான நோய்களையும் குணப்படுத்தத் தெரியும். மனிதவுடலிலுள்ள Natural Healing Power என்ற இயற்கை நோய் தடுக்கும் சக்தியை வளர்த்து நோய் நீங்கி வாழ வைப்பதே உயிருள்ள இயற்கை உணவுகள்.

வெங்காயத்தை உரிக்கும்போது கண்ணீர் வருகிறது. அதே வெங்காயத்தை வேக வைத்த பின் உரித்தால் கண்ணீர் வராது. வேக வைத்த அந்த வெங்காயத்தில் பஞ்ச பூதங்களின் சக்தி அழிந்து விடுகின்றது. பச்சை வெங்காயத்தில் கண்ணை எரிய வைக்கும் சக்தி இருப்பது போல ஒவ்வொரு இயற்கை உணவிலும் பல சக்திகள் இருக்கின்றன. பச்சைப் பூண்டு இரண்டு மூன்றுதான் சாப்பிடலாம். ஆனால் வேக வைத்த பூண்டு வந்து இருபது சாப்பிடலாம். அப்படியென்றால் எதில் அதிக சக்தியிருக்கிறது என்று சிந்தியுங்கள்.

இந்த உலகத்தில் உணவுப் பொருள்களை இரத்தமாக மாற்றுவதற்கு இயந்திரங்கள் இல்லை. மனிதனுடைய வயிற்றில்தான் உணவுகளை இரத்தமாக மாற்றும் ஒரு சக்தி அமைந்துள்ளது, தாயின் கருப்பையில் வளரும் குழந்தைகளுக்கு கண், காது, சிறுநீரகம், கல்லீரல், இருதயம் உண்டாவதற்காக எந்த மருந்துகளையோ இயந்திரங்களையோ உபயோகிப்பதில்லை. பஞ்சபூதங்களின் உதவியால் மனித உடல்தான் ஒரு குழந்தைக்குத் தேவையான உறுப்புக்களை உண்டாக்கிய இந்த உடம்புக்கு இந்த உடம்பிலுள்ள நோய்க ளைக் குணப்படுத்தத் தெரியாதா? கருவுற்ற தாயிடம் குழந்தை பெறுவதற்கு ஒரு நிமிடம் முந்திக்கூட தாய்ப்பால் வெளிவருவதில்லை. குழந்தை பிறந்த மறுநிமிடமே தாய்ப்பால் கிடைக்கின்றது.


சந்தைகளில் கீரைகளையோ, காய்கறிகளோ, வாங்கச் செல்கின்றோம். மரக்கறிகள், வாடியிருந்தால் அவற்றை நாம் வாங்குகின்றோமா? வாடியிருக்கும் அந்தக் காய்கறிகளில் சத்துக்கள் செத்துப் போயிருக்கும் என்றுதானே வாங்க மறுக்கின்றோம். அப்படியானால் அவற்றை நாம் அடுப்பில் வேக வைத்துச் சமைத்துச் சாக வைத்துச் சாப்பிடும்பொழுது அவற்றின் சத்துக்கள் அழிந்துவிடும், குறைந்துவிடும் என்று ஒரு நொடியாவது நாம் சிந்தித்திருக்கின்றோமா?

இன்றைய உலகில் பெண்கள் தாய்மையடைந்து குழந்தை பெறுவதை மிகவும் கஸ்ரமான ஒரு வேலை என்று நினைக்கும் அளவுக்கு தங்கள் ஆரோக்கியத்தை இழந்தி ருக்கிறார்கள். முன்னைய காலங்களில் ஒரு நிறைமாதப் பிள்ளைத்தாச்சி காட்டிற்கு விறகு பொறுக்கி வரும்போது காட்டிலேயே குழந்தையைப் பெற்றுவிட்டாளாம். குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு விறகுக் கட்டையும் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு நடந்து வந்து விட்டாளாம். அந்தளவிற்குப் பெண்கள் ஆரோக்கியமாக அன்று வாழ்ந்தார்கள். உயிருள்ள இயற்கை உணவுகளை உண்டு நலமாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ந. பார்த்தீபன்,**
ஓய்வுநிலை உபபீடாதிபதி,
தேசிய கல்வியியல் கல்லூரி,
வவுனியா.



# மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம்

எமது நாட்டின் ஒற்றுமைக்குப் பல காரணிகள் இருப்பினும் மொழிப் புரிந்துணர்வு என்பது அவற்றுள் மிக முக்கிய காரணி எனலாம். இந்த மொழிப் புரிந்துணர்வுக்கு கலை, இலக்கியங்கள் பெருமளவு உதவும் என்பது நிதர்சன மான உண்மையாகும். மகாகவி பாரதி குறிப்பிட்டதுபோல் "வெள்ளம்போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் பார்வை பெற்று உயர்வர்" என்பதற்கு ஏற்ப மொழிப் பள்ளம் நிரவப்பட வேண்டும். அதற்கு மொழிபெயர்ப்பு அத்தியாவசியமானது.

சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங் கள மொழிக்கும் இலக்கியப் படைப்புக்களை மொழிபெயர்ப்புச் செய்வது என்பது முற்றி லும் ஓர் இலக்கியச் செயற்பாடு மட்டுமல்ல. இன்றைய நமது அரசியல் பின்னணியில் அது ஒரு சமூக - அரசியல் நடவடிக்கையும் ஆகும். குறிப்பாக வட மாகணத்தில் எழுதப் பட்டுள்ள சிறுகதை, கவிதை, நாவல், கட்டு ரைகள் சிங்கள மொழியிலும், சிங்கள மொழி யில் இனப்பிரச்சினை தொடர்பாக எழுதப்பட் டுள்ள ஆக்கங்கள் தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இனத்துவ அடிப்படையில் பிளவு பட்டுக் கிடக்கும் ஒரு நாட்டில் இன ஒருமைப் பாட்டையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதில் மொழி பெயர்ப்புகளும் பங்களிப்புச் செய்ய முடியும். அவ்வகையில் தேசிய மொழிகளில் பரஸ்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புகளை ஊக்குவிக்க தேசிய நலனில் அக்கறையுள்ள அனைவரும் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கலை, இலக்கியம் என்பன காலத்தின் கண்ணாடிகள் எனலாம். ஒவ்வொருவருடைய பிரச்சினைகள், துன்ப - துயரங்கள், மனப்பாங்குகள், செயற்பாடுகள், குறுகிய நிலைப்பாடுகள், அனுபவங்கள், ஆற்றாமைகள் போன்றன கலையாக - இலக்கியமாக பரிணமிக் கின்றன. இவற்றினூடாக பரஸ்பர புரிந்து ணர்வை ஏற்படுத்த முடியும் என நம்பலாம். ஏனைய மொழியில், குறிப்பாக சிங்கள, தமிழ் மொழியில் எழுந்துள்ள கலை - இலக்கியங் களை மொழிபெயர்ப்புச் செய்யப்படுவது அவசியம் என உணர்ந்ததன் விளைவே இக்கட்டுரை. இந்நிலையில் சரியான மொழி யெர்ப்புகள் வரவேண்டும். இல்லையெனில் பிள்ளையார் பிடிக்கப் போய்... என்ற கதை யாய்ப் போய்விடும் ஆபத்தும் உண்டு.

> இனத்துவ அடிப்படையில் பிளவுபட்டுக் கிடக்கும் ஒரு நாட்டில் இன ஒருமைப்பாட்டையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதில் மொழிபெயர்ப்புகளும் பங்களிப்புச் செய்ய முடியும். அவ்வகையில் தேசிய மொழிகளில் பரஸ்பரம் மொழிபெயர்ப்புகளை ஊக்குவிக்க தேசிய நலனில் அக்கறையுள்ள அனைவரும் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எழுத்தாளர் எஸ்.ராமகிருஸ்ணன் 'நிலவழி' என்ற நூலை எழுதி வெளியிட்டார். இந்தியாவில்அதன் மாநிலங்களுக்கிடை யிலான இலக்கியத் தொடர்புகள் குறைந்த நிலையில் இருப்பதால் ஏனைய மாநில இலக்கியங்களைத் தமிழ்மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்து.... ஆங்கில மொழி, ரஷ்ய ஏனைய மொழிகளிலுள்ள இலக்கியங்கள் மொழிபெயர்ப்புச் செய்த அளவிற்கு இந்திய ஏனைய மாநில மொழிகளின் இலக்கியங் கள் மொழிபெயர்ப்பு செய்யப்படாமை பெரிய குறைபாடு என்ற குறிப்பையும் வழங்கியுள்ளார். இந்நிலையில் எமது நாட்டில் இது ஒரு சமூக - அரசியல் நடவடிக்கையாகவும் இருப்பதால் மொழிபெயர்ப்பின் அவசியம் உணரப்படுகிறது.

மொழிபெயர்ப்பு என்பது ஒரே கருத்தை வெளிப் படுத்துவதற்காக ஒரு மொழிக்குப் பதிலாக பிரிதொரு மொழியைப் பிரதியீடு செய்வதாகும். அதாவது குறிப்பிட்ட ஒரு மொழியில் கூறப்பட்ட அதே கருத்தை இன்னொரு மொழியில் கூறுவதாகும். மேலும் சற்று விரிவாகக் கூறு வதானால் ஓர் ஊடகத்தில் கூறப்பட்ட விடயத்தை இன்னு மோர் ஊடகத்துக்கு மாற்றுவது எனலாம். எடுத்துக் காட்டாக சிங்கள மொழியில் உள்ள விடயத்தை தமிழ் மொழிக்கோ அல்லது ஆங்கில மொழிக்கு மாற்றுவது. இவ்வாறு மாற்றும் போது குறியீட்டு முறை அனைத்தும் முற்றாக மாறுகின்றது. சொல்லப்பட்ட விடயப் பொருள் மட்டுமே எஞ்சி நிற்கின்றது.

பல்வேறு நாடுகளையும் பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் தமக்குள் தொடர்புகொள்ள நேர்வதனால் ஏற்படும் கலாசாரக் கலப்பின் ஓர் அம்சம் இந்த மொழிபெயர்ப்பு. மேற்கூறிய விடயத்தைப் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இருப்பிடங்களிலும் பல்வேறு மொழிகளைப் பேசும் (ஒரே மொழியாக இருப்பினும் சொற்களில் பல வேறுபாடுகளைக் கொண்டிருத்தல்)பல்வேறு மக்களுடன் மொழி பெயர்ப்பாளர் தொடர்பு கொள்ள வேண்டி இருப்பத னால் ஏற்படும் மொழிக்கலப்பின் ஓர் அம்சமாக இந்த மொழிபெயர்ப்பை உள்வாங்கிக் கொள்ளலாம். கலாசார, பண்பாட்டு வேறுபாடுகள், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், உணவு முறை கள், தேசவழமைச் சட்டங்கள் போன்றனவும் இங்கு கவனித்தில் கொள்ளப்பட வேண்டும்.

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன் னொரு மொழிக்கு மொழிபெயர்ப்பது எனப் பரவலாக அறியப்படுகிறது. ஆனால் இவற்றோடு வேறு மொழி பெயர்ப்புகளும் உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தவகையில் செய்யுள் நடையில் இருந்து உரைநடைக்கு (இதுமாறாக உரைநடையி லிருந்து செய்யுள் நடைக்கு), பழைய மொழிநடையில் இருந்து புதிய மொழி நடைக்கு போன்ற மொழி பெயர்ப்பு களும் உண்டு. செய்யுள் நடையில் இருந்து உரை நடைக்கோ பழைய மொழிநடையில் இருந்து புதிய மொழி நடைக்கோ ஆகிய இரண்டும் அவ்வளவாக அக்கறைப்பட வும் தேவைப்படவும் இல்லாத நிலையே காணப் படுகின்றது.

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்ப்பது எனப் பரவலாக அறியப்படுகிறது. ஆனால் இவற்றோடு வேறு மொழிபெயர்ப்புகளும் உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மொழிபெயர்ப்பு என்பது அடிப்படையில் ஒரு மொழி யியல் நடவடிக்கையாகும் என்று குறிப்பிடுவர். மூல மொழியில் உள்ள பிரதிகள் முற்றிலும் அவ்வாறு மொழி பெயர்க்க முடியாது என்று பலரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் மூல மொழியில் உள்ள பிரதிகள் முற்றிலும் அவ்வாறு மொழிபெயர்க்க முடியாதவை என்று கூறு வதைவிட கூடுதலாகவோ குறை வாகவோ மொழி பெயர்க்கக் கூடியவை என்று கூறுவதே பொருத்தமாகும் என்கின்றனர். அதாவது, நூற்றுக்கு நூறு வீதம் சரியாக இருக்கும் என சொல்ல முடியாது, எதிர்பார்க்கவும் முடியாது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். இதுவே பொருத்தமானதும் எனலாம். உதாரணமாக ஆங்கில மொழியில் உள்ள You என்பது தமிழ் மொழியில் நீ,நீர்,நீங்கள் என்ற மூன்று நிலைகளைக் கொண்டி ருக்கும் போது ஒவ்வோர் ஆளும் ஆளாளுக்கு ஒவ்வொரு பொருள் கொள்ள வாய்ப்பாகின்றதல்லவா?

மொழி பெயர்ப்பு செய்பவர்கள் மூல மொழியின் வாக்கிய அமைப்பு, நடை ஆகியவற் றுக்கு விசுவாசமாக இருக்கின்றார்களே தவிர, இலக்கு மொழியின் வாக்கியவியல், நடை யியல் அம்சங்களுக்கு அல்ல. இதனால் இவர்களது மொழிபெயர்ப்புகள் தற்கால புனைகதை உரைநடைக்கு அந்நியமாகத் தோன்றுகின்றன என்று கூறுகின்றார் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான். குறிப்பாகச் சிங்கள இலக்கியங்களுள் நாவல், சிறுகதை என்பவற்றைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் மொழிபெயர்த்ததைக் கவனத்திற்கொண்டே மேற்கூறியவாறு குறைபட்டுக் கூறியிருக்கின்றார். எடுத்துக்காட்டாக... "கம்பெரலிய நாவலில் விருந்தாளிகளை தேநீராலும், வெற்றிலை, சுருட்டுக்களினாலும் உபசரித்தார்கள்" என்று குறிப்பிட்டு, இது "தேநீர், வெற்றிலை, சுருட்டு என்பன கொடுத்து உபசரிக்கப்பட்டார்கள்" என்றுதானே வரும் எனவும் கூறியுள்ளார். இவ்வாறு மொழி பெயர்க்கும் போது மூல நூலில் உள்ள இரசனை, இலக்கு நூலில் இல்லாது போய்விடுகின்றது.

இக்குறைபாடுகளை நீக்க மொழிபெயர்ப்பில் ஈடுபடுபவர்கள் என்ன செய்ய வேண்டும்? முதலில் மூலமொழிப் பிரதியைக் கட்டவிழ்ப்பு செய்து அதில் பொதிந்துள்ள தகவல்களை அல்லது பொருள்களை இலக்கு மொழியின் வாக்கிய அமைப்புக்கும் நடையியல் நியமங்களுக்கும் ஏற்ப அம்மொழியில் மீள் கட்டமைப்புச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் ஒரு நல்ல மொழிபெயர்ப்பு என்பது இலக்கு மொழியில் சுயமாக எழுதப்பட்டது போன்ற தற்புதுமையுடன் காட்சிதரும். மொழிபெயர்ப்பை வாசிக்கும் போது மொழிபெயர்ப் பொன்றைத்தான் வாசிக்கின்றோம் என்ற எண்ணம் வாசிப்பவருக்கு வராத வண்ணம் அது இருக்க வேண்டும்.இதற்கு சிறந்த உதாரணமாக கம்பரா மாயணத்தைக் குறிப்பிடலாம். வடமொழியில் எழுதப்பட்ட இராமாயணத்தை தமிழ் மொழிக்கு உரித்தான வாக்கிய அமைப்புக்கும் நடையியல் நியமங்களுக்கும் ஏற்ப மீள்கட்டமைப்பு செய்துள்ளான் கம்பன்.

செய்யுளை மொழிபெயர்க்கும்போது சற்று ஆழமாகவும் விரிவாகவும் பார்க்க வேண்டும். செய்யுளைப் பொறுத்தவரையில் விடயப் பொருள் மட்டும் போதாது. அத்தோடு ஓசைநயம், அழகியல் போன்ற அம்சங்களையும் பார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஆமணக்கும் தோட்டத்திலே பூ எடுக்கப் போற பெண்ணே உன்னைக் கண்டு கோமணம் துள்ளுதடி". இச்செய்யுளில் ஆ, கோ என்பன பசுவைக் குறிக்க மணம் என்பது கூட்டத்தைக் குறிக்கும். ஆகவே இச்செய்யுள் "பசுக்கூட்டம் உள்ள தோட்டத்தில் பூ எடுக்கப்போன பெண்ணே உன்னைக் கண்டு பசுக்கூட்டம் துள்ளுதடி" என்று மொழிபெயர்ப்பு செய்யும் போது ஓசை நயமும் செய்யுளின் அழகியலும் அடிபட்டுப் போகிறது அல்லவா...? மொழிபெயர்ப்பு செய்யுளை நயக்க வைக்க வேண்டும். வெறுக்க வைக்கக் கூடாது.

> ‘ மொழி பெயர்ப்பு செய்பவர்கள் மூல மொழியின் வாக்கிய அமைப்பு, நடை ஆகியவற்றுக்கு விசுவாசமாக இருக்கின்றார்களே தவிர, இலக்கு மொழியின் வாக்கியவியல், நடையியல் அம்சங்களுக்கு அல்ல. ’

எல்லா மொழிகளிலும் பிரதானமாக இரு வகையான மொழி நடைகள் உள்ளன. ஒன்று விஞ்ஞானம், தொழினுட்பம், பொறியியல், கணிதம், சட்டம் போன்ற அறிவியல் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தும் மொழி நடை. இது திட்டவட்டமான வளைவு - சுழிவுகள் அற்ற மொழிநடை ஆகும். இதனை அறிவியல் மொழி என்று கூறப்படுகின்றது. இது சிக்கல் வாய்ந்தது அல்ல. இரண்டாவது மன எழுச்சிகளையும் உணர்வுகளையும் நுட்பமான கற்பனை களையும் அடிப்படையாகக் கொண்ட கவிதை, சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களுக்குரிய மொழி. இது அழகியல் அம்சங்கள் நிறைந்த, வளைவு - சுழிவுகள் மிகுந்த ஒரு மொழி நடையாகும். இலக்கியத்தில் பயன்படுத்தப்படும் மொழி அம்மொழியைப் பேசும் மக்களின் பண்பாட்டுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார்ந்து பிணைந்துள்ளமையே இதன் காரணமாகும். இங்கு குறிப்பிட்ட மொழியின் அமைப்பு பற்றியும் அதைப் பேசும் மக்களின் பண்பாடு பற்றியும் நன்கு தெரிந்து மொழிபெயர்ப்பில் ஈடுபட வேண்டும். எடுத்துக்காட்டாக 'நீர்' என்ற சொல் வட மாகாணத்தில் வயது குறைந்த ஒருவரைப் பார்த்து விழிக்கும் சொல். இது மரியாதையைக் குறிக்கும். ஆனால் இச்சொல்லே கிழக்கு மாகாணத்தில் மரியாதைக் குறைவாகக் கருதப்படுகிறது.

இதேபோல் வேதாகமத்தில் வெள்ளாடுகளைச் செம்மறி ஆடுகளாக மாற்றுதல் என்ற தொடர் வருகிறது. இது தாழ்ந்தவர்களை உயர்ந்தவர்களாக மாற்றுதல் என்ற பொருளில் வந்துள்ளது. ஆனால் சில பிரதேசங்களில் செம்மறி ஆடுகளை விட வெள்ளாடுகள் தான் பெறுமதியானவை, வீட்டில் அதிகம் விரும்பி வளர்க்கப்படுகின்றன. ஆக வெள்ளாடுகளைச் செம்மறி ஆடுகளாக மாற்றுவது என்பது உயர்ந்தவர்களைத் தாழ்ந்தவர்களாக மாற்றுதல் என்று பொருள்பட வந்து விடும். இன்னும் வடமாகாணத்தில் கொள்ளி என்பது இறுதிச் சடங்கில் பயன்படுத்தும் ஒரு சொல். மற்றைய நேரங்களில் விறகு என்பதே அடுப்பெரிக்க பயன்படும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் கொள்ளி என்பது விறகாகக் கருதப்பட்டு, அந்தக் கொள்ளியை எடுத்து அடுப்பில் வை என்று பயன்படுத்துவார்கள். இவ்வாறே தூக்கம், குளிப்பு, ஆணம் போன்றவை.

1970களில் இலங்கைக்கு வந்த தமிழ்நாட்டின் "கங்கை" என்ற சஞ்சிகையின் ஆசிரியர் பகீரதன் ஈழத்து கவிதை, சிறுகதை, நாவல் போன்றவற்றைப் படிப்பதாயின் அடிக்குறிப்புப் போட வேண்டும் என்று சொன்ன போது அது ஈழத்து எழுத்தாளர்கள், விமர்சகர்கள் மத்தியில் கடும் கோபத்தை உருவாக்கியது. இதன்போது இனி தமிழ்நாட்டு சஞ்சிகைகள், நூல்கள் (குறிப்பாக கவிதை, சிறுகதை, நாவல் போன்றன) என்பவற்றை வாங்குவதில்லை. இறக்கு மதி செய்ய வேண்டாம் என்ற போராட்டமே நடைபெற்றது. இக்காலப் பகுதிதான் வீரகேசரி பிரசுரங்கள் பெருமளவில் வெளியீடு செய்யப்பட்டு ஈழத்து இலக்கியம் மிக ஆரோக்கியமான போக்கில் சென்றன. ஆயினும் அது காலப்போக்கில் கைவிடப்பட்டு... மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல் தமிழ்நாட்டின் மேலாதிக்கம் மிக அதிகமாகிவிட்டது.

அடிக்குறிப்பு போடவேண்டும் என்று சொன்னதன் அர்த்தம் பிரதேச பேச்சு வழக்குச் சொற்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதே. மொழிபெயர்ப்பின் போது கிளைமொழிகள், பேச்சுவழக்குச் சொற்கள் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இஸ்லாமியர்களின் உம்மா, வாப்பா, அப்பா (அப்பாவின் அப்பா) நானா, காக்கா, தாத்தா... போன்ற உறவு முறைச் சொற்களைத் தெரிந்து அதற்கேற்ப மொழிபெயர்க்க வேண்டும். இங்கே மொழிபெயர்ப்பு என்பது ஒரே மொழிக்குள் பிரதேச சமய, இன வேறுபாடுகளை கவனித்துக் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. சில பிரதேசப் பேச்சு மொழியில் காணப் படும் இலக்கியங்கள் வேறு பிரதேசத்தவர்களால் விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் அவ்விலக்கியங்களை நியம மொழியில் படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதும் பொருத்தமில்லை .

அண்மைக்காலத்தில் நடந்த தெரிவொன்றில், அதுவும் மொழிபெயர்ப்பாளர் நிய மனத்தில் ஒருமொழி ஆற்றல் உள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டதைப் பார்க்கி றோம். உண்மையில் மொழிபெயர்ப்பாளர் பரஸ்பரம் தான் மொழிபெயர்க்கும் இரு மொழிப் பயிற்சி பெற்றவராக இருப்பது அவசியம். பின்வரும் உதாரணத்தை எடுத்து நோக்குவோம். ஆங்கில மொழியில் "you eat" என்பது தமிழ் மொழியில் நீ சாப்பிடு, நீங்கள் சாப்பிடுங்கோ, நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடும் என்று மூன்று நிலைகளில் எழுதப்படலாம். இதுவே ஒயா கன்ன, தமுசே கன்ன, உம்ப காப்பங், தோ – காப்பிய என சிங்கள மொழியில் நான்கு நிலைகளில் எழுதப்படலாம். ஆக மொழிபெயர்ப்பாளர் கலை – இலக்கியத் தேவை கருதி மொழிபெயர்க்க வேண்டும்.

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விடயம், குறிப்பாக கவிதை, சிறுகதை, நாவல் போன்றவற்றை மொழிபெயர்பவர்கள், மொழிகளுள் பயிற்சி பெற்றவராக மட்டுமன்றி கலை – இலக்கிய ஈடுபாடு கொண்டவராகவும் இருக்க வேண்டும். தோசையை, ரொட்டியை திருப்பிப் போடுவதுபோல இயந்திரத்தனமாக இருக்காது இலக்கிய ஈடுபாடு, ஆளுமை, ஆற்றல் கொண்ட வராகவும் இருக்க வேண்டும். உலக இலக்கியங்களை மொழிபெயர்த்தவர்கள் எல்லோரும் தம் மொழியில் இலக்கியம் படைத்தவர்களாகக் காணப்பட்டனர். அதனால்தான் முதல் மொழியில் வெளிவந்த போதிருந்த அதன் கவர்ச்சி, ஈர்ப்பு மொழிபெயர்த்த பின்னும் காணப்பட்டது.

நமது நாட்டைப் பொறுத்தவரை சிங்கள மொழியில் இருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியில் இருந்து சிங்கள மொழிக்கும் இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல், குறுநாவல், நாடக எழுத்துப் பிரதி, கட்டுரைகள் ஆகியன மொழிபெயர்க்கப்படுவது அத்தியா வசியம். இந்நிலையில் ஆக்க இலக்கியத்தில் ஈடுபடுகின்ற இரு மொழித் தேர்ச்சி உள்ள வர்களை இனங்கண்டு அவர்களை மொழிபெயர்க்கத் தூண்டவேண்டும். பரிசுகள் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். அரசு இதில் அக்கறையுடன் தொடர்பு கொள்ள வேண் டும். இது பரஸ்பர மொழிபெயர்ப்பாக அமைய வேண்டும். தனியே சிங்கள மொழியில் உள் ளதை மட்டும் (தமிழ் மொழியில் உள்ளதை விடுத்து) தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். இன்று பரீட்சை வினாக்கள், கையேடுகள், தகவல்கள், தரவுகள் என்பன சிங்கள மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பது பெரிதும் நடைபெறுவதை பார்க்கின்றோம்.

பரீட்சை வினாப் பத்திரங்களைச் சிங்கள மொழியில் இருந்து தமிழ்மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்யப்படுவதால் தமிழ் மொழிப் பரீட்சை வினாக்களில் தெளிவின்மை காணப் படுவதை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆங்கில மொழிப் பரிச்சயம் உள்ளோர் தாங்கள் ஆங்கில மொழியில் உள்ள வினாக்களைப் பார்த்துத் தெளிவு பெற்று விடை அளித்து உள்ள தாகக் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான சங்கடங்கள், பிரச்சினைகள் தவிர்க்கப்பட சிறந்த மொழி பெயர்ப்பு அவசியமல்லவா? எடுத்துக்காட்டாக சுனில் கொஹேத யன்னே என்ற சிங்கள வாக்கியத்தைச் சுனிலிடம் கேட்பதாகவும் வேறொருவரிடம் கேட்பதாகவும் கருதலாம். ஒன்று முன்னிலை. மற்றையது படர்க்கை. ஆனால் தமிழில் இது முன்னிலையில் சுனில் எங்கே போகிறாய்?. படர்க்கையில் சுனில் எங்கே போகிறான்? என்றும் அமைவதைப் பார்க்கிறோம். அத்தோடு, மரியாதையாய் எங்கே போகிறீர்கள்? என்றும் எங்கே போகிறார்? என்றும் வரும். ஆனால் சிங்களத்தில் சுனில் கொஹேத யன்னே என்று ஒற்றை வாக்கியமே காணப்படுகிறது.

நிறைவாக, மொழிபெயர்ப்பு என்பது பெரும் கலை. இதனைச் சிறப்பாகச் செய்து மொழி புரிந்துணர்வை ஏற்படுத்துவது அவசியம். மொழிபெயர்ப்புக் கலையில் ஈடுபடுபவர்கள் இதன் தாற்பரியங்களைச் சரிவர உணர்ந்து செய்தால் அது மிகப்பெரிய சேவையாக அமையும். ஏனைய மொழியில் உள்ள கலை – இலக்கியங்களை எல்லோரும் தெரிந்து கொள்ளவும் புரிந்து வாழவும் படித்துச் சுவைக்கவும் ரசித்து மகிழவும் சிந்திந்து வியக்கவும் வாய்ப்பாக இருக்கும். இதனை அரசு ஊக்கிவிப்பதோடு, அக்கறையுள்ளவர்கள் ஈடுபடவும் வாய்ப்பாக அமைந்து நல்ல புரிந்துணர்வும் ஒற்றுமையுமான சமூகம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ்.எம்.நிஸ்தக்**
முஸ்லிம் கலாசார அபிவிருத்தி
உத்தியோகத்தர்,
யாழ்ப்பாண மாவட்ட செயலகம்.



# போதைப்பொருள் பாவனையும் பண்பாட்டு வீழ்ச்சியும்

இன்றைய அறிவியல் உலகத்தில் விஞ்ஞானம் ஒரு புறம் முன்னேறிக் கொண்டிருக்க மறுபக்கம் ஒழுக்க பண்பாடுகளில் மனிதன் கீழ்த்தரமானதொரு நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றான். நவீன உலகில் நவீன தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு புதுப்புது கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் மறுபுறம் மனிதனிடம் குடிகொண்டுள்ள தீய பழக்கங்களின் காரணமாக அவன் தனது வாழ்வை நோயிலும், துன்பத்திலும் சிக்கவைத்துக் கொள்கின்றான். போதைப்பொருள்களில் மதுப்பழக்கமும், புகைப்பிடித்தலும் மனிதனிடம் மிகப் பெரும் தீய விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

“மதுபானம் என்பது, மனிதர்கள் மூளையை இழந்து விடுவதற்காக வாய்க்குள் திணிக்கும் நச்சுப்பொருளாகும்.” மதுபானங்களை அருந்துவதில் எமது இளைஞர்கள் காட்டி வரும் வெறித்தனமான அதீத ஈடுபாடு எமது சமூகத்தீங்குகளை மேலும் பெருகச் செய்து வரு கின்றது. சமூக நடத்தைகளிலும் ஒழுக்கநெறி முறைகளிலும் அது மோசமான பிறழ்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி வருவதுடன் சமய, கலாசாரப், பண்பாடுகளிலும் மற்றும் மருத்துவ ஆரோக்கியத் துறைகளிலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

சிந்தனைத் திறனுள்ள எவரும் இந்த கசப்பான உண்மைகளை வெளியில் எடுத்துக் கூறத் தயங்கமாட்டார்கள். மதுப்பழக்கத்தின் மூலம் ஏற்படக்கூடிய நோய்களால் பீடிக்கப்பட்ட வர்களும், மனநோயர்களான போதை அடிமைகளும் மருத்துவமனையில் நிரம்பி வழிகின்றனர். அவற்றுக்கு வெளியே ஆயிரக்கணக்கான மக்கள் மதுவெறியில் கொலை, தற்கொலை, களவு, பயமுறுத்தல், ஒழுக்கக்கேடு என்பவற்றில் ஈடுபட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

மதுபானம் மனிதர்களை அவர்களுடைய பிரச்சினைகளிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கின்றது. ஆனால் முடிவில் அவர்களுடைய பிரச்சினைகளும், கவலைகளும் மேலும் பன்மடங்காகப் பெருகுகின்றன. அது வாழ்வின் துன்பங்களைப் போக்குவதற்குப் பதிலாக சமூகத்தில் பொருள் சார்ந்த வறுமையையும், ஒழுக்கக் கேட்டையும், கலாசாரச் சீரழிவையும் ஏற்படுத்தி அதனை உபயோகிப்பவருக்கு நிவாரணம் அளிப்பதற்கு பதிலாக அவரை நசுக்கி விடுகின்றது. "மதுபானத்தை அருந்தாதீர்கள் அது உங்களுடைய ஆன்மாவை நிம்மதியாக்கு வதற்குப் பதிலாக உங்கள் புத்தியை பேதலிக்கச் செய்துவிடும்" என மறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

புகையிலையைத் தூளாக்கி அதில் வேறு பல பொருட்களைச் சேர்த்து ஒரு காகிதத்தில் சுற்றி பின்பு அதை எரியவிட்டு சிகரெட் அல்லது பீடி என்ற பெயரில் அதிலிருந்து வரும் புகையை உள் இழுப்பதை புகைத்தல் என்று கூறப்படுகின்றது. புகைப்பதற்கு பயன்படுத்தப் படும் மூலப்பொருளான புகையிலையை பயன்படுத்துவது இன்றைய நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு புதிய பழக்கமல்ல. மாறாக கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக புகையிலையை புகைப்பதற்கும், வாயிலிட்டு மென்று சுவைப்பதற்கும், தூளாக்கி மூக்கிலிட்டுக் கொள்வதற்கும் என பல நோக்கங்களுக்காக மனிதர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

என்றாலும் புகையிலை இன்று புகைப்பதற்கே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. மருத்துவ உலகம் இன்று புகைத்தலும் போதைக்கான ஒரு காரணி என்பதை நிரூபித்துள் ளது. சிகரெட்டிலிருக்கும் "நிகொடின்" என்ற பொருள் கொடிய நச்சுத்தன்மை கொண்டது. மது, கஞ்சா, அபின் போன்றவைகள் போதை தருவதைப் போன்றே நிகொடினும் போதை தரும் ஒரு பொருளாக உள்ளது என்பதை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் விபரீதங்களில் சிலதைச் சுட்டிக்காட்டு கின்றேன்.**

**1. நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்துகின்றது.**


1962ஆம் ஆண்டு முற்பகுதியில் ஐக்கிய இராச்சியத்தின் ரோயல் கல்லூரி மருத்துவர்கள் வெளியிட்ட "புகைத்தலும் ஆரோக்கியமும்" என்ற முதலாவது அறிக்கையின் முடிவுரையில் சிகரெட் புகைத்தல் நுரையீரல் புற்றுநோயையும், சுவாசக்குழாய் நோயையும் ஏற்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **புகைப்பிடித்தல் எயிட்ஸ், ஓரினப் புணர்ச்சி போன்ற நோய்களுக்கு காரணமாகின்றது.**



இன்று உலகத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற மற்றுமொரு நோய் தான் "எயிட்ஸ்" இதற்கும் புகைப்பிடித்தலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு எனலாம். அத்தோடு ஓரினப் புணர்ச்சியைத் தூண்டும் என்று சமீபத்தில் அமெரிக்காவிலும், தாய்லாந்திலும் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன. சிகரெட்டில் இருக்கும் "நிகொடின்" எனும் நச்சுப் பொருள் இரத்தத்தில் ஊடுருவுவதன் மூலம் பல வினோதமான பாலின உணர்வுகளைத் தூண்டுகின்றது. அது மட்டுமன்றி முதலில் புகைப்பிடித்தவர்கள் பிறகு ஓரினப் புணர்ச்சிக்கு அடிமையாகி பின்னர் எயிட்ஸ் நோய்க்கு அடிமையானோர் ஏராளம் என்று ஓரினப் புணர்ச்சியாளர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட இவ்வாய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. (தகவல்: தினகரன் 2000 ஆம் ஆண்டு மே மாதம், 31ஆம் திகதி)

3. **புகைப்பிடித்தல் குழந்தைப் பாக்கியத்தை இழக்கச் செய்கின்றது.**

இன்று உலகத்திலே அதிகமான மனிதர்கள் குழந்தைப் பாக்கியமற்றவர்களாக காணப்படுகின்றனர். அதற்குரிய காரணத்தை அறிந்து கொள்வதற்காக பல்வேறுபட்ட மருத்துவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். இவ்வாய்வுகளில் "இந்திய பாதுகாப்பு தொடர்பான மருத்துவர்கள்" வெளியிட்டுள்ள தகவலைப் பார்க்கும் போது அதிர்ச்சியூட்டுவதாக அமைந்துள்ளது.

இந்தியாவிருந்து வெளிவருகின்ற தினமணி பத்திரிகையில் இவ்வாய்வு பிரசுரிக்கப்பட்டிருந்தது. "புகைப்பிடிப்பதால் மலட்டுத்தன்மை ஏற்படும் அபாயம் உள்ளது. இருதயத்தில் இரத்தக் குழாய்ச் சுவர்களைத் தடித்துப் போக வைப்பதுடன், உடலின் ஏனைய பாகங்களில் உள்ள இரத்த குழாய்களையும் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதனால் உடலுறவு கொள்ள இயலாது போய்விடும் அபாயமும் உள்ளது. புகைப்பிடிக்கும் பழக்கம் ஆணுறுப்பில் இரத்தக் குழாய்கள் சுருங்கிப் போக வழிவகுக்கும். மேலும் ஆண்மையை இழக்க நேரிடும். புகைப் பிடிக்கும் பழக்கம் காரணமாக பெண்களுக்கு மாதவிலக்கு முன்கூட்டியே வரும், கருவுறுதலைக் குறைக்கும், கருவுள்ள பெண்கள் விடயத்தில் அது பிறக்கப் போகும் குழந்தைகளை பெரிதும் பாதிக்கும்"

(தகவல் : தினமணி 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம், 18 ஆம் திகதி)


❖ **போதைப் பொருள் பாவனையை தடுத்தல் சம்பந்தமாக தேசிய, சர்வதேச ரீதியில்**

1. இலங்கையில் 1979 ஆம் ஆண்டு முதல் புகைத்தலைக் கட்டுப்படுத்தும் முகமாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. புகைப்பிடித்தல் எயிட்ஸ், ஓரினப் புணர்ச்சி போன்ற நோய்களுக்கு காரணமாகின்றது.**



இன்று உலகத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற மற்றுமொரு நோய் தான் “எயிட்ஸ்” இதற்கும் புகைப்பிடித்தலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு எனலாம். அத்தோடு ஓரினப் புணர்ச்சியைத் தூண்டும் என்று சமீபத்தில் அமெரிக்காவிலும், தாய்லாந்திலும் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன. சிகரெட்டில் இருக்கும் “நிகொடின்“ எனும் நச்சுப் பொருள் இரத்தத்தில் ஊடுருவுவதன் மூலம் பல வினோதமான பாலின உணர்வுகளைத் தூண்டுகின்றது. அது மட்டுமன்றி முதலில் புகைப்பிடித்தவர்கள் பிறகு ஓரினப் புணர்ச்சிக்கு அடிமையாகி பின்னர் எயிட்ஸ் நோய்க்கு அடிமையானோர் ஏராளம் என்று ஓரினப் புணர்ச்சியாளர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட இவ்வாய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. (தகவல்: தினகரன் 2000 ஆம் ஆண்டு மே மாதம், 31ஆம் திகதி)

**3. புகைப்பிடித்தல் குழந்தைப் பாக்கியத்தை இழக்கச் செய்கின்றது.**

இன்று உலகத்திலே அதிகமான மனிதர்கள் குழந்தைப் பாக்கியமற்றவர்களாக காணப்படுகின்றனர். அதற்குரிய காரணத்தை அறிந்து கொள்வதற்காக பல்வேறுபட்ட மருத்துவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். இவ்வாய்வுகளில் “இந்திய பாதுகாப்பு தொடர்பான மருத்துவர்கள்” வெளியிட்டுள்ள தகவலைப் பார்க்கும் போது அதிர்ச்சியூட்டுவதாக அமைந்துள்ளது.

இந்தியாவிருந்து வெளிவருகின்ற தினமணி பத்திரிகையில் இவ்வாய்வு பிரசுரிக்கப்பட்டிருந்தது. “புகைப்பிடிப்பதால் மலட்டுத்தன்மை ஏற்படும் அபாயம் உள்ளது. இருதயத்தில் இரத்தக் குழாய்ச் சுவர்களைத் தடித்துப் போக வைப்பதுடன், உடலின் ஏனைய பாகங்களில் உள்ள இரத்த குழாய்களையும் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதனால் உடலுறவு கொள்ள இயலாது போய்விடும் அபாயமும் உள்ளது. புகைப்பிடிக்கும் பழக்கம் ஆணுறுப்பில் இரத்தக் குழாய்கள் சுருங்கிப் போக வழிவகுக்கும். மேலும் ஆண்மையை இழக்க நேரிடும். புகைப் பிடிக்கும் பழக்கம் காரணமாக பெண்களுக்கு மாதவிலக்கு முன்கூட்டியே வரும், கருவுறு தலைக் குறைக்கும், கருவுள்ள பெண்கள் விடயத்தில் அது பிறக்கப் போகும் குழந்தைகளை பெரிதும் பாதிக்கும்”

(தகவல் : தினமணி 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம், 18 ஆம் திகதி)

❖ **போதைப் பொருள் பாவனையை தடுத்தல் சம்பந்தமாக தேசிய, சர்வதேச ரீதியில்**

1. இலங்கையில் 1979 ஆம் ஆண்டு முதல் புகைத்தலைக் கட்டுப்படுத்தும் முகமாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இலங்கையில் 1997ஆம் ஆண்டு ஜனாதிபதியினால் விசேட செயலணியொன்றும் அமைக்கப்பட்டது. இதன் வேண்டுகோளின் படி பொது இடங்கள், அரசாங்க கட்டிடங்கள், வாகனங்கள் என்பவற்றில் புகைப்பிடிப்பது முற்றாகத்தடை செய்யப்பட்டிருப்பதோடு 16 வயதுக்கு கீழ்பட்ட சிறார்களுக்கு சிகரெட், பீடி, சுருட்டு என்பவற்றை விற்பனை செய்வது தடுக்கப்பட்டிருக்கின்றது.

3. இலங்கையில் 2015ஆம் ஆண்டினை போதைப் பொருட்கள் அற்ற வருடமாக மாற்றியமைக்க வேண்டும் என்று பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

4. இந்தியாவில் மன்னர் திப்பு சுல்தான் "மதுவைக் காய்ச்சுவதும், விற்பதும் முழுமையாகக் தடைசெய்யப்பட வேண்டும் என (வருவாய் துறை சட்டம் 1787ஆம் ஆண்டு) அறிவித்து அதை அமுல்படுத்தினார்.

5. 1987 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 26ஆம் திகதி போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

6. 1988 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருளுக்கெதிரான உலக மகாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

### ❖ போதைப் பொருள் பாவனையைத் தடுப்பது சம்பந்தமாக இஸ்லாமிய கண்ணோட்டம்

1. திருமறை வசனம்: "நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம் மதுவிலும், சூதாட்டத் திலும் (அதன் மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டு பண்ணவும் அல்லாஹ்வை நினைவு கூருவதை விட்டும், தொழுகையை நிறைவேற்று வதை விட்டும் உங்களை அவன் தடுப்பதையுமேயாகும். ஆகவே அவைகளில் இருந்து நீங்கள் விலகிக் கொள்கிறீர்களா?" (அத்தியாயம் 5, வசனம் 91)

2. திருமறை வசனம் :"உங்களது கரங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்" (அத்தியாயம் 2, வசனம் 195)

3. முஹம்மது நபியவர்களின் பொன்மொழி: "நீங்கள் மதுவை தவிர்த்துக் கொள்ளுங்கள் அதுவே கெட்டவைகளின் அடிப்படை" (நூல்: நஸயீ,ஹதீஸ் இலக்கம் 5666)


4. முஹம்மது நபியவர்களின் பொன்மொழி:" போதையை ஏற்படுத்தும் ஒவ்வொன்றும் மார்க்கத்தில் ஹராம் (தடுக்கப்பட்டதாகும்)" (நூல்: புகாரி ஹதீஸ் இலக்கம் 5585)

### ❖ போதைப் பொருள் பாவனையும் இளைஞர்களும்

இப்போதைப் பொருள் சமூகத்தின் முதுகெலும்புகள், சூடேறிய இரத்தம், எதிர்காலத் தலைவர்கள் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்ற இளைஞர்களையும் விட்டுவைக்க வில்லை. தனிப்பட்ட ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வுகள், மதிப்பீடுகளின் அடிப்படையில் சுமார் 60 சதவீதமானோர் 13 வயதிலேயே போதைப் பொருளைப் பாவிப்பதற்கு தொடங்கி விடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் 20 வயதுக்கு முன்னர் தீவிரமாக புகைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடங்கிவிடுவதாகவே இன்று கண்டறியப் பட்டுள்ள அப்புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

நகரப் புறங்களில் மாத்திரம் காணப்பட்ட இப்போதைப் பொருள் பாவனை தற்பொழுது குக்கிராமங்களுக்கும் வியாபித்துள்ளமை ஆச்சரியமான ஒரு விடயமாகும். சில வேலைகளில் மிகவும் பின்தங்கிய கிராமங் களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வந்தடை வதில் தாமத மேற்பட்டாலும் போதைப் பொருள் வந்தடைந்திருக்கும். சமய,கலை, கலாசார,பண்பாடு மற்றும் சமூக விழுமியங் களைப் பேணிவந்த எமது மாகாணமும் இக்கொடிய நோயினால் பல சவால்களுக்கு அண்மைக் காலமாக முகங்கொடுத்து வருகின்றன.

இம்மாகாண இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள போதைப் பொருள் பாவனை முறையினால் நமக்கென காணப்படுகின்ற குடும்ப கட்டமைப்பைச் சீரழித்து, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பாதித்து,நாளைய இளந்தலைமுறையினரும் இப்பழக்கத்திற்கு அடிமையாகி அதள பாதாளத்திற்குள் சென்றுவிடுவார்களோ என்ற அச்சம் தற்பொழுது எமது மாகாண சமூக சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக இம்மாகாண இளம் வயதினர் மற்றும் மாணவர்களை இலக்குவைத்து இந்த போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மாகாணத்தினுள் பொது இடங்களின் அருகாமையில் சிதறிக் கிடக்கும் மதுக்குப்பிகளும், மதுப்போத்தல்களும், போதைப் பொருளுக்காக பயன்படுத்தப்பட்ட ஊசிகளும் போதைக்கு எமது இளைய தலைமுறையினர் அடிமையாகிக் கொண்டிருப்பதற்குச் சான்று பகர்கின்றது. அதே போன்று எமது மாகாணத்தில் கல்வி கற்கின்ற பாடசாலை மாணவர்களிடத்தில் இப்பழக்கம் முன்னரை விட அதிகரித்துள்ளதாக சமுதாய சீர்திருத்த அமைப்புக்கள் கவலைகளை வெளியிடுகின்றன. இப்பழக்கத்தினால் எமது இளைஞர்கள் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளைத் தயக்கமின்றி மேற்கொள்கின்றனர். இதனால் பல்வேறு கலாசார சீரழிவுகள் பன்மைத்துவ சமூகமாக வாழ்கின்ற நம்மிடத்தில் ஏற்பட்டுள் ளதை நடுநிலையாக சிந்திக்கக்கூடியவர்கள் புரிந்துகொள்வார்கள்.

❖ **இளைஞர்களிடத்தில் போதைப் பொருள் பாவனைக்குத் தூண்டுகோலாக அமைகின்ற காரணிகளில் சிலவற்றை அடையாளப்படுத்துகின்றேன்.**

1. பெற்றோர், மற்றும் உறவினர்களிடமிருந்து கிடைக்கும் அன்பும், நேரமும் போதாமை.
2. பெற்றோர்களின் முறையான கண்காணிப்பின்மை அல்லது அதிகரித்த கட்டுப்பாடு.
3. பெற்றோர்களின் குடும்பத்தகராறு அல்லது பிரிவு மற்றும் முரண்பாடு.
4. மேற்கத்தேய பாணியிலான குழந்தை வளர்ப்பும் அதிகரித்த பணப்புழக்கமும்.
5. கெட்ட நண்பர்களின் சகவாசமும், தமது வயதுக்கு மூத்தவர்களினது தொடர்பும்.
6. இளைஞர்களின் தோள் மீது சுமத்தப்படும் எண்ணற்ற அழுத்தங்கள்.
7. பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மத்தியில் பாகுபாடு காட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மதஸ்தாபனங்களில் இளைஞர்களை மையப்படுத்திய வேலைத்திட்டங்கள் இன்மை.
9. அதிகளவிலான ஓய்வு நேரமும், வேலையின்மையும்.
10. சினிமா,நாடகம் உள்ளிட்ட ஊடகங்களின் போதைப் பொருள் விளம்பரங்கள்.

போதைப் பொருளின் தாக்கம் தற்பொழுது இன,மத,வயது மற்றும் பால் வேறுபாடின்றி எமது மாகாண இளைஞர்களிடத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் எமது முன்னோர்களினால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்த கலை, கலாசார, பண்பாடு மற்றும் சமூக விழுமியங்கள் மிக மோசமான நிலைமைக்குச் சென்று கொண்டிருப்பதைச் சமூக சிந்தனை யுள்ள யாரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது என்பது யதார்த்தம். இப்பாவனை முறையை இளைஞர்களிடத்திலிருந்து முறியடிப்பது அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய பிரதான பொறுப்பாக உள்ளது. எனவே ஒவ்வொரு கிராமத்திலும் இயங்குகின்ற மதஸ்தாபனங்களின் நம்பிக்கையாளர்கள், சமூக நலன்புரி அமைப்புக்கள், சமுதாய சீர்திருத்தவாதிகள், இளைஞர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் உள்ளிட்ட சமூகத்தின் அமைப்புக்கள் அனைத்து மட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தனிநபர்கள் மற்றும் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுப் பொறுப்புடன் இச்சமூகக் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தமது வருடாந்த நிதியொதுக்கீடுகளில் கணிசமான அளவு நிதியை இச்சமூகக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கிடும் போது கிராம மட்டத்தினிலுள்ள பல்வேறு அமைப்புக்கள் ஒன்றுபட்டு செயற்படுவதினூடாக திறன்பட இச்செயற்பாட்டை முன்னெடுக்க முடியும்.

பாடசாலை மட்டத்தில் அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள் போதைப் பொருள் விவகாரத்தில் சமூக சிந்தனையோடு விழிப்புடன் செயற்பட வேண்டும். ஏனென்றால் போதைப் பொருள் விற்பனையாளர்களின் பிரதான இலக்காக மாணவர்களே காணப்படுகின்றனர். மாணவர்கள் அதிக நேரத்தைக் கழிப்பது பாடசாலையிலேயே ஆகும். எனவே,இது தொடர்பில் பாடசாலை மட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு கரிசனை காட்டப்பட வேண்டும். போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்வுகளை மாத்திரம் மேற்கொள்வதன் மூலம் இதனைச் சாத்தியப்படுத்த முடியாது. பிரயோக ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.




முடிவாக, போதைப் பொருள் என்ற விடயம் தற்பொழுது முழு உலகத்திலும் ஒரு பேசு பொருளாகக் காணப்படுகிறது. சமூகங்களின் சமய, கலை, கலாசார மற்றும் பண்பாட்டு வீழ்ச்சியில் போதைப் பொருள் முக்கிய பங்காற்றுகிறது. எனவே இன,மத,குல, சமய வேறுபாடின்றி ஒவ்வொருவரும் அணுகுவதன் மூலம் எமது இளம் சமூகத்தினரைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதில் எவ்வித சந்தேகமில்லை. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இவ்வுயர்ந்த பணியைச் செய்வதற்கு முயல்வோமாக.!

**"போதை அனைவரதும் பொது எதிரி. அதனைக் கூட்டாகச் சேர்ந்து தோற்கடிப்போம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மைதிலி தயாபரன்,
பொறியியலாளர்.



மின்சாரம் மற்றும்
வெகுசனத்தொடர்புச் சாதனங்களின்
வருகைக்குப் பின்னதான

# வடக்கு மாகாணத்தின் கலைகள்

**யா**ழ்ப்பாண மாவட்டத்திலும் அதனை அண்டியதான நான்கு மாவட்டங்களிலும் மின்சாரம் மற்றும் வெகுசனத்தொடர்புச் சாதனங்களின் வருகையின் முன்னாலும் பின்னாலும் இடம்பெற்ற கலைகளின் வளர்ச்சியையும் அவற்றை ஆற்றுப்படுத்திய மக்களின் மனப்போக்கையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யாவர்க்கும் மகிழ்ச்சியையும் வாழ்க்கையின் எழுச்சியையும் தரும் மின்சாரத்தின் வருகை என்பது இலங்கை மக்களைப் பொறுத்தவரையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலே தொடங்கியிருந்தாலும் வட மாகாணத்திற்கான மின்சார விநியோகம் என்பது இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே வேரூன்றியது. அதிலும் குறிப்பாக வீடுகளுக்கான மின் நியோகம் என்பதைவிடவும் கைத்தொழில்களும் தொழிற்சாலைகளும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தோராம் ஆண்டில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு டீசல் மின்பிறப்பாக்கி கொண்டு வரப்பட்டதே வடமாகாணத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரத்தின் தோற்றுவாய் எனலாம். இதன் மூலம் மக்களுக்கும் மின்சாரம் வழங்கப் பட்டது. தொடர்ந்து ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டில் வட பகுதியில் சுன்னாகம் டீசல் மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதில் இலங்கை மின்சார சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னதாக வடக்குப் பகுதியில் பல பகுதிகளிலும் மின் பிறப்பாக்கியின் உதவியுடன் மின்சாரத்தை வழங்கும் திட்டம் இருந்து வந்தது. அடுத்த இரு தசாப்தங்களில் திட்ட விரிவுகள் மூலம் தேசிய வலையமைப்புடன் சுன்னாகம் கிறீட் உப மின்நிலையம் இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது.

இருப்பினும் ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டில் நாட்டில் தமிழர் வாழும் பல பகுதிகளிலும் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலை காரணமாக மின் கோபுரங்கள் சேதமாக்கப்பட்டு மறுபடியும் மின்சாரம் தடைப்பட்டது. ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றேழில் தனியார் நிறுவனங்கள் மூலம் மின்சாரத்தைப் பிறப்பித்து வழங்கும் வசதிகள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டு சுன்னாகம் உப மின்நிலையம் மறுபடியும் தேசிய வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்ட பின்னாகவே மின்சார விநியோகம் ஒரு குடைக்கீழ் வருவதற்குச் சாத்தியமானது.

ஆங்காங்கே சில சில பின்னடைவுகளைச் சந்தித்திருந்தாலும் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பிரவேசமானது, கலைகளை ரசிப்பவர்களின் மனதில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியதை உணர்ந்து கொள்வதற்கு முடிகின்றது. வடக்கிலும் கிழக்கிலும் மற்றும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் பல விடயங்களும் மக்களின் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் செல்வாக்கைச் செலுத்தியிருந்தாலும் மின்சாரம் மற்றும் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வருகையானது, தவிர்க்க முடியாத ஒரு இடத்தைப் பிடித்திருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மக்களின் மத்தியிற் பிரபல்யமாக இருந்த கலைகள் என்று நோக்கும்போது, நாடகங்களும் நாட்டுக்கூத்தும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கோயிற் திருவிழா போன்ற விழாக்களின்போது குழுநடனம், வாய்ப்பாட்டு போன்றனவும் இடம்பெற்றன. கலைகளை வளர்க்கும் இடங்களாக முக்கியமாக மதத்தலங்களே முக்கியத்துவம் பெற்றன. அதனால் அவற்றின் கருப்பொருளும் இறைவனின் பெருமையைப் பாடுவதாகவும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கு ஏதுவான அறத்தைப் பற்றிச் சொல்லுவதாகவும் இருந்திருக்கின்றது. இதனால் குடும்பத்துடன் சென்று பார்த்து சேர்ந்து ரசிக்கக்கூடியதாக இருந்தது. எனவே பொழுதுபோக்குச் சாதனங்கள் மிகவும் அரிதாக இருந்த அக்கால கட்டத்தில் குடும்பத்தினருடன் சேர்ந்து வெளியில் செல்வதற்கும் பொழுதைக் கழிப்பதற்கும் ஏதுவானவையாக இந்தக் கலைகள் அமைந்திருந்தன. அதனால் அவற்றுக்கு மதிப்பும் மேலோங்கியிருந்தது. திருமறைக்கலாமன்றம் போன்ற மன்றங்களால் நாடகங்கள் உருவாக்கப்பட்டு மக்களின் மத்தியில் பெரு வரவேற்பைப் பெற்றுக் கொண்டன.

நடனக்கலையுடன் சேர்ந்ததான நாடகமான கூத்துக்கலை என்பது மக்களிடையே மிகப் பிரசித்தி வாய்ந்ததாக இருந்தது. தமிழரின் மரபு வழி நாடகமாகக் கொள்ளப்படுகின்ற கூத்து நீண்ட தொன்மையான வரலாறு கொண்டது. நாடகத்திற்கு வழங்கிவந்த பழைய தமிழ்ச் சொல் கூத்து என்பதாகும். குரவைக்கூத்து, துணைங்கைக்கூத்து, தமிழ்க்கூத்து, ஆரியக் கூத்து, வரிக்கூத்து என பண்டைய இலக்கியங்களில் பல கூத்துக்கள் பேசப்படுகின்றன. அத்துடன் கூத்து எமது சடங்குகளிலும் பின்னிப்பிணைந்து கிடக்கிறது. தெய்வத்தை வேண்டிக்கொள்ளவும், மழையை வேண்டியும் குழந்தை வரம் வேண்டியும் விவசாயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விருத்தியினை வேண்டியும் விளைச்சலைப் பெற்றமைக்கான நன்றியினை வெளிப்படுத்தியுமென கூத்துக்கள் ஆடப்பட்டன.

பொதுவாகக் கூத்துகளில் பாத்திரங்களின் உரையாடல்கள் கணிசமான அளவுகளிற் பயன்படுத்தப்பட்டு, தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்வதாக இருந்தது. மாறாக நாடகங்களில் கதையைச் சொல்லுவதற்குப் பாத்திரங்களின் உரையாடல்களும் செயல்களும் அதிகம் பயன்படுத்தப்பட்டன. கூத்து என்பதற்கு அடிப்படை ஆடலாக இருக்கும். இங்கு பாத்திரப்பண்புகளைச் சித்திரிக்கவும் சம்பவங்களை வெளிப்படுத்தவும் ஆடல்களே பயன்படுத்தப்படுகின்றன. அதுவும் இசைக்கு ஏற்றதாக ஆடுவதே அழகு சேர்ப்பதாக இருக்கும் முக்கியமாக இவ்வகையான கூத்துக்களில் சுற்றிவரப் பார்வையாளர்கள் நிற்கக்கூடியதான அமைப்பு இருப்பதனால் எந்த இடத்திலும் இவற்றை நிகழ்த்தக்கூடியதாகவும் இருந்தது.

இவற்றைத் தவிரவும் தென்னிந்திய இசைநாடகக் குழுக்களின் வருகையுடன் ஆரம்ப மான இசை நாடகமானது காங்கேசன்துறை துறைமுகத்தினூடாகவும் பருத்தித்துறைத் துறைமுகத்தினூடாகவும் வந்த இசை நாடகக் குழுக்களின் பங்களிப்பால் யாழ்ப்பாணத்திலும் வடமராட்சியிலும் இசை நாடகங்கள் நடாத்தப்பட்டதாகவும் இவை முதலாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னரான காலத்திலும் முதலாம் இரண்டாம் உலக மகாயுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்திலும் நடத்தப்பட்டிருக்கின்றது. வடமராட்சியில் கூத்துக்களும் இசை நாடகங்களும் இறைவனுக்கான நிவேதனப் படையல்களாகப் பார்க்கப்பட்டதாக வரலாறு பகர்கிறது. இவற்றுடன் வில்லுப்பாட்டு என்ற கலையும் கிராமியக்கலையாக மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தமையைக் காண முடிகின்றது.


கலைகளின் வளர்ச்சியிலும் அதனை ரசிக்கும் மக்களின் மனநிலையிலும் மின்சாரத்தின் வருகை மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. மின்சாரம் என்பது முக்கியமாக வீட்டுத் தேவைக்கன்றி கைத்தொழிலுக்காகவே வளர்ச்சி பெற்றது என்பதை ஏற்கெனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருந்தோம். இருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் இறுதி மூன்று தாப்தங்களில் அது மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணையத் தொடங்கியது. தென்னிந்தியத் திரைப் படங்களின் எழுச்சியும் அவற்றுக்கு முக்கிய ரசிகர்களாக எம்மவர்கள் அமைந்தி ருந்ததும் முக்கியமான திருப்பத்தை கலைகளை ரசிக்கும் பாங்கில் உரு வாக்கியது.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாநகரில் திரை யரங்குகள் (தியேட்டர்கள்) மூலம் திரைப்படங்களை வெளியிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவும் தமிழ் நாட்டில் திரைப்படங்களை வெளியிடும்போதே இங்கும் வெளியிடக்கூடிய வசதி இருந்ததால் உடனடியாகத் திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாடகத்திலும் கூத்திலும் காணப்பட்ட பாரம்பரிய இசைக்கருவிகள், ஒளியூட்டல் என்பவற்றிற்கு மாறாக புதிய இசைக்கருவிகள், ஒளியூட்டல் சாதனங்கள், கமராக்கள் என்பன ஒரு புது கவர்ச்சியை. உருவாக்கியது என்பதில் ஐயமில்லை. தென்னிந்தியத் திரைப்பட நடிகர்களின் விளம்பரமும் திரைப்படங்களில் உள்ள மோகமும் வெகுவாக மக்களைச் சென்றடைந்தது. அதிலும் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் வேகமாக ஊடுருவியது என்பதில் ஐயமில்லை.



வடமராட்சியில் கூத்துக்களும் இசை நாடகங்களும் இறைவனுக்கான நிவேதனப் படையல்களாகப் பார்க்கப்பட்டதாக வரலாறு பகர்கிறது. இவற்றுடன் வில்லுப்பாட்டு என்ற கலையும் கிராமியக்கலையாக மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தமையைக் காண முடிகின்றது.

படிப்படியாக மின்சார விநியோகம் வீடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டபோது தொலைக்காட்சிப் பாவனை அதிகரித்தது. இதனால் திரையரங்குகளுக்குப் படையெ டுக்கும் மக்களின் எண்ணிக்கை படிப்படி யாகக் குறையத் தொடங்கியது. ஊருக் குள்ளே ஓரிரு தொலைக்காட்சிப் பெட்டியே பாவனையில் இருந்தபோது அவ்வீடுகளுக்குச் சென்று பார்வையிடும் பழக்கமும் இருந்தது. இது பாரம்பரியக் கலைகளான நாடகம், கூத்து, நடனம் போன்றவற்றின் பரம் பலைக் குறைத்தது. இருப்பினும் முற்று முழுதாக மக்களின் ரசனையைப் பாதித்திருக்க வில்லை.

அதனைத் தொடர்ந்து ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டுகளில் உள்ளூர் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் ஆரம்பமாயின. இலங்கையின் உத்தியோக பூர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைகாட்சியாக ரூபவாகினியும் அதனுடன் இணைந்ததான தமிழ் மொழிக்குரிய நிகழ்வுகள் மக்களைச் சென்றடைந்தன. அந்த நிகழ்ச்சிகளும் அந்நிகழ்வுகளை நடத்துபவர்களும் 1.மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றார்கள். தென்னிந்தியத் திரையுலகின் மோகம் மக்களைத் தாண்டிச் செல்லாத ஒரு நிலையைத் தக்கவைத்துக் கொண்டது என்று சொன்னாலும் பாரம்பரியக் கலைகளுக்கு அவை ஊக்குவிப்பாக அமைந்திருக்கவில்லை.

ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றைந்தின் பின்பாக யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள் ஓரளவு மின்சாரத்தை அனுபவிக்கும் பேற்றைப் பெற்றன. அக்கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வருகை முற்றுமுழுதான மாற்றத்தை மக்களிடையே ஏற்படுத்தியது. தொழில்நுட்பம் மூலமாக தென்னிந்திய மற்றும் உலகளாவிய ரீதியான தொலைக்காட்சி அலைவரிசைகளை அனவரும் பார்க்கக்கூடியதாக அமைந்ததால், அவை பாரம்பரியக் கலைகளின் சுவடுகளைத்தானும் இளையவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் தவறிவிட்டது என்றே சொல்லலாம். கவர்ச்சியான தகவல்களைத் தருவதான நவீன தொழில்நுட்பங்களுடன் ஆக்கப்பட்டதான அந்த உலகத் தொலைக்காட்சிகளின் தரத்திற்கு எமது நாட்டுக் கலைச்செல்வங்கள் ஈடுகொடுக்கத் தவறியதும் எம்முடைய உறவுகளால் அவை எமக்கு அறிவிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டதும் மக்களின் கலையார்வத்தையும் இரசனையையும் முற்றுமுழுதாகத் திசைதிருப்பிவிட்டது.

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்ததும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வேகமாக மின் மார்க்கங்கள் கொண்டு செல்லப்பட்டதும், அங்கு வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு அதிகரித்ததும் யாவரும் அறிந்ததே. "அனைவருக்கும் மின்சாரம்" என்ற எண்ணக்கருவுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் சமுதாயத்தின் பொருளாதார மேம்பாடு என்பவற்றைக் குறிக்கோட்களாகக் கொண்டு துரித கதியில் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டபோது மின்சாரத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டது போன்று சமூக வலைத்தளங்களின் ஊடுருவலால் முற்றிலும் வேறுபட்ட உலகத்திற்கு மக்கள் ஆற்றுப்படுத்தப்பட்டார்கள். யுத்தத்தின் பின்னதான எழுச்சி என்பது மக்களை நன்கு வளப்படுத்தாத நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் மயக்கத்தையே ஏற்படுத்தின.
முறையான தலைமைத்துவத்தை இழந்தமை மற்றும் தொழில்நுட்பத்தின் கொடும்பிடிக்குள் சிக்கியது என்பன வாழ்க்கையை வேகமாக்கியதுடன் குழப்பங்களைத் தோற்றுவித்தது. இவை பாரம்பரியமான எமது கலைகளின் விரிவுக்கும் செயற்பாட்டிற்கும் குந்தகமாக விளங்கின. நேரப்பற்றாக்குறையினால் குடும்பத்துடன் வெளியிற் செல்லவும் கலைகளை ரசிக்கவும் முடியாமல் இருக்கிறது. அதைவிடவும் பொழுதுபோக்கு என்ற இடத்தை சமூக வலைத்தளங்களும் தொடர் நாடகங்களும் நிரப்பிவிடுகின்றன.

பொழுதுபோக்கு, தொடர்பாடல் முழுமையாக தொழில்நுட்பத்தின் பிடிக்குள் அடக்கிவிடப்பட்டதும் சாதாரணமான வாழ்க்கை வேகமாக்கியதுடன் வேலையில்லாப் பற்றாக்குறையை உண்டுபண்ணியதும் நேரப்பற்றாக்குறையை உண்டுபண்ணியதும் கலைகளின் எழுச்சியை ஏன் இருக்கையையே கேள்விக்குறியாக்கியது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கலைகள் தங்களின் தனித்தன்மையையும் இருப்பையும் இழந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக வடக்கு மாகாணத்தின் பண்பாட்டலுவல்கள் அமைச்சு தொடர்ந்தும் நடத்தும் கலை நிகழ்வுகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் பற்றி இங்கு குறிப்பிட்டாக வேண்டும். கலைகளை ஊக்குவிக்கும் முகமாகவும் எமது பண்பாட்டின் அம்சங்களைத் தெரிவிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோக்கு,
தொடர்பாடல்
முழுமையாக
தொழில்நுட்பத்தின்
பிடிக்குள் அடக்கி
விடப்பட்டதும்
சாதாரணமான வாழ்க்கை
வேகமாக்கியதுடன்
வேலையில்லாப் பற்றாக்
குறையை
உண்டுபண்ணியதும்
நேரப்பற்றாக்குறையை
உண்டுபண்ணியதும்
கலைகளின் எழுச்சியை
ஏன் இருக்கையையே
கேள்விக்குறியாக்கியது
என்பதில் எள்ளளவும் ஐய
மில்லை.






முகமாகவும் இவர்கள் நடத்திவரும் சிறந்த நூற்பரிசுத் தேர்வு, கலைக்குரிசில் விருது மற்றும் இளங்கலைஞர் விருது என்பவற்றின் மூலம் இன்னும் பல்வேறான நிகழ்வுகள் மூலமாகவும் கலைஞர்களுக்கு ஊக்குவிப்பையும் மக்களுக்கு ஆர்வத்தையும் ஒரு நல்ல சுற்றாடலை வழங்கும் என்று திடமாக நம்புவதற்கு முடிகின்றது. தொடர்ந்தும் அவர்களுடன் இணைந் திருந்து கலைகளின் இருப்புக்கு ஏதேனும் பங்களிப்பை வழங்குபவர்களாக இருப்போம் என்று உறுதி கொள்வோமாக.



எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெறிந்த நல்லறிவு வேண்டும்!
-பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ச.முருகையா- முருகு**
45, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்



# நிறத்தால் உடன்பாடு குணத்தால் முரண்பாடு!

பசும்பாலும் வெள்ளைதான்!
கள்ளும் வெள்ளைதான்!!
கவிதையைப் படித்தறிவீர்!
அவற்றின் முரண்பாட்டை!!

பசும்பாலோ வெள்ளை நிறம்!
சுகத்தைக் கொடுக்கும் அது!!
கள்ளும் வெள்ளை நிறம்!
சுகத்தைக் கொடுக்கும் அது!!

வெள்ளைப் பாலை எமக்குத்
தருவதுவோ பசுமாடு!
வெள்ளைக் கள்ளை எமக்குத்
தருவதுவோ பனைதென்னை!!

பாலைப் பருகுபவனை நாம்
மதிப்புடன் பார்க்கின்றோம்!
கள் குடிக்கும் எவனையும் நாம்
தாழ்வாகவே பார்க்கின்றோம்!!

பாலுண்ட எவனாலும் ஊரில்
அமைதியேதும்கெடுகின்றதா?
கள்ளுண்ட எவனாலும் ஊரில்
அமைதியெல்லாம் கெடுகின்றது!

பசுமாட்டின் பாலினால்
நன்மைகள் அதிக முண்டு!
பனைதென்னை தரும் கள்ளினால்
தொல்லைகளே அதிக முண்டு!!

பால் விற்கும் எவன் மீதும்
உயர்வான பார்வை விழும்!
கள் விற்கும் எவன் மீதும்
தாழ்வான பார்வை விழும்!!

பசும்பாலைக் காய்ச்சிப்
பிரையிட்டால் தயிராகும்!!
தயிரினைச் சோற்றுடன் உண்டால்
சுவையுடன் சுகமும் தரும்!!

ஆலயத்தில் சுவாமிக்குப்
பால் தயிரினால்தான் அபிஷேகம்!
ஆலயத்தில் சுவாமிக்குக்
கள்ளினாலா அபிஷேகம்?

வெள்ளைப் பாலையென்றும்
நல்லவரே நாடிச் செல்வார்!
வெள்ளைக் கள்ளையென்றும்
நல்லவரா நாடிச்செல்வார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளை விற்றாலும் பருகுதலும்
தண்டனைக்குரிய குற்றமாக!!
பால் விற்றாலும் பருகினாலும்
தட்டிக்கேட்க யாருமில்லை!!

கள்குடித்தோன் சொல்வதெதையும்
சமூகமென்றும் மதிப்பதில்லை!
கள்குடித்தோன் பேச்செதையும்
சட்டமும் ஏற்பதில்லை.

“கள் குடித்தேன்” என்றெவரும்
சொல்லிடத் துணியமாட்டான்!
“பால் குடித்தேன்” என்றெவரும்
சொல்லிடப் பின்னில்லான்

காலையிலும் மாலையிலும் பாலைப்
பசுவிலிருந்து பெறுகின்றோம்!
காலையிலும் மாலையிலும் கள்ளை
மரத்திலிருந்து பெறுகின்றோம்!!

தன்மானம் சுகாதாரம் பற்றிக்
கவலை கொள்வோன் கள்ளுண்ணான்
தன்மானம் சுகாதாரம் பற்றிக்
கவலை இல்லான் கள்ளுண்ணான்

பாலை நன்கு பருகும் வண்ணம் எவரும்
எவர்க்கும் அறிவுரை சொல்லுகின்றார்!
கள்ளை நன்கு பருகும் வண்ணம் எவரும்
எவர்க்கும் அறிவுரை சொல்வதுண்டோ!

பால் தரும் பசுவிற்கு நல்ல
உணவளித்து வளக்கின்றோம்!
கள் தரும் தென்னை பனைக்கு
உணவளித்து வளர்ப்பார் உண்டோ?

புதுமனையில் புகும்வேளையில்
பால்பொங்கியே புகுவார்கள்!
மணமக்களுக்கு மணமேடையில் முதலில்
பாலும் பழமும் தான் கொடுப்பார்கள்!!

உயிர்பிரியும் வேளையிலெவர்க்கும்
பாலையே ஊட்டிவிடுவார்!
உயிர்பிரியும் வேளையிலெவர்க்கும்
கள்ளையா ஊட்டிடுவார்?

பால் குடித்தால் நல்மதிப்பும்
நற்சுகமும் வளர்ந்துவரும்!
கள்குடித்தால் நல்மதிப்பும்
நற்சுகம் அமிழ்ந்துவிடும்!!

சமயங்கள் எதுவுமெங்கும்
கள்ளுண்ணச் சொல்லவில்லை!
சமயங்கள் எதுவும் மெங்கும்
கள்ளுண்ணத் தூண்டவில்லை!!

பால்குடித்துக் கெட்டழிந்துபோன
குடும்பம் எதுவுமுண்டோ!
கள் குடித்துக் கெட்டழிந்துபோன
குடும்பத்துக்குக் கணக்கில்லை!

குழந்தைக்குப் பசும்பால் கொடுக்கப்
பரிந்துரைப்பார் டாக்டர்கள்!
குழந்தைக்குக் கள்கொடுக்கப்
பரிந்துரைக்கும் டாக்டர் உண்டோ?

அணு அணுவாய் உயிர்வளர்க்கும்
பசும்பாலா உம் தெரிவு?
அணு அணுவாய் உயிர் பறிக்கும்
கள்ளா உம் தெரிவு?

சுகம் கொடுக்கும் பசும்பால் பற்றி
அறிந்தவற்றைச் சொல்லிவிட்டேன்!
சுகம் கெடுக்கும் கள் பற்றியும்
அறிந்தவற்றைச் சொல்லிவிட்டேன்!!


உங்கள் தெரிவு எதுவோ
சுகம் கொடுக்கும் பசும் பாலா?
உங்கள் தேர்வெதுவோ
சுகம் கொடுக்கும் வெள்ளைக் கள்ளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**
முன்னாள் அதிபர்,
மெய்கண்டான் மகாவித்தியாலயம்,
இளவாலை.

# பண்பாட்டுக் கோலங்கள்



அண்மையில் அமரரான தமிழறிஞரும் கல்வியாளருமான சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் எங்கள் பண்பாடு கண்ட உன்னத ஆளுமை. முன்னைப்பழமைக்கும் பின்னைப்புதுமைக்கும் மூலவராய் விளங்கிய எங்கள் பண்பாட்டின் பெருஞானப் பெட்டகம்.எங்கள் காலத்தின் வழிகாட்டியான அவரின் பணிகள் யாவும் அர்த்தம் நிறைந்தவை.அவரோடு பழகக் கிடைத்த பொழுதுகளின் மேண்மை நிகரிலாதது. அவரின் உள்ளக் கமலத்தைப் பிரதிபலித்த வெள்ளைநிற ஆடை; உள்ளங்களைக்கொள்ளை கொள்ளும் தொடர்பியல் வல்லமை எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. தமிழ்ப்பண் பாட்டின் இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கிய பேராளுமையான அவரின் மேலான நினைவுகளைக் காத்திடுவோம்.

இந்த ஆண்டின் பண்பாட்டுவிழா அரங்கு அவரின் பெயரால் அமைவது குறிப்பிடத்தக்கது.

**- பேராசிரியர் என் சண்முகலிங்கன்**

ஒரு இனத்தின் நடத்தைகளே, வாழ்க்கையை நடத்தும் முறைகளே பண்பாடு ஆகும். இது முந்திய தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறை பெற்றுக்கொள்ளும் செல்வமாகும்.

நடத்தைகள் எல்லாம் பண்பாடு என்று சொல்லப்பட்டாலும் நீர் என்றால் நன்னீரையே குறிப்பது போல நல் நடத்தைகளே பண்பாடு எனப் போற்றப்படும். பண்பட்டதே பண்பாடு.

ஒரு இனத்தை அடையாளப்படுத்துவது அந்த இனத்தின் பண்பாடே ஆகும். பல்லாயிரக் கணக்கான இனங்கள் வாழும் உலகத்தில் தமிழர்களாகிய நாம் எங்கள் இனத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவத்தை, அடையாளத்தை நிலைபெறச் செய்வதற்கு எங்கள் பண்பாட்டைக் காக்க வேண்டும்.

நமது நடத்தைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது. சிறப்பாக எமது பெயர், உடை, உணவு, உறையுள், உபசரிப்பு முறை, உறவாடும் முறை, பெரியோரைக் கனம் பண்ணும் முறை, நமது சடங்குகள், விழாக்கள், ஒழுக்க முறைகள் என அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது.

**பெயர் :**

ஒருவரை, இவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர், எந்த மொழிக்கு உரியவர், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர், எந்தப் பண்பாட்டுக்கு உரியவர் என்பதை அவருடைய பெயர்தான் அடையாளப்படுத்துகிறது. ஆணா, பெண்ணா என்பதைக்கூட பெயர்தான் காட்டுகிறது. அதனால்தான் எவருக்கும் பெயர்தான் முதல் அடையாளமாக உள்ளது. பெயர் இல்லாதவன் இந்த உலகத்தில் எவருமே இல்லை. ஆதலால் பண்பாட்டின் வேர் பெயர் ஆகும் என்பது எல்லோர்க்கும் தெரிந்த ஒன்று.

தமிழர்களாகிய நம்முன்னோர்கள் அனைவரும் தமிழ்ப் பெயர்களை உடையவர்களாகவே இருந்தனர். பெயர் சூட்டுதலையே ஒரு முக்கியமான சடங்காகவே செய்தனர். பெயரைக்கொண்டு பொருளை அறிதல் போல ஒருவரின் பெயருக்கேற்பவே அவருடைய நடத்தைகள் அமையும் என்பதால் ஒரு பெரியவர் மூலம், சுபநேரத்தில் இறைவனை வணங்கிப் பெயர் சூட்டி அப்பெயரை எல்லோரும் அழைத்து அக்குழந்தையை வாழ்த்துவர். இதனை நாமகரணம் எனப் பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது. ஒரு மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லும்போது மந்திரபலன் கிடைக்கும். அதுபோலப் பிள்ளையின் பெயரும் மந்திரம் போல் அமைய வேண்டும். பிள்ளையின் பெயரைச் சொல்லச் சொல்ல அப் பெயரின் பொருளுக்கேற்றவனாய் அவன் உருவாகி வளர்வான். அதனால்தான் பிள்ளைகளுக்கு பெரியவர்களின் பெயரையோ அல்லது வணங்கும் தெய்வத்தின் பெயரையோ வைக்கும் பண்பாடு நிலை பெற்று இருந்தது. “உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்” என்ற வள்ளுவனின் சொல்போலப் பிள்ளையின் பெயர் மந்திரம் போலப் பலன் தந்தது.

இக்காலத்தில் இந்த உண்மைகளை நம்மவர்கள் மறந்து விட்டார்கள். அந்நிய மோகத்துக்கு ஆட்பட்டுப் பிறமொழியில் பெயர்களை வைக்கும் நிலை ஓங்கி வருகிறது. அப்பெயர் குறிக்கும் பொருள் என்ன என்பதைப் பெற்றார் அறிவதில்லை. பெயருக்குரிய பொருளைப் பிள்ளைகளும் அறிய மாட்டார்கள்.

இதனால் எங்கள் பண்பாட்டின் ஆணிவேராகிய தமிழ்ப் பெயர்களை இழந்து எம் இனத்தின் அடையாளத்தையே அழித்து அந்நியமாகிக் கலப்பினமாகி விடுவோம். இக்காலக் குழந்தைகளின் பெயர்களைப் பார்ப்போமானால் எதிர்காலத்தில் இவர்கள் தமிழர்கள்தானோ என்ற ஐயம் உருவாகி விடும். இனப்பற்று உள்ள ஒவ்வொருவரும் இதனைச் சிந்தனைக்கு எடுத்துப் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர்களையே வைக்க வேண்டும்.

**உடை:**

உலகில் பல்வேறு இனத்தவர்க்கும் தனித்தனி அந்தந்த இனத்தின் பண்பாட்டுக்கு ஏற்ற மாதிரியான உடைகள் உள. இவை பெரும்பாலும் அவர்கள் வாழும் நாடுகளின் தட்ப வெப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாத்தியத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கும். உடை உடல் அழகிற்கு மட்டுமல்ல உடல் நலத்துக்கும் இன்றியமையாதது.

தமிழர்களின் பண்பாட்டு உடை வேட்டி, சால்வை, சேட்டு அல்லது நஷனல் ஆண்களுக் குரியது. பருவம் எய்யாத பெண்குழந்தைகளுக்கு முழுப்பாவாடை, சட்டையும், பருவம் எய்திய பெண்களுக்கு முழுப்பாவாடையும் சட்டையும் துண்டுத் தாவணியும், வளர்ந்த பெண்களுக்கு சேலையும் உரியன. இக்காலத்தில் உடைகள் பெரிதும் மாறிவிட்டன.

உத்தியோகம், மற்றும் தொழில்களுக்குச் செல்வோர், பாடசாலை மாணவர்கள் சீருடை அணிவது தவிர்க்க முடியாதது. எனினும் எங்கள் இனத்துக்குரிய திருமணம் முதலான பண்பாட்டு விழாக் காலங்களிலும், ஆலய வழிபாடு முதலான இடங்களிலும் எமது பண்பாட்டு உடைகளை அணிவதைத் தவறவிடக்கூடாது. அந்நிய இனத்தவர்களின் உடைகளை அழகானது அல்லது கவர்ச்சியானது என அணிதல் எங்கள் பண்பாட்டையும், இன அடையாளத்தையும் சிதைக்கும் செயலாகும்.

**உணவு:**

உண்ணும் உணவும், உடைபோல மக்கள் வாழும் நாட்டின் சுவாத்தியத்துக்கேற்ற இயற்கையோடு இயைந்த உணவாகவே இருப்பதைக் காணலாம். தமிழர்களாகிய நாம் எங்கள் மண்ணில் உற்பத்தியாகும் தானியவகை, பழவகை, கிழங்குவகை, இலை வகைக்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

உண்ணும்போது குடும்பத்தினர் எல்லோரும் ஒன்றாக இருந்து அளவளாவி ஆறுதலாக உண்ண வேண்டும். அப்போதுதான் குடும்ப உறவு நிலைப்பதுடன், உண்ணும் உணவும் சரியாகச் சமிபாடடையும். உணவு சமிபாடு அடைவதற்குத் தேவையான சுரப்புகள் சுரந்து சத்துக்கள் உடலில் உறிஞ்சப்படவும் வாய்ப்பாக இருக்கும்.

பல நாட்களுக்கு முன் சமைத்துக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு அவரவர் தமக்கு வசதியான நேரத்தில் சூடாக்கி உண்ணும் பழக்கவழக்கத்தால் குடும்ப உறவும், உணவின் பயனும் பாதிப்படையும்.

நாம் மட்டும் உண்ணாமல் விருந்தினர்க்கோ இல்லாதவர்க்கோ பகிர்ந்து கொடுத்து உண்பதும் நமது பண்பாடு ஆகும். இதனை வள்ளுவன் குறளில்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்றும் சொல்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2021

## கலைமன்ற மேம்பாடு

| இல. | பிரதேச செயலர் பிரிவு | மன்றத்தின் பெயர் | மன்ற செயற்பாடு |
|---|---|---|---|
| 01 | நல்லூர் | நாராயணா கலைக்கழகம் | வாத்தியகருவி திருத்துதல் |
| 02 | கோப்பாய் | கோவை வீர சங்கிலியன் கலை மன்றம் | கலைமன்ற கலை நிகழ்வுகள் |
| 05 | தெல்லிப்பளை | சிறீ கணேசா கலைமன்றம் | வாணிவிழா |
| 06 | சண்டிலிப்பாய் | இளவாலை திருமறைக்கலாமன்றம் | பெண்கள் தின கலை நிகழ்வு |
| 07 | சங்கானை | தொல்புரம் கலாலாயம் | கலையரங்கு கூரை வேலை |
| 08 | வேலணை | புங்குடுதீவு திருநாவுக்கரசுகலை இலக்கிய மன்றம் | மன்றத்தின் ஆண்டுவிழா |
| 09 | ஊர்காவற்றுறை | காந்திஜீ நாடக மன்றம் | காத்தவராயன் கூத்து அரங்கேற்றம் |
| 10 | மாந்தை கிழக்கு | கலையருவி கலாமன்றம் | கலைநிகழ்வு |
| 11 | துணுக்காய் | தமிழ்தாய் கலாமன்றம் | கலைநிகழ்வு |
| 12 | வவுனியா | கீர்த்தனாலயா இசை மன்றம் | கருவிகள் காட்சிப்படுத்தலுக்கான அலுமாரி |
| 13 | நானாட்டான் | முத்தமிழ் கலாமன்றம் | கலை வடிவ அரங்கேற்றம் |
| 14 | மாந்தை மேற்கு | மாந்தைமேற்கு கலை இலக்கிய கலாசார மன்றம் | தாயானவள் , உழிதாங்கும் கற்கள் போன்ற படைப்புக்கள் மற்றும் பாரம்பரிய கலை நிகழ்வுகள் |
| 15 | முசலி | கெட்வா கலாமன்றம் | கலாசார விழிப்புணர்வு கருத்தமர்வு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2021

## பிரதேசம் சார்ந்த வெளியீடுகள்

| இல | பிரதேச செயலர் பிரிவு | வெளியீட்டின் பெயர் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | யாழ்பாடி கலாசார மலர் 04 |
| 02 | நல்லூர் | சிங்கை ஆரம் 5 |
| 03 | கோப்பாய் | செம்பகம் |
| 04 | சங்கானை | பனுவில் 06 |
| 05 | மருதங்கேணி | மருதசாகரம் - 03 |
| 06 | பச்சிலைப்பள்ளி | பனுவல் -02 - ஆவணப்படம் |
| 07 | பூநகரி | பூந்துணர் நறவம் 10 |
| 08 | வெலிஓயா | பிரதீபா - 06 |
| 09 | வவுனியா | வவுனியம் - 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2021

## கலைஞர் நூல் பதிப்பு ஊக்குவிப்பு

| | பிரதேச செயலர் பிரிவு | கலைஞரின் விபரம் | வெளியீட்டின் பெயர் | துறை |
|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | திரு.க.திருவம்பலம் | திருவரங்கனின் மனக்கோலங்கள் | இலக்கியம் |
| 02 | நல்லூர் | தம்பிராசா பரமலிங்கம் | உள்ளே இருப்பது நெருப்பு நூல் | சிறுகதை தொகுப்பு |
| 03 | கோப்பாய் | திரு.விஜயகுமார் விஜயலதன் | மழலையும் மறக்குமோ | இறுவட்டு வெளியீடு |
| 04 | உடுவில் | திருமதி.சண்முகலிங்கம் சிவயோகம் | ஆலயங்கள் மீதான ஊஞ்சற்பாட்டு | சமயம் |
| 06 | சண்டிலிப்பாய் | திரு.E.A.பிரிஸ் | இலை மறை காய்கள் | கவிதை தொகுப்பு |
| 07 | சங்கானை | திரு.சோ.நாதன் | சிற்ப புகைப்பட கண்காட்சி | சிற்பம் |
| | | திரு. ஆ.கனகரத்தினம் | ஔவையாரின் செந்தமிழ் பாமாலை | நூல் உரை நூல் |
| 08 | மருதங்கேணி | செல்வி. டிலோஜினி மோசஸ் | விண்ணதில் பரணி நூல் | கவிதை |
| 13 | மாந்தை கிழக்கு | திரு.இ.மேவின் | மன நோய் நூல் | இலக்கியம் |
| 14 | துணுக்காய் | திரு.எஸ்.மயில்வாசன் | தூக்கி ஒரே அடி | குறும்படம் |
| 15 | வெலிஓயா | திரு.பி.எஸ்.அத்தநாயக்க | அயோத்தியா | நாவல் |
| 17 | வவுனியாதெற்கு | செல்வி.அபித்ரா விஜயந்தி பிரேமசிறி | சுதுகொடி | சிறுகதை தொகுப்பு |
| 18 | செட்டிகுளம் | திரு.கொந்தஸ்தீனு சகாயராசா | திருப்புமுனை | கவிதை |
| 19 | நானாட்டான் | திரு.எஸ்.ஜெகதீஸ்வரன் | கர்மா | குறும்படம் |
| 20 | மாந்தை மேற்கு | திரு.சி.சகாயம் | அவள் புறப்பட்டுவிட்டாள் நூல் | சிறுகதை தொகுப்பு |
| 21 | முசலி | திரு.எம்.ஏ.ஹபீழ் ஸலபி | பல்கலைக்கழகங்களைப் பலிபீடமாக்கும் பகிடிவதை | இலக்கியம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட நூல்கள் விபரம்

| இல | ஆண்டு | நூலின் பெயர் |
|---|---|---|
| 01 | 1997 | சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் தொகுதி - 3 |
| 02 | 2000 | நாட்டாரியல் ஆய்வு |
| 03 | 2003 | ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும் |
| 04 | 2008 | சமானம் |
| 05 | 2009 | புனர் ஜீவிதம் |
| 06 | 2010 | யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம் |
| 07 | 2011 | இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் பெண்கள் |
| 08 | 2012 | சமகால கலை இலக்கியங்களில் பண்பாட்டுக் கோலங்கள் |
| 09 | 2014 | இலங்கைத் தமிழ் இலக்கியத்தினூடாக மொழித்திறனும் இலக்கியப்பயில்வும் |
| 10 | 2016 | ஈழத்து தமிழ்க்கலை இலக்கியப்பண்பாட்டுத்தளத்தில் உலகமயமாதலும் உள்ளூர்மயமாதலும் |
| 11 | 2016 | என்டிறீக்கு எம்பரதோர் நாடகம் (வடமோடி நாட்டுக் கூத்து) |
| 12 | 2016 | புனித சந்தியோகுமையோர் நாடகம் (வடமோடி நாட்டுக் கூத்து) |
| 13 | 2016 | இம்மானுவல் நாடகம் (வடமோடி நாடக கூத்து) |
| 14 | 2017 | மரிகருதாள் நாடகம் |
| 15 | 2017 | சந்திரகாசன் நாடகம் |
| 16 | 2017 | ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (புதுக்கிய பதிப்பு) |
| 17 | 2018 | முருகேச பண்டிதம் |
| 18 | 2018 | ஆடலிறை ஆக்கங்கள் |
| 19 | 2018 | தமிழ்ப் பழமொழிகள் |
| 20 | 2018 | கலைச்செல்வி கதைகள் |
| 21 | 2019 | முருகையன் கவிதைகள் |
| 22 | 2019 | கல்வயல் வே.குமாரசாமி கவிதைகள் |
| 23 | 2019 | ஈழத்து சிறுகதை களஞ்சியம் |
| 24 | 2019 | செந்தமிழ் இலக்கணம் |
| 25 | 2019 | வடமாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் |
| 26 | 2019 | திருக்குறள் (உரை ஆசிரியர் மு. வரதராசனார்) |
| 27 | 2019 | திருக்குறள் பற்றிய இலங்கையர் முயற்சிகள். |
| 28 | 2019 | முப்பானூற்சுருக்கம் |
| 29 | 2019 | திருக்குறள் ஆய்வுக் கட்டுரை |
| 30 | 2019 | திருக்குறள் ஆய்வுக் கையேடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 31 | 2019 | வல்லபம்-வடமாகாண கலை இலக்கியத் துறையினர் விபரத்திரட்டு |
| 32 | 2019 | கலாசார செயற்றிட்டங்களும் மாகாண விருதுகளும் - 2019 வரை |
| 33 | 2019 | வடந்தை |
| 34 | 2019 | அர்ச்சிய சிக்ஷ்ட மூவிராசாக்கள் வாசகப்பா |
| 35 | 2019 | புனித சூசையப்பர் வாசகப்பா |
| 36 | 2019 | மன்னார் மாதோட்ட வாசகப்பா நாடக மெட்டுக்கள் |
| 37 | 2020 | புனித அந்தோனியார் நாடகம் |
| 38 | 2020 | புனித செபஸ்தியார் வாசகப்பா |
| 39 | 2020 | மன்னார் மாதோட்ட தமிழ்ப்புலவர் சரித்திரம் |
| 40 | 2020 | இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் மற்றும் சிலம்பரசி நாட்டுக்கூத்துக்கள் |
| 42 | 2020 | கூத்திசை நாடகம் |
| 42 | 2020 | இரு கூத்துக்கள் |
| 43 | 2020 | பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள். இருப்பும் எதிர்பார்ப்பும் |
| 44 | 2020 | வடமாகாணத்தில் உள்ள முக்கியமான வணக்க ஸ்தலங்கள் |
| 45 | 2020 | வடந்தை |
| 46 | 2021 | சாந்தன் படைப்புலகம் |
| 47 | 2021 | திராவிடப்பிரகாசிகை |
| 48 | 2021 | கதிரைமலைப்பள்ளு |
| 49 | 2021 | கல்வித் தத்துவம் |
| 50 | 2021 | வேழம்படுத்த வீராங்கனை |
| 51 | 2021 | நொண்டி நாடகம் |
| 52 | 2021 | திருக்குறள் ஆய்வு |
| 53 | 2021 | பதத்துப்பற்று ஆராய்ச்சியுரை |
| 54 | 2021 | வாணர் படைப்புக்கள் |
| 55 | 2021 | வீரமணிஐயர் படைப்புக்கள் |
| 56 | 2021 | ஞானசவுந்தரி நாடகம் |
| 57 | 2021 | சந்தொம்மையார் வாசாப்பு |
| 58 | 2021 | மன்னார் மாதோட்ட புலவர்கள் கலைஞர்கள் ஐம்பது ஆளுமைகளின் வாழ்வும் வரலாறும் படைப்புக்களும் |
| 57 | 2021 | வடந்தை |
| 58 | 2021 | மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட இறுவெட்டுக்கள் விபரம்

| இல | ஆண்டு | இறுவெட்டு விபரம் |
|---|---|---|
| 01 | 2013 | பேசும் கண்ணீர் குறும்படம் |
| 02 | 2014 | சைவத்தமிழ் பண்பாட்டு நிகழ்வுகள் (நெல்லண்டை பத்திரகாளி அம்மன்) |
| 03 | 2018 | வடமாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆவணத்தொகுப்பு 01 |
| 04 | 2018 | வசந்தன் ஆட்டம் |
| 05 | 2018 | தமிழர் பறை முரசு |
| 06 | 2018 | கரகாட்டம், சிலம்பாட்டம் |
| 07 | 2018 | உடுக்கை பஜனை |
| 08 | 2018 | அரிச்சந்திர மயானகாண்டம் |
| 09 | 2018 | கரகம் |
| 10 | 2018 | காத்தவராஜன் சிந்துநடைக்கூத்து |
| 11 | 2018 | பண்டார வன்னியன் ஆவணப்படம் |
| 12 | 2019 | பாசையூர் கலைஞர்களின் அம்பா பாடல்கள் ஆவணப்படம் |
| 13 | 2019 | அம்பா புத்துருவாக்கப்பபாடல்களின் ஒலி இறுவட்டு (மருதங்கேணி கலைஞர்கள்) |
| 14 | 2019 | அம்பா விபரணப்படம் (மருதங்கேணி கலைஞர்கள்) |
| 15 | 2019 | மன்னார் மாதோட்ட வாசகப்பா நாடக மெட்டுக்கள் |
| 16 | 2020 | யாழ்ப்பாணன் ஆவணச்சித்திரம் |
| 17 | 2021 | கந்தபுராண படனம் - ஒலி ஆவணம் |
| 18 | 2021 | கிராமிய நடனம் - கரகம் |
| 19 | 2021 | காவடி |
| 20 | 2021 | ஒயிலாட்டம் |
| 21 | 2021 | வசந்தன் கோலாட்டம் |
| 22 | 2021 | பொம்மலாட்டம் |
| 23 | 2021 | அரிவு வெட்டு நடனம் |
| 24 | 2021 | வரவேற்பு நடனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாடு ஆலோசனைக்குழு

01. பேராசிரியர்.கலாநிதி.என்.சண்முகலிங்கன் - முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்- தலைவர், ஆலோசனைக்குழு.
02. பேராசிரியர்.கலாநிதி.அ.சண்முகதாஸ் முன்னாள் பீடாதிபதி, பட்டப்படிப்புகள் பீடம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
03. பேராசிரியர்.கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
04. கவிஞர்.சோ.பத்மநாதன் - ஓய்வுநிலை அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
05. திருமதி. சாந்தினி சிவநேசன் - வருகைதரு விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்
06. திரு.றொபேட் தவநாதன் - சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்
07. ச.லலீசன் - பிரதி அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
08. அருட்தந்தை செ.அன்புராசா அடிகளார்
09. திரு.ஜோண்சன் ராஜ்குமார் - ஆசிரிய ஆலோசகர், யாழ் வலயம்.
10. திரு.கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன் - சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில மொழித்துறை யாழ் பல்கலைக்கழகம்.
11. கலாநிதி.நாகலிங்கம் தர்மராஜா (அகளங்கன் -ஓய்வுநிலை ஆசிரியர்.
12. திரு.வல்லிபுரம் ஏழுமலைபிள்ளை - பல்துறைக் கலைஞர்
13. திரு.நடராஜா பார்த்தீபன் - உபபீடாதிபதி, ஓய்வுநிலை, தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா
14. அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்
15. திரு.ரங்கன ஜெயக்கொடி - அதிபர் வவு.போகஸ்வேவ மகாவித்தியாலயம்.
16. திரு.ஜனாப் அப்துல் சமட் - சட்டத்தரணி, ஓய்வுநிலை பிரதி அதிபர்
17. திரு.எஸ் பேணார்ட் -ஓய்வுநிலை பீடாதிபதி, தேசிய கல்வியக் கல்லூரி.
18. பேராசிரியர் கலாநிதி.எஸ்.கிருக்ஷ்ணராஜா-முன்னாள் தலைவர், வரலாறுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
19. திரு.சி.ரமணராஜா - சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
20. திரு.நா.வை.குமரிவேந்தன்(மகேந்திரராசா) - ஓய்வுநிலை மின்பொறியியல் கண்காணிப்பாளர். கிளிநொச்சி.
21. திரு.க.ஜெயவீரசிங்கம் - அதிபர், குமுழமுனை மகாவித்தியாலயம், முல்லைத்தீவு
22. முனைவர். திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் - ஓய்வுநிலைப் பேராசிரியர்.
23. பேராசிரியர்.கலாநிதி.ப.புஷ்பரட்ணம் - முன்னாள் தலைவர், வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
24. திரு.சு.கோபிதாஸ் - வருகைதரு விரிவுரையாளர் (வயலின்), யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திருமதி. வசந்தி குஞ்சிதபாதம்

நடனம்
யாழ்ப்பாணம்

திருமதி. வசந்தி குஞ்சிதபாதம் அவர்கள் 1955-01.21 ஆம் திகதி பேராதனையில் பிறந்த இவர் கில்னர் லேன், யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறார். தனது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தபின் நடன ஆசிரியை யாகப் பணிபுரிந்த நிலையில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று யாழ்ப்பாணத்தின் பிரபல்யம் பெற்ற பல மகளிர் கல்லூரிகளில் நடன ஆசிரியையாகப் பணிபுரிந்த பின் 2015 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றுள்ளார்.

சிறு வயது முதலே நடனக் கலையில் தீராத மோகமும் ஆர்வமும் கொண்டவராக இவர் தான் கல்விகற்ற பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல பரிசில்களையும், புகழையும் தான் சார்ந்த பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்துள்ளதுடன் தான் கல்வி கற்பித்த பாடசாலைகளில் சுமார் 17 இக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களைத் தயாரித்து தனது மாணவிகளை வலய, மாகாண, தேசிய மட்டத்தில் பரிசில்களைப் பெற வைத்துள்ளார்.


கொக்குவில் கலாபவன நிறுவனர் திரு. ஏரம்பு சுப்பையா, அவரது மகள் திருமதி சுகந்தினி சிவநேசன், சென்னை அடையாறு ஸ்ரீமானி லக்ஷ்மணன் ஆகியோரது நடனக்கலை மாணவியான இவர் கலாஷேத்திரம் எனும் அமைப்பை உருவாக்கி மாணவிகட்கும், நடனக் கலை ஆர்வலர்களுக்கும் பயிற்சியளித்து அவர்களைத் துறைசார் புலமையாளர்களாகத் தந்திருக்கின்றார். 2018 இல் 'நடனத்திலகம்' எனும் அரச விருதை ஜனாதிபதியிடம் இருந்தும் 2019 ஆம் ஆண்டில் 'கலைமாமணி' எனும் விருதினை ஸ்ரீலங்கா அரசிடம் இருந்தும் பெற்றுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021



## திரு. பத்திநாதன் பாக்கியநாதன்

**கூத்து**
**ஊர்காவற்றுறை**

1932.05.15 இல் மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியைப் பிறந்த ஊரிலேயே கற்றுக் கொண்டார். பின்னர் சிறுவயது முதல் கலைத்துறையில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். இவர் 60 வருடங்க ளாகத் தனது கலைப்பயணத்தைத் தொடர்ந்தார். இவரின் கலைப்பயணத்தின்போது, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, இலுப்பைக் கடவை, குருநகர், அனலை தீவு போன்ற இடங்க ளில் அலேலசு, ஞானசவுந்தரி, அந்தோனியார், பிரகாசராணி, பிலோமினா, தேவசகாயம், பிரான்சிஸ் ஆசிரியர் போன்ற பல நாடகங்களில் நடித்ததுடன், தொன் நீக்கிலார், பிலோமினம்மா, பார்பர் அம்மாள் போன்ற நாட்டுக் கூத்துக்களைப் பழக்கி, மேடையேற்றியுமுள்ளார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையினால் 2014 ஆம் ஆண்டு 'கலைவிழுது' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் 2017 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நாட்டுக் கூத்துக் கலைக்கு இவர் ஆற்றிய மகத்துவமான சேவைகளுக்காக விருது வழங்கும் இவ் வேளையில், இவர் உலகை விட்டுப் பிரிந்தது கலைத்துறைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திருமதி மதிபேர்பெற்றுவா பெப்பிமதுர நாயகி விக்ரர் லெம்பேட்

**கிராமியக்கலை**
**வங்காலை, மன்னார்**

1957/09/03 ஆம் திகதி மன்னார்- வங்காலையில் பிறந்த இவர், மதுரா வட்டாரம், வங்காலையில் வசித்து வருகின்றார். இவர் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் மன்னார் நாட்டார் பாடல்கள், வட்டார வழங்குச் சொற்கள், வரலாற்றில் தடம் பதித்த வங்காலைக் கலைஞர்கள், தமிழ்மொழி அறிவு வினா விடைகள், புனித ஜோசப்வாஸ் வினாவிடை தொகுப்பு, வில்லுப்பாட்டு போன்றவற்றைப் படைத்து, மன்னார் பிரதேச கலை ஆர்வலர்களுக்குச் சிறந்த சேவை செய்திருக்கின் றார். சமய, சமூக பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றி உள்ளார். கல்வியியலின் முதுநிலைப் பட்டமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுகலை மானி பட்டமும் பெற்ற இவர், ஆசிரியராகவும் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவருடைய எழுத்துருவாக்கப் படைப்புக்கள் யாவும் தரம் ஒன்றிலிருந்து தரம் 13 வரையான மாணவர்கள் அனைவருக்கும் சிறந்த பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டச் செயலகம் நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வில் 'சாதனை பெண் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். மன்னார் மறைமாவட்டத்திற்கு ஆற்றிய அரும்பெரும் நற்பணிகளைப் பாராட்டி மன்னார் மாவட்ட சமூக அருட்பணியகம் 2017 ஆம் ஆண்டு "கலையருவி" எனும் பாராட்டுப் பதாதை வழங்கிக் கௌரவித்தது. இவர் மன்னார் மாவட்டத்தில் சமய, சமூக மற்றும் கல்வி போன்ற துறைகளில் ஆற்றிய பணிகளுக்காகப் பல்வேறுபட்ட அமைப்புக்களிடம் இருந்தும் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021








## திரு. அருளப்பு மரியதாஸ்

**நாடக எழுத்துருவாக்கம்**
**யாழ்ப்பாணம்**


1936.05.24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் வசித்து வருகின்றார். பிரபல்யமான நாடகக் கலைஞராக அறியப்படும் இவர் 1961 ஆம் ஆண்டிலிருந்து, 1999 ஆம் ஆண்டு வரை பல நாடகங்களை எழுத்துருவாக்கம் செய்து, அரங்கேற்றம் செய்திருக்கின்றார். அவற்றில் 'இரத்தத் திலகம்', 'நடைப்பிணம்', 'ஊன்றுகோல்', 'பூதத்தம்பி' போன்ற நாடகங்கள் இன்றும் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றன. இவரது சில நாடக எழுத்துருவாக்கங்கள் இன்னும் மேடை ஏற்றப்படாது காணப்படுகின்றன. மேலும் வில்லுப்பாட்டுக்களையும் எழுதி மேடை ஏற்றியுள்ளார்.

இவரது பள்ளிப்பருவக் காலத்திலேயே இவருடைய கலை ஆர்வமானது இன்று வரை தொடர்கின்றது. சிறுகதை எழுதுவதிலும் இவர் ஆர்வம் உள்ளவர். மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்ற இவர் பல நாடகங்களையும் உருவாக்கி உள்ளார். இவரது கலைச் சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் 'சமூக ஒளி' என்னும் பட்டமும், 2017 ஆம் ஆண்டு யாழ். சர்வோதயமும் தேசோதய சபையும் இணைந்து, ஒருங்கமைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 100 ஆவது ஜனன நிகழ்வின் போது சிறந்த கலைஞருக்கான 'கலைமாமணி' விருது, வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2017 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் 'யாழ். ரத்னா'விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திரு. செல்லப்பா சண்முகநாதன்

**சிற்பம் (சிற்பக்கலை)**
**தெல்லிப்பளை**

1953.04.04 இல் மயிலிட்டியில் பிறந்து, தற்போது, மாவிட்டபுரத்தில் வசித்து வருகிறார். இற்றைக்கு 38 வருடங்களுக்கு முன் தொடங்கிய இவரது கலைப்பயணம் இன்றும் தொடர்கின்றது. இக் கலைப்பயணத்தின் போது பல ஆலயங்களில் கைலாசவாகனம், ரதம், சுழல் சூரன், நடமாடும் ராஜகோபுர சித்திரச் சப்பறம், மரவேலைப்பாடுகளுடன் கூடிய கொடிஸ்தம்பம் போன்றவற்றை இவர் தனது கை வண்ணத்தால் உருவாக்கி உள்ளார்.

இவரது கலையைக் கௌரவிக்கும் முகமாக வன்னேரி ஐயனார் ஆலயத்தினால் 'சிற்பசிகாமணி' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் தேவஸ்தானத்தினால் 2011 ஆம் ஆண்டு 'சிற்பக்கீரிடம்' எனும் பட்டமும் கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தானத்தினால் 'கலைஞானி' எனும் பட்டமும் வழங்கி ஆலய நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். அதுமட்டும் அல்லாது, 2007 ஆம் ஆண்டு கிராமியக்கலைப் பெருவிழாவில் மல்லாவி நுண்கலைக் கல்லூரியினர் 'முதுபெரும் கலைஞர்' விருது வழங்கிக் கௌரவித்தனர்.

2013 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் இக் கலையினைத் தனது அடுத்த தலைமுறையினருக்குக் கற்பித்துள்ளதுடன், மேலும் பல கலைஞர்களினைப் புதிதாக உருவாக்கி உள்ளார். அத்துடன் இக் கலையினை வளர்க்கும் முகமாக பல நேர்காணல்களையும் வழங்கியுள்ளார். இத்துடன், கலைசார்ந்த கட்டுரைகளையும் ஆக்கி உள்ளார். மேலும் கலாலய நிறுவனத்தின் ஊடாக ஏராளமான கலைஞர்களை உருவாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்

**இசைக்கலை**
**யாழ்ப்பாணம்**

கிருஷ்ணவேணி மயில்வாகனம் 1951.11.06 இல் பிறந்த இவர் 54, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையில் வசித்து வருகின்றார். பல சங்கீத ஆசிரியர்களையும் இசைத்துறையில் மிளிரும் பல மாணவர்களையும் உருவாக்கிய பெருமைக்கு உரியவர். இன்றும் பல வாத்திய விருந்தாக்கங்களையும், இசைக் கச்சேரிகளையும் ஆலய திருவிழாக்கள்,பொதுநிகழ்வுகளுக்குத் தயாரித்து வழங்கி வருகின்றார். சங்கீத சாஸ்திரம் சம்பந்தமான நூல்களையும் தரம் - 06 தொடக்கம் தரம் - 13 வரையான மாணவர்களுக்கு வினாவிடை தொகுப்புக்களையும் பாடத்திட்ட இறுவெட்டுக்கள், தோத்திரப் பாடல்கள், பண்ணிசை இறு வெட்டுக்கள் என்பனவற்றை வெளியிட்டு சங்கீதக் கலையை வளர்ப்பதற்கு அருந்தொண்டாற்றி வருகின்றார்.

2002 இல் இருந்து, 2016 ஆம் ஆண்டு வரை பல கலைப்படைப்புக்களையும், படைத்துள்ளதுடன், வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சைகளின் போது பிரதம பரீட்சகராகவும் செயற்பட்டு வருகின்றார். மேலும் 2014 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் இவரது கலை ஆற்றலைப் பாராட்டி 'யாழ்ரத்னா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021








## திரு. கணபதிப்பிள்ளை எதிர்வீரசிங்கம்

**கவிதை இலக்கியம்**
**கரவெட்டி**

1948.05.20 அல்வாயில் பிறந்த இவர், சிறுவயது முதல் கவிதைகள் பால்கொண்ட ஈர்ப்பால் தானும் ஒரு கவிஞன் ஆக வேண்டும் என்ற வைராக்கியத்துடன் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய இவரது கவிதைப் பயணம் இன்றுவரை தொடர் கின்றது. இவரினால் தோற்றுவிக்கப்பட்ட படைப்புக்களுக்கு "பூவற்கரையான் பதிகமாலை", 'நாவலடி நீழலிலே', நல்லைக் குமரன் மலர் போன்ற பக்தி இலக்கியங்களும் நீயின்றி எமக்கேது வாழ்வு போன்ற ஆன்மீக இலக்கியங்கள் மற்றும் 'சிறுவர் கவிச்சரம்' போன்ற சிறுவர் இலக்கியங்கள் என்பவை சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன.

இவரது இலக்கியப் பணியினைக் கௌரவிக்கும் முகமாக 2013 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கலாபூஷணம்' விருதினையும் 2017 இல் யாழ். சர்வோதயமும் தேசோத சபையும் இணைந்து, ஒருங்கமைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 100ஆவது ஜனன நிகழ்வின்போது சிறந்த கலைஞருக்கான 'கலைமாமணி' விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திரு. பாலகிருஷ்ணன் இரகுவரன்

**நாடகம்**
**பருத்தித்துறை**



1950.09.12 இல் வடமராட்சி வடக்குத் தும்பளையில் பிறந்த இவர் ஒரு கலைப்பட்டதாரியாவார். 1980 இல் மல்லிகை, சிரித்திரன் முதலானவற்றில் பல சிறுகதைகளை எழுதிப் பரிசில்களும் பெற்றவராவார். நாடக ஆசிரியராகப் பணியாற்றி வரும் இவர், வடமராட்சிப் பிரதேசத்தில் பத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் சிறுவர் நாடகங்கள் பலவற்றைத் தயாரித்து நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார். இசை நாடகம், விலாசக் கூத்து, நாட்டுக் கூத்து, முதலான பாரம்பரிய நாடகத்துறையிலும் ஈடுபாடுடைய இவர், இதுவரை ஐம்பதுக்கும் அதிகமான நாடகங்களில் நடிகர், தயாரிப்பாளர், முதலான வகிபாகங்களைக் கொண்ட ஒருவராகக் காணப்படுகின்றார்.

இவர் கல்லூரி நாடகங்களை எழுதியுள்ளதுடன் இவரது 06 நாடகங்கள் மாகாண இலக்கிய நூல் பரிசு பெற்றன. இவற்றுள் “ஊரும் வாழ்வும்”, “வடமராட்சியில் நாட்டுக் கூத்து”, ஆகியன மாகாண இலக்கிய விருதினையும் “பருத்தித்துறையூராம்” இலங்கை இலக்கிய பேரவை விருதினையும் பெற்றது. “கண்டல் காடுகள்” முதலானவற்றையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலை ஆற்றலைக் கௌரவிக்கும் முகமாக 2010 ஆம் ஆண்டு தும்பளை மேற்கு கலை பண்பாட்டுக்கழகத்தின் மூலம் ‘நாடகச் செம்மல்’ எனும் விருதினையும் 2017 ஆம் ஆண்டு வடமராட்சி வலயக் கல்வி நிலையத்தினால் “கலைவாருதி” விருதினையும் 2018 இல் மாவட்ட கலாசாரப் பேரவையினால் “ யாழ் முத்து” எனும் விருதினையும் பெற்றுக்கொண்டார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021








## திரு. வேலாயுதம்பிள்ளை சிவகுமாரன்

**இசை நாடகம்**
**நல்லூர்**

கோண்டாவில் கிழக்கு ஆலடி வீதியினை வதிவிடமாகக் கொண்ட இவர், 01.04.1957 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது கலைஞானம் பரம்பரை பரம்பரையாக உருவாகியது. அதாவது இவரது தாய்வழி பேரனும் மாமன்மார்களும் அண்ணாவி மார்களாக இருந்துள்ளார்கள். இதனால் சிறுவயதிலிருந்தே கலையின் மீது ஈடுபாடு இருந்தமையால் பாடசாலை நிகழ்வுக ளில் பங்கேற்று தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார். தென்னி லங்கையில் யொவுன்புர நிகழ்வில் 1987, 1988 காலப்பகுதியில் அனுராதபுரம், பண்டாரவளையில் தமிழ் கலாசார போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். இந்நிகழ்வுகள் இலங்கை வானொலியில் ஒலிபரப் பப்பட்டது. மேலும் நாட்டார் வழக்கியற் கழகத்தோடு இணைந்து, பல்கலைக்கழக மாண வர்களுடன் நாடகங்களை மேடையேற்றி இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்க ளில் எல்லாம் நாடகங்களை அரங் கேற்றம் செய்தார். இவர் தான் ஏற்ற பாத்திரங்களைச் சிறப்பாக வெளிப்படுத்தியமைக்காக யாழ். பல்கலைக்கழகம் சான்றிதழ் வழங்கி சிறப்பித்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காத்தவராயன், 'சத்தியவான் சாவித்திரி', 'வள்ளி திருமணம்' போன்ற இசை நாடகங்கள் அமைகின்றன.

பல்வேறுபட்ட கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி நாடகக் கலையினை வளர்த்து, வருகின்றார். மேலும் வில்லுப்பாட்டு, சிந்துநடைக் கூத்து, உடுக்கு, ஆர்மோனியம் போன்ற வாத்தியங்களையும் இசைப்பதில் திறமையுள்ளவர். " நாராயணன் கலைக்கழகம்" என்ற கலை நிறுவனத்தை நிறுவி அதனூடாக தனது கலைச்செயற்பாட்டினை எதிர்கால சந்ததிக்குக் கொண்டு செல்வதில் ஊக்கமுடன் செயற்பட்டு வருகின்றார். இவரது கலை ஆற்றலைக் கௌரவிக்கும் முகமாக 2017 ஆம் ஆண்டு சர்வோதய நிறுவனம் 'கலை மாமணி' விருதினையும் இவரது இசை நாடக புலமையினைப் பாராட்டி நல்லூர் பிரதேச கலாசாரப் போவை " கலை ஞானச்சுடர்" எனும் விருதினையும் வழங்கிக் கௌரவித்தன. மேலும் அரியாலை காந்தி சனசமூக நிலையம் இவரது கலைச்சேவையினைப் பாராட்டி 'மரபுக்கலை வேந்தன்' எனும் பட்டத்தினை வழங்கியது. கோண்டாவில் கிராம மக்கள் 'மரபுக்கலை அரசு' எனும் பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021








## திரு. குமாரசாமி ஜெயக்குமார்

**நாவல்**
**கோப்பாய்**

1953.11.11 இல் யாழில் பிறந்த இவர் பாரதி ஒழுங்கை செம்மணி வீதி நாயன்மார்க்கட்டில் வசித்து வருகின்றார். இவர் கவிவேழம், மற்றும் பாரதி பாலன் என்ற புனை பெயர்களில் பல நாவல்களையும் சிறுவர் இலக்கியங்களையும் உருவாக்கி வருகின்றார். இவரது இலக்கியப்பணி சுமார் 30 ஆண்டுக ளாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இவரால் உருவாக்கப் பட்ட கலைப்படைப்புக்கள் உலககாவியம், 'புதிதாய் ஓர் உலகம்', 'அரை மனிதர்கள்', 'கவிதைக் கனவுகள்', 'அரங்க இலக்கிய அலைகள்' என்ற வரிசையிலேயே இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. மேலும் இவர் சிறுவர்களுக்குரிய இலக்கியப் படைப்புக்களையும் உருவாக்கி வருகின்றார்.

இவரது இலக்கியப் பணிக்கு தென்னிந்திய சினிமா இயக்குநர் பாலுமகேந்திராவும் வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது படைப்புக்கள் மீது யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதிப்பீட்டு உரையை வழங்கியுள்ளார்கள். மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் இவரது படைப்புக்களை அரங்கேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1990 - 1991 காலப்பகுதியில் 'கவிதை கனவுகள்' எனும் கவிதைத் தொகுதிக்கு வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழாவின்போது சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திரு. கந்தையா இராசநாயகம்

**வாத்தியக் கருவிகள்**
**உருவாக்கம்**
**நல்லூர்**

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 1944.06.12 ஆம் திகதி பிறந்தார். மிருதங்கம், தபேலா, டெல்கி, தவில், கெஞ்சிரா, உடுக்கு, உறுமி போன்ற வாத்தியக் கருவிகளை உருவாக்கிக் கொடுத்தலும், திருத்தங்கள் செய்வதும் இவரது தொழிற் பாடாகும். இவ்விசைக் கருவிகளை இசைக்கும் ஆற்றலும் இவருக்குண்டு. இலங்கை அரசின் கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் சிற்றூழியராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் தச்சுத்தொழிலில் ஆற்றலுள்ளவராக விளங்கியமையால் மரக்கொட்டுக் களைக் குடைந்து அதில் மிருகங்களின் தோலினை இணைத்து வாத்திய இசைக் கருவிகளை உருவாக்கி விற்பனை செய்து வந்தார். சங்கீத இசைஞானமின்றி கேள்வி ஞானத்தைப் பின்பற்றி, தனது செயற்பாட்டினை மேற்கொண்டு வந்த இக் கலைஞர் இசை நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள், சின்னமேளக் கச்சேரிகள், இசைக்கச்சேரிகள் போன்றவற்றிற்கு பக்கவாத்தியம் இசைத்து வருகின்றார்.

பல இடங்களில் இவரது கலைச் சேவைக்காகப் பாராட்டும், கௌரவமும் கிடைக்கப்பெற்றுள்ளது. 2004 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாண கைத்தொழில் கண்காட்சியில் இவரால் செய்யப்பட்ட இரண்டு வாத்தியங்களுக்கு முதலாமிடத்திற்கான சான்றிதழ்கள், பணப்பரிசு போன்றன வழங்கப்பட்டன. மேலும் 2012 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலாபூஷண' விருது, வழங்கிக் கௌரவிக்கப்பட் டுள்ளார். வாத்திய இசைக்கருவிகளை உருவாக்கும் அதே நேரத்தில் இசைஞானம் மிக்க பக்கவாத்தியக்கலைஞராகவும் இவர் இருப்பதனால் யாழ். மாவட்ட இசைத்துறைக் கலைஞர்களின் நன்மதிப்பையும் பெற்று வருகின்றார். தற்போது ஆன்மீக நிகழ்வுகளிற்காகத் தனது கலைப்பணியை ஆற்றி வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திரு. இரத்தினவேலு கேதீஸ்வரன்

**வாத்தியக்கலை**
**தெல்லிப்பளை**

1953.01.23 இல் அளவெட்டியில் பிறந்த இவர் தனது 9 ஆவது வயதில் தந்தையாரிடம் நாதஸ்வரக் கலை பயில ஆரம்பித்தார். தமிழருவி சண்முகசுந்தரம் ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட 'வாழ்வுபெற்ற வல்லி' என்ற நாடகத்திற்கு நாதஸ்வரம் வாசித்தது மட்டுமல்லாது, பாத்திரமேற்று நடித்துச் சிறப்புப் பெற்றவர். 1964.1993 வரை கலாசூரி என்.கே. பத்மநாதன் அவர்களுடன் இணைந்து, நாதஸ்வரம் வாசித்தவர். இக் காலப்பகுதியில் பல இசை நுட்பங்களையும் கச்சேரி செய்யும் அனுபவங்களையும் பெற்றவர். இவரது நாதஸ்வர வாசிப்பானது ஸ்வர சுத்தமும், லய சுத்தமும் நிறைந்த சுகமுடைய வாசிப்பாக அமைந்திருப்பது அனைவராலும் வியந்து பேசப்பட்ட ஒன்றாகும்.

தற்பொழுது, தனக்கென ஒரு குழுவை அமைத்து, கச்சேரிகள் செய்து வருகின்றார். இவரது இத்தகைய கலைச்சேவையைப் பாராட்டி 2004 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினால் 'கலைச்சுடர்' விருதும் 2011 இல் அரச விருதான 'கலாபூஷண' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மேலும் சுவிற்சர்லாந்தில் 'லலிதஸ்வர நாதவிபூஷ' என்ற விருதும் லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 'ஸ்வரலய ஞான வாருதி' என்னும் விருதும் வழங்கப் பெற்றவர். இந்தியா, மலேசிய, சிங்கப்பூர், தாய்லாந்து, லண்டன், அவுஸ்திரேலியா, பாரிஸ், சுவிஸ் போன்ற உலக நாடுகளிலெல்லாம் இசைக்கச்சேரி செய்து எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த கலைஞர் ஆவார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திருமதி கோமதி தேவி செல்வநாதன்

**ஓவியம்**
**நல்லூர்**

1946.07.17 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் வடலியடைப்பில் வாழ்ந்து வந்தார். நாட்டின் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த இவர் தற்போது, நல்லூரில் வசித்து வருகின்றார். சிறுவயது முதல் ஓவியம் வரைவதில் ஆர்வம் கொண்ட இவர் பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை கம்பராமாயண சித்திரப் போட்டியில் யாழ்/சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடம் பெற்றார். சித்திரப் பாட ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் பல நூல்களுக்கு அட்டைப்படங்கள் வரைந்து கொடுத்தமைக்காகக் கௌரவிக்கப் பட்டார்.

இந்து ஆலயங்களின் உட்சுவர் ஓவியங்கள் மற்றும் திரைச்சீலை ஓவியங்களை வரைந்து மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளார். இவரது, ஓவியக்கலைத் திறமைக்குச் சான்றாக காரைநகர் சிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் சுவரோவியமாக காலந்தகமூர்த்தி, யாகசாலை கருவறை வாயிலில் உள்ள ஓவியங்கள், வட்டுக்கோட்டைக் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் நிஷ்டையில் சிவன் சுவரோவியம் என்பன குறிப்பிடத்தக்கன. இவரது ஓவியக்கலைத் திறமையைப் பாராட்டி நல்லூர் கலாசாரப் பேரவையினால் 2015 ஆம் ஆண்டில் "கலைஞானச் சுடர்" விருதும் 2010 இல் அரச விருதான 'கலாபூஷண விருதும்' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் தனது கலைப்படைப்புக்களூடாக பல காட்சிகளைத் தத்ரூபமாக வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் இன்றுவரை ஓவியம் வரைவதிலும், அலங்காரக் கோலம் போடுதல் மற்றும் ஒப்பனைக் கலைகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021





## திருமதி அற்புதராணி காசிலிங்கம்

**சிறுகதை**
**நல்லூர்**

யாழ்ப்பாணம் மானிப்பாயில் 1944.01.08 இல் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே நூல்கள், புத்தகங்கள் பலவற்றை வாசிக்கும் பழக்கமுடையவர். பாடசாலைக் காலங்களில் "விவேகி" சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எழுதியனுப்பினார். இலங்கை வானொலியில் சிறுவர் மலர், மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆக்கங்களை எழுதியிருந்தார்.

இவரது வாசிப்புத்திறன் இவரது எழுத்தாற்றலை ஊக்குவித்தமையால் இவரது சிறுகதைகள் படைக்கும் ஆற்றல் வளர்ச்சியடைந்தது. அவ்வகையில் பல சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதினார். 'மலரன்னை' எனும் புனை பெயரில் எழுதிவரும் இவர், 2015 ஆம் ஆண்டு வெளியிட்ட "வேர்பதிக்கும் விழுதுகள்" இவரால் வெளியிடப்பட்ட முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். 2016 இல் வெளிவந்த இரண்டாவது சிறுகதைத் தொகுதி "கீறல்" ஆகும். 2017 இல் வெளிவந்த மூன்றாவது சிறுகதைத் தொகுதி "அனலிடைப்புழு" ஆகும். இவருடைய சிறுகதைகள் சமகால விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்தள்ளது. அத்துடன் மேலும் சமூக ஒருமைப் பாடு, போரினால் மக்கள் அனுபவித்த துன்பங்கள், சீதனம், பெண் அடக்குமுறை எனப் பல கோணங்களில் சிறுகதைகள் எழுதியுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டு தேசிய இலக்கிய விழாவில் இவருடைய சிறுகதை மூன்றாம் இடத்தினையும் "கருவி" மாற்றுத்திறனாளிகள் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட போட்டியில் இவருடைய கருவி சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றிருந்தது. இவரது கலைச் சேவையினைப் பாராட்டி 2017 ஆம் ஆண்டு சர்வோதய நிறுவனத்தினால் "கலைமாமணி" விருதி னையும், 2018 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையினால் "கலைஞானச் சுடர்" எனும் விருதினையும் பெற்றுக் கொண்டார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021








## திரு.செல்லர் குமாரசுவாமி

**குறும்படம்**
**நல்லூர்**

1949.05.07 இல் பிறந்த இவர் நல்லூர் கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி எனும் முகவரியில் வசித்து வருகின்றார். இவர் சிறுவயது முதல், ஸ்ரீ வாகீஸ்வரி நாடகமன்றத்தில் ஒரு நடிகனாக இருந்துள்ளார். சரித்திர இதிகாச புராண சமூக நாடகங்களில் கதாபத்திரம் தாங்கி தானே அதுவாக நடித்துக் காட்டினார். "சாம்ராட் அசோகன்" எனும் வரலாற்று நாடகத்தில் அறிமுகமாகிய இவர், கலையரசன் சீவரத்தினத்தின் 'அலாவுதீன்' எனும் வரலாற்று நாடகத்திலும், "தியாகத் தீ" எனும் சமூக நாடகத்திலும் நடித்துள்ளார். இவர் கதை வசனம் எழுதி நடித்து, நெறியாள்கை செய்த 'துருவ சங்கமம்' எனும் குறும்பட வெளியீடு 1985 ஆம் ஆண்டு நடைபெற்றது. வானொலி நாடக நடிகர் ஜீவ நாவுக்கரசனால் மேடையேற்றப்பட்ட 'தவறுகள் உறவுகள்' எனும் நாடகத்திலும் 'பயணங்கள் தொடர் கின்றன' எனும் வீடியோ குறும்படத்திலும் நடித்துள்ளார். மேலும் இக் கதாசிரியரால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படமான சுதந்திரதாகத்திலும் பாதிரியாராக வேடமிட்டு நடித்துள்ளார்.

இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பில் உருவான 'இரத்தத்தின் இரத்தம்' எனும் படத்தில் தென்னிந்திய நடிகர் ஜெய்சங்கருடன் இணைந்து நடித்திருக்கின்றார். துருவசங்கமம், இடுகாடு, அறுபடை, மாசறு, பூதத்தம்பி, திருடன், வாக்குக் கண் போன்ற குறுந்திரைப்படங்களைத் தயாரித்து நடாத்தியும் உள்ளார். இவரது கலைச் சேவையைப் பாராட்டி 2016 இல் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையினால் "கலைஞானச் சுடர்" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் 2017 இல் யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தால் மக்கள் திலகம் M.G.R அவர்களின் நூறாவது தின நினைவு விழாவின் போது 'கலைமாமணி' எனும் விருது, வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2021






## திரு.முத்துக்குமாரு தியாகராஜா

**ஒப்பனைக்கலை**
**கரைச்சி**

1949.03.21 இல் அல்லைப்பிட்டியில் பிறந்து தற்போது வட்டக்கச்சி மாயவனூர் பிரிவில் வாழ்ந்து வருகின்றார். இவர் இளவயதினிலேயே இசை மீதும், நடனம் மீதும் ஆர்வம் இருந்தமையால் சிறந்த இசை, நடன ஆசிரியர்களிடம் கல்வி பயின்றார். தொடர்ந்து, நாடகம், இசை என்பவற்றில் பங்குபற்றி, தனது, திறமையை வெளிப்படுத்தி வந்துள்ளார். அவ்வேளையி லேயே அந் நிகழ்வுகளில் பங்கேற்கும் பாத்திரங்களுக்குரிய பொருத்தமான ஒப்பனையைச் செய்து வந்தார். இவ்வாறக வளர்ந்து வந்த இவர் பல நிகழ்வுகளை ஒழுங்கமைத்து மேடையேற்றியும் வருகின்றார்.

இவர் வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் பெருமாள் ஆலயத்தில் தொடர்ச்சியாக ஆற்றி வரும் பணிகளுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதும் மறுதலிக்க முடியாததுமான தனித்துவம் மிக்க ஒன்று, "காட்சியும் கானமும்" எனும் நிகழ்ச்சியாகும். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் இவ் ஆடல் வடிவத்தின் அனைத்து அம்சங்களும் இவரது சிந்தனையிலும், நெறிப்படுத்தலிலும் செயல்வடிவம் பெற்றவையாகும்.

காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப நவீனத்துமான ஆடல் வடிவங்களையும் அவற்றிற்குரிய ஆடை ஆபரணங்களையும் வடிவமைப்பதிலும் அப்பாத்திரங்கட்கு பொருத்தமான ஒப்பனைகளை மேற்கொள்வதிலும் (அலங்கரிப்பதிலும்) இவரே இன்றைய காலகட்டத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர் என்பது இக்கலைத்துறை சார்ந்த ஆய்வாளர்களின் கருத்தாகும். மேலும் இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2013 ஆம் ஆண்டில் "கலைஎழில்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இன்றும் ஒப்ப னைக் கலையில் தனித்துவமும் மகத்துவமுமிக்கவராக இவர் சேவையாற்றி வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திரு. அந்தோனி றெமிஜியஸ்

**நாடக எழுத்துரு**
**நானாட்டான்**

வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டத்தில் பிடாரிக்குளம் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு பிறந்த திரு. அந்தோனி றெமிஜியஸ் தனது கல்வியை மன்னார் மாவிலங்கேணி பாடசாலை, மற்றும் மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் கற்று தனது பட்டப் படிப்பினை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்து, கலைமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் உளவளத்துணை டிப்ளோமா கற்கையினையும் நிறைவு செய்துள்ளார்.

இவர் சிறு வயதில் இருந்து கலையில் ஆர்வம் கொண்டு தனது தாய் வழி உறவினரான கலாபூஷணம் பிலிப் சிங்கராஜா அவர்களின் நாடகங்களில் பாத்திரமேற்று நடித்து வந்தார். இவருக்கு நாடகத்துறையில் தானாகவே நாடகப் பிரதிகளை எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இவர் தனது 16 வயதிலே எழுத்தாற்றல்,சொல்,சிறுகதைப் போட்டிகளில் நாடக ஆக்கங்களில் பங்கு கொண்டதுடன் தானாகவே நாடகங்களையும் எழுதத் தொடங்கினர். அவற்றைப் பாடசாலை மட்டத்திலான நிகழ்வுகளுக்குத் தனது சகாக்களைக் கொண்டு அரங்கேற்றினார். தனது தாயாரின் ஊக்கப்படுத்தலினால் பல சிறுவர் நாடகங்கள் மற்றும் சமூக நாடகங்களையும் எழுதத் தொடங்கினார். பிற்பட்ட காலங்களில் பாடசாலை ஒளி விழா, வாணி விழா, ஆலய பங்கு நிகழ்வுகளுக்கான நாடகங்களை எழுதி தானே பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார். கிராமத்தில் மட்டுமன்றி தனியார் தொண்டு நிறுவனங்களின் விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கான பல சமூக நாடகங்களையும் தயாரித்தும், பயிற்றுவித்தும் வந்துள்ளார்.

இவர் 2005 - 2006 காலப்பகுதிகளில் 'பாலகன் பிறந்தார்', 'ஒற்றுமை', 'மாய கண்ணன்', 'பூங்காவனம்' போன்ற நாடகங்களை எழுத்துருவாக்கம் செய்ததுடன், 'மீட்பின் வெள்ளி', 'புதிய தேசம்', 'உண்மைத்தாய்', 'ஞான ஒளி', 'உழைக்கும் கரங்கள்', 'புதிய பாதை', 'அழியாத சொத்து', 'எங்கே மகிழ்ச்சி', 'புதிய வாழ்க்கை', 'வழி காட்டிகள்', 'அன்பில் ஒன்றிணைவோம்', 'உலகை வெல்வோம்'. 'கூரையின் விரிசல்', 'மாற்றத்தின் திறவு கோல்', 'வாழத் துடிக்கும் வாலிபம்', 'புதுவாழ்வு' போன்ற நாடகங்களை எழுத்துருவாக்கம் செய்ததுடன் நின்றுவிடாது நெறியாள்கை யாளராகவும் தனது கலைப்பணியினை மேற்கொண்டுள்ளார். அத்தோடு 'போதையற்ற சமூகம்', மாற்றத்தின் திறவு கோல்', 'அழியா சொத்து கல்வியே', 'திருப்பம்' போன்ற கலைப்படைப்புகளை எழுத்துருவாக்கம் செய்ததுடன், அதில் தானும் நடித்தும் தனது திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் தனது பணியுடன் கலைப் பணியையும் சமூக மாற்றத்திற்காக ஈடுபாட்டுடன் செய்து வருகின்றார். இவர் தனது படைப்புக்களை காலத்தின் தேவையறிந்து தயாரித்து வழங்குவதுடன் தனது படைப்புக்களில் நாட்டுக்கூத்துக்களையும் எழுத்துருவாக்கியமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு நாடக எழுத்துருவாக்கத்தில் பல தளங்களில் தடம்பதித்து பாராட்டுப் பெற்று வரும் இவரது கலைப் பணியினைப் பாராட்டி வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை,மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திரு. சின்னத்துரை லதீபன்

**ஓவியம்**
**தெல்லிப்பளை**

வடக்கு மாகாணம், யாழ். மாவட்டத்தில் கட்டுவன் மேற்கில் 1984 ஆம் ஆண்டு பிறந்த தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த திரு. சின்னத்துரை லதீபன் அவர்கள் ஓவியத்தில் நாட்டம் கொண்டு சிறுவயதிலிருந்து ஓவியங்கள் வரைவதில் ஈடுபட்டு வருகின்றார்.

சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி வரும் இவர் ஆரம்பத்தில் கல்வி கற்று முடித்த பின்னர் கோயில்களிலும், பாடசாலைகளிலும் சுவர் ஓவியங்களை வரைந்து வந்துள்ளார். பின்னர் 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஓவியத்துறையில் பிரதிமை ஓவியங்களை வரைவதில் ஆர்வம் ஏற்பட்டு இன்று வரை 200க்கு மேல் வரைந்துள்ளார். அதாவது பல உத்தியோகத்தர்கள், கல்விமான்கள் ஆகியோரைப் பார்த்து ஓவியங்களை வரைந்து அவர்களுக்கு அவ் ஓவியங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அவ்வாறே, உடுவில் பிரதேச செயலக மலரான 'கலை நிலம்' நூலுக்கு அட்டைப்படம் வரைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஓய்வு நேரங்களில் ஓவியம் கற்பித்தும் வருகின்றார். கலைப் பயணத்தில் D.D.T.Vயின் நேர்காணல் நிகழ்வில் இவர் பங்குபற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது கலைப்பயணம் பற்றிய குறிப்புக்கள் அடங்கிய தகவல்க ளானவை தினக்குரல் பத்திரிகையில் வெளியாகியிருந்தமையும் பாராட்டத்தக்கது.

இவ்வாறு, பிரதிமை ஓவியங்களைப் பல்வேறு தளங்களில் வெளிப்படுத்தி வரும் திரு.சின்னத்துரை லதீபன் அவர்களினது கலைப்பணியைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமைய டைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திருமதி பிரியதர்சினி ஸ்ரீபன்

குறும்படம்
சாவகச்சேரி

வடக்கு மாகாணம், யாழ்.மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டு பிறந்த சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த திருமதி பிரியதர்சினி ஸ்ரீபன் அவர்கள் குறும்படக் கலைத் துறையில் பல தளங்களில் செயலாற்றி வருகின்றார்.

இவர் 2012 ஆண்டு 'A Call', 'Call சிட்டு', 'திரைக் கதையில் அவள்','எழுத்துப் பிழை', 'நெஞ்சே எடு', 'பூமாலை', 'சொந்தமென்ன பந்தமென்ன', 'தவறிப் பிறந்த தருனம்', 'தூண்டில்', 'குருதிப் பூக்கள்', 'நெஞ்சே எடு', 'உயிர் எழுத்து', 'உயிர் மூச்சு', 'விடமேறி மனையாள்', 'தலைமை', 'நீ மட்டும் போதும்', 'வேணுகொடுத்த இயக்கம்', 'அக்கினி சிறகுகள்' போன்ற குறும்படங்களில் பாத்திரம் ஏற்று இன்றுவரை நடிகையாகச் செயற்பட்டு வந்ததுடன்,

2019 ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டுகளில் குபேரகா மன்றத்தால் மாவட்ட மட்டத்தில் 'வடஜோதி' மற்றும் 'இளங்கலை ஜோதி' விருதினையும், 2015 ஆம் ஆண்டு LA es Do Media நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 'கலைமுத்து', 'கலைச்சுடர்' விருதுகளைத் தேசிய மட்டத்திலும், 2017 ஆம் ஆண்டு சர்வோதயம் நிறுவனத்தினால் மாவட்ட மட்டத்தில் வழங்கப்பட்ட 'கலைமாமணி' விருதினையும், 2014 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் வழங்கப்பட்ட 'கலைமாமணி' விருதினையும், 2014 ஆம் ஆண்டு மாகாணசபையினால் வழங்கப்பட்ட 'சிறந்த நடிகை'க்கான விருதினையும் பெற்றுக் கொண்டார். 2012,2013 ஆம் ஆண்டுகள் AAA Movies நிறுவனத்தால் வழங்கப்பட்ட 'சிறந்த நடிகை'க்கான விருதினை மாவட்ட மட்டத்தில் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

நேத்திரா TVயின் 'கிடுகுவேலி', IBC தமிழின் 'மர்மக்குடில்' போன்ற குறுந் தொடர்களில் நடிகையாகவும் தனது கலைப் பணியினை வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு 'கோமாளி கிட்ஸ்', 'பனைமரக்காடு', 'கீறல்கள்', 'தமிழ் பசங்க', 'ஒருத்தி ' போன்ற முழு நீளத் திரைப்பங்களில் நடித்து தனது திறனை வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு 'முற்றுப்புள்ளி', 'சீண்டாதீர் ஆண்களே' என்ற விழிப்புணர்வுக் குறும்படங்களிலும் நடித்ததுடன், பல பாடல்களிலும் நடித்துள்ளார்.

அத்தோடு, இன்னும் வெளிவரக் காத்திருக்கும் பல முழு நீளத் திரைப் படங்க ளிலும் குறுந்திரைப்படங்களிலும், பாடல்களிலும் நடித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இவ்வாறு பல நிலைகளில் நடிப்புத் திறனில் தடம் பதித்தமையினைப் பாராட்டி ஊக்கு விக்கு முகமாக வடமாகாண, கல்வி பண்பாட்டலுல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளை ஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திரு. பெரியதம்பி ஐங்கரன்

**கவிதை**
**பருத்தித்துறை**

வடக்கு மாகாணம், யாழ். மாவட்டத்தில் 1981 இல் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் வசித்து வரும் திரு.பெரியதம்பி ஐங்கரன் என்பவர் கவிதைத் துறையில் தடம் பதித்து வருகின்றார்.

தென்புலோலியிலுள்ள புற்றளை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் சிறு வயது முதலே கலைத்துறையில் ஈடுபாடுடையவராக விளங்கினார். பாடசாலைக் காலத்தில் தமிழ்த்தினப் போட்டியில் பல பரிசில்களையும் பெற்றுள்ளார். கலை மாமணியான இவர் 2000 ஆண்டிலிருந்து இற்றைவரை கவிதைகளை எழுதி நூலாக வெளியிட்டு வருகின்றார். இவருடைய கவிதைத் தொகுதிகளான 'எனக்கு மரணமில்லை' (2004) 'ஞானக் கண்' (2007) 'வானவில்' (2007), 'கறுப்பு மழை' (2000) 'இருபதாம் நூற்றாண்டு கவிதை' (2011), 'ஆகவே  என்னை நீங்கள் கொலை செய்யலாம்' (2012) 'பேரறிவுச் சுடர் சதாவதானி நா. கதிரைவேற் பிள்ளை' (2018) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவருடைய இக்கவிதைத் தொகுதிகளுக்கு மாகாண மட்டம், தேசிய மட்டம் என பரிசில்களும் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றும் கவிதைகள் எழுதிவரும் இவருடைய கவிதைகள் 'மல்லிகை', 'ஜீவ நதி', 'கலை முகம்', 'ஞானம்' முதலான ஈழத்து சஞ்சிகைகளிலும் உயிரெழுத்து, கலைச்சுவடு, இனிய நந்தவனம் முதலான தமிழ்நாட்டு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

பண்டிதர் பரந்தாமனிடம் யாப்பிலக்கணத்தை முறையாகக் கற்ற இவர் புராண படன மரபில் பயன் சொல்லி வருகின்றார். கந்தபுராணம், பெரிய புராணம், சிலப்பதி காரம், கம்பராமாயணம் முதலான பழந்தமிழ் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருக்கும் அதேவேளை  நவீன கவிதையுலகில் ஆழமான தடத்தினைப் பதித்த ஒருவராகவும்  இனங்காணப்பட்டுள்ளார்.

இவரது கலைச் சேவையினைப் பாராட்டி யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவை 2018 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது இலக்கியப் பணியினைப் பாராட்டி வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021ஆம் ஆண்டுக்கான இளங் கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திரு. துரைசிங்கம் அயூரன்

**நாடகம்**
**தெல்லிப்பளை**

வடக்கு மாகாணம், யாழ்.மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு பிறந்த தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த திரு.துரைசிங்கம் அயூரன் அவர்கள் நாடகமும் அரங்கியல் துறையில் பாடசாலையில் கற்கின்ற காலத்திலும், தேசிய கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டிருந்த போதும், நாடகத்தின் மேல் கொண்ட ஈடுபாடு காரணமாகவும் இத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். இவர் நாடகம் பிரதியாக்கம், தயாரிப்பு, நெறியாள்கை, இசையமைப்பு, நடிப்பு என்ற பல்வேறு தளங்கள் ஊடாக நாடகத்துறையில் தன்னை முழுமை யாக ஈடுபடுத்திக் கொண்ட இளங்கலைஞராவார்.

இவர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் 2012 ஆம் ஆண்டு கல்வியியற் கல்லூரியில் கற்கின்ற போது ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 'தொடர்பாடல்' என்ற குறு நாடகத்திற்கு இசையமைப்புச் செய்தமைக்காகப் பாராட்டுச் சான்றிதழ் பெற்றுக் கொண்டார். 2012 இல் நடாத்தப்பட்ட அரச நாடக விழாவில் 'தோள் கொடுப்போம்' என்ற நாடகத்தில் பங்குபற்றியமைக்காகவும், நாடக இசையமைப்பிற்காகவும், சிறந்த ஒளி அமைப்பிற்காகவும் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார். மற்றும் 2013 இல் அரச ஊழியர்களுக்கான குறுநாடகப் போட்டியில் 'தூக்கி எறியப்பட முடியாத கேள்வியாய்' என்ற நாடகத்தில் பங்குபற்றி இரண்டாமிடத்தினைப் பெற்றுக் கொண்டதுடன் இவ் ஆண்டிலேயே அரச சிறுவர் நாடக விழாவில் திறந்த நாடகப் பிரிவில் 'பெரியோர் சொற்கேட்போம்' என்ற நாடகத்தில் பங்குபற்றியதுடன், இவ் நாடகத்தில் சிறந்த இசை அமைப்பிற்கான விருதினையும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து யாழ்/மகாஜனக் கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருக்கும் இவரால் தயாரிக்கப்பட்ட 'அன்புக்கை' என்ற நாடகமானது மாகாண மட்டத்தில் 2014 ஆம் ஆண்டு முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. அவ்வாறே 2015 இல் நடைபெற்ற அரச நாடக விழாவில் இவரால் தயாரிக்கப்பட்ட "அன்புக்கும் உண்டோ" என்ற நாடகத்திற்காகச் சிறந்த நாடகத் தயாரிப்பாளர் என்ற திறமைச் சான்றிதழினையும் பெற்றுக் கொண்டார். இவரால் தயாரிக்கப்பட்ட 'இராவணேசன் நாடகம்' 2014 இல் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் 2015,2016 இல் முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. மற்றும் 2017இல் 'வாழ்வதற்கே தேசம்' என்ற நாடகம் சிறந்த நாடகப் பிரதியாக்கம், இசையமைப்பு, சிறந்த நாடக நடிப்பின் நயனத்திற்காகவும் விருதினைப் பெற்றுக் கொண்டார். அத்தோடு ஆரோகணா அரங்கக் கல்லூரியைத் ஸ்தாபித்து அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராகவும் இயக்குனராகவும் இருந்து நாடகத் துறைக்குச் சிறந்த சேவையாற்றி வருவதோடு, நாடகத்திற்கான பல பயிற்சிப் பட்டறைகளையும் நடாத்தி வருகின்றார். நாடகத்துறையில் மட்டுமன்றி, வாத்தியக் கருவிகளைக் கையாள்வதில் சிறந்த தேர்ச்சி பெற்ற இக்கலைஞன் தனது ஆரோகணா அரங்கக் கல்லூரிக்கென தமிழின்னிய வாத்தியக் குழு ஒன்றினை உருவாக்கி, பல்வேறு நிகழ்வுகளின்போது வரவேற்பு நிகழ்வுக்காக இக்குழுவினைப் பயன்படுத்திப் பாராட்டினையும் பெற்றுக் கொண்டார். மற்றும் சமூகச் சீர்கேடுகளைச் சமூகத்திலிருந்து இல்லாதொழிப்பதற்காக பல்வேறு நிகழ்வுகளின் போது இவரால் தயாரித்து நெறியாள்கை செய்யப்பட்ட தெருவெளி ஆற்றுகைகளும் பலராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட மாவட்ட கலாசார விழாவில் இளங்கலைஞர்களுக்கான யாழ். முத்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் இவர் வலி.வடக்கு கலாசாரப் பேரவை உறுப்பினாக இருந்து பிரதேச செயலகப் பிரிவிலும் நாடகம் சார்ந்த பல செயற்பாடுகளையும் இன்று வரை முன்னெடுத்து வருகின்றார்.

பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளில் இவரது நெறியாள்கையில் அரங்கேற்றப் பட்ட வடமோடிக் கூத்து, சிந்து நடைக்கூத்து, வசந்தன் கூத்து என்பன 2017, 2018இல் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. 2018 ஆம் ஆண்டு தேசிய அரச சிறுவர் நாடகப் போட்டியில் இவரால் நெறியாள்கை செய்யப்பட்ட 'வண்டிப் பயணம்', 'கூடி விளையாடு பாப்பா' என்பனவும், தேசிய விருதினைப் பெற்றது. அவ்வாறே 2019 ஆம் ஆண்டு அரச நாடக விழாவில் அரங்கேற்றப்பட்ட 'அன்பமுதூறும் அயலார்' என்ற நாடகத்திற்கு சிறந்த நாடக துணை நடிகருக்கான சிபார்சு சான்றிதழும் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார்.

2017 ஆம் ஆண்டு வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மன்றங்களுக்கிடையிலான நாடகப் போட்டியில் இவரால் தயாரித்து நெறியாள்கை செய்யப்பட்ட நாடகம் யாழ். மாவட்டத்தில் முதலாமிடத்தினையும், மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுச் சான்றிதழினைப் பெற்றுக் கொண்டது. 2014 ஆம் ஆண்டு வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் பாரம்பரிய கலைஞர்களுக்கான ஆளுநர் விருதுக்கான போட்டியில் மேல் பிரிவில் இசை நாடக விழாவில் நாட்டார் வழக்கியல் மன்றத்தின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் பங்கு பற்றி மூன்றாம் இடத்தைப் பெற்றமைக்காகச் சான்றிதழ் பெற்றுக் கொண்டார்.

இவரது நாடகப் பணியினைப் பாராட்டி, வட மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திரு. மனோராசா பிரதீபன்

**கிராமியக்கலை**
**உடுவில்**

வடமாகாணம், யாழ்.மாவட்டத்தில் 1991 இல் பிறந்து வலி தென்மேற்கு, உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் வசித்து வரும் திரு. மனோராசா பிரதீபன் என்பவர் 2007 ஆம் ஆண்டு முதல் தனது கலைப் பயணத்தை ஆரம்பித்ததுடன், ஆர்மோனியக் கலைஞரான திரு.க.மனோராசா ஆகிய தனது தந்தையிடம் ஆர்மோனியக் கலையினைக் கற்று, 2007 ஆம் ஆண்டு யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் ஆர்மோனிய அரங்கேற்றத்தின் மூலம் தனது கலைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அத்தோடு, பாடசாலை கலை நிகழ்வுகளில் ஆர்மோனிய வாத்தியத்தை வாசித்து வந்ததுடன், ஆலயங்களில் சிந்து நடைக் கூத்து, 'அரிச்சந்திராமயான காண்டம்', 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் போன்றவற்றிற்கும் மற்றும் வில்லிசை நிகழ்வுகளிற்கும் ஆர்மோனியம் வாசித்து வந்துள்ளார்.

அத்தோடு இவர் யா/ இணுவில் இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியைக் கற்கும் காலத்தில் பாடசாலை மட்ட, கோட்ட வலய மட்டம் மற்றும், மாகாண மட்ட வில்லுப்பாட்டுப் போட்டிகளுக்கு ஆர்மோனியங்களையும் வாசித்து நிகழ்வுகளைச் சிறப்படையச் செய்தார். அதுமட்டுமல்லாது பாவோதல், கதாப்பிரசங்கம் புராணபடனம், நாடகம், மனனமுற்றோதல் மற்றும் வாய்ப்பாட்டு போன்ற போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ்கள் பலவும் பெற்றுள்ளார்.

மற்றும், கர்நாடக சங்கீதத்தைக் கற்றுக் கொண்ட இவர் பல இசைக்குழுவினருடனும், பல வில்லிசைக் குழுக்களுடனும், இணைந்து பல ஆலயங்களில் இசைக் கச்சேரிகள், வில்லிசை நிகழ்ச்சிகளையும் நடாத்தி வந்துள்ளார்.

மற்றும் வடமாகாண பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான வில்லுப்பாட்டுப் போட்டியில் உடுவில் குபேரகா கலைமன்றம் சார்பாகப் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் மாகாணமட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

இவர் 2015 முதல் இன்றுவரை சத்தியதாஸ் வில்லிசைக் குழுவின் பிரதான பக்கப்பாட்டு கலைஞராகப் பணியாற்றி வருகின்றார். இவரது வில்லிசை நிகழ்வுகள் வடமாகாணத்தில் புகழ்பூத்த ஆலயங்களான நல்லூர் கந்தசுவாமி ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம், பொன்னாலை வரதராஜப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம் போன்ற பல்வேறுபட்ட ஆலயங்களில் இவரது வில்லிசை நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கோப்பாய் பிரதேச செயலகம், நெடுந்தீவுப் பிரதேச செயலகம், வடமாகாணப் பிராந்திய போக்குவரத்துத் திணைக்களம், நல்லூர் இளங்கலைஞர் மன்றம், புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கம், திருமறைக் கலாமன்றம், கைதடி இந்து வாலிபர் சங்கம், மற்றும், தனியார் கல்வி நிலையங்களிலும் இவரது வில்லிசை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். தற்போது சத்தியதாஸ் இசைக்குழு மற்றும் பக்தி இசைக்குழுவில் கீபோட் கலைஞராகவும் பணியாற்றி வருகின்றார். ஏழாலை மகாவித்தியாலயம், மயிலணி சைவ மகாவித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் வில்லிசை நிகழ்வினைப் பயிற்றுவித்து, மேடையேற்றியதுடன் மாணவர்களைப் போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெறவும் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வில்லிசைக் கலைஞராகவும், பயிற்றுவிப்பாளராகவும் இன்றும் கலைப்பணி யாற்றிக் கொண்டிருக்கும் இவரது கலைச் சேவையினைப் பாராட்டி வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## செல்வி. மல்லிகாதேவி செல்வரத்தினம்

**சிறுகதை**
**சங்கானை**

வடக்கு மாகாணம் யாழ்.மாவட்டத்தில் அராலியில் 1983 ஆம் ஆண்டு பிறந்த இவர் பாடசாலைக் காலம் முதற்கொண்டே சிறுகதைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டு செயற்பட்டு வந்தவர்.

இவரது சிறுகதைகள் அவ்வக்காலங்களினைப் புலப் படுத்துவனவாக அமைந்திருந்தன. குறிப்பாக 1997 ஆண்டு 'தாயுள்ளம்', 'நண்பர்கள்' (1998), 'சிப்பிக்குள் முத்து', (1999), 'மண்ணுக்குள் வைரம்' (2000), 'வேரும் விழுதும்' (2001), 'உனக்காகவே வாழ்கிறேன்' (2010), 'காலத்தே பயிர்செய்' (2013), 'அவளுக்கென்று ஒரு மனம்' (2016), 'நிலவே வா' (2017), 'மிட்டாய் கனவுகள்' (2018), 'நெஞ்சத்தில் நீதான்' (2018), 'தீய்ந்த சொர்க்கம்' (2017), 'கடலின் மடியில்' (2017), 'புத்தொளி' (2017), 'தைப் பொங்கல்' (2017), 'நத்தார் பரிசு' (2017) 'நித்திய சுமங்கலி' (2016), 'கல்யாணச் சந்தையிலே' (2015), 'துகிலுரிப்பு' (2018) போன்ற பல சிறுகதைகளைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரித்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், 'தாயகம்', 'ஜீவநதி', 'வளரி' (இந்திய சஞ்சிகை) கனடா 'தாய் வீடு' சஞ்சிகை களிலும் மற்றும் பத்திரிகைகளிலும் ஆக்கங்களை எழுதி வருகின்றார். அத்துடன் உதயன், தினக்குரல் பத்திரிகைகளில் தொடர்ந்தும் எழுதி வருவதுடன் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதை ஆக்கங்கள் ஊடாக தனது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றார்.

கலைமாணிப்பட்டதாரியான இவர், அரச தேசிய இலக்கிய விழா போட்டிகள், பிரதேச இலக்கிய விழா போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்கள் பெற்று வருவதுடன் ஊடகத்துறையிலும் கற்றுக் கொண்டு சுயாதீன ஊடகவியலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். மல்லிகா செல்வரத்தினம் என்ற பெயரில் சிறுகதை, நாவல், கட்டுரை, நேர்காணல், சமூக அபிவிருத்தி, பெண்ணியம், சமூகப் பிரச்சினைகள் பற்றி பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்து ஆக்கங்களை எழுதிவரும் இவர் 'அராலியூர் நிலா' என்ற, பெயரிலும் 'யாழ் மங்கை', 'புரட்சிகா', 'ரூபனா' முதலிய புனை பெயர்களிலும் தனது படைப்புத்திறனை வெளிப்படுத்தி வருகின்றார்.

இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## செல்வி நிரஞ்சலா சுந்தரலிங்கம்

**வாத்தியக்கலை**
**நல்லூர்**

வட மாகாணம், யாழ்.மாவட்டத்தில் 1988 ஆம் ஆண்டு பிறந்த இவர், யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறைப் பட்டதாரியாவார்.இவர் சிறுவயதிலேயே வயலின் வாத்தியத் தினை விரும்பிக் கற்றதுடன், கடந்த 10 வருடத்திற்கும் மேலாக மாணவர்களுக்கும் கற்பித்தும் வருகின்றார். பாலர் வகுப்பி லேயே பண்ணிசை நிகழ்வுகள் பலவற்றில் பங்கு பற்றிப் பரிசில் கள் பலவற்றைத் தனதாக்கிய இவர் அருணகிரிவாசன் அவர் களை குருவாகக் கொண்டு இசையை ஒரு பாடமாகக் கற்றார். அவ்வாறே பாக்கியலஷ்மி நடராஜா அவர்களிடமும், ஜனனி செந்தூரன் அவர்களிடமும், அம்பலவாணன் ஜெயராமன் அவர்களையும் குருவாகக் கொண்டு வயலினைக் கற்றுத் தேர்ந்தார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் தற்காலிக விரிவுரையாளராக இரண்டு வருடங்கள் கடமையாற்றிய இவர் பல இடங்களிலும் கலைமன்றங்களிலும் வயலின் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். அவ்வாறே பல அரங்குகளில் இசைக் கச்சேரிகளில் பக்கவாத்தியமாகவும் வயலின் இசைத்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக் கழக கைலாசபதி அரங்கம், ஆலயங்கள், பல பாடசாலைகள், இளந்தொண்டர்சபை, இளங்கலைஞர் மன்றம், இந்தியத் துணைத்தூதரகம், கீதவாஹினி மன்றம் எனப் பல இடங்களிலும் வயலின் இசை நிகழ்த்தியுள்ளார்.

இவை மட்டுமல்லாது, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கருணாலய இல்லம், கிழவன்காடு கலாமன்றம், சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் அறநெறிப்பாடசாலை, சிதம்பரேஸ்வரி கலையகம், விஜயலட்சுமி கலையகம், சாரங்கா இசைமன்றம், கிருஸ்ணா அறநெறிப்பாடசாலை, தனியார் வகுப்பு, ஸ்ரீ ஸ்வரஞான கலையகம், வேதாரணிய சனசமூகநிலையம் போன்ற பலவற்றில் வயலின் ஆசியராகக் கடமையாற்றி வருகின்றார்.

மற்றும் இவர் பல மாவட்ட, மாகாணப் போட்டிகளுக்கு வயலின் வாசித்ததுடன் DAN TV, IBC TV, சமூகம் TV, CAPITAL TV எனப் பல நிகழ்வுகளிலும் தனது திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பல தளங்களில் தனது வாத்தியத்திறனை வெளிப்படுத்தி வரும் இவரது கலைச் செயற்பாட்டினைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திருமதி பவித்திரா வசந்தரூபன்

**நடனம்**
**சண்டிலிப்பாய்**

வடமாகாணம் யாழ். மாவட்டம் மானிப்பாயில் 1986 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஐந்து வயதில் தனது நடனக் கலையின் ஆரம்பத்தினை தனது குருவான லீலாம்பிகை செல்வராஜா அவர்களிடமும் தொடர்ந்து அவரது மகள் செல்வாம்பிகை வீரசிங்கத்திடமும் கற்றுக் கொண்டார்.

இவர் பல்கலைக்கழகத்தில் நடனத்துறையில் கற்றுக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் (2010) நாட்டிய மயில் போட்டியில் பங்குபற்றி 'நாட்டிய மயில்' விருதினைப் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையில் கற்றக் கொண்ட இவர் அங்கு இரண்டு வருடங்கள் தற்காலிக விரிவுரையாளராகவும் கடமையாற்றியதுடன், வெளிநாட்டு பயணங்களையும் நடனத்துறை சார்பில் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே வெளி நாட்டு புலமைப்பரிசில் நிதிகளையும் பெற்றுக்கொண்டதுடன் மானிப்பாயில் 'லலித நர்த்தனாலயா' எனும் கலை மன்றத்தின் ஊடாக நடனக் கலையினை மாணவர்க ளுக்குப் பயிற்றுவித்து வருவதுடன், பல அரச நடனப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளையும் பெற்றுள்ளார்.

கலாவித்தகரான இவர் இந்தியா சென்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டப் படிப்பினை நடனத்துறையில் முடித்துக்கொண்டதுடன் இந்தியாவிலும் பல நடன நிகழ்வுகளை மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர் நடனத் துறையில் மட்டுமல்லாது வாய்ப்பாட்டு, மிருதங்கம், பண்ணிசை, சித்திரம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார்.

மற்றும் இவர், "சடங்கும் நிகழ்த்துக் கலையும்" என்ற நூலினையும் (2019), பாதபேதம்" என்ற நூலினையும் (2020) வெளியிட்டுள்ளமையும் பாராட்டத்தக்கது.

அத்தோடு நடனத்துறையில் சிறந்து விளங்கும் இவர் நாட்டிய நாடக போட்டிகள், மற்றும், பிரதீபா போட்டிகளிலும் பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்டவராவார். இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் கலாசார மத்திய நிலைய நடன வளவாளராகவும் செயற்பட்டு மாணவர்கள் நடனப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்கள் பெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து வருகின்றார் என்பதும் வெளிப்படை.

இவரது நடனத் துறைசார்ந்த கலைத்திறமையினைப் பாராட்டி ஊக்கு விக்கும் முகமாக வட மாகாண, கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2020



## திரு. பத்மநாதன் சிவமைந்தன்

**இசை**
**யாழ்ப்பாணம்**

வடக்கு மாகாணம் யாழ். மாவட்டத்தில் 1987.04.29 இல் பிறந்த திரு. பத்மநாதன் சிவமைந்தன் அவர்கள் 1993 ஆம் ஆண்டு முதல் இசைத்துறையில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்ற ஒரு சிறந்த ஆற்றுகையாளர், படைப்பாளி என்பதுடன், இவர் இசைத்துறையில், BA, MA முதுதத்துவமாணி நிலையினையும் அடையப் பெற்றவராவார். தனது தாயார் திருமதி யோகலெட்சுமி பத்மநாதன் அவர்களினை ஆரம்பக் குருவாகக் கொண்டு பின்பு ஈழத்தில் சிறந்த ஆசிரியர்களான பொன். சுந்தரலிங்கம், வதனி சிறீதரன் ஆகியோரிடம் தனது கல்வியினைத் தொடர்ந்தவர்.

2006 ஆம் ஆண்டு உயர் தரக் கல்வியைத் தொடர்ந்து மேற்படிப்பினை தமிழ்நாடு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். அங்கு 2010 (B.A), 2012 (M.A) ,2014 (Mphil) பட்டங்களை இசைத்துறையில் பெற்றார்.

தனது சங்கீத ஞானத்தைப் பெருக்கும் வண்ணம் 2007 தமிழ்நாடு Dr. பா. கோவிந்தராஜன் ஹனுமந்தபுரம், திருமதி சியாமளா கோபாலன் அவர்களிடம் 2009 முதல் தற்போதுவரை மஹாவித்துவான் சென்னை Dr.V.L.V சுதர்சன் அவர்களிடமும் இசைபயின்று கொண்டு இருக்கின்றார்.

இவர் இசைத்துறையில் தனது திறமைகளை வெளிக்காட்டும் முகமாக விநாயகர் அகவல், முருகன் பாடல்கள், திருமுருகாற்றுப்படை, சத்ரு சம்ஹாரவேல் பதிகம், மயில் விருத்தம், ஐயப்பன் கவசம், யோகர் சுவாமி பாடல்கள், பரதநாட்டியப் பாடல்கள், திருமுறை தேவாரப் பதிகங்கள், சிறுவர் பாடல்கள் என பல இறுவட்டுக்கள் பாடியுள்ளார். கிட்டத்தட்ட 2000 ஆற்றுகைகளை, இசைக்கச்சேரி, பரதநாட்டிய அரங்கேற்றம், பரத நாட்டிய நிகழ்வு, மிருதங்க அரங்கேற்றம், திருமறைக் கச்சேரி, பஜனாமிர்த இசை, நாட்டுப்புற இசை, நாடக, அரங்க இசை நிகழ்வுகள் மூலம், இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற உலக நாடுகளிலும் நிகழ்த்தியுள்ளார். Zoom இணையத்தளம் வாயிலாக London, German போன்ற நாட்டு நிகழ்வுகளிலும் கலந்து தனது இசை வளர்ச்சியைப் பெருமையடைய வைத்துள்ளார்.

இவரின் குரலின் திறமையினை வியந்து, 1995 இல் ஈழத்துச் சீர்காழி கோவிந்தராஜன் எனும் பட்டத்தினை பிரதேச மட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. சண்முகநாதபிள்ளை வழங்கிக் கௌரவித்தார். அவ்வாறே மாவட்ட மட்டத்தில் வவுனியா இந்து மாமன்றம் 2001 ஆம் ஆண்டு "இசைமைந்தன்" விருதினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிக் கௌரவித்துள்ளது. மற்றும் 2009 ஆம் அண்டு சாவகச்சேரி வித்தகப் பிரார்த்தனை நிலையத்தினால் 'இசை இளவரசர்' எனும் விருதினை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமல்லாமல், 2013 ஆம் ஆண்டு இந்தியா-தமிழ்நாடு தருமபுரம் ஆதீனம் 'திருமுறை நெறிச் செல்வர்', 2015 இந்தியா ஆலய தரிசனப் பதிப்பகம் 'சிம்மக்குரலோன்', வாலாஜாபேட்டை நடராஜப் பெருமான் நாட்டியப் பள்ளி 'சுருதிநாதன்', 2015 அரியலூர் தகதிமிதா நாட்டியப்பள்ளி 'சிம்மக்குரலிசை வேந்தன்', 2015 தில்லை திருமுறை மன்றம் 'சிதம்பரம்- இசை மைந்தன்', 2018 ஆம் ஆண்டு வவுனியா அகிலாண்டேசுவரர் திருக்கோவிலில் 'அருள்நாத சுரபி', 2018 யாழ். கோண்டாவில் ஐயப்பன் தேவஸ்தானம் 'இசை ஞான வினோதன்' 2021 வவுனியா நிருத்திய நிகேதன் நுண்கலைக் கல்லூரியினர் 'நிருத்திய இசை ஞான அயன்', ஸ்ரீ வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம் 'செந்தில் இசைநாதன்' எனும் சிறப்புப் பட்டங்களையும் தன் வசப்படுத்தியவராவர்.

தமிழ்நாடு சிதம்பரம் தில்லைத்திருமன்றம் ஓதுவாராவார், யாழ்ப்பாணம் வித்தகம், யாழ்ப்பாணம் கதிரேசன் கோவிலில் ஓதுவார் மூர்த்திகளாகவும் பணிபுரிகின்றார்.

வவுனியா, அருளகம், நிருத்திய நிகேதனக் கல்லூரி, ஆசிரியராகவும் ஆஸ்தான வித்துவானாகவும் விளங்குகின்றார்.

இவர் இரண்டு வருடகாலம் யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியவராவார்.

சிதம்பரம் நடராஜர் கோவில் நாட்டியாஞ்சலி நிகழ்வில் 2007 தொடக்கம் இன்றுவரை இருபதிற்கும் மேற்பட்ட நடன நிகழ்வில் உலகத்தரம் வாய்ந்த பரத நாட்டிய நிகழ்வில் வாய்ப்பாட்டுக் கலைஞராக இருந்து சிறப்பித்துள்ளமை சிறப்பே!

இவரது கலைப் பணியைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



## திரு. இராசநாயகம் ராஜ்குமார்

**சிற்பம்**
**உடுவில்**

வட மாகாணம், யாழ். மாவட்டத்தில் ஏழாலை எனும் கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு பிறந்து சிறு வயது முதல் சிற்பக் கலையினைத் தனது குடும்பத்தினரது பரம்பரை வழியாகப் பயின்று வந்த திரு. இராசநாயகம் ராஜ்குமார் அவர்கள் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பீடத்தில் சித்திரமும் வடிவமைப்பும் எனும் கலையைத் திறம்பட நுட்பங்களுடன் பயின்று அதனூடாக மரத்திலான சிற்பங்கள், சீமெந்து மற்றும் சவர்க்கார உருவ வடிவமைப்புக் கலையிலும் கைதேர்ந்து விளங்கி வருகின்றார். இக் கலைப்படைப்புகளுடன் இணைந்து ஓவியக் கலையிலும் கைதேர்ந்தவராகவும் அவற்றினை மாணவர்களுக்குக் கற்பித்தும் வருகின்றார்.

இவர் தனது தகப்பனாரின் வழிகாட்டல்களுடன் பல கோயில் வாகனங்கள், சப்பை ரதங்கள் மற்றும் இறைவனின் சிம்மாசனங்கள் போன்ற பலவற்றையும் உருவாக்கியுள்ளார். 2014 ஆம் ஆண்டு குப்பிளான் சொக்கவளவு பிள்ளையார் கோவிலில் இவரால் வடிவமைக்கப்பட்ட "சூரன்" சிலையானது, அனைவராலும் பாராட்டுப்பெற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மற்றும் ஏழாலை களவோடை அம்மன் ஆலயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பாம்பு சிலை வாகனம் (2012) சிங்கவாகனம் (2013), குதிரை வாகனம் (2014), மயிலங்காடு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குமான கப்பல் வாகனம் (2016), நாக வாகனம், ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கான குதிரை வாகனம்(2017) மற்றும் ஏழாலை இலந்தை கட்டி ஞான வைரவர் ஆலயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மயில்வாகனம், எலி வாகனம், சப்பைரதம் (2018) என்பனவும், ஏழாலை கன்னிமார் ஆலயத்திற்காக உருவாக்கப்பட்ட எலி வாகனம் (2016) என்பனவும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கன.

மற்றும் மரத்திலான சிற்ப வேலைப்பாடுகள் (கதவு, நிலை) தளபாட வேலைப்பாடுகள் என 800 இற்கு மேற்பட்டவை என இவரால் படைக்கப்பட்டுள்ளன. பிள்ளையார், அம்மன், மாதா, அன்னம், பூ கொடி, தீப நாயகி என பல சிற்பப் படைப் புக்களை உருவாக்கிய இவரது கலைச்சேவையினைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக, வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2021



இளங்கலைஞர்

## திரு. அஸ்ரனிக் றூீஸ்வெல்ட் றாங்கிளின் றூஸ்வெல்ட்

**கூத்து**
**யாழ்ப்பாணம்**

வடக்கு மாகாணம், யாழ். மாவட்டத்தில் பாஷையூரில் 1981 இல் பிறந்த இவர் நாட்டுக் கூத்து (தென்மோடி) துறைசார்ந்து 1994 ஆம் ஆண்டு தொடக்கம் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்.

இவர், யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் நாட்டுக் கூத்து கலை சார்ந்து பல மேடைகளை அலங்கரித்தவர். பல புகழ் மிக்க அண்ணாவியர்களின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட தென்மோடிக் கூத்துக்களில் அரங்கேறி அனைவரினதும் பாராட்டைப் பெற்ற சிறந்த கலைஞராவார்.

இவர் 40 இற்கு மேற்பட்ட கூத்துக்களில் 'பண்டார வன்னியன்', 'வீரபாண்டிய கட்டப் பொம்மன்', 'வெடியரசன்', 'வலகம்மா', 'விக்கிரமாதித்தன்' போன்ற பல பாத்திரங்களை ஏற்றும் நடித்ததுடன், பிரதான பாத்திரங்களாகவும், துணைப் பாத்திரங்களாகவும் நடித்து தனது திறமையினை வெளிப்படுத்தியுள்ளார்.

இவரது கலைப் பயணத்தில் யாழ்ப்பாண கலாசாரப் பேரவையால் 2014 ஆம் ஆண்டு 'இளங்கலைஞர்' விருதும், பதுவையர் கலாமன்றத்தினரால் 2016 ஆம் ஆண்டு 'இளங்கலைக்கதிர்' விருதும், தேசோதயம் அமைப்பினரால் 2017ஆம் ஆண்டு 'கலை மாமணி' விருதும், சர்வோதயம் அமைப்பினரால் 2018ஆம் ஆண்டு 'தேசோதய தீபம்' எனும் விருதும், (2017) 'சமூகதிலகம்' எனும் விருதினைக் கொட்டடி சனசமூக நிலையமும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. பெற்றுக்கொண்டதோடு 2019ஆம் ஆண்டு யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையால் வழங்கப்பட்ட இளங்கலைஞர் விருதும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.


இவரது கலைப்பணியின் சிறப்பினைப் பாராட்டி ஊக்குவிக்கு முகமாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2021







## திரு. ஆறுமுகம் கனகரத்தினம்

**நூல்:**
**ஔவையாரின் செந்தமிழ் மாலை (தமிழ் வளர்ச்சி நூல்)**
**சங்கானை**



யாழ். மாவட்டத்தின் சங்கனைப் பிரதேச செயலகப் பிரிவில் சுழிபுரத்தில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள் சைவத்தையும், தமிழையும் தன்னிரு கண்களாகக் கொண்டவர். இவர் சிறந்த கல்விமான். ஓய்வு பெற்ற ஆசிரியர், சிறந்த சமயப் பேச்சாளர், கந்தபுராண உரை கூறுபவர். நேரடி வர்ணனையாளர் எனப் பல்துறை வல்லுனராக அறியப்படுகின்றார்.

இவர் தனது ஆசிரியப் பணியோடு மட்டும் நின்றுவிடாது அக்காலத்திலேயே சைவப் புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்து சைவப் புலவர் பட்டத்தையும் பெற்றுக் கொண்டதோடு, தனது ஆளுமைத் திறனால் கலாபூஷணம் விருதும் பெற்றவராவார்.

இவர் முத்தமிழ் வளர்ச்சிக்காகத் திருமண வாழ்த்து மடல்களை எழுதி வாசித்தல், கல்வெட்டுக்களை எழுதி வாசித்தல், கோயில்களில் பஞ்ச புராணம் ஓதுதல், புராண படனம் நடைபெறும்போது இசையோடு பாடல்களை வாசித்தல், அமங்கல கிரிகைகளின் போது திருப்பொற்சுண்ணம், பட்டினத்தார் பாடல்கள் என்பன பாடியும் சிறப்பித்துக் கொள்ளும் ஒருவராவார்.

இவர் இலக்கியப் பணி ஆர்வத்தினால் 'மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வரலாறு' (1980ஆம் அண்டு), 'விநாயகர் அநுபூதி' (உரையுடன் - மறுபதிப்பு) (2000 ஆம் ஆண்டு), 'சுழிபுரம் வடக்கு கண்ணகை அம்மன் ஊஞ்சற்பாட்டு' (2005 ஆம் ஆண்டு) போன்ற நூல்களை ஆக்கியதுடன் நின்றுவிடாது,

தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தில் சங்ககாலப் புலவர்களில் ஒருவரான ஔவைப் பாட்டியின் பாடல்களில் நூறுபாடல்களை எடுத்து 'ஔவையாரின் செந்தமிழ் மாலை' (உரையுடன்) எனும் நூலினை சிறுவர் முதல் பெரியோர்வரைப் படித்து பயன்பெறும் வகையில் ஆக்கி வழங்கியமை சிறப்புமிகு அம்சமாகும்.

பல படைப்புக்களை ஆக்கிய இவரது 'ஔவையாரின் செந்தமிழ் மாலை' எனும் இந்நூலிற்கு 2021 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூற்பரிசு வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2021







## அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்

**நூல்:**
**யாதுமானவன் (ஆன்மீகம்)**
**யாழ்ப்பாணம்**




வடக்கு மாகாணம் யாழ்.மாவட்டத்தில் ஆயர் இல்லத்தில் வசித்து வரும் அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே மதம், சமூகம்சார் பிரச்சினைகளையும் சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டி அவற்றிக்கெதிராகக் குரல் கொடுத்து வரும் ஒருவராவார்.

அடிகளார் அவற்றைச் சீர்திருத்தி ஆன்மீக வழியில் மனிதத்தை முழுமை யாக்கும் ஊடகமாகத் தனது மறையுரைகளையும், விரிவுரைகளையும் பயன்படுத்தியும் அவற்றின் சிந்தனைகளைத் தொகுத்து நூல்களாகவும் சமூகத்தில் சென்றடைவதற்கு வழிசமைத்து வருகின்றார்.

இவ்வாறான அருட்பணியில் 'உயிரூற்று' (பாகம்1, 2, 3) 'வாழ்வின் வேர்களைத் தேடி', 'கிறிஸ்துவில் வளர', 'இயேசு அன்பின் சமுத்திரம்', 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்', 'அமைதியில் ஆண்டவரோடு', 'வெற்றியின் இரகசியம்' போன்ற படைப்பாக்கங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான ஆன்மீகப் பணியில் ஒவ்வொரு மனிதனும் இறை தேடலுக்கு உட்படும் முயற்சியாகத் தனது சொந்த அனுபவங்களை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் 'யாதுமானவன்' எனும் நூலாக ஆக்கியுள்ளார்.

இவரது இவ் நூலுக்கு ஆன்மிகத்துறையில் 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2021





## திரு.முத்துக்குமாரு இராதாகிருஸ்ணன்

**நூல்:**
**கூவும் குயிலின் ஏக்கம் (சிறுவர் இலக்கியம்)**
**வவுனியா**



வடக்கு மாகாணம் யாழ். மாவட்டத்தில் கோப்பாயினைச் சொந்த இடமாகக் கொண்ட திரு. முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் அவர்கள் வடக்கு கிழக்கு மாகாண ஆரம்பக்கல்விப் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றி பின்னர் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து தற்போது யாழ். கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவர் சிறுவர் இலக்கியப் பரப்பில் இன்று செயற்றிறனுடன் ஈடுபட்டு வரும் ஒருவராவார். இவர் கல்வியாளராக மட்டும் இராது ஓவியராக, நாடகவியலாளராக, சிறுகதை எழுத்தாளராக எனப் பன்முக ஆளுமை பெற்று, தொடர்ந்தும் இயங்கி வருபவர். இவரது பல நூல்கள் தேசிய மட்டம், மாகாணமட்டம் எனப் பல சிறந்த நூற்பரிசில்களையும் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. சிறப்பாக 'மானிடச் சிக்கல்', 'சிறுவர் அரங்கு', 'பசுமைத் தாயகம்' போன்ற நூல்கள் தேசிய சாகித்திய விருதைப் பெற்றுள்ளன.

இவரது சிறுகதை தமிழ் பாடநூலில் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சிறுவர் நாடகத்துறையிலும் இவரது பணி சிறப்புக்குரியது. ஆரம்பக் கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக சிறுவர் நாடகத்தைப் பயன்படுத்தி நெருக் கடியான காலகட்டங்களில் இழந்த கல்வியை மீட்கும் செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்தியவர்.

பரிகாரக் கற்பித்தலில் அரங்கின் பயன்பாட்டை புகுத்தி ஆசிரியப் பயிற்சியை மேம்படுத்தியவர். இவ்வாறான இவரது படைப்புத் திறன்களின் வரிசையில் 'கூவும் குயிலின் ஏக்கம்' எனும் இவ் சிறுவர் இலக்கியப் படைப்புக்கு 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2021







## வணபிதா துரைசாமி சிவஞானம் யோசுவா

**நூல்:**
**குறிஞ்சாளினி (சூழலியல்)**
**கரைச்சி**




வடக்கு மாகாணம் ஆனந்தபுரம் கிளிநொச்சியில் வசித்து வரும் வணபிதா துரைசாமி சிவஞானம் யோசுவா அவர்கள் காவேரி கலாமன்ற உயர் பணிப்பாளராகச் செயற்பட்டு வருவதுடன், பல்வேறு தளங்களில் ஆளுமை மிக்க ஒருவராகச் செயற்பட்டு வருகின்றார். இறையியல் கற்கையுடன் நின்றுவிடாது யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைமாணிப் பட்டப்படிப்பினையும் பூர்த்தி செய்துள்ளார்.

இவர் தனது சமயப்பணி, சமூகப் பணிகளுடன் இணைந்து இலக்கியப் பணியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டதுடன், பதினொன்றுக்கு மேற்பட்ட நூல்களையும் ஆக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது இறையியல், நாடகம், பொருளாதாரம், சூழலியல், கைத்தொழில் போன்ற நிலைகளில் இவரது இலக்கியப் பணிகளின் சான்று களைக் கண்டு கொள்ள முடியும்.

இவற்றுடன் நின்றுவிடாது பல பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் பதிப்பாசிரிய ராகவும் செயற்பட்டு வருகின்றார்.

'கலைக்கிளி', 'கரை எழில்' போன்ற பல விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவர் பல்வேறு தேசிய, சர்வதேச ஆய்வு மாநாடுகளில் தனது ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்துச் சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

சமூகப்பணி, இலக்கியப்பணியில் பல வெளிகளில் ஊடாடிக் கொள்ளும் அருட்தந்தை அவர்களது படைப்பான 'பொருளாதார அபிவிருத்தி' எனும் நூலுக்காக தேசிய விருது (2019) கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே சூழலியல் சார்ந்த ஆக்கப் படைப்பான 'குறிஞ்சாளினி' எனும் தொகுப்பானது சூழல் நேயத்துடன் கூடிய எமது பாரம்பரிய வாழ்வின் தடங்களை உணர்த்தி நிற்கின்றது.


இவரது குறிஞ்சாளினி எனும் இந்நூலுக்கு 2021ஆம் ஆண்டிற்கான 'சூழலியல் துறையில்' சிறந்த நூல் பரிசு வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021







## திரு. கனகரத்தினம் சட்டநாதன்

**நூல்:**
**சுபாவம் (சிறுகதை)**
**நல்லூர்**




வடக்கு மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் சட்டநாதர் வீதி நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திரு. கனகரத்தினம் சட்டநாதன் ஈழத்து இலக்கிய வெளியில் பல ஆக்கபூர்வமான தளங்களில் இயங்கி வருபவர்.

இவர் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், சினிமா விமர்சனம் எனப் பல்வேறு பிரமாணங்களில் சமூகத்தின் பிரதிபலிப்புக்களைத் தனது படைப்புக்களினூடாக வெளிப்படுத்தி நிற்கும் இலக்கிய வாதியாவார்.

2017 ஆம் ஆண்டு இவரது முதலாவது கவிதைத் தொகுப்பான, "நீரின் நிறம்" நூலுக்கும், 2020 இல் 'துயரம் தரும் அழகு' புதுக்கவிதை நூலுக்கும் வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் சிறந்த நூல் பரிசு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது சிறுகதையுலகம் தனித்துவமானது. தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கு மேலாக இவர் தனது படைப்பாக்க ஆளுமையை வெளியிட்டு வருகின்றார். இவரது சிறுகதைகள் பெரிதும் அகமனப் போராட்டங்கள் உயிர்ப்புப் பெறுவதாக அமைவதை அவதானிக்க முடிகின்றது.

அவ்வாறே அமையப் பெற்ற 'சுபாவம்' எனும் சிறுதைத் தொகுதியானது, அகவாழ்க்கையில் பண்பாட்டு வரையறைகளின் செல்வாக்கு, சமூக அசைவியக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், போராட்ட நெருக்கீடுகள். தூய காதல் போன்ற தளங்களின் ஊடாக பேச விழைகின்றது.

'ஜீவநதி' வெளியீடாக வந்திருக்கும் இச் சிறுகதைத் தொகுப்பிற்கு சிறுகதைத் துறையில் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூற்பரிசு வழங்குவதில் பண்பாட்டலு வல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021







## திரு. சி. ரமணராஜா

**நூல்:**
**யாழ்ப்பாணத்தில் வீர சைவம்: வரலாறும் பண்பாடும் (ஆய்வு)**
**யாழ்ப்பாணம்**



வடக்கு மாகாணம், யாழ். மாவட்டத்தில் மாவிட்டபுரத்தினைச் சொந்த இடமாகக் கொண்டு சுண்டுக்குளியில் தற்காலிகமாக வசித்து வருகின்ற திரு. சி. ரமணராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

இவர் இந்து நாகரிகப் புலத்தில் கற்றல், கற்பித்தல், களப்பணி, ஆய்வு எனப் பல்பரிமாணங்களில் தனது ஆளுமையினை ஆழப்பதித்தவர். இந்து நாகரிகத் துறையின் மிளிர்ச்சியில் மிகுந்த கரிசனை கொண்டவர்.

இவர் பல சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துத் தனது ஆய்வுத் திறனை வெளிப்படுத்தி வரும் ஆய்வாளர் ஆவார். அத்தோடு இவர் 2009 ஆம் ஆண்டு சைவப் புலவர் பட்டத்தினையும், 2010 ஆம் ஆண்டு சித்தாந்த பண்டிதர் பட்டத்தினையும் பெற்று சைவ சமயம், மற்றும் சைவ சித்தாந்தம் தொடர்பான தமது அறிவையும் விருத்தி செய்து கொண்டவராவார்.


மேலும் இத்துறை சார்ந்த அறிவையும், அனுபவத்தையும் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் வகையிலும், அறிவுப் பரம்பலுக்கு உதவும் வகையிலும் பல சமய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றார்.

ஆழமான இவரது ஆய்வின் பெறுபேறான 'யாழ்ப்பாணத்தில் வீர சைவம்; வரலாறும் பண்பாடும்' எனும் நூலுக்கு 2021ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆய்வு நூற் பரிசு வழங்குவதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன்

**நூல்:**
**முதியோர் வாழ்வியல் (சமூகவியல்)**
**நல்லூர்**



வடக்கு மாகாணம், யாழ். மாவட்டத்தில் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன் அவர்கள் பேராதனை, களனி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் பல வருடங்களாக சிரேஷ்ட விரிவுரையாளர், துறைத் தலைவர் என பல நிலைகளில் பணியாற்றியவர்.

இவர் இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்களை, பட்டப்பின் கல்வியினையும் பெற்றுக் கொண்டதுடன், குடித்தொகை கல்வி, குடிப்புள்ளி விபரவியல் துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்று இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு உள்நாட்டிலும், சர்வ தேசத்திலும் பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக 'குடித்தொகையியல் கோட்பாடுகளும் பிரயோகங்களும்' (1994) 'தீவகம் வளமும் வாழ்வும்' (1995), 'இலங்கையில் பழங்குடிகள்' (2000), 'இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாண குடித்தொகைப் பரம்பலில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்' (2003), 'தீவகம் பல்துறை நோக்கு' (2005), 'தீவகம் தொன்மையும் மேன்மையும்' (2017), 'இலங்கைத் தமிழர் புலம் பெயர்வு' (2018) போன்ற பல நூல்களை ஆக்கியுள்ளார்.

இவ் நூல்களுக்காக சாகித்திய விருது, அரச இலக்கிய விருது கிடைக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

உலக சமூகத்தில் இன்றைய முக்கிய பொருண்மையாக மாறியுள்ள முதியோர் தொடர்பான 'முதியோர் வாழ்வியல்' என்ற ஆய்வு நூலை ஆக்கியுள்ளார்.

இவரது ஆற்றல்மிக்க படைப்பான 'முதியோர் வாழ்வியல்' எனும் படைப் பினை சமூகவியல் துறையில் 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்குவதில் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021





## கலாநிதி சயனொளிபவன் முகுந்தன்

**நூல்:**
**இந்து சமயத்தில் இயற்கை மெய்யியல்**
**திருமந்திரம், திருவாசகப் பனுவல்களை முன்னிறுத்தி (தத்துவம்)**
**நல்லூர்**





வடக்கு மாகாணம் யாழ். மாவட்டத்தில் கந்தர்மடத்தில் வசித்து வரும் கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ததுடன், பண்பாட்டியல் கற்கையில் முதுகலைமாணிப்பட்டத்தையும், ஆய்வின் மூலம் முதுதத்துவ மாணிப்பட்டத்தையும் இந்துநாகரிகத்தில் பெற்றுத் தனது அறிவை விருத்தி செய்து கொண்டவர்.

இவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகக் கற்கைகள் புலத்தில் முதுநிலை விரிவுரையாளராகவும், இணைப்பாளராகவும் பணியாற்றியதுடன் பின்னர் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் முதுநிலை விரிவுரை யாளராக இணைந்து கொண்டு, ஆங்கில மொழியில் ஆய்வினை மேற்கொண்டு, கலாநிதிப் பட்டத்தினையும் தனதாக்கியதுடன், தற்சமயம் இந்துக் கற்கைகள் பீடத்தில் இந்து நாகரிகத்துறையில் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

அத்தோடு பல தேசிய, சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப் பித்தது மட்டுமல்லாது அரிய ஆய்வு முயற்சியின் வெளிப்பாடாக "இந்து கணித வானியல் மரபு" என்ற நூலினையும் "இந்து இலக்கியங்களில் அரசியல், பொருளியல் நீதி பரிபாலனம்" என்ற இரு நூல்களையும் ஆக்கியுள்ளார். இவை இரண்டும் இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதுகளைப் பெற்றமை சிறம்பம்சமாகும்.

இத்தகைய சிறந்த ஆய்வு அனுபவமிக்க கலாநிதி ச.முகுந்தன் அவர்களால் படைக்கப்பட்ட நூலான "இந்து சமயத்தில் இயற்கை மெய்யியல்: திருமந்திரம், திருவாசகப் பனுவல்களை முன்னிறுத்தி" இந்நூலானது இந்து நாகரிக அறிவுப் பரம்பலுக்குப் பெரிதும் உதவவல்லது.

இளம் தலைமுறையினருக்கு, அறிவுக்கு விருந்தாகவும், இந்து சமயத்தில் ஆர் வத்தை ஏற்படுத்துவதாகவும், ஆழமான சிந்தனைக்கு விருந்தாகவும் அமைகின்ற இவரது இவ் நூலிற்குத் தத்துவத்துறையில் 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்கி , வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறந்த நூற்பரிசு - 2021





### திரு. சிவலிங்கம் ஆரூரன்

**நூல்:**
**ஊமை மோகம் (நாவல்)**
**பருத்தித்துறை**



வடக்கு மாகாணம் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சியிலுள்ள அல்வாய் வடமேற்கில் பிறந்து பொறியியலாளராகப் பட்டம் பெற்று, ஒரு எழுத்தாளராக அறியப்பட்ட இவர் பல நாவல்களையும், சிறுகதைகளையும் ஆக்கி வெளியிட்டு வருகின்றார்.

சிறுகதை, நாவல் என ஆக்க இலக்கியத்தில் உச்ச நிலைப் படைப்பாளியாகத் திகழும் இவர், 'யாழிசை' (2014) நாவல், 'யாவரும் கேளிர்' (2018) நாவல், 'பூமாஞ்சோலை' சிறுகதைத் தொகுப்பு, 'வலசப் பறவைகள்' (2019) நாவல், 'The innesent Victims' (பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்ட அப்பாவிகள்) ஆங்கில நாவல் (2019) போன்றவற்றை சமூகத்திற்குத் தந்துள்ளார்.

இவரது 'யாழிசை' எனும் முதல் நாவல் அரச சாகித்திய விருது கிடைக்கப் பெற்றமை மட்டுமல்லாது இந்நாவலானது சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட மையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அவ்வாறே 'யாவரும் கேளிர் நாவல்', 'வலசப்பறவைகள்' நாவலும் விருதுகளுக்காகச் சிபாரிசு செய்யப்பட்ட நாவல்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே இவரால் எழுதப்பட்ட 'ஊமை மோகம்' எனும் நாவல் தமிழ் சூழலில் பேசப்பட வேண்டிய பாலியல் பிரச்சினைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு இவரது 'ஊமை மோகம்' எனும் நூலிற்கு 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்கி வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களம் பெருமையடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த நூற்பரிசு - 2021





## அருள்திரு. இராசேந்திரம் ஸ்ரலின்

**நூல்:**
**உளக் குணமாக்கல் முறைகள் (அறிவியல்)**
**யாழ்ப்பாணம்**




வடக்கு மாகாணம் யாழ். மாவட்ட ஆயர் இல்லம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த "அகவெளி" சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் அருள்திரு. இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார் அவர்கள் அகவொளி உள ஆற்றுப்படுத்தல் நிலையத்தின் உள ஆற்றுப்படுத்தல் துறையில் பலருக்கு நல்ல சேவையாற்றி வருகின்றார்.

இவர் வளம் நிறைந்த விரிவுரையாளராகவும், ஆற்றல் மிகு பயிற்றுநராகவும் விளங்குகின்றார். இவரால் எழுதப்பட்ட 'ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்', 'அன்பின் உள்ளார்ந்த குரல்' ஆகிய இரு நூல்களும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிறந்த நூற் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'சாதனை படைக்கும் யோனத்தன்' எனும் நூல் யாழ். ரத்தினா விருது பெற்றுள்ளது.

அனைத்து மனிதர்களினதும் உடல், உள, ஆன்ம நலன்களில் அக்கறை கொண்டு அவர்களைக் குணமாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதோடு, பல சஞ்சிகைகள் மற்றும் நாளிதழ்களிலும் தொடர்ச்சியாக ஆக்கங்களைப் பதித்துள்ளார்.

உளவியல் துறையில் புலமை வாய்ந்தவராகத் திகழும் அடிகளார் மேற்கு நாடுகளில் இருந்து இங்கு விரிவுரையாற்ற அல்லது பயிற்சி அளிக்க பிறர் வந்திருந்த போதெல்லாம் இவரே பொருத்தமான விரிவுரையாளராகவும் விளங்கினார்.


இவரது அயராத தேடலின் விளைவால் வெளிக்கொணரப்பட்ட, மிகவும் எளிய மொழி நடையில் அமையப் பெற்ற 'உள குணமாக்கல் முறைகள்' எனும் நூலானது பெரிதும் பாராட்டுக்குரியது.

உள வளத்துணை அனுபவங்களையும் சிந்தனைகளையும் பின்னிப் பிணைத்துப் படைக்கப்பட்ட இந்நூலிற்கு அறிவியல் துறையில் 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்கி, வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021





## திரு. வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை

**நூல்:**
**ஆணை (நாடகம்)**
**கரைச்சி**




வடக்கு மாகாணம் மலையாளபுரம், தெற்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. வல்லிபுரம் ஏழுமலைப் பிள்ளை அவர்கள் இலக்கிய வெளியில் தனக்கென தனியிடத்தைக் கொண்டவர்.

இவர் நாடகத்துறையில் மட்டுமல்லாது, வரலாறுகள் எழுதுதல், சிறுகதைகள். கவிதைகள்,கட்டுரைகள். இலக்கிய விவரணங்கள், பாடலாக்கங்கள் எனப் பல தளங்களில் தனது திறமைகளை வெளிப்படுத்தியவர்.

அத்தோடு இவர் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பல ஆங்கில நூல்களைத் தமிழில் சீராக்கி வெளியிட்டதுடன், தமிழாக்கம் செய்யப்பட்ட பல ஆங்கில திரைப் படங்களைத் தமிழில் சீராக்கல் செய்து எழுதி, வசனம் அமைத்து, குரல் வழங்கி வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் 'மகுட பங்கம்' நாடகத் தொகுப்பு (2015), 'வீரகாவியம்' (நாடகத் தொகுப்பு (2016), 'மாவீரன்' (வரலாற்று நூல் - 2017), 'சதுரங்க வேட்டை' நாடகத் தொகுப்பு, 'சத்தியவேள்ளி' (நாடகத் தொகுப்பு- 2019), 'எதிரியா? துரோகியா' (வரலாற்று நூல்), 'உலகை வெல்ல முயன்றவன்' (வரலாற்று நூல்) போன்ற பல ஆக்கப் படைப்புக்களை உருவாக்கியுள்ளார். இவற்றுள் பெரும்பாலும் அரச இலக்கிய விருது, வடக்கு மாகாண சிறந்த நூல் விருது கிடைக்கப்பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாடகப் பிரதியாக்கங்கள் பலவற்றைப் படைத்த படைப்பாளியான இவரது 'ஆணை' எனும் நூலும் சிறந்த நாடக இலக்கியமாக நேர்த்தியாகவும் ரசனை தருவதாகவும் அமையப் பெற்றுள்ளது.

இவரது 'ஆணை' எனும் நூலினை வாழ்த்தி, இந்நூலுக்கு நாடகத்துறையில் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூற்பரிசு வழங்கி, வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021





## திரு. இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்

**நூல்:**
**இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புக்கள்:**
**–சமூகவியல் கோட்பாடுகளின் வழியான திறனாய்தல் (விமர்சனம்)**
**கரவெட்டி.**



வடக்கு மாகாணம் யாழ். மாவட்டத்தில் வதிரி எனும் கிராமத்தில் பிறந்து, இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியில் வசித்து வரும் இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன் அவர்கள் ஒரு சமூகவியல் திறனாய்வாளராகவும் இலக்கிய வாதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் சிறப்புக் கலை, மற்றும் முதுகலைமாணி, முதுதத்துவமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா போன்ற பட்டங்களைக் கல்வித்துறையில் தனதாக்கிக்கொண்டதுடன்,

இலக்கிய வெளியில் சிறுகதை மற்றும், கவிதை, திறனாய்வு (சமூகவியல் நோக்கில்) போன்ற தளங்களிலும் தடம் பதித்து வருகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான இவரால் 'முதுசொமாக' (2002), 'தொலையும் பொக்கிஷங்கள்' (2009), 'இரகசியமாய் கொல்லும் இருள்' (2015) எனும் சிறுகதைத் தொகுப்புக்களும், 'போர்வைக்குள் வாழ்வு' (2007) எனும் கவிதைத் தொகுப்பும், இலக்கியத்தில் சமூகம்: பார்வைகளும் பதிவுகளும் (2014), 'நயம்பட: படைப்பு - படைப்பாளி - படிப்பு (2020) எனும் திறனாய்வு நூல்களும், 'கிராமியம்' கல்வி - மேம்பாடு: சமூகவியல் பார்வைகள் (2013), 'சமூகவியல் கோட்பாட்டுத் தடங்கள்' (2005), 'கொவிட் - 19 பேரிடர் காலத்தில் இளையோரின் கல்வி: சவால்களும் சாத்தியங்களும்' (2021) எனும் சமூகவியல் சார்ந்த நூல்களையும் வெளியிட்டதுடன், இவ்வருட முடிவில் (2021) வெளிவரக் காத்திருக்கும் 'கிராமத்து மனிதர்கள்' எனும் நூல்கள் உட்பட பலவற்றை ஆக்கி அளித்திருப்பது பெருமைக்குரிய விடயங்களே.

அவ்வாறே கல்வியின் சமூகவியல், இளைஞரின் சமூகவியல், கிராமிய சமூக வியல், இலக்கியத்தின் சமூகவியல் எனப் பல வெளிகளில் ஆர்வம் கொண்ட இவரது படைப்பான இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புக்கள் சமூகவியல் கோட்பாடுகளின் வழியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்தல் எனும் விமர்சன நூலானது சமூகவியல் நோக்கிலான திறனாய்வின் புதிய வெளிகளைத் திறந்துள்ளது.

இவ்வகையில் இலக்கிய வெளியில் பல உரைகள் கருத்தரங்குகள், மாநாடுகள், ஆய்வரங்குகள் என பல பரிமாணங்களில் தன்னைத் தகவமைத்துக் கொண்டிருக்கும் இவரது இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புக்கள் - சமூகவியல் கோட்பாடுகளின் வழி யான திறனாய்தல் எனும் இந்நூலிற்கு விமர்சனத்துறையில் 2021ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்பரிசு வழங்கி, வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021







## திரு. முல்லை முஸ்ரிபா
## (முஹம்மது முஸ்தபா மஃசூர்)

**நூல்:**
**வரைபடமற்றவர்களின் காலடி (கவிதை)**
**கரைதுறைப்பற்று**



வடக்கு மாகாணம் தண்ணீருற்று முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. முல்லை முஸ்ரிபா என இலக்கிய வெளியில் அடையாளம் காணப்பட்ட முஹம்மது முஸ்தபா மஃசூர் அவர்கள் மிக அற்புதமான சொற் சிற்பக் கவிஞர். இவரது கையுளி செதுக்கும் கவிச் சிற்பங்கள் மிகவும் அருமையானது.

தொண்ணூறுகளுக்குப் பின் எழுந்த பொன்னெழுத்துக் கவிஞரான முஸ்ரிபாவின் வருகையோடு இடம்பெயர் ஈழத்து முஸ்லிம் இலக்கியம் முகவரி பெறுகிறது. தேசம், சர்வதேசம் என இவரது கவிதா பார்வை நீள்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், மகரகம தேசிய கல்வி நிறுவகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்களைச் சிறப்பாகக் கற்று ஆசிரியராக, பின் அதிபர் சேவை என்ற பதவி நிலைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக் கழகம், மற்றும் தேசிய கல்வி நிறுவகம் போன்றவற்றின் வளவாளராகத் திகழ்வதுடன், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பாட நூலாக்குநராகவும் தனது ஆளுமைப் பரப்பில் இருந்து கொண்டு இலக்கியப் பரப்பிலும் நன்கு அறியப்பட்டவராகவும் திகழ்கின்றார்.

இவர் 'கருத்துக்கான அழைப்பு' (2003), 'அவாவுறும் நிலம்' (2009), 'சொல்லில் உறைந்து போதல்' (2015) ஆகிய கவிதைத் திரட்டுக்களையும் தந்துள்ளார்.

'என் மனசின் வரைபடம்'(2014), 'எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல்' (2015) எனும் பக்தியெழுத்துப் பிரதிகளும், 'மின்மினிகளால் ஒரு தோரணம்' (2017) ஆய்வுக்கட்டுரை நூல் போன்ற இலக்கியங்களையும் வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்க இலக்கிய படைப்புக்களுக்காக தேசிய சாகித்திய விருது, கொடகே தேசிய விருது, வடமாகாண, கிழக்கு மாகாண இலக்கிய விருதுகள், துரைவி விருது எனப் பல விருதுகளையும் தனதாக்கிக் கொண்டவர்.

இவை மட்டுமல்லாது 2002 இல் இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் இளைய படைப்பாளர் விருது, வன்னிச் சான்றோர் விருது, முல்லைத்தீவின் பிரதேச இலக்கிய விருது, யாழ்.முஸ்லிம் இணையத்தளத்தின் மூத்த படைப்பாளர் கௌரவம் எனப் பலவும் இவரைச் சார்ந்தன.

இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பகுதிநிலை ஒலிபரப்பாள ராகவும் திகழ்கின்றார். அவை மட்டுமல்லாது முஸ்ரிபாவின் கவிதைகள், கட்டுரைகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ் பாடநூல்களிலும் இடம் பிடித்துள்ளமை யும் குறிப்பிடத்தக்கது.

கவிதைத் துறையில் தனி அடையாளத்துடன் திகழும் இவரது 'வரைபட மற்றவர்களின் காலடி' எனும் கவிதைத் தொகுப்பிற்குக் கவிதைத் துறையில் 2021ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற் பரிசு வழங்கி, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசு - 2021





## பிராக்மணகே ஸ்வர்ணலதா அத்தநாயக்கா

நூல்:

அயோக்கியா (சிங்கள நாவல்)

வெலிஓயா

## බ්‍රාහ්මණගේ ස්වර්ණලතා අත්තනායක

නව කතා පොත

අයෝග්‍යයා

වැලිඔය





අංක 106 සපුමල්තැන්න,වැලිඔය ඇතාවැටුණු වැව ලිපිනයේ පදිංචි බ්‍රාහ්මණගේ ස්වර්ණලතා අත්තනායක මහත්මිය ගලෙන්බිඳුණු වැව, දුටු වැව ප්‍රදේශයේ 1974.11.27 වන දින මෙළොව එළිය දුටුවාය. උපතින්ම කලාවට ලැදියාවක් දැක්වූ මෙතුමිය කලා කුශලතාවයන් සමගම දුටුවැව මහා විද්‍යාලයෙන් අධ්‍යාපනය හදාරා එම දක්ෂතාවන් ද සමගින් ගුරු වෘත්තිය රැකියාව ලෙස තෝරා ගෙන දැනට මුලතිව් කිරිඉබ්බන්වැව මහා විද්‍යාලයේ ගුරුවරියක ලෙස සේවය කරමින් සිටි. උපතින්ම කලා හැකියාවෙන් සහෘද පාඨකයින්ට විවිධ කලානිර්මාණ දායාද කල ස්වර්ණලතා අත්තනායක මහත්මිය පාසැලේ 6 ශ්‍රේණියේ අධ්‍යාපනය ලබමින් සිටියදී ම සීනිසදැස් කාව්‍ය සංග්‍රහය හා සීකැදැල්ලක් අහිමි කිරිල්ලියක් කෙටිකතා සංග්‍රහය රචනා කරන ලදී. මෙම කලාකාරිණිය විසින් සමස්ත ලංකා කවි සම්මේලනයේ සමස්ත ලංකා ජයග්‍රහණ , සිංහල භාෂා දින තරග , පාසැල් මට්ටමේ හා පළාත් මට්ටමේ සමස්ත ලංකා ජයග්‍රහණ මෙන්ම වෙනත් ආයතන මගින් සංවිධානය කර පැවැති සාහිත්‍ය තරග වලින් ජයග්‍රහණ හිමිකරගත් මෙම දක්ෂ සාහිත්‍ය කාලාකාරිණිය උතුර පළාතට මහත් ආඩම්බරයක් බව මොනවට පැහැදිලිය.

උතුරු මැද අධ්‍යාපන අමාත්‍යාංශයේ සහ දුටු වැව මහා විද්‍යාලයේ 12 ශ්‍රේණියේ දුවා දරුවන්ගේ සහය ද ඇතිව ස්වර්ණලතා අත්තනායක මහත්මිය විසින් ඒක පුද්ගල ගී ප්‍රසංගයක් ද පවත්වා ඇත.

මෙම මහත්මිය විසින් ළමා කතන්තර, ළමා නවකතා ,ගීත නිර්මාණ හා කාව්‍ය නිර්මාණ සහ කෙටිකතා ආදී නිර්මාණ සහ 2020 වර්ෂයේ ප්‍රාදේශීය සාහිත්‍ය නිර්මාණ ජයග්‍රහණ රැසක් හිමිකරගෙන ඇත. මෙම සම්මාන ප්‍රදානයට පාත්‍ර වූ අයෝධ්‍යා නවකතාව වූ කලි මෙම මහත්මියගේ ප්‍රථම නවකතා නිර්මාණයයි. මෙය එළිදැක්වීමේදි ගිරිතොට සෞන්දර්ය විශ්ව විද්‍යාලයේ සහය මෙන්ම පිළිමතලාව බෞද්ධ අධ්‍යාපන අංශයේ සහය ද මුද්‍රණ කරණයේදි උතුරු පළාත් සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවේ කලාකරුන් දිරිගැන්විමේ ව්‍යාපෘතිය මගින් ක්‍රියාත්මක වැලිඔය ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මගපෙන්විමේ සහය ද ලැබීම හේතුවෙන් ස්වර්ණලතා අත්තනායක මහත්මියගේ සාහිත්‍ය නිර්මාණ එළිදැක්විමට පහසු වූ බව මෙම මහත්මිය ප්‍රසංසාත්මක ව සිහිපත් කරන්නීය. කලාකාමි හැකියාවෙන් පරිපූර්ණ ස්වර්ණලතා අත්තනායක මහත්මියගේ අනාගතය සාර්ථකව ඔප්නැංවේවායි ප්‍රාර්ථනා කරමු.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020ஆம் ஆண்டிற்கான மாகாண விருது வழங்கும் நிகழ்வு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020ஆம் ஆண்டிற்கான மாகாண விருது வழங்கும் நிகழ்வு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் விழா - 2021








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதபூஜை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயதசமி





## இசைக்கருவி வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச மருத்துவ முகாம்





நூல் வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் வெளியீடு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு :
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**

9 786245 911134

New Evergreen Printers (Pvt) Ltd. Jaffna. 021 222 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org